# TNPSC தேர்வுப்பெட்டகம்

## நடப்பு நிகழ்வுகள் நவம்பர் - 2017

www.tnpscthervupettagam.com










SHANKAR IAS ACADEMY™
Plot No.1742, Ist Floor, 18th Main Road, Anna Nagar, Chennai – 600 040.
Phone : 044-26216435, 64597222, 4353 3445, Mobile : 94441 66435
www.shankariasacademy.com

# SHANKAR IAS ACADEMY

THE BEST IAS ACADEMY IN SOUTH INDIA SINCE 2004

REFLECTION OF 37/75 QUESTIONS IN TNPSC GROUP II A (2017) GENERAL STUDIES PAPER (EXCLUDING MENTAL ABILITY) FROM OUR TEST SERIES

REFLECTION OF 50/100 QUESTIONS IN TNPSC GROUP II A (2017) GENERAL TAMIL PAPER FROM OUR TEST SERIES

## MUCH AWAITED TNPSC GROUP I PRELIM TEST SERIES Coming SOON....

**Both Class room and online programmes available**

**Total Tests - 36**
13 - Foundation Tests
23 - Core Tests
Recorded Discussion Videos

**Test Centers:**
Anna Nagar, Adyar, Madurai, Salem

# பொருளடக்கம்

TNPSC துளிகள் ........ 4

தமிழ்நாடு செய்திகள் ........ 7

தேசியச் செய்திகள் ........ 12

சர்வதேசச் செய்திகள் ........ 46

பொருளாதாரச் செய்திகள் ........ 58

அறிவியல் மற்றும் தொழில்நுட்ப செய்திகள் ........ 72

சுற்றுச்சூழல் செய்திகள் ........ 81

மாநிலச் செய்திகள் ........ 88

பிரபலமானவர்கள் , விருதுகள் மற்றும் நிகழ்வுகள் ........ 96

விளையாட்டுச் செய்திகள் ........ 106

முக்கிய தினங்கள் ........ 113

இதரச் செய்திகள் ........ 122

# TNPSC துளிகள்

- சினிமா துறைக்கு மகத்தான பங்களிப்பு அளித்ததன் காரணமாக, புகழ் பெற்ற நடிகையான சர்மிளா தாகூருக்கு 2017ஆம் ஆண்டிற்கான வாழ் நாள் சாதனையாளர் விருது PHD வர்த்தகம் மற்றும் தொழிற்துறை பிரிவால் (PHDCCI – PHD Chamber of Commerce and Industry) வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.
- கர்நாடக காவல் துறையின் முதல் பெண் இயக்குநர் ஜெனரல் மற்றும் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலாக (DG & IGP) நீலமணி என்.ராஜீ நியமிக்கப்பட்டுள்ளார்.
- பேட் ரேபிட் (Bad Rabbit) என்றழைக்கப்படும் தீங்கிழைக்கும் மென்பொருள் சமீபத்தில் ரஷ்யா நாட்டை தாக்கியது. பேட்ரேபிட் தாக்குதலானது முக்கியமாக ரஷியாவை பாதித்ததோடு மட்டுமல்லாமல் தெற்கு உக்ரைனில் உள்ள ஒடெசா விமான நிலையத்தில் விமானங்களின் தாமதத்தை ஏற்படுத்தியதோடு, கீவ் (Kiev) மெட்ரோ இரயில் இணையத்தில் மின்னணு பணப்பரிமாற்றத்தையும் பாதித்தது.
- நேரடி எல்லைக் கட்டுப்பாட்டு கோட்டினருகே (LAC-Line of Actual Control) அருகே சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கான சீனாவின் ஆக்கிரமிப்புக்கு பதில் நடவடிக்கையாக, எல்லைகள் சாலை அமைப்பு நிறுவனம் (Border Roads Organization-BRO) சிசும்லே மற்றும் டெம்சோக் கிராமங்களை இணைக்கும் வகையில் 19300 அடி உயரத்தில் அமைந்துள்ள கணவாய் வழியாக உலகின் உயரமான வாகனம் செல்லும் சாலையை கட்டமைத்துள்ளது.
- கவுகாத்தியில் இந்த ஆண்டு நவம்பர் 19 ஆம் தேதி முதல் 26 ஆம் தேதி வரை நடைபெற உள்ள 2017-ஆம் ஆண்டின் பெண்களுக்கான இளையோர் உலக குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டியின் AIBA தூதராக M.C.மேரிகோம் சர்வதேச குத்துச்சண்டை சங்கத்தால் (AIBA – International Boxing Association) நியமிக்கப்பட்டுள்ளார்.
- 'தாம்ரே' என்று பெயரிடப்பட்ட வெப்ப மண்டல புயலால் தீவிரமடைந்து உருவான சூறாவளியானது தென் சீனக்கடல் பகுதியில் வியட்நாமின் கடலோரப் பகுதிகளை தாக்கியுள்ளது. இரண்டாம் வகை சூறாவளிக்கு இணையான வலுவுடைய இந்த சூறாவளிப் புயலானது இந்த வருடத்தின் 12-வது சூறாவளியாகும்.
- அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பினால் பிரபலமடைந்த "போலியான செய்தி" (Fake News)' எனும் வார்த்தையானது , அதன் உலகளாவிய பயன்பாட்டின் காரணத்திற்காக கோலின்ஸ் (Collins) அகராதியால் ஆண்டிற்கான சிறந்த வார்த்தையாக அறிவிக்கப்பட்டுள்ளது. பிரிட்டனைச் சார்ந்த அகராதித் தொகுப்பாசிரியர் ஒருவர் 'போலியான செய்தி' என்ற வார்த்தையின் பயன்பாடு கடந்த 12 மாதங்களில் 365 சதவீத உயர்வை கண்டுள்ளதாக கண்டறிந்துள்ளார்.
- 2017 ஆம் ஆண்டிற்கான உலக இளைஞர் மன்றம் எகிப்து நாட்டிலுள்ள ஷராம்-அல்-ஷேக் நகரில் நடைபெற்றது. ஐந்து நாட்கள் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியினை எகிப்து நாட்டின் அதிபர் அப்துல்லா பத்தா அல்-சிசி துவங்கி வைத்தார். இந்தியா சார்பாக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறையின் இணை அமைச்சர் (தனிப் பொறுப்பு) கர்னல் ராஜ்யவர்தன் சிங் ராத்தோர் கலந்துக் கொண்டார்.
- இந்திய இராணுவம் சுதந்திரமான, முற்றிலும் ஒருங்கிணைக்கப்பட்ட கூட்டு பயிற்சி முனையத்தினை [Joint Training Node – JTN] சில்லாங் நகரத்திலுள்ள உம்ரோய் இராணுவ முகாமில் (Cantonment) துவங்கியுள்ளது.
- இந்தியாவின் புதிய நிதித்துறை செயலாளராக ஹஷ்முக் ஆதியா நியமிக்கப்பட்டுள்ளார். இவர் 1981 ஆம் ஆண்டின் பணிப்பிரிவைச் சேர்ந்த இந்திய ஆட்சிப்பணி அதிகாரியாவார். இவர் தற்சமயம் வருவாய்துறைச் செயலாளராக பணியாற்றி வருகிறார். இவர் நிதித்துறை அமைச்சகத்தின் மிக மூத்த அதிகாரி ஆவார்.

- பருவநிலை மாற்றம் மீதான ஐ.நா.வின் கட்டமைப்பு ஒப்பந்தத்தினுடைய ( UNFCCC - United National Framework on Climate Change) உறுப்பு நாடுகளின் 23-வது மாநாடு (Conference of Parties – COP 23) ஜெர்மனியின் பான் (Bonn) நகரில் நடைபெற்றது. இம்மாநாட்டிற்கான இந்திய அமர்வை (Indian Pavilion) மத்திய சுற்றுச்சூழல், வளம் மற்றும் பருவநிலை மாற்றத்திற்கான மத்திய அமைச்சர் தொடங்கி வைத்தார். COP 23 க்கான இந்தியாவின் கருத்துரு "எதிர்காலத்தை பாதுகாக்க தற்போதே பாதுகாத்தல்". [Conserving Now, Preserving future] என்பதாகும்.
- சுட்டுரை இணையதளம் (Twitter) தனது பெரும்பாலான பயனாளிகளுக்கு சுட்டுரை பதிவுகளில் பயன்படுத்தப்படும் எழுத்துருக்களின் எல்லையை 140 லிருந்து 280 ஆக அதிகரித்துள்ளது. இருப்பினும் சீன, ஜப்பானீய மற்றும் கொரிய மொழியில் சுட்டுரைப்பவர்களுக்கு தற்போது உள்ள அசல் வரம்பே நீடிக்கும்.
- கனடாவில் நடைபெற்ற மான்ட்ரியல் தெற்காசியத் திரைப்பட விழாவில் இந்தியக் குறும்படமான "தி ஸ்கூல் பேக்" (The School Bag) சிறந்த குறும்படத்துக்கான விருதை வென்றுள்ளது.
- அண்மையில் சீனா, சன்யாட்-சென்னின் 151 வது பிறந்த ஆண்டை நினைவு கூர்ந்தது. இவர், ஜின்ஹாய் புரட்சிக்கு (Xinhai Revolution) தலைமை வகித்த காலகட்டங்களில் குயிங் (Qing) வம்சத்தை (சீனாவின் கடைசி ஏகாதிபத்திய வம்சம்) கவிழ்த்ததன் மூலம் சீனக் குடியரசை (ROC) நிறுவினார். இதனால் இவர் சீனக் குடியரசின் தந்தை என்று அழைக்கப்படுகிறார்.
- தொலைத் தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் (Telecom Regulatory Authority of India-TRAI) மூன்று புதிய செயலிகளை அறிமுகம் செய்துள்ளது.
    - மை கால் (MyCall) செயலி – கூட்டுசேர் குரல் அழைப்பு தரம் கண்காணிப்பு செயலி
    - மை ஸ்பீடு (MySpeed) செயலி – அனைத்து சேவை பகுதிகளிலிருந்தும் பயனாளர்களிடமிருந்து சோதனைத் தகவல்களைப் பெறுவதற்கான செயலி.
    - டு நாட் டிஸ்டர்ப் 2.0 [Do not disturb-DND 2.0)-] - தேவையற்ற வணிகரீதியான தகவல் தொடர்பு / குறுஞ்செய்திகள் ஆகியவற்றை தவிர்ப்பதற்கான செயலி.
- விஞ்ஞானி விஜய் பிரசாத் திம்ரியை, 36-வது சர்வதேச புவியியல் காங்கிரஸின் மாநாட்டின் (36th International Geological Congress) தலைவராக நியமித்து மத்திய பணியாளர் மற்றும் பயிற்சி துறை அமைச்சகம் வெளியிட்ட பணி ஆணைக்கு பிரதமர் தலைமையிலான நியமனங்களுக்கான அமைச்சரவைக் குழு ஒப்புதல் அளித்தது. சர்வதேச புவியியல் காங்கிரஸ் (IGC) ஆனது 2020-ல் புது தில்லியில் நடைபெறவிருக்கும் புவி அறிவியலின் முன்னெடுப்புக்கான ஓர் உலகளாவிய தளமாகும்.
- நெடுஞ்சாலைகளின் பாதுகாப்பு அளவுகளை மதிப்பிடவும், மிகவும் பாதுகாப்பான ஐந்து நட்சத்திர சாலைகள் முதல் மிகக் குறைந்த பாதுகாப்பு கொண்ட ஒரு நட்சத்திர சாலைகள் வரை உள்ள ஆபத்தான சாலைகளை அகற்ற இந்தியா சாலை மதிப்பீட்டு திட்டத்தை (India Road Assessment Programme-IndiaRAP) சர்வதேச அறக்கட்டளை (Global Charity) வெளியிட்டது. இந்தத் திட்டத்திற்கு ஃபெட்எக்ஸ் எக்பிரஸ் (FedEx Express) நிறுவனம் ஆதரவு அளிக்கிறது; ஆசிய போக்குவரத்து மேம்பாட்டு நிறுவனத்தால் (Asian Institute of Transport Development) இத்திட்டம் நடத்தப்பட உள்ளது.
- மத்திய மின்துறை அமைச்சகமானது பிரதான் மந்திரி சஹஜ் பிஜ்லி ஹர்கர் யோஜனா எனும் சௌபாக்யா திட்டத்திற்கான இணைய வாயிலை (http://saubhagya.gov.in) தொடங்கியுள்ளது. நாடு முழுவதும் உள்ள நகர்ப்புற மற்றும் கிராம புறப்பகுதிகளின் அனைத்து வீடுகளிலும் மின் இணைப்பு ஏற்படுத்துவதை துரிதப்படுத்தவும், அவற்றில் வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்தவும் இந்த இணையவாயில் துவக்கப்பட்டுள்ளது.
- மின்சார கட்டண செலுத்துதலுக்கு (Point of Sale) விற்பனை வசூலிப்பு இயந்திரத்தை பயன்படுத்தும் முதல் வடகிழக்கு மாநிலமாக நாகலாந்து உருவாகியுள்ளது.

- 24 காரட் தங்க நகைகளுக்கு தர நிர்ணய மதிப்பீட்டினை (ஹால் மார்க்) கட்டாயமாக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளதன் அடிப்படையில் 24 காரட் தங்க நகைகளுக்கும் தர மதிப்பீடுகளை வகுக்க இந்திய தர சான்று நிறுவனத்திற்க்கு (BIS – Bureau of Indian standards) மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.தற்போது நடப்பில் 14, 18, 22 காரட் தங்கத்தில் செய்யப்படும் நகைகளுக்கு மட்டுமே தர நிர்ணய மதிப்பீடு வழங்கப்படுகின்றது.
- அகதிகள் தங்கள் பெயரை தேசிய குடியுரிமைப் பதிவேட்டில் சேர்ப்பதற்கு கிராம நிர்வாகம் அளித்த இருப்பிடச் சான்றிதழ்களை தகுதியான ஆவணமாக அளித்ததை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் அவையாவும் துணை ஆவணங்கள் என்றும் மத்திய அரசால் வழங்கப் பெறும் ஆவணங்களே பிரதான ஆவணங்கள் என்றும் உச்ச நீதிமன்றம் விளக்கம் அளித்துள்ளது. அவையே தேசிய குடியுரிமைப் பதிவேட்டில் பெயர் சேர்ப்பதற்கு தகுதியானவை என விளக்கமளித்துள்ளது.
- 1980-ல் பிரிட்டனிடமிருந்து விடுதலை பெற்ற ஜிம்பாப்வேயில் நடந்த ராணுவ புரட்சியின் ஆட்சிக் கவிழ்ப்பை அடுத்து 37 ஆண்டுகளாய் இதுவரை சர்வாதிகாரியாக ஆட்சிபுரிந்து வந்த அதிபர் ராபர்ட் முகாபே பதவி விலகியுள்ளார்.தற்போது ஜிம்பாப்வே-யின் புதிய அதிபராக எம்மர்சன் நங்கக்வா பதவி ஏற்க உள்ளார்.
- 2018-ஆம் ஆண்டை சர்வதேச சிறுதானிய ஆண்டாக அறிவிக்கும் படி ஐக்கிய நாடுகள் சபைக்கு இந்தியா வேண்டுகோள் விடுத்துள்ளது. இந்த வேண்டுகோள் மத்திய விவசாயத் துறை அமைச்சர் ராதா மோகன் சிங் மூலம் ஐநாவின் பொதுச் செயலாளர் அந்தோனியோ குட்ரஸிற்கு அனுப்பப்பட்டுள்ளது.
- இந்தியாவில் உள்ள உயிரி எரிபொருளுக்கான பொருத்தமான திட்டப்பாதையை தயாரிப்பதற்கான பரிந்துரைகளை பெறுவதற்காக, உயிரி எரிபொருள் மற்றும் பிரதான் மந்திரி ஜி-வான் யோஜனா (2 ஆம் தலைமுறை எத்தனால் உயிரி சுத்திகரிப்புக்கான VGF) பற்றிய புதிய தேசியக் கொள்கையின் ஆலோசனைக் கூட்டத்தை பெட்ரோலிய மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ளது.
- இந்தியாவின் மிகப்பெரிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மேற்கு கடற்கரையில், மகாராஷ்டிரா மாநிலத்தின் ரத்னகிரி மாவட்டத்திலுள்ள ராஜாபூர் பகுதியில் அமைக்கப்பட உள்ளது. மகாராஷ்டிரா மாநிலத்தில் ரத்னகிரி மாவட்டத்தின் ஜெய்தாபூரில் உலகின் மிகப்பெரிய அணுசக்தி நிலையம் (9900 மெகாவாட்) அமைக்கப்பட்டு வருகின்றது. இந்த அணுமின் நிலையம் கட்டிமுடிக்கப்பட்டால் இது தான் நிகர்மின் உற்பத்தி மதிப்பீட்டின் அடிப்படையில் உலகிலேயே மிகப்பெரிய அணுமின் நிலையமாகும்.
- K.M இருதய அறக்கட்டளை மற்றும் ப்ராண்டியர் லைப்லைன் மருத்துவமனை தலைவரான K.M செரியனுக்கு உறுப்பு மாற்று சிகிச்சைகளில் சிறந்த பங்காற்றியமைக்காக “சிறந்த உறுப்பு மாற்று சிகிச்சைக்கான நிபுணர்” விருது தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ளது.
- சென்னை உயர்நீதிமன்றத்தின் புதிய நீதிபதியாக சத்ருகன் புஜாரி நியமிக்கப்பட்டுள்ளார். இவர் ஒரிஸா உயர் நீதிமன்றத்திலிருந்து சென்னை உயர்நீதிமன்றத்திற்கு பணியிடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.
- ஐ.நா அமைப்பிற்கான இங்கிலாந்தின் தூதராக கரேன் பியேர்ஸ் நியமிக்கப்பட்டுள்ளார். 1945-ல் ஐ.நா அவை தொடங்கப்பட்டதிலிருந்து இந்தப் பொறுப்புக்கு நியமிக்கப்பட்ட முதல் பிரிட்டிஷ் பெண் அயலுறவு பணித்துறை அதிகாரி இவரே ஆவார்,

# தமிழ்நாடு செய்திகள்

## குரூப் 4, விஏஓ பணிகளுக்கு இனி ஒரே தேர்வு

- குரூப் 4 மற்றும் விஏஓ (VAO) எனப்படும் கிராம நிர்வாக அலுவலர் பணிகளுக்கு இனி ஒரே தேர்வு நடத்தி பின்னர் கலந்தாய்வு மூலம் விரும்பும் பணி வழங்கப்படும் என டிஎன்பிஎஸ்சி அறிவித்துள்ளது.
- டிஎன்பிஎஸ்சி மூலம் நடத்தப்படும் குரூப் 4ன் பல்வேறு பதவிகளுக்கும், கிராம நிர்வாக அலுவலர் (விஏஓ) பதவிக்கும் நிர்ணயிக்கப்பட்டுள்ள கல்வித்தகுதி பத்தாம் வகுப்பு தேர்ச்சி மட்டுமே ஆகும்.
- இரு தேர்வுகளையும் தனித்தனியே நடத்தும்போது ஒவ்வொரு தேர்வுக்கும் சுமார் ரூ.15 கோடி வரை செலவாகிறது. இதனால் பணம், மனிதவளம், கால விரயமும் கூடுதலாக ஏற்படுகிறது.

## மேம்படுத்தப்பட்ட ஆம்புலன்ஸ் சேவைகளுக்கான கைபேசி செயலி

- தேசிய சராசரியை விட ஏற்கனவே சிறந்ததாக இருக்கும் தமிழ்நாட்டின் 108 அவசரகால ஆம்புலன்ஸ் சேவையை மேலும் செம்மைப்படுத்தும் நோக்கில், அவசரம் 108 (Avasaram 108) என்ற கைபேசி செயலியை தமிழக அரசு வெளியிட்டுள்ளது.
- இந்தச் செயலியானது அழைப்பவரின் இடத்தை துல்லியமாகக் கண்டறிந்து, விரைந்து செல்ல ஆம்புலன்ஸ்களுக்கு உதவும்.
- இது, அழைப்பாளர்களிடம் இணையம் இல்லாமலேயே ஆம்புலன்ஸ்களுக்கு தகவல் தெரிவிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. அழைப்புகளுக்குப் பதிலளிப்பவருக்கு பாதிக்கப்பட்டவரின் இடத்தின் அட்சரேகை மற்றும் தீர்த்த ரேகை விவரங்களைக் கொண்ட குறுஞ்செய்தி அனுப்பப்படும்.

## தொழிற்துறைகளுக்கான ஒற்றைச் சாளர முறையை செயல்படுத்தும் அவசரச் சட்டம்

- மாநிலத்தில் முதலீடு செய்யும் திட்டம் கொண்டுள்ள முதலீட்டாளர்களுக்கு ஒற்றைச் சாளர முறையில் அனுமதி பெறுவதற்கான இணையவழி தகவு வசதியை தமிழக அரசு தொடங்கியது. (அறிமுகப்படுத்தியது.)
- www.easybusiness.tn.gov.in என்ற இணையவாயிலை தமிழக முதலமைச்சர் தொடங்கி வைத்தார். இது 11 துறைகளை ஒருங்கிணைத்து 37 சேவைகளை இணையவழியில் அளிக்கும்.
- இந்த தகவு,
    - விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல்
    - கட்டணம் செலுத்துதல்
    - அனுமதியளிக்கப்பட்ட விண்ணப்பங்களைப் பதிவிறக்கம் செய்தல்
    - அனுமதிகளை புதுப்பிப்பது மற்றும் அரசின் பல்வேறு துறைகளிடமிருந்து 37 விதமான சேவைகளைப் பெறுவது போன்றவற்றிற்குப் பயன்படுகிறது.
- தமிழக அரசு, வணிகத்தை எளிதாக்கும் அவசரச் சட்டத்தை பிரகடனப்படுத்தி புதிய சட்ட விதிகளை அறிவித்தது.

- பல்வேறு அனுமதிகளைப் பெறுவதற்காகவும் வணிக சீர்திருத்த செயல் திட்டத்தின் சட்டங்களைக் குறிப்பிட்ட காலத்திற்குள் இயற்றவும் மத்திய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள தொழில் கொள்கை மற்றும் ஊக்குவிப்புத் துறையின் பரிந்துரைகளை மாநில அரசு பின்பற்றியுள்ளது.

### *செயல்படுத்தும் முகமை*

- பெரிய தொழில்துறை நிறுவனங்களை (10 கோடிக்கும் மேலான மூதலீடுகள்) பொறுத்த வரையில் தமிழ்நாடு தொழில்துறை வழிகாட்டல் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டுச் செயலகமே (TNIGEPB) செயல்படுத்தும் முகமை ஆகும்.
- சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்துறை பிரிவுகளைப் பொறுத்த வரையில் (10 கோடி வரை உள்ள முதலீடுகள்), தொழில் மற்றும் வர்த்தக மண்டல கூட்டு இயக்குநர் அலுவலகம் சென்னை மாவட்டத்திற்கு செயல்படுத்தும் முகமை ஆகும்.
- பிற மாவட்டங்களில் மாவட்ட அளவிலான மாவட்ட தொழிற்சாலை மையங்களே (DLC) செயல்படுத்தும் முகமை ஆகும்.

## தமிழ்நாட்டின் பறவை பதிவு ஒரு மில்லியன் இலக்கை எட்டியது

- பறவைகள் கண்காணிப்பாளர்கள் தங்களின் கண்காணிப்பை பதிவு செய்வதற்கான தளமான ஈபேர்ட் இந்தியா (e-Bird India) என்ற இணையவாயிலின் தகவல் படி, கண்காணிக்கப்பட்ட பறவைகளின் குறிப்பிட்ட இனம், கண்காணிப்பின் குறிப்பிட்ட தேதி, நேரம் மற்றும் இடத்தில் போன்றவற்றை பதிவு செய்யும் மாநிலப் பறவைகள் பதிவானது ஒரு மில்லியன் பதிவுகளை எட்டியுள்ளது.
- இதன்மூலம் கேரளா மற்றும் கர்நாடகாவிற்கு அடுத்து இந்த இலக்கை அடையும் மூன்றாவது மாநிலமாக தமிழ்நாடு உருவாகியுள்ளது.
- அதிகப் பறவைகளின் பதிவுகளைப் பெற்று, கோயம்புத்தூர் முதலிடத்தில் உள்ளது. காஞ்சிபுரம் பட்டியலில் இரண்டாவதாக உள்ளது.

## தொழிற்நுட்ப ஆதரவு மையம்

- WIPO'S TISC திட்டத்தின் கீழ் (TISC-Technology and Innovation Support Center) சென்னையில் தொழிற்நுட்பம் மற்றும் புத்தாக்க ஆதரவு மையம் (TISC) அமைக்க தொழிற் கொள்கை மற்றும் மேம்பாட்டு துறையானது (The Department of Industrial Policy and Promotion-DIPP) சென்னை அண்ணா தொழிற்நுட்ப பல்கலைக்கழகத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளது.
- இது உலக அறிவு சார் சொத்துரிமை நிறுவனத்தின் (WIPO- World Intellectual Property Organisation) TISC திட்டத்தின் கீழ் இந்தியாவில் அமைக்கப்படும் இரண்டாவது மையமாகும்.
- சென்னையில் உள்ள அண்ணா பல்கலைக்கழகத்தின் அறிவுசார் சொத்துரிமை மையத்தில் (Centre for Intellectual Property Rights) இந்த ஆதரவு மையம் அமைக்கப்பட உள்ளது.
- உயர் தர தகவல் தொழிற்நுட்பங்கள் மற்றும் அதுசார் சேவைகளை வளரும் நாடுகளிலுள்ள தொழிற்முனைவோர்களுக்கு அணுகிடத்தக்க வகையில் வழங்கி அதன் மூலம் அவர்கள் அறிவுசார் சொத்துரிமைகளை உருவாக்கிடவும், பாதுகாத்திடவும், நிர்வகித்திடவும், புத்தாக்க ஆற்றலை சரியாக பயன்படுத்திடவும் உதவுவதே WIPO'S TISC திட்டத்தின் நோக்கமாகும்.

## புவித் தகவல் மையத்தை அடிப்படையாகக் கொண்ட ஆளில்லா விமானம் மூலமான வரைபடமிடல்

- சென்னை மாநகராட்சி, ஆளில்லா விமானங்கள் (Drones) மூலம் அதன் சேவைகளையும் தனியார் சொத்துகளையும் வரைபடமிடுவதற்கான திட்டத்தை புவித்தகவல் அமைப்பை அடிப்படையாக் கொண்டு ஆரம்பித்துள்ளது.
- இவற்றில் பயன்படுத்தப்படும் ட்ரோன்கள் என்பது ஆளில்லா தானியங்கி விமானங்கள் என அழைக்கப்படும்.
- செயற்கைக் கோள் புகைப்படங்களை போலன்றி, விமானங்கள் மூலம் எடுக்கப்படும் புகைப்படங்கள் குறைந்த உயரத்தில் 60 மீட்டர் உயர அளவிலிருந்து பொருட்களை மாநகராட்சிக்கு அடையாளம் காண உதவும்.
- அதன் மூலம் 5 சென்டிமீட்டர் அளவிற்கு துல்லியமான, உயர்தரத்தில் அமைந்த தெளிவான புகைப்படங்களை எடுக்க முடியும்.
- விரிவான டிஜிட்டல் வரைபடமிடலும், புவித் தகவல் அமைப்பு முறையிலான வரைபடமிடலும் மாநகர வசதிகளை மேம்படுத்துவதற்கு பெரிதும் உதவும்.
- இதில் உள்ள முப்பரிமாண முறையானது கட்டுமானத்தின் இயல்பைப் பற்றிய சரியான தகவல்களை கொடுக்கும்.
- இந்த வரைபடமிடலின் முக்கிய நோக்கம் கட்டிடங்களை குறைந்த அளவில் மதிப்பிட்டுக்காட்டி வரி குறைவாக வசூலிக்கப்படுவதை தடுத்து முறையான சொத்து வரி வசூலின் மூலம் வரி வருவாயை அதிகப்படுத்துவது ஆகும்.

## தமிழ்நாட்டின் முதல் டிஜிட்டல் கிராமம்

- காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள அம்மனூர் கிராமத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள இலவச வைஃபை (Wi-Fi) வசதியை ஆயிரத்திற்கும் மேற்பட்ட கிராமவாசிகள் பயன்படுத்த தொடங்கியுள்ளதை அடுத்து தமிழகத்தின் முதல் டிஜிட்டல் கிராமமாக அம்மனூர் கிராமம் உருவாகியுள்ளது.
- பி.எஸ்.என்.எல் (BSNL) நிறுவனத்தின் முயற்சியுடன் மக்களவை உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியைப் பயன்படுத்தி இந்த வைஃபை (Wi-Fi) வசதி ஏற்படுத்தப்பட்டு உள்ளது.
- வைஃபை பயன்பாட்டின் மூலம் கிராம விவசாயிகள் விவசாய இடுபொருட்களின் விலை விவரம், மின்கட்டணம், வானிலை அறிக்கை, விவசாயம் தொடர்பான தகவல்கள் மற்றும் புதிய வேளாண் தொழிற்நுட்பங்கள் பற்றிய தகவல்களை பெற இயலும்.

## மாமல்லபுர கற்சிற்பங்கள் -புவிசார் குறியீடு

- தமிழ்நாட்டின் மாமல்லபுரத்து கைவினை கற்சிற்பங்களுக்கு புவிசார் குறியீடு புவிசார் குறியீட்டு பதிப்பகத்தால் வழங்கப்பட்டுள்ளது.
- அழகு நேர்த்தியுடைய இந்த கற்சிற்ப செதுக்கு தொழிற்நுட்பமானது கி.பி.ஏழாம் நூற்றாண்டில் உருவானது.
- மாமல்லன் (பெரும் மற்போராளன்) என்று அழைக்கப்படும் முதலாம் நரசிம்ம வர்ம பல்லவனின் பெயர் கொண்டு இந்த இடத்திற்கு மாமல்லபுரம் எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.
- பல்லவ வம்சமானது கி.பி.6ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.9ஆம் நூற்றாண்டு வரை தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் ஆட்சி புரிந்தது. மாமல்லபுரம் என்ற துறைமுக நகரத்தை கலை மற்றும் கட்டிடக் கலையின் மையமாக உருவாக்கியதில் முக்கிய பங்கு ஆற்றியவர்கள்.

- கற்சிற்ப கலைக்கு பல்லவ மன்னர்கள் பெரும் பங்களிப்பு ஆற்றியவர்களாவர்.
- அவர்களாவர்,
    - மகேந்திரவர்மன் (கி.பி.580- கி.பி 680)
    - முதலாம் நரசிம்மவர்மன் அல்லது மாமல்லன் (கி.பி.630- கி.பி 668)
    - பரமேசுவர வர்மன் (கி.பி.672- கி. பி700)
    - இரண்டாம் நரசிம்ம வர்மன் அல்லது ராஜசிம்மன் (கி.பி.700- கி.பி 728)
- இச்சிற்ப கலையில், பெரும் அடர்த்தியும், பெரும் விலைமதிப்பும் உடைய கிரானைட் கற்களுக்குப் பதிலாக நீல உலோகங்கள் (Blue Metal) பயன்படுத்தப்பட்டுள்ளன.

*புவிசார் குறியீடு - தமிழ்நாடு*

- அதிக எண்ணிக்கையிலான பொருட்களுக்கு புவிசார் குறியீடு உடைய மாநிலங்களின் கணக்கில், தமிழ்நாடு முதலிடத்திலும், உத்திரப்பிரதேசம் இரண்டாவது இடத்திலும் உள்ளது.
- டார்ஜிலிங் டீ ஆனது புவிசார் குறியீடு பெற்ற முதல் இந்திய உற்பத்திப் பொருளாகும்.
- புவிசார் குறியீடு பெற தமிழகம் இதுவரை 50 பொருட்களை புவிசார் குறியீடு பதிப்பகத்திடம் சமர்ப்பித்துள்ளது. அவற்றில் 24 பொருட்களுக்கு புவிசார் குறியீடு கிடைத்துள்ளது.
- இவற்றுள் காஞ்சிப்பட்டு மிகவும் புகழ்பெற்றது.
- இதுவரை திண்டுக்கல் பூட்டிற்கு புவிசார் குறியீடு வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## உறுப்பு தானம் – தமிழகம் முதலிடம்

- தொடர்ந்து மூன்றாவது முறையாக, நாட்டில் அதிக அளவிலான உறுப்பு தானம் மற்றும் உறுப்பு மாற்றம் செய்யும் மாநிலங்களில் தமிழகம் முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- இத்தகைய சான்று தேசிய உறுப்புகள் மற்றும் திசுக்கள் மாற்று அமைப்பால் வழங்கப்பட்டுள்ளது. (NOTTO – National Organ and Tissue Transplant Organisation).
- தமிழ்நாட்டில் முதலமைச்சரின் விரிவுபடுத்தப்பட்ட மருத்துவ திட்டத்தின் கீழ் உறுப்பு மாற்று சிகிச்சை தனியார் மற்றும் அரசு மருத்துவமனையில் மேற்கொள்ளப்படுகின்றது.
- இந்தியாவிலேயே முதல் முறையாக உடல் உறுப்பு மாற்று சிகிச்சைக்கான ஆணையம் தமிழகத்தில் உருவாக்கப்பட்டு இயங்கி வருகின்றது.
- ”டிரான்ஸ்டன்” (TRANSTAN – Transplant Authority of Tamilnadu) என்றழைக்கப்படும் இந்த ஆணையம் தமிழ்நாட்டின் உடல் உறுப்பு மாற்று சிகிச்சைக்காக அமைக்கப்பட்ட தன்னாட்சி உடைய தனி ஆணையமாகும்.


## யுனெஸ்கோ பட்டியல் - சென்னை

- செறிந்த வளமான இசைப் பாரம்பரியம் கொண்டு விளங்குவதன் காரணமாக சென்னை நகரமானது யுனெஸ்கோவின் படைப்பாக்க நகரங்கள் தொடரமைப்பு பட்டியலில் (UNESCO'S Creative Cities Network) சேர்க்கப்பட்டுள்ளது.
- உலகில் இசைக்கு அதிகப் பங்களிப்பு அளிக்கும் 44 நாடுகளின் 64 நகரங்கள் இதுவரை அங்கீகரிக்கப்பட்டு இப்பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.

- சென்னை யுனெஸ்கோவின் படைப்பாக்க நகரங்கள் தொடரமைப்பு பட்டியலில் பட்டியலிடப்பட்டுள்ள மூன்றாவது இந்திய நகரமாகும். இதற்கு முன்பு ஜெய்ப்பூர், வாரணாசி போன்ற நகரங்கள் கடந்த ஆண்டு பட்டியலிடப்பட்டன.
- இப்பட்டியலில் ஜெய்ப்பூர் இசைக்கான நகரம் எனவும், வாரணாசி கைவினை மற்றும் நாட்டுப்புற கலைகளின் நகரமாகவும் பட்டியலிப்பட்டுள்ளன.
- நீடித்த நகர்ப்புற வளர்ச்சிக்கான உத்திசார் காரணியாக அடையாளம் காணப்பட்ட நகரங்களுடனும், அந்நகரங்களுக்கு இடையேயும் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக யுனெஸ்கோவினால் 2004 ஆம் ஆண்டு படைப்பாக்க நகரங்கள் தொடரமைப்பு பட்டியல் தொடங்கப்பட்டது.
- இந்த ஆண்டு சென்னையுடன் சேர்ந்து, சிறப்பான உணவியற் சமையற்கலை பாரம்பரியத்திற்காக இத்தாலியன் ஆல்பா நகரமும், இசைக்கான பங்களிப்பு பிரிவில் கஜகஸ்தானின் அல்மதி நகரமும், நியூசிலாந்தின் ஆக்லாந்தும் பட்டியலிடப்பட்டுள்ளன.
- இந்தப் புதிய நகரங்களின் சேர்ப்போடு தற்போது மொத்தம் 72 நாடுகளைச் சேர்ந்த 180 நகரங்கள் இப்பட்டியலில் இடம் பிடித்துள்ளன.
- உணவியற் சமையல்கலை, இசை, கைவினை மற்றும் நாட்டுப்புறக் கலை, ஊடகக் கலை, வடிவமைப்பு, திரைப்படம் மற்றும் இலக்கியம் எனும் ஏழு களங்களில் படைப்பாற்றலுடைய நகரங்கள் இந்தப்பட்டியலுக்கு தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

## இந்தியாவின் முதல் அலை ஆற்றலூட்டப்பட்ட வழிகாட்டு மிதவை

- சென்னையில் உள்ள தேசிய கடல்சார் தொழிற்நுட்ப நிறுவனத்தால் (National Institute of Ocean Technology-NIOT) இந்தியாவின் முதல் அலை ஆற்றலூட்டப்பட்ட வழிகாட்டு மிதவை (Wave - Powered Navigational buoy) கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- சர்வதேச ஆற்றல் நிறுவனம் (International Energy Agency) மற்றும் பெருங்கடல் ஆற்றல் திட்ட அமைப்பின் (Ocean Energy Systems) நிர்வாகிகள் குழு சந்திப்பின் போது இந்த மிதவை அறிமுகப்படுத்தப்பட்டு மத்திய புவி அறிவியல் அமைச்சகத்தால் சென்னையிலுள்ள எண்ணூர் காமராஜர் துறைமுகத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது.
- இது கடல்வழி பயணங்களின் போது கப்பல்கள் நங்கூரமிட சாத்தியமான பகுதிகளை குறிப்பதற்கும், பவளங்கள் அல்லது பிற அபாயங்கள் உள்ள இடத்தை குறித்திடவும் பயன்படுத்தப்படும் ஓர் நங்கூரமிடப்பட்டு நிலை நிறுத்தப்பட்ட வழிகாட்டு மிதவையாகும்.
- பிற வழக்கமான மிதவைகள் சூரிய மின் ஆற்றலை தங்கள் செயல்பாட்டிற்காகப் பயன்படுத்தும். ஆனால் இம்மிதவைகள் அலைகளினால் உண்டாகும் ஆற்றலை தன் இயக்கத்திற்காக மின்கலன்களில் (Battery) சேகரித்து வைத்து பின் பயன்படுத்தும். இதன் மூலம் இவை கப்பல்களுக்கு வழிகாட்டும்.
- துறைமுகங்களுக்கு உள்ளேயும், வெளியேயும் வரையறுக்கப்பட்ட கடல்பாதை வழி கப்பல் செல்வதற்கு வழிகாட்டிட இம்மிதவைகள் உதவும்.
- மேலும் இம்மிதவைகளால் துறைமுக அதிகாரிகளுக்குத் தேவைப்படும் தகவல்களான கடல்பரப்பில் வீசும் காற்றின் வேகம், காற்றின் திசை மற்றும் பிற அம்சங்களையும் பதிவு செய்ய இயலும்.




## IEA – OES Meeting

- ✓ சர்வதேச ஆற்றல் நிறுவனம் – பெருங்கடல் ஆற்றல் அமைப்பு.
- ✓ International Energy Agency – Ocean Energy System.

- ❖ சர்வதேச ஆற்றல் நிறுவனம் – பெருங்கடல் ஆற்றல் அமைப்பின் 33-வது நிர்வாகிகள் குழுவின் சந்திப்பு அண்மையில் நடைபெற்றது.
- ❖ பெருங்கடல் ஆற்றல் அமைப்புத் தொழில்நுட்ப கூட்டுத் திட்டமானது (Ocean Energy Systems Technology Collaboration Programme) பல்வேறு நாடுகளுக்கிடையேயான ஓர் கூட்டிணைவாகும்.
- ❖ இத்திட்டமானது சர்வதேச ஆற்றல் நிறுவனத்தால் தோற்றுவிக்கப்பட்ட கட்டமைப்பின் கீழ் செயல்படுகின்றது.
- ❖ 2017, ஏப்ரலில் இந்தியா இந்த மன்றத்தில் உறுப்பினரானது.
- ❖ இதன் மூலம் உலகம் முழுவதும் உள்ள பெருங்கடல் ஆற்றல் சார்ந்த மேம்பட்ட ஆராய்ச்சிகள் மற்றும் மேம்பாட்டு குழுவையும் , தகவல்கள் மற்றும் தொழிற்நுட்பங்களையும் இந்தியாவால் அணுகிட இயலும்.

# தேசியச் செய்திகள்

## பாதுகாப்பிற்கான நாடாளுமன்ற நிலைக்குழு

- ❖ புதிதாக அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பிற்கான நாடாளுமன்ற நிலைக் குழுவின் தலைவராக B.C கந்தூரி நியமிக்கப்பட்டுள்ளார்.
- ❖ இந்த நிலைக் குழுவானது ஆயுதப்படைகளின் செயல்பாட்டுத் தயார் நிலையை மதிப்பிடல், போர்திறஞ் சார்ந்த பாதுகாப்பு அமைப்புகள் சம்பந்தப்பட்ட விபத்துகளை ஆய்வு செய்தல், பாதுகாப்பு உபகரணங்கள் தொடர்பான கொள்முதல் கொள்கைகளை மதிப்பிடல், ஆயுதப்படைகளுக்கு வழங்கப்படும் குறிப்பாக எல்லைப் பகுதியில் பணிபுரியும் படைகளுக்கு வழங்கப்படும் உணவின் தரத்தினை கண்காணித்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளும்.

### *நாடாளுமன்ற நிலைக்குழுக்கள்*

- ❖ நாடாளுமன்றத்தில் 24 நிலைக் குழுக்கள் உள்ளன. அனைத்து நிலைக்குழுக்களும் 31 உறுப்பினர்களை உடையது. அவற்றில் ஒவ்வொன்றிலும் மக்களவையிலிருந்து 21 உறுப்பினர்களும், மாநிலங்களவையிலிருந்து 10 உறுப்பினர்களும் அமைவர்.
- ❖ நாடாளுமன்றத்திற்கு, மத்திய அமைச்சர்கள் போன்ற நிர்வாகிகளின் பொறுப்புடைமையை குறிப்பாக நிதியியல் பொறுப்புடைமையை உத்திரவாதப்படுத்துவதே இந்த நிலைக்குழுக்களின் முக்கிய குறிக்கோளாகும்.
- ❖ நாடாளுமன்ற நிலைக்குழுக்களின் பதவிக்காலம் – குழுக்கள் அமைக்கப்பட்டதிலிருந்து ஒரு வருடம் ஆகும்.
- ❖ மொத்தமுள்ள 24 நிலைக்குழுக்களில் 8 நிலைக்குழுக்கள் மாநிலங்களவையின் கீழும், 16 நிலைக்குழுக்கள் மக்களவையின் கீழும் செயல்படுகின்றன.
- ❖ பாதுகாப்பிற்கான நாடாளுமன்ற நிலைக்குழு மக்களவையின் கீழ் செயல்படுகின்றது.

## சித்ரவதைக்கு எதிரான ஐ,நாவின் உடன்படிக்கை

- ❖ சட்ட ஆணையம் தனது சமீபத்திய 273 ஆவது அறிக்கையில், சித்ரவதைக்கு எதிரான ஐ.நா.வின் உடன்படிக்கைக்கு பின்னேற்பளிக்கவும், பொது மக்களை சித்ரவதை செய்வதாக தண்டனைக்கு உள்ளாகும் அரசு அதிகாரிகளுக்கு ஆயுள் தண்டனை அளிக்கவும் மத்திய அரசுக்கு பரிந்துரை அளித்துள்ளது .அதனோடு சித்ரவதைக்கு எதிரான மசோதா 2017 க்கு முன்மொழிவையும் அளித்துள்ளது.
- ❖ மத்திய சட்டத் துறை அமைச்சகத்திற்கு சட்ட ஆணையம் அளித்துள்ள அறிக்கையில், பாதிக்கப்படுபவர்களுக்கு இழப்பீடும், சாட்சியங்களுக்கான பாதுகாப்பினையும் வழங்குவதற்கான சட்டக் கூறுகளுக்கு இடமளிப்பதற்காக இந்திய குற்றவியல் நடைமுறைச் சட்டம் – 1973, மற்றும் இந்திய சாட்சியச் சட்டம் 1872-ல் திருத்தங்களை கோரி பரிந்துரை செய்துள்ளது.

*UNCAT- United Nations Convention Against torture **(சித்ரவதைக்கு எதிரான ஐ,நாவின் உடன்படிக்கை)***

- ❖ சித்ரவதைக்கு எதிரான ஐ.நா.வின் உடன்படிக்கை ஆனது சித்ரவதை மற்றும் பிற கொடூர, மனிதத்தன்மையற்ற, சீரழிவு தண்டனைக்கு எதிரான ஐ.நா. உடன்படிக்கை என்றும் அழைக்கப்படும்.
- ❖ இது உலகம் முழுவதும் சித்ரவதை, பிற கொடூர செயல்பாடுகள், மனிதத்தன்மையற்ற செயல்கள், சீரழிவுத் தண்டனைகள் போன்றவை நடைபெறுவதைத் தடுக்க ஐ.நா.வின் கண்காணிப்பின் கீழ் செயல்படும் சர்வதேச மனித உரிமைகளுக்கான ஒப்பந்தமாகும்.
- ❖ பாகிஸ்தான், சீனா, ஆப்கானிஸ்தான் உட்பட 161 நாடுகள் இந்த ஒப்பந்தத்திற்கு பின்னேற்பளித்துள்ளன (Ratification).
- ❖ 1997-ல் இந்தியா இவ்வொப்பந்தத்தில் கையெழுத்திட்டது, ஆனால் இது வரை பின்னேற்பளிக்கவில்லை.
- ❖ உலகம் முழுவதும் இந்தியாவோடு சேர்ந்து மொத்தம் 9 நாடுகள் இந்த முக்கியமான உடன்படிக்கைக்கு பின்னேற்பளிக்காமல் உள்ளன.

## தேசிய ஒருமைப்பாட்டு முகாம்


- “ஒரே பாரதம் சிறந்த பாரதம்” (Ek Bharat Shrestha Bharat) எனும் செயற்திட்டத்தின் ஒரு பகுதியாக கேந்திரிய வித்யாலயா சங்கத்தன் எனும் பள்ளிகளுக்கான மத்திய அமைப்பால் தேசிய ஒருமைப்பாட்டு முகாம் (Rashtriya Edta Shivir / National Integration Camp) தொடங்கப்பட்டுள்ளது.
- இந்திய நாட்டினுடைய “வேற்றுமையில் ஒற்றுமை” (Unity in diversity) எனும் சித்தாந்தத்தை இலக்கிட்டு, ஊக்குவிப்பதே இந்த தேசிய ஒருமைப் பாட்டிற்கான முகாமின் நோக்கமாகும்.
- நாட்டின் ஒரு மாநிலத்தைச் சேர்ந்த மாணவர்கள் நாட்டின் பிற மாநிலத்தினுடைய கலாச்சார பன்முகத் தன்மையை பிரதிநிதித்துவப் படுத்துவார்கள் என்பதே இந்த தேசிய ஒருமைப்பாட்டு முகாமின் தனித்துவம் மிக்க அம்சமாகும்.

## வித்யார்த்தி விக்யான் மன்தன்

- வித்யார்த்தி விக்யான் மன்தன் என்பது விக்யான் பிரசார் அமைப்பால் நாடு முழுவதும் நடத்தப்படும் அறிவியல் திறனாளிகளுக்கான தேடல் தேர்வாகும்.
- இது இளைஞர்களுக்கிடையே குறிப்பாக பள்ளி மாணவர்களிடையே அறிவியல்,தொழிற்நுட்பம் மற்றும் கணிதம் போன்ற பாடங்கள் பயில்வதை ஊக்குவிப்பதற்காக தொடங்கப்பட்ட ஓர் தனித்துவமிக்க தொடக்கமாகும்.
- விக்யான் பிரசார் என்பது விஞ்ஞான பாரதி, மத்திய மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின் தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி குழு (NCERT), மத்திய அறிவியல் மற்றும் தொழிற்நுட்ப துறை ஆகிய மூன்று அமைப்புகளின் கீழ் செயல்படும் ஓர் தன்னாட்சி அமைப்பாகும்.
- விஞ்ஞான பாரதி என்பது நாட்டின் தலைசிறந்த ஆராய்ச்சியாளர்களால் நடத்தப்படும் ஓர் மிகப்பெரிய அறிவியல் இயக்கமாகும்.

## சிறப்பு நீதி மன்றங்கள்

- தேர்தல் சீர்திருத்தங்களை முன்னெடுத்து செல்லும் விதமாக, குற்றப் பின்னணி உள்ள அரசியல்வாதிகள் மீதான வழக்குகளை விசாரிக்க சிறப்பு நீதிமன்றங்களை அமைக்க திட்ட அறிக்கை ஒன்றை வகுத்து சமர்ப்பிக்குமாறு மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



### *துரித தகவல்கள்*

- ❖ கடந்த 2014 பொதுத் தேர்தலின் வேட்பு மனு தாக்கலின் படி நாட்டில் 1581 நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மீது கிரிமினல் வழக்குகள் காணப்படுகின்றது.
- ❖ தற்போதைய 16-வது மக்களவையில் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் மேல் கிரிமினல் வழக்குகள் உள்ளன.
- ❖ மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் 1951 ன் படி, கிரிமினல் வழக்கில் இரண்டு ஆண்டுகளுக்கு குறையாமல் அதாவது 2 ஆண்டுகளுக்கு மேல் தண்டனை பெற்ற ஒருவர் அவரது தண்டனை நாட்களிலும், விடுதலை ஆன பிறகு 6 ஆண்டுகளுக்கும் தேர்தலில் போட்டியிடத் தடை உள்ளது.
- ❖ 2013 ஆம் ஆண்டின் லில்லி தாமஸ் வழக்கில் (Lilly Thomas Case) தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் மீதான குற்றம் உறுதி செய்யப்பட்டு தண்டிக்கப்பட்டால் உடனடியாக அவர் பதவி நீக்கம் செய்யப்பட வேண்டும் என உச்ச நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது. அதற்கு முன்னால் தண்டிக்கப்பட்ட உறுப்பினருக்கு மேல்முறையீடு செய்வதற்கு வழங்கப்பட்டிருந்த 90 நாள் அவகாசத்தையும் அந்த வழக்கில் உச்சநீதி மன்றம் ரத்து செய்தது.
- ❖ 2014ஆம் ஆண்டின் பப்ளிக் இந்தியா பவுண்டேசன் வழக்கில் (Public India Foundation Case) தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் கிரிமினல் வழக்குகளை குறிப்பாக ஊழல் மற்றும் கொடூரமான கிரிமினல் குற்றங்கள் தொடர்புடைய வழக்குகளை ஓராண்டுக்குள் விசாரித்து தீர்ப்பு வழங்க வேண்டும் என உச்சநீதி மன்றம் கால வரம்பு நிர்ணயித்துள்ளது.

## உலக வளைபாதங்கள் மாநாடு

- ❖ மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தோடு க்யூர் இந்தியா அமைப்பு இணைந்து நடத்தும் உலக வளைபாதங்கள் மாநாட்டை ( World Clubfoot Conference ) இந்திய குடியரசுத் தலைவர் டெல்லியில் தொடங்கி வைத்தார்.
- ❖ வளைபாதம் என்பது ஒரு பாதமோ (அ) இரு பாதங்களுமோ உள் நோக்கியவாறோ (அ) வெளிநோக்கியவாறோ பிறழ்ச்சியடைந்து இருக்கும் ஓர் பிறப்பு எலும்பியல் குறைபாடாகும்.
- ❖ ஆரம்ப காலத்திலேயே சிகிச்சை அளிக்காவிடின் இது நிரந்த இயலாமையை (உடற் சவாலை) ஏற்படுத்தும்.
- ❖ வளை பாதங்களுக்கான காரணம் இன்னமும் சரியாக அறியப்படவில்லை. ஆனால் மரபியல் மற்றும் சுற்றுச்சூழல் இணைவு காரணிகள் காரணமாக இருக்கலாம் என கருதப்படுகிறது.

## Blue Flag -பல தரப்பு கூட்டுப்போர் பயிற்சி

- ❖ Blue Flag என்பது கூட்டுப் போர் பயிற்சியில் பங்குபெறும் நாடுகளுக்கிடையேயான இராணுவ ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்காக ஆண்டிற்கு இரு முறை நடத்தப்படும் ஓர் பல தரப்பு கூட்டுப் போர் பயிற்சியாகும்.
- ❖ இந்த ஆண்டு இஸ்ரேலில் நடைபெற உள்ள இந்த பல தரப்பு கூட்டுப் போர் பயிற்சியில் இந்திய விமானப்படை பங்கெடுக்க உள்ளது.
- ❖ பல தரப்பு கூட்டுப் போர்ப்பயிற்சியில் முதல் முறையாக இஸ்ரேலிய விமானப்படையுடன் இணைந்து இந்திய விமானப்படை இராணுவ பயிற்சி செய்ய உள்ளது.
- ❖ பங்கு பெறும் நாடுகளினுடைய செயற்பாட்டு திறன்களை மேம்படுத்தவும், சண்டை எதிர்ப்பு அனுபவங்களையும், அது சார் தகவல்களையும் பகிர்ந்து கொள்வதற்கு ஒரு தளமாக இந்தக் கூட்டுப் போர் பயிற்சி அமையும்.

## இந்தியா மற்றும் அர்மேனியா இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம்

- இந்தியா மற்றும் அர்மேனியா ஆகிய நாடுகளுக்கு இடையே சுங்கம் சார்ந்த விஷயங்களில் ஒத்துழைப்பையும் பரஸ்பர உதவியையும் ஏற்படுத்தும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு இசைவு அளித்திட பிரதமர் தலைமையிலான மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த ஒப்பந்தம் இருநாட்டைச் சார்ந்த சுங்க அதிகாரிகளுக்கிடையே தகவல்கள் மற்றும் புலனாய்வு விவரங்களை பகிர்ந்திட சட்ட வரைமுறையை ஏற்படுத்தும்.

## 21வது உலக மன நல மாநாடு

- உலக மனநல கூட்டமைப்பானது (WFMH) கேரிங் பவுண்டேஷன் மற்றும் தில்லியில் உள்ள பிற நிறுவனங்களுடன் இணைந்து 21-வது உலக மன நல மாநாட்டை புதுதில்லியில் நடத்தியது. இந்த மாநாட்டை இந்திய குடியரசுத் தலைவர் துவக்கி வைத்தார்.
- இந்த மாநாடு முதன் முறையாக இந்தியாவில் நடக்கிறது.
- தேசிய மனநல ஆய்வு 2016 அறிக்கையின் படி இந்தியாவில் 14 சதவீத மக்களுக்கு தகுந்த மனநலம் சார்ந்த சிகிச்சைகள் தேவைப்படுவதாகக் கண்டறிந்த பிறகு இந்தியாவில் இது நடத்தப்படுகிறது.
- இந்த மாநாடு யோகா, தியானம் மற்றும் மனநலத்திற்கான மரபு சார்ந்த அணுகுமுறைகள் போன்றவை மீது சிறப்பு அமர்வுகள் கொண்டிருக்கும்.

## இந்தியா கஜகஸ்தான் – கூட்டு நடவடிக்கை “பிரபல் தோஸ்த்க் 2017”

- இந்தியாவிற்கும் கஜகஸ்தானிற்கும் இடையேயான இருதரப்பு ராணுவப் பயிற்சி நடவடிக்கையான “பிரபல் தோஸ்த்க் 2017” இமாச்சலப் பிரதேசத்தின் பாக்லோஷ் என்ற பகுதியில் தொடங்கியது.
- “பலமான நட்பு” என்ற பொருள்படும் பிரபல் தோஸ்த்க் பயிற்சி நடவடிக்கை கூட்டு இராணுவப் பயிற்சி நடவடிக்கையின் இரண்டாவது பதிப்பாகும். 2016-ல் இது கஜகிஸ்தானின் காரகாந்தா பகுதியில் நடத்தப்பட்டது.
- இது 14 நாட்கள் நடத்தப்படும் பயிற்சி நடவடிக்கையாகும்.
- இது இரு நாட்டு ராணுவங்களினிடையே பலமான நட்புறவை ஏற்படுத்தவும் திறன் மற்றும் அனுபவங்களை பகிர்ந்து கொள்ளவும் நடத்தப்படுகிறது.
- இந்தப் பயிற்சிக்கான குழுவானது, 11வது கூர்க்கா துப்பாக்கிப் படைப் பிரிவின் இந்திய வீரர்களையும் , அதே அளவு கஜகஸ்தான் இராணுவப்படைகளையும் கொண்டதாகும்.

## தேசிய ஒய்வூதியத் திட்டத்தில் சேர்வதற்கான அதிகபட்ச வயது

- மத்திய நிதி அமைச்சகம், தேசிய ஒய்வூதியத் திட்டம் – தனியார் துறை என்ற பிரிவின் கீழ், தேசிய ஒய்வூதியத் திட்டத்தில் சேர்வதற்கான அதிகபட்ச வயது வரம்பை, தற்போதைய 60 வயதிலிருந்து 65 வயதாக உயர்த்தியுள்ளது.
- ஒய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையத்தின் இந்த நடவடிக்கை 60-65 வயது கொண்ட மக்கள் தேசிய ஒய்வூதியத் திட்டத்தில் சேர்வதற்கும், 70வது வயது வரை பங்களிப்பதற்கும் அளிப்பதற்கும் வழிவகை செய்கிறது.

- தற்போது வரை 18 வயது முதல் 60 வயது வரையிலான தனிநபர்கள் மட்டும் தேசிய ஓய்வூதியத் திட்டத்தில் சேர முடியும்.
- தேசிய ஓய்வூதியத் திட்டம் 2004-ல் அரசு ஊழியர்களுக்கென்று ஆரம்பிக்கப்பட்டு பின்னர் 2009ம் ஆண்டு அனைத்து குடிமகன்களுக்குமான திட்டமாக அறிவிக்கப்பட்டது.

## தில்லியின் தலைமை நிர்வாக அதிகாரத்தின் தலைமை துணை நிலை ஆளுநரே என உச்சநீதிமன்றம் தீர்ப்பு

- இந்தியாவின் தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா தலைமையிலான ஐந்து நீதிபதிகள் கொண்ட அமர்வு தலைநகரத்திற்கான நிர்வாக விஷயங்களில் இந்திய அரசியலமைப்பானது தில்லியின் துணை நிலை ஆளுநருக்கே முன்னுரிமை அளிப்பதாகத் தெளிவாக கூறியுள்ளது.
- இந்திய அரசியல் அமைப்பு விதி 239AA ஆனது நிலம், சட்டம் மற்றும் ஒழுங்கு, காவல் ஆகிய விஷயங்கள் மத்திய அரசின் அதிகார வரம்பிற்குட்பட்டது என்றும், இவை துணைநிலை ஆளுநர் மூலம் நிர்வகிக்கப்பட வேண்டுமென்றும், இதர விஷயங்கள் நகர நிர்வாகத்திடம் விட்டுவிட வேண்டுமென்றும் கூறுகிறது.

## உண்மை நேர கடல் வழித் தகவலை பகிர இந்தியா அனுமதி

- இந்தியப் பெருங்கடலில் உள்ள 10 கரையோர நாடுகளுடன் இந்தியப் பெருங்கடலில் ஏற்படும் கடல்வழிப் போக்குவரத்தின் புலனாய்வுத் தகவல்களை பகிர்ந்து கொள்ள இந்தியா வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது.
- இந்தியப் பெருங்கடல் பகுதியில் சீனா தனது ஆளுகையை அதிகரித்து வருவதற்கு எதிராக இந்தியா நடவடிக்கை எடுத்து வரும் சமயத்தில், இந்த அறிவிப்பை கோவாவில் நடைபெற்ற கடல்வழி கூட்டத்தில் தலைமை கடற்படைத் தளபதி சுனில் லம்பா அறிவித்தார்.
- கோவா கடல்வழி மாநாடு கோவாவில் உள்ள INS மாண்டோவியின் தரங் அரங்கத்தில் தொடங்கப்பட்டது.
- பிராந்திய கடல் வழிக்கான சவால்களுக்கு தீர்வு காணும் வகையில் இந்தக் கூட்டம் நடத்தப்பட்டது.
- இதில் பின்வரும் விஷயங்களில் விவாதங்கள் நடத்தப்பட்டன,
  - ✓ புதிதாக எழும் கடல்வழி ஆபத்துகள் மற்றும் படை அமைப்புகள்
  - ✓ கடல் வழி பகுதி விழிப்புணர்வு
  - ✓ கடல்வழிப் பாதுகாப்பு கட்டமைப்பு
  - ✓ இந்தியப் பெருங்கடலில் கடல்வழிப் பாதுகாப்பிற்கான சவால்கள்
- தற்போது பகிரப்பட உள்ள தகவல்களில் வர்த்தகப் போக்குவரத்தோடு புலனாய்வுத் தகவல்களும் அடங்கும்.
- இம்மாதிரியான தகவல் பகிர்வு வழக்கமான இராணுவக் காரணங்களுக்கான பயிற்சி மட்டுமன்று. கடற்பகுதியில் அதிகரித்து வரும் மரபு சாரா ஆபத்துக்களை சமாளிப்பதற்காகவும் ஆகும்.

## உலக இந்திய உணவு மாநாடு -2017

- மூன்று நாட்கள் நடைபெறும் உலக இந்திய உணவு – 2017 மாநாட்டை டெல்லியிலுள்ள விக்யான் பவனில் பிரதமர் துவக்கி வைத்தார்.
- இம்மாபெரும் நிகழ்வை மத்திய உணவுப் பதப்படுத்துதல் அமைச்சகம், இந்திய தொழிலகக் கூட்டமைப்புடன் (CII – Confederation of Indian Industry) இணைந்து நடத்துகிறது.
- இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க உலக உணவு மாநாடு முதன் முறையாக இந்தியாவில் நடத்தப்படுவதை குறிக்கும் விதத்தில் முதலீட்டாளர்களின் நண்பன் எனப் பொருள்படும் "நிவேஷ் பந்து" எனும் தனித்துவமான இணையவாயிலை பிரதமர் தொடங்கி வைத்தார். இந்தியாவுடன் சேர்ந்து ஜெர்மனி, டென்மார்க், ஜப்பான் ஆகிய நாடுகள் இம்மாநாட்டை நடத்துகின்றன.
- 2017ஆம் ஆண்டின் உலக இந்திய உணவு மாநாட்டின் கருத்துரு "உணவுப் பொருளாதாரத்தை மாற்றியமைத்தல்".
- இந்த இணையவாயிலானது உணவுப் பதப்படுத்துதல் துறைக்கு வழங்கப்பெறும் ஊக்கத் தொகைகள் பற்றிய தகவல்களையும், மத்திய மற்றும் மாநில அரசுகளின் உணவுப் பதப்படுத்துதல் கொள்கைகள் பற்றிய தகவல்களின் தொகுப்பையும் தரவல்லது.
- உலக உணவுப் பதப்படுத்துதல் தொழிற்சாலைகளின் மூல ஆதார முனைமையாகவும், முதலீட்டாளர்களின் விருப்பத் தேர்வு இலக்காகவும் இந்தியாவை உருவாக்கி, அதன் மூலம் இந்தியாவின் உணவுப் பொருளாதாரத்தை மாற்றி அமைப்பதற்காகவும், விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்க வேண்டுமென்ற தொலை நோக்கை நனவாக்குவதற்காகவும் இந்த உலக உணவு இந்தியா 2017 மாநாடு நடத்தப்படுகிறது.

## தீன் தயாள் ஸ்பார்ஷ் யோஜனா

- SPARSH – Scholarship for promotion of Aptitude & Research in Stamps as a Hobby
- அஞ்சல் தலைகளில் ஆராய்ச்சி மற்றும் திறனறிவுப் பகுப்பாய்வை மேற்கொள்ளுதலை ஓர் விருப்பப் பொழுதுப் போக்காக ஊக்குவிக்க அளிக்கப்படும் உதவித் தொகை.
- பள்ளி மாணவர்களிடையே அஞ்சல் தலை சேகரிக்கும் பழக்கத்தை அதிகரிப்பதற்காக மத்திய தொலைத் தொடர்பு அமைச்சகத்தால் வழங்கப்படும் ஓர் அகில இந்திய பள்ளி மாணவர்களுக்கான உதவித்தொகை திட்டமே தீன்தயாள் ஸ்பார்ஷ் (SPARSH) யோஜனாவாகும்.
- இத்திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் 6-ஆம் வகுப்பு முதல் 9-ஆம் வகுப்பு வரையிலான நல்ல கல்வித் தேர்ச்சிப் பதிவுகளும், அஞ்சல் தலை சேகரிக்கும் பழக்கமும் உடைய மாணவர்கள் மண்டல தபால் அலுவலங்களில் நடத்தப்படும் போட்டித் தேர்வு செய்முறைகளின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டு உதவித் தொகை வழங்கப்படும்.
- இத்தகு உதவித் தொகையைப் பெற, அம்மாணவர் இந்தியாவிற்குள் உள்ள ஏதேனும் ஒரு அங்கீகரிக்கப்பட்ட பள்ளியின் மாணவராகவும், சம்பந்தப்பட்ட அப்பள்ளி ஓர் அஞ்சற்தலை சேகரிப்பு குழுவை (கிளப்) கொண்டதாகவும், அக்குழுவில் அம்மாணவர் உறுப்பினராகவும் இருத்தல் வேண்டும்.

## ஐக்யூஎம்பி மென்பொருள் செயலி- இந்திய ராணுவம்

- இந்திய இராணுவம், இராணுவப் பிரிவின் பல்வேறு தளவாடங்கள் சம்பந்தப்பட்ட செயல்பாடுகளை தானியங்குபடுத்துதலுக்கான மென்பொருள் செயலியான இன்டகிரேடட் குவார்ட்டர் மாஸ்டர் பேக்கேஜ்ஜை (IQMP-Integrated Quarter Master Package) தொடங்கி வைத்துள்ளது.

- ஐக்யூஎம்பி (IQMP) என்ற இணையம் சார்ந்த மென்பொருளை இந்திய இராணுவ மென்பொருள் மேம்பாட்டு மையம், TCS நிறுவனத்தோடு சேர்ந்து உருவாக்கியுள்ளது.
- இந்தச் செயலியானது இராணுவப் பிரிவின் பல்வேறு தளவாடங்கள் தொடர்பான செயல்பாடுகளை தானியங்குப்படுத்தும். இந்தச் செயலியானது பாரம்பரியமாக பயன்படுத்தப்பட்டு வந்த மென்பொருள்களான 'வஸ்த்ரா' மற்றும் குவார்டர் மாஸ்டர் பேக்கேஜ் (Quarter Master Package) போன்றவற்றிற்கு மாற்றாக அமையும்.
- இந்தச் செயலியானது இராணுவத்தின் பல்வேறு பிரிவுகளின் குறிப்பிட்ட தேவைகளைப் சந்திக்கும் வகையில் அதன் கட்டமைப்பை மாற்றியமைக்கவல்லது.
- இந்தச் செயலியானது தளவாடங்களின் நிர்வகித்தல் களத்துடன் தொடர்புடைய மற்ற மென்பொருள் செயலிகளுடன் தகவல் மட்டும் தரவைப் பகிர்ந்து கொள்ளும் திறனைக் கொண்டது.

## INS – விஷாலில் வானூர்தி செலுத்து அமைப்பு

- விமானம்தாங்கி கப்பல்களில் இருந்து போர் விமானங்களை வானில் செலுத்த கவண் (catapult) அடிப்படையிலான அமைப்புகளை இந்திய கப்பல்படை பயன்படுத்தவுள்ளது. அமெரிக்க தொழில் நுட்பத்தின் அடிப்படையிலான இந்த வானூர்தி செலுத்தும் கவண் அமைப்பினை முற்றிலும் உள்நாட்டில் வடிவமைக்கப்படும் இரண்டாவது இந்திய விமானம்தாங்கி கப்பலான INS விஷாலில் பொருத்தப்படவுள்ளது.
- விமானம் தாங்கி கப்பல்களில் கேட்டோபார் (CATOBAR) அல்லது இமால்ஸ் (EMALS) அமைப்புகள் பொருத்தப்படும்.
- CATOBAR என்பது நீராவி ஆற்றலில் கவண்களை இயக்கி வானூர்திகளை வானில் செலுத்தும் தொழில்நுட்பம் ஆகும்.
- EMALS என்பது மின்காந்த ஆற்றலில் கவண்களை இயக்கி வானூர்திகளை வானில் செலுத்தும் தொழில்நுட்பம் ஆகும்.
- மின் காந்த ஆற்றலைப் பயன்படுத்துவது கனமான வானூர்திகளை வானில் செலுத்த வகை செய்யும். மேலும், இது வானூர்திகளை செலுத்தும் பொழுது அவற்றின் மீது ஏற்படும் அழுத்தத்தைக் குறைக்கும்.
- INS விக்ராந்த் வகுப்பில் INS விஷால் அணுசக்தி ஆற்றலில் இயங்கும் கப்பலாகும்.
- முழுவதும் உள்நாட்டுத் தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்பட்ட இந்தியாவின் முதல் விமானம்தாங்கிக் கப்பல் INS விக்ராந்த் ஆகும். 40,000 டன்கள் எடையுள்ள INS விக்ராந்த் 2018 ஆம் ஆண்டின் இறுதியில் கட்டுமானம் முடிக்கப்பட்டு அறிமுகம் செய்யப்படும்.
- தற்போது இயக்கத்தில் இருக்கும் இந்தியாவின் ஒரே விமானம் தாங்கிக் கப்பலான INS விக்ரமாதித்யாவும், கட்டுமான நிலையில் இருக்கும் INS விக்ராந்தும் STOBAR ( short Take Off-but Arrested Recovery) என்றழைக்கப்படும் மேல்நோக்கி வளைந்த விமான ஓடுபாதை அமைப்பினை கொண்டுள்ளன.

## பாரடைஸ் பேப்பர்ஸ்

- அண்மையில் ஆப்பிள்பை எனும் சர்வதேச சட்ட நிறுவனத்தால் திரட்டப்பட்ட "பாரடைஸ் பேப்பர்" எனும் அறிக்கை சர்வதேச புலனாய்வு பத்திரிக்கையாளர் அமைப்பால் (ICIJ) வெளியிடப்பட்டுள்ளது.

- "பாரடைஸ் பேப்பர்" என்பது 180 நாடுகளைச் சேர்ந்த வரிஏய்ப்பு செய்து வெளிநாடுகளில் முதலீடு செய்த உலகின் பெரும் சக்திவாய்ந்த நபர்கள் மற்றும் கார்பரேட் நிறுவனங்களைப் பற்றிய தகவல்கள் அடங்கிய 1.34 கோடி ஆவணங்களின் தொகுப்பாகும்..
- பாரடைஸ் பேப்பர் விவகாரம் தொடர்பான விசாரணைக்கு மத்திய நேரடி வரி ஆணையத் தலைவரின் கீழ் அமைக்கப்பட்ட பல்வேறு அமைப்புகள் அடங்கிய பல்துறை குழுவை (Multi-Agency Committee ) மத்திய அரசு மாற்றியமைத்துள்ளது.
- இதே குழு இதற்கு முன்பு பனாமா லீக்ஸ் விவகாரத்திற்காக 2016 ல் அரசால் அமைக்கப்பட்டது.
- இந்த அறிக்கையின் படி, 180 நாடுகளில் அதிக நபர்களைக் கொண்ட நாடுகள் அடிப்படையில் இந்தியா 19 இடத்தில் உள்ளது.
- பன்னாட்டு புலனாய்வு பத்திரிக்கையாளர் கூட்டமைப்புடன் சேர்ந்து அதன் இந்திய பங்காளரான இந்தியன் எக்ஸ்பிரஸ் இந்த பாரடைஸ் பேப்பர்ஸ் அறிக்கையை வெளியிட்டுள்ளது.

*ICIJ – International consortium For Investigative Journalist*

*(சர்வதேச புலனாய்வு பத்திரிக்கையாளர் கூட்டமைப்பு)*

- புலனாய்வு விவகாரங்களில் தீவிர விசாரணைகளை மேற்கொள்ளும் 70 நாடுகளைச் சேர்ந்த 200க்கும் மேற்பட்ட புலனாய்வு பத்திரிகையாளர்களின் ஓர் உலக கூட்டு அமைப்பே ICIJ ஆகும்.

*தோற்றம்:*

- 1977இல் அமெரிக்க பத்திரிக்கையாளரான சுக் லீவிஸ் என்பவரால் இது தோற்றுவிக்கப்பட்டது.
- இதன் தலைமையகம்- அமெரிக்காவின் வாஷிங்டன் D.C நகரில் அமைந்துள்ளது.
- இதற்கு முன் இக்கூட்டமைப்பு 2016-ல் "பனாமா பேப்பர்ஸ்" அறிக்கையை வெளியிட்டது.

## மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின் திட்டங்கள்

*சின்தன் ஷிவிர்*

- மத்திய மனிதவளத் துறை அமைச்சகத்தின் பள்ளிக்கல்வி மற்றும் கல்வியறிவுத் துறையால் ஏற்பாடு செய்யப்பட்ட "சின்தன் ஷிவிர்" எனும் இரு நாள் தேசியப் பயிலரங்கை டெல்லியில் மத்திய மனித வள மேம்பாட்டுத்துறை அமைச்சர் தொடங்கி வைத்தார்.
- 21 ஆம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு பொருத்தமான தொடர்புடைய முழுமைப்பெற்ற கல்வியை வழங்குவதே இந்தப் பயிலரங்கத்தின் குறிக்கோளாகும்.
- இந்திய கல்வித் துறையில் உள்ள முக்கிய கல்விக் கருத்துருக்களில் திட்ட ஆராய்வுகளை மேற்கொள்வதற்காக அரசுசாரா தொண்டு நிறுவனம், தனியார் துறை மற்றும் தனிநபர்கள் போன்ற பல பங்குதாரர்களை ஒருசேர குழுமிப்பதை நோக்கமாகக் கொண்டது இப்பயிலரங்கம்.


*ஷாலாசாரதி*

- மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகமானது "ஷாலாசாரதி" எனும் மாநிலங்கள் – அரசு தொண்டு நிறுவனங்கள் – பெருநிறுவன சமூக பொறுப்பு (State-NGO-CSR Portal) இணையவாயிலை தொடங்கியுள்ளது.
- "ஷாலா சித்தி" என்பது ஓர் நன்கு வரையறுக்கப்பட்ட, தர அடிப்படையிலான அளவுருக்களின் மீது கவனமிடப்பட்ட விரிவான பள்ளி மதிப்பீட்டு இணையவாயில் அமைப்பாகும்.
- இது மேம்பாட்டிற்காக தொழிற்முறை தீர்ப்புகளை பள்ளிகள் மேற்கொள்ள வகை செய்யும்.

- பல்வேறு பள்ளிகளில் புத்தாக்க முயற்சிகளைப் பகிர்வதற்காக பங்குதாரர்களின் கூட்டிணைவிற்கு உதவ மாநிலங்கள் – அரசு தொண்டு நிறுவனங்கள் – பெருநிறுவன சமூக பொறுப்புகளின் பங்களிப்பால் உருவாக்கப்பட்டதே இந்த State-NGO-CSR இணையவாயிலாகும்.

## மிகப்பெரியப் பால வளைவு

- ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் ரேசி மாவட்டத்தில் செனாப் நதியின் மேல் கட்டப்பட்டுள்ள உலகின் மிக உயரமான பாலத்தில் முக்கிய பாலத்தாங்கு வளைவு கட்டமைப்பை இந்திய இரயில்வே தொடங்கியுள்ளது.
- செனாப் நதிப் பாலமானது உலகின் மிக உயரமான ரெயில் பால வளைவுடைய பாலமாகும்.




- இந்த பாலமானது காஷ்மீர் பள்ளத்தாக்கிற்கு நேரடி வழி இணைப்பை ஏற்படுத்தும்.
- உதம்பூர் – ஸ்ரீநகர் – பாரமுல்லா இரயில் இணைப்பு திட்டம் எனும் பெருந்திட்டத்தின் ஒரு பகுதியாக கத்ரா – பனிஹால் பிரிவினில் செனாப் நதியின் மேல் இந்த பாலம் கட்டப்பட்டுள்ளது.
- இந்த செனாப் நதிப் பாலமானது டெல்லியின் குதுப்மினார் கோபுரத்தை விட ஐந்து மடங்கும், பாரிஸின் ஈபிள் கோபுரத்தை விட 35 மீட்டரும் உயரமானது.
- இப்பாலமானது 1315 மீட்டர் நீளமும், செனாப் நதி படுகையிலிருந்து 359 மீட்டர் உயரத்திலும் அமைந்துள்ளது.
- 120 வருட ஆயுட்கால உத்தரவாதமும், மணிக்கு 100 கி.மீ. வேகத்தில் இரயிலை ஓட்டும் வகையிலும் இப்பாலம் வடிவமைக்கப்பட்டு உள்ளது.

## SHe Box

- மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் ஆன்லைன் புகார் மேலாண்மை அமைப்பான SHe Box எனும் ஆன்லைன் தளத்தை துவங்கியுள்ளது.
- SHe Box – Sexual Harassment e-Box. பாலியல் துன்புறுத்தல்களுக்கு எதிரான மின்புகார் பெட்டி.
- பணியிடங்களில் பெண் பணியாளர்கள் எதிர்கொள்ளும் பாலியல் துன்புறுத்தல்கள் சார்பான புகார்களை அளிக்க அவர்களுக்கு இத்தளம் உதவும்.

- இதற்கு முன்பு ஜூலை 2017-ல் மத்திய அரசு அலுவலகங்களில் பணிபுரியும் பெண்களுக்கு மட்டுமே இத்தளம் தொடங்கப்பட்டது.
- தற்போது நாடு முழுவதும் உள்ள அரசு மற்றும் தனியார் நிறுவன பெண் பணியாளர்களும் பாலியல் தொல்லைகள் சார்பான புகார்களை தெரிவிக்கும் விதத்தில் இத்தளம் தொடங்கப்பட்டுள்ளது.
- இத்தளமானது 2013-ன் பணியிடத்தில் பாலியல் வன்முறை (தடுப்பு, பாதுகாப்பு, குறைதீர்ப்பு) சட்டத்தை (Sexual Harassment of Women at Workplace (Prevention, Prohibition and Redressal Act, 2013) செயல்விளைவோடு நடைமுறைப்படுத்துவதை உறுதி செய்யும்.
- இச்சட்டத்தின் கீழ் 10 அல்லது அதற்கு மேற்பட்ட பணியாளர்களைக் கொண்ட நிறுவனமானது பெண் பணியாளர்களின் பாலியல் தொல்லைகள் சார்பான புகார்களை விசாரிக்க அதற்கென ஓர் விசாரணை உட்குழுவை அமைப்பது (ICC – Internal Complaints Committee) கட்டாயமாகும்.
- இத்தளத்தில் தாக்கல் செய்யப்படும் புகார்களானது சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் ICC க்கு அனுப்பப்படும். அதன்மூலம் அப்புகார்களின் மீதான ICC-ன் செயல்பாட்டை அமைச்சகத்தால் கண்காணிக்க இயலும்.

## கிரக்ஹக் சதக் கோய்லா விட்டாரன் செயலி

- பொதுத்துறை நிறுவனமான இந்திய நிலக்கரி நிறுவனம் (CIL-Coal India Limited), வாடிக்கையாளர்களுக்கு பயனளிக்கும் விதமாக, சாலை வழியிலான நிலக்கரி விநியோகம் தங்கு தடையின்றி நடைபெற கிரஹக் சதக் கோய்லா விட்டரான் (Grahak Sadak Koyla Vitaran) செயலியை அறிமுகம் செய்துள்ளது.
- இந்தச் செயலியானது நிலக்கரியை ஏற்றுதல் மற்றும் சாலை வழியிலான விநியோகத்தில் வெளிப்படைத்தன்மையை கொண்டு வருவதற்கான நோக்கத்தை கொண்டுள்ளது.
- இந்தச் செயலியானது, அனுப்புகைகள் (dispatch) எல்லாம் "முதலில் வருபவர்களுக்கே முன்னுரிமை" (First in First Out-FIFO) என்னும் நேர்மையான கொள்கை அடிப்படையில் நடைபெறுகிறதா என பயனாளர்கள் கண்காணித்திட உதவும்.

## கொல்கத்தா – குல்னா இரயில் சேவை தொடக்கம்

- கொல்கத்தா இரயில் நிலையத்திலிருந்து காணொளிக் காட்சி மூலம் இந்தியா மற்றும் வங்கதேசத்திற்கிடையே எல்லை தாண்டிச் செல்லும் இரயில் சேவையான கொல்கத்தாவிலிருந்து குல்னா வரை செல்லும் பந்தன் எக்ஸ்பிரசை இந்தியப் பிரதமர், வங்கதேசப் பிரதமர் மற்றும் மேற்கு வங்க முதல்வர் துவக்கி வைத்தனர்.
- கொல்கத்தாவையும் டாகாவையும் இணைக்கும் மைத்ரி எக்ஸ்பிரஸ் இரயிலுக்கு அடுத்தபடியாக இந்தியா – வங்கதேசத்திற்கிடையே உள்ள இரண்டாவது இரயில் சேவை இதுவாகும்.
- மேலும் அவர்கள்
    1) வங்கதேசத்தில் முறையே மேக்னா மற்றும் திதாஸ் நதிகள் மீது டாகா சிட்டகாங் வழித்தடத்தில் செல்லும் இரண்டாவது பைரப் மற்றும் திதாஸ் இரயில்வே பாலத்தையும்
    2) கொல்கத்தா இரயில் நிலையத்தில் சுங்க அனுமதி வசதியும், குடியேற்ற வசதியும் கொண்ட இரயில்வே பயணிகள் முனையத்தையும்

துவக்கி வைத்தனர்.

## தீவுகள் மேம்பாட்டு நிறுவனத்தின் இரண்டாவது மாநாடு

- மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமை தாங்கிய தீவுகள் மேம்பாட்டு நிறுவனத்தின் இரண்டாவது மாநாடு புதுதில்லியில் நடத்தப்பட்டது.
- இந்தியாவின் 9 தீவுகளிலும் (ஸ்மித், ராஸ், லாங், அவிஸ்) முழுமையான வளர்ச்சியை ஏற்படுத்தும் பொருட்டு தீவுகள் மேம்பாட்டு நிறுவனத்தின் இரண்டாவது மாநாடு புதுதில்லியில் நடத்தப்பட்டது.
- அந்தமானின் நான்கு தீவுகளும், லட்சத்தீவுகளில் உள்ள மினிக்காய், பங்காரம், தின்னகரா, செரியம், சுகேலி ஆகிய ஐந்து தீவுகளும் இதில் அடங்கும்.
- இந்த திட்டத்தில், விருத்தியடையும் கடல்சார் பொருளாதாரத்தை வளர்ப்பதற்காக நிலையான அணுகுமுறையின் அடிப்படையில் வளர்ச்சியை ஊக்குவித்து நிறைவேற்றிட இந்நிறுவனம் திட்டமிடுகிறது.
- மினிக்காய் தீவில் விமானநிலையத்தை மேம்படுத்த, அரசு-தனியார் பங்களிப்பு திட்டத்தை மேம்படுத்தவும், லட்சத்தீவுகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த சூறை (tuna) மீன்பிடித்தலை ஊக்குவிக்கவும் இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.
- இந்த அமைப்பு மத்திய உள்துறை அமைச்சரால் தலைமை தாங்கப்படுகிறது. மேலும் இதன் திட்டங்கள் நிதி ஆயோக்கினால் இயக்கப்படுகின்றன.
- இந்த அமைப்பின் உறுப்பினர்களில் அமைச்சரவை செயலாளர், உள்துறை செயலாளர், சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றத்திற்கான அமைச்சகத்தின் செயலாளர், சுற்றுலாத் துறையின் செயலாளர், பழங்குடியினர் நலத்துறையின் செயலாளர் ஆகியோர் உள்ளடங்குவர்.

## சர்வதேச ஆற்றல் முகமையின் அமைச்சரவை மாநாடு - 2017

- சர்வதேச ஆற்றல் முகமையின் 2017ம் ஆண்டிற்கான அமைச்சரவை மாநாடு சமீபத்தில் பாரிஸில் நடத்தப்பட்டது.
- இதன் முதன்மையான நோக்கம் உலகின் ஆற்றல் தேவைக்கான சவால்களும் அதனை எப்படி சமாளிப்பது என்பதும் ஆகும்.
- இந்த மாநாட்டில் இந்தியா இந்த முகமையோடும் அதன் முக்கிய உறுப்பினர்களான பிரேசில், சிலி, இந்தோனேசியா மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளோடும் கூட்டு ஒத்துழைப்பு திட்டங்களில் கையெழுத்திட்டது.
- 1973ம் ஆண்டின் எண்ணெய் பிரச்சினைக்குப் பிறகு பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டிற்கான நிறுவனத்தின் (Organisation for Economic Co-operation and Development) கட்டமைப்பின் அடிப்படையில் பாரிஸை மையமாகக் கொண்ட சுதந்திரமான அரசுகளுக்கிடையேயான அமைப்பு சர்வதேச ஆற்றல் முகமை ஆகும்.
- இந்த அமைப்பு அதன் உறுப்பினர்களுக்கு மட்டுமல்லாது உறுப்பினரல்லாதவர்களுக்கும் குறிப்பாக சீனா, இந்தியா மற்றும் ரஷியா ஆகிய நாடுகளுக்கும் கொள்கை ஆலோசகராக செயல்படுகிறது.
- இந்தியா சமீபத்தில் இந்த நிறுவனத்திற்கான தனது இணை உறுப்பினர் நிலையை அறிவித்தது.

## இரட்டை வரி விதிப்பு தடுப்பு ஒப்பந்தம்

- வருமானத்தின் மீதான வரிகளில் மேற்கொள்ளப்படும் வரி ஏய்ப்பை தடுக்கவும். இரட்டை வரி விதிப்பை தவிர்ப்பதற்காகவும் (DTAA – Double Taxation Avoidance Agreement.), சீனாவின் ஹாங்காங் சிறப்பு நிர்வாக பிராந்தியத்துடன் (HKSAR – Hong Kong Special Administrative ) ஒப்பந்தம் மேற்கொள்ள மத்திய அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.
- இந்த ஒப்பந்தமானது இரட்டை வரி விதிப்பை தடுக்கவும், அது சார் தகவல்களை இரு நாடுகளும் பரிமாறிக் கொள்ளவும் உதவும்.
- வரி ஏய்ப்பை தடுக்கவும், வரி சார் விவகாரங்களில் வெளிப்படைத் தன்மையை கொண்டு வரவும் இந்த ஒப்பந்தம் உதவும்.

## இரண்டாவது தேசிய நீதித்துறை ஊதியக் குழு

- நாட்டிலுள்ள கீழ் நிலை நீதிமன்றங்களுக்கான 2-வது தேசிய நீதித்துறை ஊதியக் குழு (Second National Judicial Pay Commission-SNJPC) அமைக்க பிரதமர் தலைமையிலான மத்திய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.
- இந்த கமிஷனின் தலைவராக உச்சநீதி மன்றத்தின் முன்னாள் நீதிபதியான நீதிபதி J.P.வெங்கட்ராமன் ரெட்டியும், உறுப்பினராக கேரள உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதியான R.L.பசந்த் என்பவரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.
- இந்த ஊதியக் குழுவானது மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் தற்போது அமலில் உள்ள நீதித்துறை அலுவலர்களுடைய பணிநிலை மற்றும் ஊதிய அமைப்புகளை மதிப்பீடு செய்யும்.
- நாட்டிலுள்ள துணை கீழ்நிலை நீதிமன்றங்களைச் சேர்ந்த நீதித்துறை அலுவலர்களின் ஊதிய அமைப்பு மற்றும் பிற சலுகைப்படிகளை நிர்வகிக்கக் கூடிய பொதுக் கொள்கையை உருவாக்குவதே இக்குழுவின் நோக்கமாகும்.

## இந்தியா - கொலம்பியா கூட்டு விளக்க அறிவிக்கை

- இந்தியா மற்றும் கொலம்பியா ஆகிய நாடுகளுக்கு இடையேயான கூட்டு விளக்க அறிவிக்கையில் (Joint Interpretative Declaration - JID) கையெழுத்திட பிரதமர் தலைமையிலான மத்திய அமைச்சரவைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த ஒப்பந்தமானது, இந்தியா மற்றும் கொலம்பியா இடையேயான முதலீடுகளுக்கு ஊக்கம் அளிக்கவும் பாதுகாப்பு அளிக்கவும் 2009, நவம்பரில் கையெழுத்திடப்பட்டது.
- இந்த கூட்டு விளக்க அறிவிக்கையானது, ஒப்பந்தத்தின் பல பிரிவுகளோடு நடைமுறைப்படுத்த வேண்டிய விளக்க உரைகளை இணைத்துள்ளது. இது நடைமுறையில் இருக்கும் ஒப்பந்தத்தை மேலும் தெளிவு பெறச் செய்கிறது.
- இந்த அறிவிக்கையானது (JID), ஒப்பந்தங்கள் நடைமுறையில் இருக்கும் காலகட்டத்தில் முதலீடுகளை பலப்படுத்த வழங்குவது நடுவர் தீர்ப்பாயம் முன்பு நம்பத்தகுந்த மதிப்பை ஏற்படுத்தும்.

## வேளாண்மை ஹேக்கத்தான் (Hackathon)

- முதல் சர்வதேச வேளாண் ஹேக்கத்தான் மாநாட்டை விசாகப்பட்டினத்தில் ஆந்திரப்பிரதேச அரசு நடத்தவுள்ளது. நவம்பர் 15ல் தொடங்க உள்ள இந்த 3 நாள் மாநாட்டுக் கூட்டத்தில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த வேளாண் நிபுணர்கள், விவசாயிகள் மற்றும் பல்வேறு பங்குதாரர்கள் கருத்தரங்கில் பங்கேற்க உள்ளனர்.
- ஆந்திர பிரதேச அரசோடு இணைந்து இந்திய தொழிற் கூட்டமைவு (Confederation of Indian Industry - CII) இந்த ஹேக்கத்தானை நடத்துகிறது.
- இது புது வேளாண் தொழில்நுட்பங்கள் மற்றும் வேளாண் நிறுவனங்களின் புதிய கண்டுபிடிப்புகளை காட்சிப்படுத்த உலகம் முழுவதும் உள்ள பிரதிநிதிகள் பங்குபெறும் ஓர் முக்கியமான சர்வதேச ஹேக்கத்தான் நிகழ்வாகும்.
- இந்நிகழ்ச்சியின் நிறைவு நாளன்று மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் இணை நிறுவனர் பில் கேட்ஸ் பங்கேற்கவுள்ளார்.

## தேசிய போட்டித் தேர்வுகள் முகமை

- உயர்கல்வி நிறுவனங்களுக்கு தேசிய அளவிலான நுழைவுத் தேர்வுகளை நடத்துவதற்காக தேசிய போட்டித் தேர்வுகள் முகமையினை (National Testing Agency - NTA) அமைக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த முகமையானது இந்திய சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் (Indian Societies Registration Act) ஓர் கூட்டுறவு சங்கமாக பதிவு செய்யப்படும்.
- மத்திய மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தால் நியமிக்கப்படும் சிறந்த கல்வியாளரை தலைவராகக் கொண்டு தன்னாட்சி அதிகாரமும், சுய சார்பு கொண்ட முதன்மை தேர்வு அமைப்பாகவும் இந்த முகமை செயல்படும்.
- உயர்கல்வி நிறுவனங்களில் சேர்வதற்கான நுழைவுத் தேர்வுகளை நடத்த தேசிய போட்டித் தேர்வுகள் அமைப்பு உருவாக்கப்படும் என 2017-18க்கான பொது பட்ஜெட்டில் குறிப்பிடப்பட்டிருந்தது.
- மத்திய இடைநிலைக் கல்வி வாரியத்தால் (Central Board of Secondary Education - CBSE) தற்போது நடத்தப்படும் நீட்(NEET), ஜே.இ.இ (JEE) போன்ற பல்வேறு நுழைவுப் போட்டித் தேர்வுகளை ஆரம்ப கட்டமாக இந்த முகமை நடத்த உள்ளது.
- போட்டித் தேர்வாளர்களுக்கு போதுமான வாய்ப்பை வழங்குவதற்காக நுழைவுத் தேர்வுகள் ஆன்லைன் மூலம் ஆண்டிற்கு குறைந்தபட்சம் இருமுறை இந்த அமைப்பால் நடத்தப்படும்.
- முதலாம் ஆண்டின் தொடக்ககால செயற்பாட்டிற்காக இம்முகமைக்கு ஒரு முறை மானியமாக 25 கோடி அளிக்கப்படும். இதன் பின் இவை நிதியியல் தற்சார்புடையவையாக உருவாக்கப்படும்.
- மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் , அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழு (All India Council for Technical Education - AICTE) மற்றும் பிற நிறுவனங்களின் நுழைவுத் தேர்வுகளை நடத்த வேண்டிய பணிப் பொறுப்பு சுமைகளை இந்த அமைப்பு நீக்கும்.

## கார்கில் பகுதியில் நீர்மின் நிலையம்

- புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் 1.5 மெகாவாட் ஆற்றல் கொண்ட சிறிய நீர்மின் நிலையத்தை (Small Hydro Power - SHP) துவங்கியுள்ளது. இது ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் கார்கில் பகுதியில் உள்ள பியாராஸ் திராஸ் (Biaras Drass) என்ற இடத்தில் அமைந்துள்ளது.
- இது பிரதமரின் இலடாக் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் முன் முயற்சியின் (Prime Minister's Ladakh Renewable Energy Initiative) முதல் திட்டம் ஆகும்.
- பியாராஸ் சிறு நீர்மின் நிலையத்தை கட்டமைத்த நிறுவனங்கள்,
    - கார்கில் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மேம்பாட்டு நிறுவனம் - Kargil Renewable Energy Development Agency (KREDA)
    - இலடாக் தன்னாட்சி மலைப்பகுதி மேம்பாட்டுக் குழு - Ladakh Autonomous Hill Development Council (LAHDC)
- இலடாக் பகுதியில் டீசல் எரிபொருள் மீதான சார்பைக் குறைக்கவும், உள்ளூர் மின்சாரத் தேவைகளை உள்ளூரிலேயே புதுப்பிக்கத்தக்க ஆதாரங்கள் மூலமாக பூர்த்தி செய்வதும் இலடாக் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் முன் முயற்சியின் முக்கிய குறிக்கோள்கள் ஆகும்.

## தேசிய கிராமப்புற குடிநீர் திட்டம்

- தேசிய கிராமப்புற குடிநீர் திட்டத்தின் (National Rural Drinking Water Programme-NRDWP) தொடர்ச்சிக்கும், மறுசீரமைப்புக்கும் பிரதமர் தலைமையிலான அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.
- கிராமப்புற பகுதிகளுக்கு சிறந்த தரத்திலான குடிநீர் வழங்கல் சேவையை உறுதி செய்வதற்காக, வெளியீடு அடிப்படையிலான, போட்டித் திறனுடைய, விநியோகத் திட்டத்தினுடைய நீடித்த செயல்பாட்டின் மீது அதிகரிக்கப்பட்ட கவனத்தோடு சிறந்த கண்காணிப்பை உருவாக்குவதற்காக இந்த மறுசீரமைப்பும், திட்ட தொடராக்கமும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- இத்திட்டம் நாடு முழுவதும் உள்ள அனைத்து ஊரகப் பகுதிகளையும் உள்ளடக்க உள்ளது.
- 14-வது நிதிக்குழுவின் செயற்கால சுழற்சியோடு ஒருங்கமையும் வகையில் 2020 வரை நீடிக்க இத்திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது.
- நீடித்த குழாய் வழியிலான குடிநீரை பெறும் பயனாளிகளின் அளவை அதிகரிக்க இது உதவி புரியும்.

## வேளாண்மை மீதான ஒப்பந்தம் (Agreement on Agriculture-AoA)

- வேளாண்மை மற்றும் அதுசார் களங்களில் பிலிப்பைன்ஸ் உடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ள பிரதமர் தலைமையிலான அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

    - ✓ அரிசி உற்பத்தி மற்றும் பதனிடுதல்,
    - ✓ உயிரி – இயற்கை வேளாண்மை
    - ✓ மண்வளம்,
    - ✓ வேளாண் காடு வளர்ப்பு,
    - ✓ பட்டுப்புழு வளர்ப்பு,
    - ✓ கால்நடை வளர்ப்பு மேம்பாடு
    - ✓ நீர் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை.

போன்ற பல்வேறு வேளாண் களங்களில் இரு நாடுகளுக்கிடையேயான உறவை மேம்படுத்துவதற்காகவும், பரஸ்பர நன்மைக்காகவும், இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## ஹவ்சாலா – 2017

- ❖ ஹவ்சாலா – 2017 என்பது குழந்தை உரிமைகள் வாரம் ஆகும்.
- ❖ ஆண்டுதோறும் நவம்பர் மாதம் 14 ஆம் தேதி முதல் 20 ஆம் தேதி வரை மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தால் இந்த குழந்தை உரிமைகள் வாரம் கொண்டாடப் படுகிறது.
- ❖ இந்த ஒரு வாரத்தின் இடையே தேசிய குழந்தைகள் தினம் (நவம்பர் 14) மற்றும் சர்வதேச குழந்தைகள் உரிமை தினம் (நவம்பர் 20) கொண்டாடப்படுகிறது.
- ❖ இந்த குழந்தை உரிமைகள் வாரத்தின் போது நடத்தப்பட உள்ள CCI திருவிழாவில் (CCI-Children Care Institutions) குழந்தைகள் பராமரிப்பு நிறுவனங்களில் வசிக்கும் குழந்தைகள் தங்களது திறமைகளை காட்சிப்படுத்த உள்ளனர். யுனிசெப் அமைப்பு இந்த நிகழ்ச்சிக்கு ஆதரவளிக்க உள்ளது.

## சாக்ஷம் திட்டம்

- ❖ இந்திய இரயில்வே சாக்ஷம் திட்டம் என்று பெயரிடப்பட்ட, நாட்டின் மிகப்பெரிய,வரையறுக்கப்பட்ட நேரத்திற்குள் கூடுதல் திறன்களை வளர்த்துக் கொள்ளும் பயிற்சியை அறிமுகப்படுத்த உள்ளது.
- ❖ 13 லட்சம் பணியாளர்கள் உடைய தன்னுடைய வலுவான தொழிலாளர் படையின் திறன்களை ஒன்பது மாத கால அளவுடைய ஒற்றை திறன் மேம்பாட்டு திட்டத்தின்மூலம் மேம்படுத்த ரயில்வே திட்டமிட்டுள்ளது.
- ❖ அலுவலக உதவியாளர் முதல் ரயில்வே வாரிய உறுப்பினர்கள் வரை உள்ள அனைத்து பணியாளர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட உள்ளது..
- ❖ மேலும் இந்திய இரயில்வே அதன் கூடுதல் செயலர் தரத்தில் உள்ள அதிகாரிகளை பிட்ஸ்பர்க்கில் உள்ள கார்னெகி மெல்லன் பல்கலைக்கழகத்தில் குறுகியகால படிப்பிற்கு அனுப்ப உள்ளது.

## பெயர் நீக்க உத்தரவு – UGC

- ❖ பல்கலைக் கழகம் என்ற பெயரை நிகர்நிலைப் பல்கலைக் கழகங்கள் இனி பயன்படுத்தக்கூடாது. அப்பெயரை உடனடியாக நீக்கிவிட வேண்டும் என பல்கலைக்கழக மானியக் குழு (UGC) உத்தரவிட்டுள்ளது.
- ❖ இது UGC சட்டப்பிரிவு 23 க்கு எதிராக உள்ளதென காரணம் சுட்டப்பட்டு, இந்தியாவில் உள்ள 123 நிகர்நிலைப் பல்கழைக்கழகங்கள் அவற்றின் பெயரில் உள்ள “பல்கலைக்கழகம்” எனும் பெயரை நீக்க உச்சநீதிமன்றம் உத்தரவிட்டதை தொடர்ந்து இந்த உத்தரவை UGC வெளியிட்டுள்ளது.
- ❖ தமிழ்நாட்டில் 28 நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள் உள்ளன.
- ❖ இந்த உத்தரவை மீறும் நிகர்நிலைக் கல்வி நிறுவனங்கள் மீது UGC வழிகாட்டுதல் 2016-ன் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும்.

- பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு பதிலாக எந்த விதமான மாற்று வார்த்தையை பயன்படுத்தலாம் என்பது குறித்த பரிந்துரையை UGC-க்கு 15 நாட்களில் இந்த நிகர்நிலை கல்வி நிறுவனங்கள் வழங்க வேண்டும்.

## தேசிய சாதனை கணக்காய்வு (National Achievement Survey -NAS)

- தொகுக்கப்படாத மற்றும் விரிவான கற்றல் நிலைகளைப் பற்றி ஆராயவும், கல்வி அமைப்பின் செயல்திறனை புரிந்து கொள்ளவும், தேசிய சாதனை கணக்காய்வு நாடு முழுவதும் வெற்றிகரமாக நடத்தப்பட்டது.
- குழந்தைகளின் கற்றல் அளவை அதிகரிப்பதற்கும், தரமுடைய முன்னேற்றங்களை கொண்டு வருவதற்கும் தேசிய, மாநில, மாவட்ட மற்றும் வகுப்பறை அளவில் கல்விக் கொள்கைத் திட்டங்களை திட்டமிடவும் அமல்படுத்தவும், கல்வி கொள்கைகளை வழிநடத்தவும் தேசிய சாதனை கணக்காய்வின் முடிவுகள் உதவும்.
- தேசிய சாதனை கணக்காய்வானது நாட்டின் மிகப்பெரிய தேசிய அளவிலான மதிப்பீட்டு ஆய்வாகும். மேலும் இது உலகிலேயே மிகப்பெரிய மதிப்பீட்டு கணக்கெடுப்புகளில் ஒன்றாகும்.
- தேசிய சாதனை கணக்காய்வானது மூன்றாம் தரப்பால் மேற்கொள்ளப்படும், நம்பகத்தன்மை மற்றும் வெளிப்படைத் தன்மை கொண்ட சரிபார்ப்பு ஆய்வாகும்.

## இந்திய இளைஞர் மேம்பாட்டு குறியீடு - 2017

- தமிழ்நாட்டின் ஸ்ரீபெரும்புதூரில் உள்ள ராஜீவ் காந்தி தேசிய மேம்பாட்டு நிறுவனம் (RGNIYD – Rajiv Gandhi National Institute of Youth Development) 2017- ஆம் ஆண்டிற்கான இந்திய இளைஞர் மேம்பாட்டு குறியீடு மற்றும் திட்ட அறிக்கையை (Youth Development under and Report 2017) தயார் செய்துள்ளது.
- மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சகம் இதனை வெளியிட்டுள்ளது.
- 2017-ஆம் ஆண்டிற்கான இந்திய இளைஞர் மேம்பாட்டுக் குறியீடு தயாரிப்பின் நோக்கம் நாடு முழுவதும் இளைஞர்கள் மேம்பாட்டின் போக்கை கண்காணித்தல் என்பதாகும்.
- சர்வதேச இளைஞர் மேம்பாட்டு அறிக்கைகளோடு (Young Development Index) ஒத்திசையும் வகையில், இந்திய தேசிய இளையோர் கொள்கை (National Youth Policy – 2014) மற்றும் காமன்வெல்த் நாடுகளின் உலக இளைஞர் மேம்பாட்டு அறிக்கை போன்றவற்றில் அளிக்கப்பட்டுள்ள இளைஞர்கள் என்பதற்கான புதிய பொருள் விளக்கத்தைக் அடிப்படையாகக் கொண்டு இந்தக் குறியீடு தயாரிக்கப்படுகிறது.
- 2014 தேசிய இளையோர் கொள்கை மற்றும் காமன்வெல்த் நாடுகளின் உலக இளையோர் மேம்பாட்டு அறிக்கையின்படி 15 வயது முதல் 29 வயது வரையிலான வயதுடையவர்கள் இளைஞர்களாவர்.
- இந்திய மக்கள் தொகையில் 27.5 சதவீதத்தினர் இளைஞர்களாவர்.
- உலக இளைஞர் மேம்பாட்டு குறியீடு (YDI – Young Development Index) உலகம் முழுவதும் 183 நாடுகளில் உள்ள இளைஞர்களின் நிலையை அளவிட்டு காமன்வெல்த் செயலகத்தால் (Common Wealth Secreteriate) வெளியிடப்படுகிறது.
- 2016-ஆம் ஆண்டிற்கான உலக இளைஞர் மேம்பாட்டு குறியீட்டில், 183 நாடுகளில் இந்தியா 133-வது இடத்தைப் பிடித்துள்ளது.

- கல்வி, ஆரோக்கியம் மற்றும் நல வாழ்வு, வேலைவாய்ப்பு மற்றும் வாய்ப்புகள், அரசியல் ஈடுபாடு மற்றும் இளையோர்களுக்கான குடிமக்கள் பங்கெடுப்பு, சமூக உள்ளடக்கம் போன்ற பல பரிமாண காரணிகளின் அடிப்படையில் இந்திய இளைஞர் குறியீடு கணக்கிடப்படுகிறது.

## ஆதி மஹோத்சவ்- Aadi Mahotsav

- பழங்குடியின மக்களின் வர்த்தகம், உணவுமுறை வழக்கங்கள் மற்றும் கலாச்சார அம்சங்கள் போன்றவற்றை கொண்டாடுவதற்காக 'ஆதி மஹோத்சவ்' எனும் திருவிழா நிகழ்ச்சியை இந்தியப் பழங்குடியினர் கூட்டுறவு சந்தைப்படுத்தல் மேம்பாட்டு கூட்டமைப்பு நிறுவனத்தோடு (TRIFED – Tribal Co-operative Marketing Development Federation Ltd) இணைந்து மத்தியப் பழங்குடியினர் நலத்துறை அமைச்சகம் (Ministry of trial affairs) நடத்துகின்றது.
- இத்திருவிழாவின் கருத்துரு "பழங்குடியின மக்களின் உணவுமுறை வழக்கங்கள், வர்த்தகம் மற்றும் கலாச்சார அம்சம் போன்றவற்றைக் கொண்டாடுதல்".
- 2017-ஆம் ஆண்டு நவம்பர் 16 ஆம் தேதி முதல் 30 வரை நடைபெற உள்ள இந்த "ஆதி மஹோத்சவ்" நிகழ்ச்சியில் 25 மாநிலங்களைச் சேர்ந்த 480 பழங்குடியின கைவினைக் கலைஞர்கள் பங்கேற்க உள்ளனர்.
- இத்திருவிழாவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விற்பனையோடு கூடிய கண்காட்சியில் அமைக்கப்படும் அங்காடிகளில் ஏராளமான பழங்குடியின கைவினைப் பொருட்கள், பழங்குடியின கலைப் பொருட்கள், ஓவியங்கள், நகை அணிகலன்கள் போன்றவை காட்சிப்படுத்தப்பட உள்ளன.
- முதன் முறையாக பழங்குடியின வர்த்தகர்களிடம் மேற்கொள்ளும் நுகர்வுக்காக பண அட்டைகள் (Debit Cards) அல்லது கடன் அட்டை (Credit Card) மூலம் கட்டணப் பரிமாற்றம் செய்து கொள்ளவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## 37-வது இந்திய சர்வதேச வர்த்தகக் கண்காட்சி - 2017

- கடந்த நவம்பர் 14-ஆம் தேதி அன்று 2017ஆம் ஆண்டின் 37-வது இந்திய சர்வதேச வர்த்தகக் கண்காட்சியை (India International Trade Fair – IITF) இந்திய குடியரசுத் தலைவர் தொடங்கி வைத்தார்.
- இக்கண்காட்சியை இந்திய வர்த்தக மேம்பாட்டு அமைப்பு (India Trade Promotion Organisation – ITPO) ஏற்பாடு செய்துள்ளது.

*நான்காவது ஹீனார் ஹாத்*

- நான்காவது ஹீனார் ஹாத் கண்காட்சியானது டெல்லியின் பிரகதி மைதானத்தில் இந்த ஆண்டு நவம்பர் 14ஆம் தேதி முதல் 27 வரை நடத்தப்பெறும் 37வது இந்திய சர்வதேச வர்த்தக கண்காட்சி விழாவில் மத்திய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- இந்த ஹீனார் ஹாத் கண்காட்சியானது மத்திய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சகத்தால் உஸ்தாத் திட்டத்தின் (USTTAD) கீழ் நடத்தப்படுகிறது.
  - ✓ USTTAD – Upgrading the skills & Training in Traditional Arts / Craft for Development.
  - ✓ மேம்பாட்டிற்காக பாரம்பரிய கலைகள் மற்றும் கைவினைப் பொருட்களில் பயிற்சி மற்றும் திறனை மேம்படுத்துதல்.

- சிறுபான்மை சமூகத்தினரின் மரபுவழி கலை மற்றும் கைவினைத் தயாரிப்பில் பொதிந்துள்ள செறிந்த பாரம்பரியத்தை பாதுகாத்திடவும், மேம்படுத்திடவும் வகுக்கப்பட்டதே இந்த USTAAD திட்டமாகும்.
- தற்போது ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நான்காவது ஹீனார் ஹாத் கண்காட்சியானது இதற்கு முன் நடத்தப்பட்ட பிற ஹீனார் ஹாத் கண்காட்சிகளைக் காட்டிலும் தனிச்சிறப்பு வாய்ந்தது. ஏனெனில் இந்தக் கண்காட்சியில் முதன்முறையாக டெல்லி திகார் சிறைவாசிகளால் செய்யப்பட்ட கைவினைப் பொருட்கள் காட்சிக்கும், விற்பனைக்கும் வைக்கப்பட உள்ளன.

## இந்திய ஆயுதப் படைகளின் கூட்டுப் பயிற்சிக்கான கோட்பாடு - 2017

- தலைமை அலுவலர் குழுத்தலைவர் (Chairman Cheifs of Staff Commitee) மற்றும் இந்திய கடற்படைத் தளபதியான அட்மிரல் சுனில் லம்பா 2017-ஆண்டின் இந்திய ஆயுதப் படைகளின் கூட்டுப் பயிற்சிக்கான கோட்பாட்டினை வெளியிட்டுள்ளார்.
- முப்படைகளின் ஈடுபாட்டோடு ஒருங்கமைவுக் கூட்டிணைவு முறையில் (Collegiate Manner) இந்தக் கோட்பாடு தயார் செய்யப்பட்டுள்ளது.
- உகந்த நிலையிலான வள ஆதாரங்களின் பயன்பாடு மற்றும் மேம்பட்ட செயல்திறத்திற்காக இந்திய முப்படைகள் மற்றும் பிற பங்கெடுப்பாளர்களுக்கிடையே ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்திசைவை மேம்படுத்துவதற்காக இந்த கோட்பாடு உருவாக்கப்பட்டுள்ளது.

## இணைய பாதுகாப்பு பயிற்சி

- நாட்டில் அதிகரித்து வரும் இணைய தாக்குதல் மற்றும் இணைய மோசடிகளைக் கருத்தில் கொண்டு, 1200 தகவல் தொழிற்நுட்ப அதிகாரிகள், பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் வங்கிப் பணியாளர்களுக்கு முன்னணி தகவல் தொழிற்நுட்ப நிறுவனங்களோடு இணைந்து இணையப் பாதுகாப்பு சவால்களை எதிர்கொள்ள பயிற்சி அளிக்கப்பட உள்ளது.
- கடந்த வாரம் மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழிற்நுட்ப அமைச்சகமானது "சைபர் சுரக்ஷித் பாரத் திட்டத்திற்கு" (Cyber Surakshit Bharat Programme) அனுமதி வழங்கியது. இத்திட்டத்தின் கீழ் தலைமைத் தகவல் பாதுகாப்பு அலுவலர்கள், அமைச்சகங்கள் மற்றும் மத்திய பொதுத்துறை நிறுவனங்களின் தகவல் தொழிற்நுட்ப அலுவலர்களுக்கு இணையப் பாதுகாப்பு சார்ந்த ஒரு வருட பயிற்சி அளிக்கப்பட உள்ளது.
- இணையப் பாதுகாப்பு மேலாண்மை, இணைய ஆரோக்கிய குறியீட்டுப் பயிற்சி, தரவுகள் மற்றும் பயன்பாடுகள், நாடு முழுவதும் இரு பயன்பாட்டாளர்களுக்கிடையிலான (end-to-end) இணைய பாதுகாப்பிற்கான பயிலரங்கங்கள் மற்றும் இணையப் பாதுகாப்பிற்கான பிற அம்சங்களும் இந்த ஒரு வருட பயிற்சியில் அளிக்கப்பட உள்ளன.

## இந்தியாவின் முதல் பழங்குடியின தொழிற்முனைவோர் மாநாடு

- இந்தியாவின் முதல் உலக பழங்குடியின தொழிற்முனைவோர்கள் மாநாடு சத்தீஸ்கரிலுள்ள பஸ்தார் பகுதியின் தன்டேவாடா மாவட்டத்தில் நடைபெற்றது.
- அமெரிக்க அரசின் கூட்டிணைவோடு நிதி ஆயோக் அமைப்பால் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது இந்தியாவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 8-வது உலக தொழிற்முனைவோர் மாநாடாகும்.

- பழங்குடியின இளைஞர்களிடையே தொழிற்முனைவுத் தன்மையை உண்டாக்குவது, வளர்ப்பது, மேம்படுத்துவதே இந்த மாநாட்டின் முக்கிய நோக்கமாகும்.
- இது பழங்குடியினரை மையப்படுத்திய நீடித்த மற்றும் உள்ளடக்க வளர்ச்சியை நோக்கிய மற்றொரு முன்னெடுப்பாகும்.

## "சாகர் கவாச்"

- மேற்கு வங்கம் மற்றும் ஒடிஸா மாநில அரசுகள் இணைந்து "சாகர் கவாச்" எனும் கூட்டுப் பாதுகாப்பு பயிற்சியை மேற்கொண்டுள்ளன.
- இரு மாநிலங்களின் 630 கி.மீ. நீளமுள்ள கடலோரப் பகுதிகளில், நடப்பில் மேற்கொள்ளப்படும் கடலோரப் பாதுகாப்பு முறைமையை (Mechanism) மேலும் வலுப்படுத்துவதற்காக இந்தக் கூட்டுப்பயிற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- பல்வேறு பாதுகாப்புப் படைகளின் தயார்நிலை மற்றும் பாதுகாப்பு அளவுருக்களின் திறன் போன்றவற்றை சரிபார்க்க "சாகர் கவாச்" எனும் உண்மை நிலை ஒத்திகையாக கூட்டுப் பாதுகாப்பு பயிற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- மேலும் இப்பயிற்சியில், கடலோர காவற் படைகளின் கண்காணிப்பு, ரோந்துப்பணிகளின் செயல் திறனை சோதனை செய்ய ஒடிஸா மற்றும் மேற்கு வங்கத்தில் சமவாய்ப்பற்ற முறையில் (Random) தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் "Red Force" எனப் பெயரிடப்பட்ட உருவகப்படுத்தப்பட்ட பயங்கரவாத தாக்குதல் ஏற்பாடு செய்யப்பட்டது.

## தேசிய ஆற்றல் இணையவாயில்- National Power Portal

- மத்திய மின்துறை அமைச்சகம் தேசிய ஆற்றல் இணைய வாயிலை ஆரம்பித்துள்ளது. இது இந்திய மின்துறையைப் பற்றிய தகவல்களை சேகரித்து பரப்பும் ஒரு மையப்படுத்தப்பட்ட நடைமுறையாகும்.
- இது இந்திய மின்துறைக்கான மையப்படுத்தப்பட்ட அமைப்பாகும். இது 24 x 7 என்ற நேர அளவில் செயல்படும். சரியான நேரத்திய மற்றும் திறமையான தகவல் திரட்டலை உறுதி செய்ய இவை உதவும்.
- மத்திய மின்துறை ஆணையம் (Central Electricity Authority-CEA) இதனை செயல்படுத்துவதற்கான அதிகார மையமாக உள்ளது.
- தேசிய தகவல் மையம் (National Informatics Centre-NIC) இதனை தயாரித்து, வடிவமைத்து மேம்படுத்தி வெளியிட்டுள்ளது.
- முன்பு அமைச்சரவை ஆரம்பித்த தரங் (TARANG), உஜாலா (UJALA), வித்யுத் பிரவா (VIDYUT PRAVAH), கார்வ் (GARV), உர்ஜா (URJA) மற்றும் மெரிட் (MERIT) போன்ற அனைத்து மின்துறை சம்பந்தமான செயலிகளுக்கும் ஒற்றை இடைமுகமாக (single point interface) இது செயல்படும்.
- மத்திய மின்துறையைப் பற்றிய ஆய்வுத் தகவல்களை புவித் தகவமைப்பு முறையிலான (GIS-Geographical Information System) செலுத்துதல் மூலமும், காட்சிப்படுத்தும் விளக்கப்படங்கள் மூலமாகவும் பரப்ப இது திட்டமிடப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

## மிகைலாபத் தடுப்பு ஆணையம்- Anti-Profiteering Authority

- சரக்கு மற்றும் சேவை வரியின் கீழ் (ஜி.எஸ்.டி) கீழ் தேசிய மிகைலாபத் தடுப்பு ஆணையம் அமைக்க மத்திய கேபினெட் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

- பல்வேறு சரக்கு மற்றும் சேவைகளின் ஜி.எஸ்.டி வரி அடுக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் குறைப்புகளின் பயன்கள் அப்பொருட்களின் விலைவாசிக் குறைவின் மூலம் முழுமையாக இறுதி நுகர்வோர்களுக்கு கிடைப்பதை உறுதிசெய்வதற்காக இந்த ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது.
- மேலும் வர்த்தகர்கள் வரிக்குறைப்பின் பயனை நுகர்வோர்களுக்கு அளிக்காமல் தாங்களே மிகையாக லாபம் ஈட்டுவதைத் தடுக்கும் நோக்கிலும் இந்த ஆணையம் அமைக்கப்பட உள்ளது.
- இந்த அமைப்பில் தலைவராக இந்திய அரசாங்கத்தின் செயலாளர் நிலையிலுள்ள மூத்த அதிகாரி ஒருவரும், நான்கு மத்திய அல்லது மாநில அரசுகளின் தொழிற்நுட்ப உறுப்பினர்களும் இருப்பர்.
- சரக்கு மற்றும் சேவை வரியின் சட்டத்தில் உள்ளமைக்கப்பட்டுள்ள மிகை லாப தடுப்பு கூறானது வர்த்தக நிறுவனங்களின் மிகை லாப மீட்டலை தடுப்பதற்காக மத்திய கலால் மற்றும் சுங்க வரி ஆணையத்தின் பாதுகாப்பிற்கான இயக்குனரகம் (Directorate General of Safeguards), ஒவ்வொரு மாநிலத்திலுள்ள நிலைக்குழு(Standing Committee),சோதனைக் குழு (Screening Committees),மற்றும் தேசிய மிகைலாப தடுப்பு ஆணையம் போன்றவை உள்ளடங்கிய நிர்வாக முறைமையை ஏற்படுத்த வழிவகை செய்கிறது.

## ICDS திட்டம்

- பிரதமர் தலைமையிலான பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு (Cabinet Committee on Economic Affairs-CCEA) ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டு சேவைகள் (ICDS – Integrated Child Development Scheme) திட்டத்தின் கீழ் உள்ள நான்கு திட்டங்களின் தொடர்ச்சிக்கு அனுமதி வழங்கியுள்ளது.
- அந்த நான்கு திட்டங்களாவன,
    - அங்கன்வாடி சேவைகள்
    - இளம் பெண்களுக்கான திட்டம்
    - குழந்தை பாதுகாப்பு சேவைகள்(இது சப்ளா-sabla எனவும் அழைக்கப்படும்)
    - தேசிய குழந்தைகள் காப்பகத் திட்டம்.
- இந்த முடிவின் மூலம் மத்தியத் துறை (Central Sector Scheme) திட்டமாக உள்ள தேசிய குழந்தைகள் காப்பகத் திட்டமானது (National Crèche Scheme) மத்திய நிதியுதவித் திட்டமாக (Central Sponsored Scheme) மாற்றப் படும்.
- பணிபுரியும் பெண்கள் வேலைக்குச் செல்லும் போது தங்கள் குழந்தைகளை பராமரிப்பதற்கு விட்டுச் செல்லதத்தக்க நிலையுடைய பாதுகாப்பான இடத்தை ஏற்படுத்தி தருவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.
- ICDS ஆனது மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களால் செயல்படுத்தப்படும் ஓர் மத்திய நிதியுதவித் திட்டமாகும். இத்திட்டம் அக்டோபர் 2, 1975ல் ஆரம்பிக்கப்பட்டது.

## விமான போக்குவரத்து புரிந்துணர்வு ஒப்பந்தம்

- இந்தியா மற்றும் போலந்து நாடுகளுக்கிடையேயான சிவில் விமான போக்குவரத்து ஒத்துழைப்பின் மேம்பாட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு பிரதமர் தலைமையிலான அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.
- இது புரிந்துணர்வு ஒப்பந்தமானது 5 வருட ஒப்பந்தகாலமுடையது.

- இந்தியா மற்றும் போலந்து நாடுகளிடையேயான விமானப் போக்குவரத்து ஒத்துழைப்பை பாதிக்கக் கூடிய சட்ட மற்றும் செயல்முறை விவகாரங்களை சீர்படுத்தி இரு நாடுகளின் விமானப் போக்குவரத்து சந்தைக்கு ஆதரவு அளித்திட இந்த ஒப்பந்தம் உதவும்.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்

- வேளாண்மை, அறிவியல் மற்றும் தொழிற்நுட்பம் போன்ற துறைகளில் பரஸ்பர நன்மைகளைப் பெறுவதற்காக, இந்தியா மற்றும் பெலாரஸ் நாடுகளுக்கிடையேயான அறிவியல் மற்றும் தொழிற்நுட்ப ஒத்துழைப்பு மீதான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.
- இந்த ஒப்பந்தம் இந்திய தேசிய அறிவியல் அகாடமி (INSA – Indian National Science Academy) மற்றும் பெலாரஸ் தேசிய அறிவியல் அகாடமிக்கு (NASB – National Academy of Science of Belarus) இடையே மேற்கொள்ளப்பட்டு உள்ளது.
- இந்த ஒப்பந்தம் இந்தியா மற்றும் பெலாரஸ் நாடுகளுடைய உலகளாவிய போட்டிக்குரிய தொழிற்நுட்பங்களை அடையாளப்படுத்துவதையும், மதிப்பிடுவதையும், அவற்றை மேம்படுத்தி வணிக மயமாக்குவதையும் நோக்கங்களாகக் கொண்டது.
- இரு நாடுகளின் நிறுவனங்களும் ஆராய்ச்சி, தொழிற்நுட்ப பரிமாற்றம், இரு நாட்டு நிபுணர்கள் பரிமாற்ற பயணங்கள் மற்றும் கூட்டு பயிலரங்கங்கள் போன்றவற்றின் மூலம் அறிவியல் மற்றும் பொருளாதாரப் பயன்களைப் பெற்றிட இந்த ஒப்பந்தம் உதவும்.

## இந்திய ராணுவம்– புதிய உலக சாதனை

- பெங்களூருவின், எலஹங்காவில் உள்ள இந்திய விமானப் படைத்தளத்தில் நடைபெற்ற சாகச நிகழ்ச்சியில் இந்திய இராணுவ சேவைப் படைப்பிரிவை (ASC – Army Service Corps) சேர்ந்த " டோர்னாடோஸ் " (Tornadoes) என்ற மோட்டார் சைக்கிள் சாகச அணியினர் புதிய உலகச் சாதனையைப் படைத்துள்ளனர்.
- 500 CC திறன் கொண்ட ராயல்டு என்பீல்டு மோட்டார் சைக்கிளில் 58 பேர் கொண்ட இக்குழுவினர் 1200 மீட்டர் பயணித்து சாதனைப் புரிந்துள்ளனர்.
- இந்த டோர்னாடோஸ் படையினர் இதற்குமுன் இந்திய இராணுவத்தின் டேர்டெவில்ஸ் எனும் இந்திய சமிக்ஞை படையினரால் ஒரே மோட்டார் சைக்கிளில் 56 பேர் பயணித்து நிகழ்த்திய சாதனையை முறியடித்துள்ளனர்.
- இந்த டோர்னாடோஸ் அணி 1982-ல் கர்னல். C.N. ராவ் மற்றும் கேப்டன் J.P. வர்மா தலைமையில் உருவாக்கப்பட்டது.
- இதுவரை இந்த அணி மொத்தம் 19 உலக மற்றும் தேசிய சாதனைகளைப் படைத்துள்ளது.

## இந்தியாவின் முதல் மின்னேற்ற நிலையம்

- அரசு நிறுவனமான இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் (IOC) மின் வாகனங்களுக்கான நாட்டின் முதல் மின்னேற்ற நிலையத்தை (charging unit) நாக்பூரில் அமைத்துள்ளது.
- IOC அமைப்பானது Ola (ஓலா) நிறுவனத்துடன் கூட்டிணைவை ஏற்படுத்தி நாக்பூரில் உள்ள தனது எரிபொருள் நிலையத்தில் இந்த மின்னேற்ற நிலையத்தை துவங்கியுள்ளது.
- நாக்பூர் நகரமானது இந்தியாவில் எலெக்ட்ரிக் பொது போக்குவரத்து மாதிரியை ( Electric Public Transportation Model) அறிமுகப்படுத்தும் முதல் இந்திய நகரமாகும்.

- இது ஓர் பசுமை ஆற்றலின் பயன்பாட்டை பரவலாக்கிட மேற்கொள்ளப்பட்ட முக்கிய முன்னெடுப்பாகும்.

## குவாமி ஏக்தா வாரம் (தேசிய ஒருமைப்பாட்டு வாரம்)

- குவாமி ஏக்தா வாரம் எனும் தேசிய ஒருமைப்பாட்டு வாரமானது ஆண்டுதோறும் நாடு முழுவதும் நவம்பர் 19 முதல் 25 வரை கொண்டாடப்படுகிறது. இந்த ஒரு வார காலத்தில் தேசப்பற்று, கலாச்சார கலப்பு, நாட்டின் பெருமைகள், தேசிய ஒருமைப்பாடு, சமூக நல்லிணக்கம் போன்றவற்றை வளர்ப்பதையும், வலுப்படுத்துவதையும் நோக்கம் கொண்ட பல்வேறு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்படும்.
- ஒரு வாரகாலத்தில் பல்வேறு தினங்கள் கொண்டாடப்படும்.அவையாவன,
    - நவம்பர் 19 – தேசிய ஒருமைப்பாட்டு தினம்
    - நவம்பர் 20 – சிறுபான்மையினர் நல்வாழ்வு தினம்
    - நவம்பர் 21 – மொழியியல் நல்லிணக்க தினம்
    - நவம்பர் 22 – நலிவடைந்தோருக்கான தினம்
    - நவம்பர் 23 – கலாச்சார ஒற்றுமை தினம்
    - நவம்பர் 24 – பெண்கள் தினம்
    - நவம்பர் 25 – பாதுகாப்பு தினம்
- மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தன்னாட்சி அமைப்பான சமூக நல்லிணக்கத்திற்கான தேசிய அறக்கட்டளை (National Foundation for Communal Harmony – NFCH) ஆனது குவாமி ஏக்தா வாரத்தோடு ஒருங்கமையும் வகையில் சமூக நல்லிணக்க பிரச்சாரத்தை நடத்துகின்றது.
- மேலும் இந்த அமைப்பு நவம்பர் 25ஆம் தேதி சமூக நல்லிணக்கத்திற்கான கொடி நாளை கடைபிடிக்க உள்ளது.

## சோலார் பூங்கா

- இந்தியாவினுடைய சூரியமின் ஆற்றல் உற்பத்தித் திறனை அதிகரிக்க உதவும் பொருட்டு பகிரப்பட்ட சூரிய மின் ஆற்றல் உற்பத்தி பூங்கா உள்கட்டமைப்பு திட்டத்திற்கு [Shared Infrastructure for Solar Parks Project] 100 மில்லியன் டாலர் வழங்கிடுவதற்கான கடன் மற்றும் நிதி ஒப்பந்தத்தில் இந்தியா மற்றும் உலக வங்கி கையெழுத்திட்டுள்ளன.
- நாடு முழுவதும் பெரிய அளவிலான சோலார் பூங்காக்களை அமைத்து அதன் மூலம் சூரிய மின் ஆற்றல் உற்பத்தி திறனை அதிகரிப்பதே பகிரப்பட்ட சூரியமின் ஆற்றல் உற்பத்தி பூங்கா உள்கட்டமைப்பு திட்டத்தின் நோக்கமாகும்.
- உலக வங்கியின் அறிக்கைப்படி, இதன் வழியிலான முதல் இரு சோலார் பூங்காக்கள் மத்திய பிரதேச மாநிலத்தின் ரேவா மற்றும் மந்சௌர் மாவட்டத்தில் அமைய உள்ளன.
- மேலும், இத்திட்டத்தின் கீழ் ஒடிஸா, சத்தீஸ்கர் மற்றும் ஹரியானா போன்ற மாவட்டங்களில் உள்ள ஆற்றல் வாய்ந்த சோலார் பூங்காக்களுக்கும் ஆதரவு வழங்கப்பெறும்.

## 42வது சர்வதேச இராணுவ மருந்துகள் மாநாடு

- சர்வதேச இராணுவ மருந்துகள் குழுவின் (international Committee of Military Medicine-ICMM) 42-வது உலக மாநாடு அண்மையில் புதுதில்லியில் நடைபெற்றது.
- இந்த மாநாட்டை மத்திய பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் செயல்பட்டு வரும் ஆயுதப் படைகளின் மருத்துவ சேவைகள் (Armed Forces Medical Service) பிரிவு ஒருங்கிணைத்தது.
- வேகமாக மாற்றமடைந்து வரும் உலக பாதுகாப்பு சூழலை உறுப்பு நாடுகள் சரியான வழியில் எதிர்கொள்ள, உறுப்பு நாடுகளிடையே இராணுவ மருந்துகளின் மீதான கூட்டு அறிவுசார் சொத்துகளை மேம்படுத்திடவும், இராணுவ மருந்துகளில் அவற்றிற்கிடையே உள்ள யோசனைகள் மற்றும் அனுபவங்களை பகிர்வதற்கு ஓர் வாய்ப்புக்கான மேடையாக இந்த மாநாடு ஏற்படுத்தப்படுகிறது.
- இம்மாநாட்டில் மத்திய சுகாதார துறை அமைச்சகம், ஐநாசபை, செஞ்சிலுவை சங்கத்தின் சர்வதேச குழு போன்றவையும் பங்கேற்றன.
- இந்த 42-வது சர்வதேச மாநாட்டின் கருத்துரு “எல்லையைக் கடக்கும் ராணுவ மருந்துகள் ; தொலைநோக்குப் பார்வையுடன்” (Military Medicine in Transition; looking Ahead)
- 5 நாள் நடைபெறும் இம்மாநாடு முதல் முறையாக இந்தியாவில் நடத்தப்பட்டுள்ளது. மேலும் இது ஆயுதப் படைகளின் மருத்துவ சேவைகள் அமைப்பால் இதுவரை நடத்தப்பட்டதிலேயே மிகப்பெரிய மாநாடாகும்.

*ICMM*

- ICMM ஆனது பல்வேறு நாடுகளுக்கிடையேயான ஓர் சர்வதேச அமைப்பாகும். இது 1921-ல் தோற்றுவிக்கப்பட்டது.
- இதன் தலைமையகம் பெல்ஜியத்தில் உள்ள பிரசெல்ஸ் நகரில் அமைந்துள்ளது.
- 112 நாடுகள் இதில் உறுப்பினர்களாக உள்ளனர்.

## மருந்து அணுகலைப் பற்றிய முதல் மாநாடு

- 2030 ஆம் ஆண்டு அடைய இலக்கிடப்பட்ட நீடித்த மேம்பாட்டிற்கான நிகழ்ச்சி நிரலைப் பற்றிய மருத்துவப்பொருட்களுக்கான அணுகல், வர்த்தகம் மற்றும் சுகாதாரத்திற்கான சர்வதேச விதிகள் மீதான முதல் மாநாடு நவம்பர் 21 ஆம் தேதி புது டெல்லியில் தொடங்கப்பட்டது.
- இந்தியாவிற்கான உலக சுகாதார மையத்தின் ஆதரவு உள்ள இந்த மாநாடு மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல்வாழ்வு அமைச்சகம் சர்வதேச விதிகளுக்கான இந்திய சங்கத்தின் (Society of International Law) கூட்டிணைவோடு நடத்தப்பட்டுள்ளது.
- நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கு மருத்துவ பொருட்களின் அணுகலுக்கான ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கங்களிலும்,சர்வதேச வர்த்தக சட்டங்களில் உள்ள நடப்பு பிரச்சனைக்களின் மேல் புரிதலை விரிவாக்குவதற்கும் , அவற்றைச் சார்ந்த அறிவைப் பகிர்வதற்கும் இந்த மாநாடு நடத்தப்பட்டுள்ளது.

## குடும்ப கட்டுப்பாட்டு கருத்தரங்கு

- ஆண்கள் குடும்பக் கட்டுப்பாட்டு செய்முறையில் பங்கெடுப்பதை ஊக்குவிப்பதற்காகவும், ஆண்களுக்கான இனவிருத்திறன் நீக்கம் பற்றிய விழிப்புணர்வை அதிகரிப்பதற்காகவும் நவம்பர் 21 முதல் டிசம்பர் 4 வரை “வாசக்டமி பற்றிய இரு வார நிகழ்வு ” கடைப்பிடிக்கப்பட உள்ளது.

- அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களிலும் நவம்பர் 21 முதல் டிசம்பர் 4 வரை "வாசக்டமி பற்றிய இரு வார நிகழ்ச்சி" கடைப்பிடிக்கப்படும். இந்நாட்களில் அரசுப் பொது மருத்துவமனையில் ஆண்களுக்கான தரமான இனவிருத்தித்திறன் நீக்க சேவை (Vasectomy) அளிக்கப் பெறும்.
- குடும்பக் கட்டுப்பாட்டு நடைமுறையில் ஆண்களின் பங்கேற்பினை ஊக்குவிப்பதற்காக தேசிய பணியரங்குகள் மத்திய சுகாதாரத் துறையால் நடத்தப்படுகின்றன.
- இந்தப் பணியரங்கத்தில் கருத்தடை சாதனங்களின் விநியோகத்தை எளிமைப்படுத்துவதற்காகவும், விநியோக சங்கிலி மேலாண்மை அமைப்பை வலுப்படுத்துவதற்காகவும் உருவாக்கப்பட்ட குடும்ப கட்டுப்பாட்டு பொருட்களின் மேலாண்மை தகவல் அமைப்பு (Family Planning Logistics Management information System – FMCMIS) வெளியிடப்பட உள்ளது.

## இந்திய விமானப் படை - பிரமோஸ்

- உலகின் மீயொலி வேக (Supersonic) மற்றும் சீர்வேக (Cruise) ஏவுகணையான பிரமோஸ் ஏவுகணை இந்திய விமானப் படையின் சுகோய் – 30 MKI போர் விமானம் மூலம் வெற்றிகரமாக பரிசோதனை செய்யப்பட்டுள்ளது.
- இது இந்தியாவிற்கு மிகப்பெரும் வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனையாகும். ஏனெனில் இப்பரிசோதனையின் போது முதன் முறையாக வங்கக்கடலில் அமைக்கப்பட்ட கடல் சார் இலக்கை தகர்க்க போர் விமானங்களின் மூலம் ஏவுகணை செலுத்தப்பட்டு வெற்றிகரமாக பரிசோதனை செய்யப்பட்டுள்ளது.
- 2.8 மாக் மீயொலி வேகமுடைய பிரமோஸ் ஏவுகணையை வான்வெளியிலிருந்து ஏவி வெற்றிகரமாக சோதனை செய்த உலகின் முதல் விமானப்படை இந்திய விமானப்படையாகும்.
- இந்த வெற்றிகரமான சோதனையின் மூலம் பிரமோஸ் ஏவுகணை இந்திய விமானப்படையில் இணைக்கப்பட உள்ளது. இதன் மூலம் இந்தியாவின் முப்படைகளிலும் (Triad) பிரமோஸ் ஏவுகணையை இணைக்கும் திட்டம் நிறைவேறியுள்ளது.
- ஏற்கனவே பிரமோஸ் ஏவுகணை இந்திய தரைப்படை மற்றும் கடற்படையில் இணைக்கப்பட்டுள்ளது.

*பிரமோஸ்*

- பிரமோஸ் ஏவுகணையாது ஓர் அதிவேக, சீர்வேக ஏவுகணையாகும். இவை நிலம், நீர், வான்வெளி என அனைத்து தளங்களிலிருந்தும் (multi platform) ஏவத்தக்கது.
- இது இந்தியாவின் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (DRDO – Defence Research Development Organisation) மற்றும் ரஷ்யாவின் NPOM எனும் நிறுவனத்திற்கு இடையேயான கூட்டிணைவால் உருவாக்கப்பட்டது.
- பிரம்மபுத்திரா மற்றும் மாஸ்க்வா (Moskva) எனும் இரு நதிகளின் பெயர் கலப்பே இந்த ஏவுகணைக்கு சூட்டப்பட்டுள்ளது.
- சீர்வேக ஏவுகணைகளானது எதிரிகளின் ரேடார் மற்றும் ஏவுகணை எதிர்ப்பு சாதன அமைப்புகளிலிருந்து தப்பிக்க எப்போதும் பூமியை ஒட்டியவாறே குறைந்த உயரத்தில் பறக்கும்.
- மேலும் பிரமோஸ் ஏவுகணையானது தற்போது செயல்பாட்டிலுள்ள உலகின் அதிவேகமான கப்பல் எதிர்ப்பு சீர்வேக ஏவுகணையாகும்.
- அண்மையில் விரிவாக்கப்பட்ட வரம்புடைய பிரமோஸ் ஏவுகணை (Brahmos Entended Range Missle) வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டுள்ளது.

- பிரமோஸ் ER ஏவுகணையானது பிரமோஸின் நடப்பு தூர வரம்பான 290 கி.மீ-ஐ (450 Km ,அதிகபட்சம் 600 km) தாண்டியும் 2.8 மாக் வேகத்தில் தாக்க வல்லது.
- இது இருகட்ட எரிபொருள் எஞ்சின் நிலைகளை (two stage) உடையது. இதன் பயணத்தில் முதல் கட்ட எரிபொருள் நிலையில் திட எரிபொருள் உந்து எஞ்சினும் (Solid propellent Booster Engine), இரண்டாவது நிலையில் திரவ ராம்ஜெட் எஞ்சினும் (Liquid Ramjet Engine) செயல்படும்.
- இது தான் உலகின் முதல் மீயொலி சீர்வேக ஏவுகணையாகும்.
- இவை 200 முதல் 300 கிலோ வரை எடையுள்ள மரபுசார்ந்த போர் ஆயுதங்களை தாங்கி செல்லவல்லது.
- இந்த ஏவுகணையானது "Fire and Forget" கோட்பாட்டின் அடிப்படையில் செயல்படுகின்றது. அதிக அளவிலான இயக்க ஆற்றலை (Kinetic Energy) வெளிப்படுத்துவதால் இந்த ஏவுகணை பெரும் அழிப்பு நாச சக்தியை கொண்டவை.
- இந்தியா MTCR-ல் (Missle Technology Control Regime) முழு உறுப்பினரானதைத் தொடர்ந்து இந்த ஏவுகணைக்கான தொழிற்நுட்ப மேம்பாட்டை (upgradation) மேற்கொண்டுள்ளது.
- MTCRல் முழு உறுப்பினரானதால் இந்தியாவிற்கு பிரமோஸ் சீர்வேக ஏவுகணையில் வரம்பில் (range) இடப்பட்ட கட்டுப்பாடு (limit) நீக்கப்பட்டுள்ளது.



## நீதிபதிகளின் ஊதிய உயர்வு

- ஓய்வுபெற்ற (ம) பணிபுரியும் உச்ச நீதிமன்ற, உயர் நீதிமன்ற நீதிபதிகளின் ஊதியங்கள், படிநிலைகள், ஓய்வூதியம் போன்றவற்றை மறுபரிசீலனை செய்து உயர்த்துவதற்கு பிரதமர் தலைமையிலான மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- நீதிபதிகளின் ஊதிய உயர்வு தொடர்பாக 7-வது ஊதியக் குழு ஆணையம் அளித்த பரிந்துரைகளின் பேரிலும் இந்த உயர்வு ஏற்படுத்தப்பட உள்ளது.
- உச்சநீதிமன்ற நீதிபதிகளின் ஊதியங்கள்,ஓய்வூதியம்,பணப்படிகள் போன்றவை உச்ச நீதிமன்ற நீதிபதிகள் (ஊதியம் மற்றும் பணிநிலை) சட்டம்,1958 –ன் படி நிர்வகிக்கப்படுகின்றன.
- உயர்நீதிமன்ற நீதிபதிகளின் ஊதியங்கள்,ஓய்வூதியம்,பணப்படிகள் போன்றவை உயர் நீதிமன்ற நீதிபதிகள் (ஊதியம் மற்றும் பணிநிலை) சட்டம்,1954 –ன் படி நிர்வகிக்கப்படுகின்றன.
- நீதிபதிகளின் ஊதியம்,ஓய்வூதியம், பணப்படிகள் போன்றவற்றை பரிசீலனை செய்து மாற்றம் கொண்டு வருவதற்கு மேற்கண்ட இச்சட்டங்களில் கட்டாய திருத்தம் தேவை.

## 5-வது உலகளாவிய இணையவெளி மாநாடு

- புதுதில்லியில் இரண்டு நாள் நடைபெறும் 5-வது உலகளாவிய இணையவெளி தொடர்பான மாநாட்டை (global conference on cyber space) இந்திய பிரதமர் தொடங்கி வைத்தார்.
- இணையவெளி தொடர்பான உலகின் மிகப்பெரிய இம்மாநாடு இந்தியாவில் முதல் முறையாக நடத்தப்படுகின்றது.
- இம்மாநாட்டின் கருத்துரு ⇒ "அனைவருக்கும் இணையம்; நீடித்த வளர்ச்சிக்கு பாதுகாப்பான மற்றும் உள்ளடங்குத்தன்மையடைய இணையவெளி".
- உலகளாவிய இணையக் கொள்கைகளில் மனித உரிமைகள் மற்றும் உள்ளடக்குத் தன்மையினுடைய முக்கியத்துவத்தை ஊக்குவிப்பதற்காக இந்த மாநாடு நடத்தப்படுகின்றது.

## வனச் சட்டத்தை திருத்துவதற்கான அவசர நிலைச் சட்டம்

- நாட்டில் மூங்கில் சாகுபடியை அதிகப்படுத்தும் முயற்சியில் இந்திய வனச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்வதற்கான அவசரநிலைச் சட்டத்தில் இந்தியக் குடியரசுத் தலைவர் கையெழுத்திட்டுள்ளார்.
- இந்தச் சட்டம், காடுகள் அல்லாத பகுதிகளில் மூங்கில் சாகுபடி செய்யும் விவசாயிகள் அதனை வெட்டுவதற்கோ அல்லது அதனை வேறு இடத்திற்கு அனுப்புவதற்கோ அனுமதி பெற வேண்டிய அவசியம் ஏற்படாது என்பதை உறுதி செய்கிறது.

- 1927ஆம் ஆண்டின் இந்திய வனச் சட்டத்தின் பிரிவு 2(7) மீதான இந்த திருத்தம் விவசாயிகளை அவர்களது வருமானத்தை இரட்டிப்பாக்கும் வகையில் மூங்கில் சாகுபடி செய்ய ஊக்குவிக்கும்.
- தொழில்நுட்ப ரீதியாக மூங்கில் என்பது ஒரு வகையான புல் தாவரமாகும். ஆனாலும் 1927ம் ஆண்டின் இந்திய வனச் சட்டத்தின் கீழ் இது மரமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.
- இந்தியா மூங்கில் சாகுபடியில் மிகப்பெரிய பயிரிடுமிடத்தை கொண்டுள்ளது. மேலும் மூங்கில் மரபணு வளங்களைப் பொறுத்தவரையில் சீனாவுக்குப் பிறகு இரண்டாவது வளமான நாடு இந்தியாவாகும்.
- உலக அளவில் மூங்கில் சாகுபடிக்கான பரப்பளவில் 19 சதவிகித இடத்தை இந்தியா பெற்றுள்ளது. ஆனால் இந்தியாவின் சந்தைப் பங்களிப்பு இத்துறையில் 6 சதவிகிதம் மட்டுமே.
- இந்த சட்டத்திருத்தம் சுற்றுச்சூழல் பயன்களைத் தவிர்த்து ஊரக மற்றும் தேசியப் பொருளாதாரத்தின் அடிப்படையில் மூங்கிலின் பயன்பாடுகளை அதிக அளவில் கட்டவிழ்த்து விடும்.
- வனப்பகுதிகளில் வளர்க்கப்படும் மூங்கில்கள் இந்திய வனச்சட்டம் 1927-ன் படியே தொடர்ந்து நிர்வகிக்கப்படும்.

## அந்தமான் & நிக்கோபர் தீவுகளுக்கான இராணுவப் பயிற்சி

- அந்தமான் நிக்கோபாரின் இராணுவப் பிரிவின் கீழ் அந்தமான நிக்கோபார் தீவுகளுக்கான இராணுவப் பயிற்சி (DANX) நடத்தப்பட்டது.
- இதன் முக்கிய நோக்கம், அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளை தற்காக்கும் வகையில் அனைத்து படைப்பிரிவின் நடைமுறைகளையும், பயிற்சிகளையும் நடைமுறைப்படுத்தி பரிசோதிப்பதாகும்.
- இந்தப் பயிற்சியில் பிரதான நிலப் பகுதிகளிலிருந்து படைவீரர்கள், சிறப்புப் படைகள், கடற்படைக் கப்பல்கள் மற்றும் கனரக விமானங்கள் அடங்கிய சிறப்புப் படைகளும் கலந்து கொண்டன.
- இந்தப் பயிற்சியின் நோக்கம், இராணுவப் படைகளின் அனைத்துத் திட்டங்களையும் ஒருங்கிணைந்த வகையில் திட்டமிட்டு துல்லியமாக நிறைவேற்றிட திட்டங்கள் வகுப்பது ஆகும்.

## பிரமான் மந்திரி மஹிளா சக்தி கேந்திரா

- பிரதமர் தலைமையிலான பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவை குழு பிரதான் மந்திரி மஹிலா சக்தி கேந்திரா எனும் புதிய திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- சமுதாய பங்கேற்பின் மூலம் ஊரக பெண்களுக்கு அதிகாரமளித்து அதன் மூலம் அவர்கள் தங்களின் முழு ஆற்றலை உணர்வதற்கான சூழலை உருவாக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.
- 2017-18 முதல் 2019-20 வரையிலான ஆண்டு காலத்திற்கு "பெண்களுக்கான பாதுகாப்பு மற்றும் அதிகாரமளித்தல்" திட்டத்தின் கீழ் மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தால் இந்த திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.
- இத்திட்டமானது தேசிய, மாநில, மண்டல அளவில் செயல்படுத்தப்பட உள்ளது.
- பல்வேறு நடவடிக்கைகள் மூலம் குழந்தைகள் பாலின விகிதம் (Child Sex Ratio),புதிதாக பிறந்த பெண் குழந்தைகளின் உயிர் வாழ்தல், பெண்கள் கல்வி மற்றும் மேம்பாடு போன்றவற்றை அதிகரிப்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்ளாகும்.

- இத்திட்டத்தின் கீழ் பின்தங்கிய மாவட்டங்களில் மண்டல அளவில் தன்னார்வ மாணவர்களின் ஈடுபாட்டின் மூலம் சமுதாய பங்கேற்பு (Community participation) மேற்கொள்ளப்படும்.

## பேட்டி பச்சாவோ பேட்டி படாவோ விரிவாக்கம்

- பிரதமர் தலைமையிலான பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவை குழு "பேட்டி பச்சாவோ, பேட்டி படாவோ" திட்டத்தை" அனைத்திந்திய அளவில், அதாவது 2011-ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி, நாடு முழுவதும் உள்ள 640 மாவட்டங்களிலும் விரிவுபடுத்த ஒப்புதல் வழங்கியுள்ளது.
- இத்திட்டம் நாட்டின் 161 மாவட்டங்களில் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டதை அடுத்து, தற்போது அனைத்திந்திய அளவில் செயல்படுத்துவதற்காக விரிவுபடுத்தப்பட உள்ளது.

*பேட்டி பச்சாவோ பேட்டி படாவோ*

- இத்திட்டமானது 2015-ஆம் ஆண்டு துவங்கப்பட்டது.
- பாலின வேறுபாடு மிகுந்துள்ள மாவட்டங்களில் குறைந்து வரும் குழந்தைகள் பாலின விகிதத்தை (Child sex ratio) தடுப்பதற்காகவும், பெண்கள் மேம்பாட்டோடு தொடர்புடைய பிரச்சனைகளை களைவதற்காகவும் இத்திட்டம் தொடங்கப்பட்டது.
- தற்போது நடப்பில் இத்திட்டமானது மூன்று அமைச்சகங்களின் கூட்டு முயற்சியால் செயல்படுத்தப்படுகின்றது.
    - மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்
    - மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம்
    - மத்திய மனித வள மேம்பாட்டு அமைச்சகம்
- இத்திட்டம் தற்போது மோசமான குழந்தைகள் பாலின விகிதமுடைய (CSR) 161 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.
- இத்திட்டத்தின் பிற நோக்கங்கள்
    - பாலினம் சார்புடைய குழந்தை பாலினத் தேர்வு நீக்கலை தடுத்தல் (Prevent Gender based Sex-selective elimination).
    - பெண் குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் அவர்கள் உயிர் வாழ்தலை உறுதி செய்தல்
    - பெண் குழந்தைகளின் கல்வியை உறுதி செய்தல்.
- இத்திட்டமானது 1994- ன் முன்-கருத்தரித்தல் மற்றும் முன்கூட்டியேயான குழந்தைகள் பாலின கண்டறிதல் தொழிற்நுட்ப சட்டத்தின் (Pre-Conception & Pre-Natal Diagnostic Technique Act 1994) சரியான செயல்படுத்தலை உறுதி செய்ய உதவும்.
- குழந்தைகள் பாலின விகிதம் (CSR) என்பது 0 முதல் 6 வயது வரையிலானவர்களில் 1000 ஆண் குழந்தைகளுக்கு எத்தனை பெண் குழந்தைகள் உள்ளனர் என்ற எண்ணிக்கையாகும்.
- 1961ல் 976 ஆக இருந்த CSR ஆனது, 2011 கணக்கெடுப்பின் படி 918 ஆக குறைந்துள்ளது.

## மாநிலங்களிடையேயான குழு - சந்திப்பு

- மாநிலங்களுக்கிடையேயான கவுன்சிலினுடைய (inter-state Council) நிலைக் குழுவின் (Standing Commitee) 12-வது சந்திப்பு மத்திய உள்துறை அமைச்சகத்தின் தலைமையில் டெல்லியில் நடைபெற்றது.

- மத்திய-மாநில அரசுகளுக்கு இடையேயான உறவுகள் குறித்து ஆராய ஏற்படுத்தப்பட்ட புன்சி கமிஷனின் பரிந்துரைகளை விவாதிப்பதற்காக இந்த சந்திப்பு ஏற்படுத்தப்பட்டது.
- முன்னாள் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியான மதன் மோகன் புன்சியின் தலைமையில் மத்திய அரசால் இந்த கமிஷன் 2005-ல் அமைக்கப்பட்டது.
- இது தன்னுடைய அறிக்கையை 2010-ல் மத்திய அரசிடம் சமர்ப்பித்தது.
- நாட்டின் பொருளாதாரம் மற்றும் அரசியலில் நடந்த மாற்றங்களின் மீது கண் கொண்டு மத்திய-மாநில அரசுகளுக்கிடையேயான புதிய பிரச்சனைகளை ஆராய்வதற்காக இந்த கமிஷன் அமைக்கப்பட்டது.

*மாநிலங்களிடையேயான கவுன்சில் (Inter-State Council)*

- மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதனை நோக்கமாக கொண்டு அரசியலமைப்பு விதி 263-ன் கீழ் அமைக்கப் பெறும் ஓர் அரசியல் நிறுவன அமைப்பே (Constitutional Body) மாநிலங்களுக்கு இடையேயான கவுன்சில் ஆகும்.
- கொள்கைகள், திட்ட செயல்பாடுகள், மாநிலங்களின் பொது நலன் சார்ந்த விஷயங்களில் மத்திய – மாநில அரசினிடையேயான சிறந்த ஒருங்கிணைப்பிற்கு இக்கவுன்சில் பரிந்துரை வழங்கவல்லது.
- இருப்பினும், மத்திய-மாநில மற்றும் மாநிலங்களுக்கு இடையேயான ஒருங்கிணைப்பிற்கு இது நிரந்தர அரசியல் நிறுவன அமைப்பு (Permanent Constitutional body) அல்ல.
- நாட்டின் பொது நலன்கள் இத்தகு குழு அமைப்பதன் மூலம் சேவையின் வழி நிறைவுபடுத்தப்படும் என குடியரசுத் தலைவருக்கு தோன்றும் போது இக்கவுன்சில் அமைக்கப்படும்.
- இக்கவுன்சிலின் உள்ளடக்கம்
  - இக்கவுன்சிலின் தலைவர் – பிரதமர்
  - உறுப்பினர்களாக அனைத்து இந்திய மாநிலங்களின் முதலமைச்சர்கள்
  - சட்டசபை உடைய யூனியன் பிரதேசங்களின் முதல்வர்கள்,
  - சட்டசபை இல்லா யூனியன் பிரதேசங்களின் மத்திய நிர்வாகிகள்
  - மேலும் உறுப்பினர்களாக பிரதமரால் நியமிக்கப்பட்ட கேபினேட் அமைச்சருக்கான தகுதியுடைய ஆறு மத்திய அமைச்சர்கள்.
- மாநிலங்களுக்கு இடையேயான கவுன்சிலினுடைய நிலைக்குழு (standing Committee) மத்திய உள்துறை அமைச்சரை தலைவராகவும்., கேபினேட் அமைச்சர் தகுதியுடைய 5 அமைச்சர்கள் மற்றும் 9 மாநிலங்களின் முதல்வர்களை உறுப்பினர்களாகவும் கொண்டது.

## சர்வதேச கீதா மஹோத்சவம்-2017

- ஹரியானாவின் குருஷேத்ராவில் சர்வதேச கீதா மஹோத்சவத்தை ஜனாதிபதி தொடங்கி வைத்தார்.
- இதன் நோக்கம் கீதையின் சாராம்சத்தை உலகம் முழுக்க பரப்ப வேண்டும் என்பதாகும்.
- இந்த நிகழ்ச்சியின் இரண்டாவது பதிப்பு ஹரியானா அரசால் நடத்தப்பட்டது.
- இந்த நிகழ்ச்சியில் மொரீசியஸ் பங்களிப்பு நாடாகவும், உத்தரப் பிரதேசம் பங்களிப்பு மாநிலமாகவும் இருந்தன.

## அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் விலை குறைப்பு

- புற்றுநோய், தோல் பிரச்சனைகள் மற்றும் இருதய நோய்கள் போன்ற பல்வேறு நோய்களின் சிகிச்சைக்குப் பயன்படும் 51 அத்தியாவசிய மருந்துப் பொருட்களின் அதிகபட்ச விலை வரம்பை தேசிய மருந்துப் பொருட்களின் விலை நிர்ணய ஆணையம் (NPPA – National Pharmacentical Authority) நிர்ணயித்துள்ளது.
- 6 முதல் 53 சதவீதம் வரை இம்மருந்துப் பொருட்களின் விலை குறைக்கப்பட்டுள்ளது.
- விலை வரம்பு கட்டுப்பாட்டின் கீழ் சேர்க்கப்படாத மருந்துகளின் அதிகபட்ச சில்லறை விலையை வருடத்திற்கு 10 % அதிகரிக்க மருந்துப் பொருட்களின் உற்பத்தியாளர்களுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

*தேசிய மருந்துப் பொருட்கள் விலை நிர்ணய ஆணையம்-NPPA*

- தேசிய மருந்துப் பொருட்கள் விலை நிர்ணய ஆணையமானது மத்திய இரசாயனம் மற்றும் உரங்கள் அமைச்சகத்தின் மருந்துப் பொருட்கள் துறையின் கீழ் செயல்படும் சுதந்திரமான அமைப்பாகும்.
- இது 1997ல் அமைக்கப்பட்டது.
- மருத்துவப் பொருட்களின் விலையை நிர்ணயம் செய்யவும், அவற்றின் விலையை மறுஆய்வு செய்யவும், மத்திய மருத்துவப் பொருட்கள் துறையின் நெறிமுறைகளை செயல்படுத்தவும், கட்டுப்படுத்தப்பட்ட மற்றும் கட்டுப்படுத்தப்படாத மருந்துகளின் விலை நிலவரங்களை கண்காணித்திடவும் இந்த ஆணையம் அமைக்கப்பட்டது.

## பின் தங்கிய மாவட்டங்களின் மேம்பாடு

- அடுத்த 5 ஆண்டுகளில் புதிய இந்தியாவை ஏற்படுத்த வேண்டும் என்ற பிரதமரின் தொலைநோக்கோடு ஒத்திசையும் வகையில் மத்திய அரசு 115 பின்தங்கிய மாவட்டங்களை 2022ம் ஆண்டிற்குள் துரிதமாக மேம்படுத்திட தேர்வு செய்துள்ளது.
- இந்த 115 பின் தங்கிய மாவட்டங்களில்
    - இடது சாரி பயங்கரவாத வன்முறையால் பாதிக்கப்பட்ட 35 மாவட்டங்கள்
    - இடது சாரி பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்ட 55 மாவட்டங்கள்
    - ஜம்மு காஷ்மீர் மற்றும் வடகிழக்கு பகுதிகளில் தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட 15 மாவட்டங்கள்

  -ஆகியவை அடங்கும்.
- ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அரசு பதவிகளில் உள்ள கூடுதல் செயலாளர்கள் மற்றும் கூட்டு செயலாளர்கள் என்ற உயர்மட்ட அளவில் உள்ள மூத்த அதிகாரிகள் "பிரபஹாரி "என்ற பெயரில் நியமிக்கப்படுகின்றார்கள்.
- பிரபஹாரி அலுவலர்களின் முதல் கூட்டம் சமீபத்தில் புதுதில்லியில் அமைச்சரவை செயலாளரின் தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் முக்கிய மத்திய அமைச்சகங்களின் செயலாளர்கள் கலந்து கொண்டனர்.
- மனித வளர்ச்சிக் குறியீட்டில் வியத்தகு மேம்பாடு அடையவும், நாட்டின் பாதுகாப்பு சூழ்நிலையை மேம்படுத்திடவும், இந்த பின் தங்கிய மாவட்டங்களின் மேம்பாடு மிகவும் அவசியமான ஒன்றாகும்.

## வான் சேவை ஒப்பந்தம் (Open Sky Agreement)

- இந்தியா மற்றும் கிரிஸ் நாட்டிற்கிடையே இடையே புதிய மற்றும் புதுப்பிக்கக் கூடிய ஆற்றல் துறையில் புரிந்துணர்வு ஒப்பந்தமும், வான் போக்குவரத்து சேவைகளில் ஓர் உடன்படிக்கையும் கையெழுத்திடப்பட்டுள்ளன.
- இரு நாடுகளுக்கு இடையே பறக்கும் விமானங்களின் எண்ணிக்கையை முடிவு செய்ய இந்த வான்சேவை ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.
- எத்தகு தடைகள் இன்றியும் இந்தியாவின் ஆறு மெட்ரோபாலிடன் நகரங்களுக்கு கிரிஸ் நாட்டின் விமானங்களும், கிரிஸ் நாட்டிற்கு இந்திய விமானங்களும் கட்டுப்பாடுகள் அற்ற எண்ணிக்கையில் சென்று வர இந்த ஒப்பந்தம் உதவும்.
- இதன் மூலம் நம்முடைய புதிய சிவில் விமானப் போக்குவரத்து கொள்கையின் கீழ் திறந்த வான் வெளிப் போக்குவரத்து (Open Sky Agreement) ஒப்பந்தம் செய்துகொள்ளப் பட்டுள்ள முதல் நாடு கிரிஸ் ஆகும்.

## தீவிர பயிற்சித் திட்டம்

- உள்ளாட்சி அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் பிரதிநிதிகள் மற்றும் தலைமை பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளிக்க தீவிர பயிற்சித்திட்டம் (Intensive Training Programme) எனும் திட்டத்தை மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் தொடங்கியுள்ளது.
- நிர்வாக செயல்பாடுகளில் பெரும் திறத்தோடு பெண்கள் பங்கெடுக்க அவர்களுக்கு அதிகாரமளிப்பதற்காக உருவாக்கப்பட்ட இந்த திறன் கட்டுமான திட்டத்தை மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தின் தேசிய பொது ஒத்துழைப்பு மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு நிறுவனம் (National Institute of Public Cooperation and Child Development-NIPCCD) ஒருங்கிணைக்கின்றது.
- 2018-க்குள் ஒவ்வொரு மாவட்டத்திலும் சுமார் 50 தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் பிரதிநிதிகள் என தோராயமாக இருபதாயிரம் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் பிரதிநிதிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட உள்ளது.
- பெரும் எண்ணிக்கையிலான தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் பிரதிநிதிகளுக்கு திறன் கட்டுமானப் பயிற்சி அளிப்பது நாட்டில் இதுவே முதன் முறையாகும்.
- இத்திட்டம் நாடு முழுவதும் உள்ள பயிற்சியளிக்கப்பட்ட இரண்டு லட்சம் உள்ளாட்சி பெண் தலைவர்கள் தங்கள் கிராமத்தை மாதிரி கிராமமாக உருவாக்கிட உதவும். மேலும் எதிர்காலத்தில் பெண்களை சிறந்த அரசியல் தலைவர்களாக்கவும் இத்திட்டம் உதவும்.

## 15வது நிதிக்குழு

- திட்டக் குழுவின் முன்னாள் உறுப்பினர் N.K.சிங் தலைமையில் 15-வது நிதிக் குழுவை மத்திய அரசு அமைத்துள்ளது.
- இக்குழு 2020 ஏப்ரல் 1 முதல் செயல்படத் தொடங்கும், பின் அடுத்த ஐந்து வருடங்களுக்கு பரிந்துரைகளை அளிக்க உள்ளது.

### *உறுப்பினர்கள் நிலை*

- நிதிக்குழு ஒரு தலைவரையும் நான்கு உறுப்பினர்களையும் கொண்டது.
- குடியரசுத் தலைவரால் அவருடைய உத்தரவில் குறிப்பிடப்பட்ட காலம் வரை இவர்கள் பதவியில் இருப்பர்.

- இவர்கள் மறு நியமனங்களுக்கு தகுதியுடையர்கள்

*15வது நிதிக்குழுவின் பிற உறுப்பினர்கள்*

- மத்திய அரசின் முன்னாள் செயலாளரான – சக்திகாந்த் தாஸ்
- ஜார்ஜ் டவுன் பல்கலைக்கழக இணை பேராசிரியரான – அனுப்சிங்
- பந்தன் வங்கி தலைவரான அசோக் லாஹிரி மற்றும் நிதி ஆயோக் உறுப்பினரான ரமேஷ் சந்த் ஆகியோர் பகுதி நேர உறுப்பினர்கள்.
- அரவிந்த் மேத்தா இக்குழுவின் செயலாளராக செயல்படுவார்.

## பேரிடர் மேலாண்மை மையம்

- பேரிடர் மற்றும் பிற அவசரகால சூழ்நிலைகளை கையாள இந்தியாவில் தேசிய பேரிடர் மற்றும் அவசரகால மேலாண்மை மையத்தை (National Crisis Management Centre) அமைக்க ரஷ்யா ஒப்புதல் அளித்துள்ளது.
- பேரிடர் மேலாண்மையிலுள்ள சிறந்த நடைமுறைகள் மற்றும் பிற அனுபவங்களை பகிர்வதற்கும், பேரிடர் மேலாண்மை நிபுணர்களுக்கு பயிற்சி அளிக்கவும் ரஷ்யா ஒப்புதல் தெரிவித்துள்ளது.
- ரஷ்யாவின் EMERCOM நிறுவனம் இந்தியாவில் தேசிய பேரிடர் மற்றும் அவசர கால மையம் அமைக்க ஒத்துழைப்பு அளிப்பதற்கு இரு நாடுகளுக்கு இடையே ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.

## பயங்கரவாத எதிர்ப்பு ஒப்பந்தம்

- அனைத்து வடிவிலான பயங்கரவாதங்களை கையாளுவதிலும், போதைப் பொருட்களினால் உண்டாக்கும் அச்சுறுத்தல்களை எதிர் கொள்வதிலும் இரு நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக இந்திய மற்றும் ரஷ்யாவிற்கு இடையே விரிவான பயங்கரவாத எதிர்ப்பு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.
- இரு நாடுகளுக்கிடையேயான 1993-ஆம் ஆண்டின் அக்டோபர் மாத பாதுகாப்பு ஒப்பந்தத்திற்குப் பதிலாக இப்புது ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## மக்களவையின் முதல் பெண் பொது செயலாளர்

- இந்திய குடிமையியல் ஆட்சிப் பணியாளரான சிநேஹலதா ஸ்ரீவத்சவா மக்களவையின் புதிய பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- இவர் மக்களவையின் முதல் பெண் பொதுச் செயலாளர் (secretary General) ஆவார்.
- தற்போது மக்களவை பொதுச் செயலாளராக பணியாற்றி வரும் அனுப் மிஷ்ராவின் பதவிக்காலம் முடிந்த பிறகு இவர் பொறுப்பேற்பார்.
- இவர் தற்போது மத்திய சட்ட அமைச்சகத்தின் செயலாளராக பணிபுரிந்து வருகிறார்.
- மக்களவை மற்றும் மாநிலங்களவையின் பொதுச் செயலாளர் பதவியானது கேபினேட் செயலாளருக்கு இணையான தகுதி உடையது.

- B.S.ரமா தேவி மாநிலங்களவையின் முதல் பெண் பொதுச் செயலாளராக ஏற்கனவே பணி புரிந்துள்ளார்.

## IDSA தலைவர்

- இந்தியாவின் பாதுகாப்பிற்கான ஆய்வு மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் (IDSA – Institution for Defence Research Studies and Analysis) தலைவராக இந்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் நியமிக்கப்பட்டுள்ளார்.
- இந்த நிறுவனமானது 1965-ல் மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சகத்தின் கீழ் உருவாக்கப்பட்ட தன்னாட்சி உடைய ஆலோசனை நல்கு அமைப்பாகும்.
- மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சரை இந்த நிறுவனத்தின் தலைவராக நியமிப்பது பொதுவான வழக்கமாகும்.
- வெளியுறவுச் செயலாளர் ஜெய்ஷங்கர், பாதுகாப்புத்துறை செயலாளர் சஞ்சய் மித்ரா, ஜெயந்த் பிரசாத் மற்றும் அலோக் தேப் போன்றோர் பதவி-வழி உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.
- இக்குழுவின் பணியாளர் பிரதிநிதியாக அசோக் K.பெஹூரியா நியமிக்கப்பட்டுள்ளார்.
- மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சகம் இந்நிறுவனத்திற்கு நிதி அளிக்கின்றது. இதன் வல்லுநர் பிரிவானது அயல்நாட்டு மற்றும் போர்த்திறஞ் சார்ந்த உத்திகள் மற்றும் இராணுவம் சார்ந்த விஷயங்களில் ஆராய்ச்சி மேற்கொள்ளும்.
- 1974 மற்றும் 1988-ன் அணு ஆயுத சோதனை மேற்கொளல் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் மற்றும் முக்கிய கொள்கை முன்னெடுப்புகளின் முன் அரசு இந்நிறுவனத்தினுடைய கண்ணோட்டத்தை கேட்டுப் பெறும்.
- மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகத்திடமிருந்தும் நிர்வாகிகளுக்கான குறிப்பிட்ட பணிகளையும் இந்நிறுவனம் பெறும்.


## இணைய சமவாய்ப்பு (Net Neutrality)

- இந்திய தொலை தொடர்பு ஒழுங்குமுறை ஆணையமானது (TRAI – Telecom Regulatory Authority of India) இணைய சமவாய்ப்பு நிலையின் அடிப்படை கோட்பாடுகளுக்கு ஆதரவு வழங்கியுள்ளது.
- தொலைத் தொடர்பு சேவை வழங்கும் நிறுவனங்கள் தங்கள் வலைதள சேவைகளில் உள்ளடக்கத்தை (அதாவது இணையதங்கள், செயலிகள்) அடிப்படையாக கொண்டு முன்னுரிமை அளித்தல், சில உள்ளடக்கங்களின் இணைய அணுகலை தடுத்தல், இணையதள இணைப்பு வேகத்தை குறைத்தல் போன்ற பாரபட்சமான அணுகுமுறைகளை மேற்கொள்வதை அனுமதிக்க TRAI மறுக்கிறது.
- எந்த ஒரு குறிப்பிட்ட பொருட்கள் மற்றும் இணைய தளங்களுக்கு முன்னுரிமை அளிக்காமல் பாரபட்ச வேறுபாடு பார்க்காமல் அனைத்து இணையதளங்களுக்கும் பயன்பாட்டாளர்களுக்கு அணுகுதலை தொலை தொடர்பு சேவை நிறுவனங்கள் வழங்குவதே இணைய சமவாய்ப்பு (Net Neutrality) எனப்படும்.

- அமெரிக்காவின் இணைய சமவாய்ப்புக்கான விரிவான கோட்பாடுகளின் பின்பற்றலை மையமாகக் கொண்ட 2015-ஆம் ஆண்டின் சட்டங்களை நீக்குதல் குறித்து அமெரிக்க பெடரல் தொலைதொடர்பு கமிஷன் (FCC – Fdederal Communication Commission) நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கும் வேளையில் TRAI இந்த முன் மொழிவை மேற்கொண்டுள்ளது.

- முக்கியமான சேவைகளின் (specialized Service) விலக்களிப்போடு பாரபட்சமற்ற கட்டுப்பாடுகளின் கீழ் Internet of things (IoT) என்ற வசதியை கொண்டு வரவும் TRAI உத்தரவிட்டுள்ளது.

- சிறப்பு சேவைகள் மற்றும் உள்ளடக்கங்களின் விநியோக பிணையம் (Contact delivery Network) போன்றவற்றிற்கு இணைய சமவாய்ப்பின் அனைத்து விதிகளிலிருந்தும் விலக்களிக்கப்பட்டுள்ளது.




# சர்வதேசச் செய்திகள்

## முதல் இந்திய – அமெரிக்க பெருங்கடல் பேச்சுவார்த்தை

- முதன்முறையாக இந்தியா மற்றும் அமெரிக்காவிற்கிடையேயான முதல் பெருங்கடல் பேச்சுவார்த்தை கோவாவில் நவம்பர்-1 ஆம் தேதி தொடங்கப்பட்டுள்ளது.
- இப்பேச்சுவார்த்தையானது அறிவியல் மற்றும் தொழிலக ஆராய்ச்சி குழுவின் (Council of Scientific and Industrial Research) கோவாவிலுள்ள தேசிய பெருங்கடலியல் ஆய்வு மையத்தில் (National Institute of Oceanography) மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகத்தால் நடத்தப்படுகிறது
- நீலப் பொருளாதாரத்தின் நீடித்த வளர்ச்சியை மேம்படுத்துவதே இந்த பெருங்கடல் பேச்சுவார்த்தையின் நோக்கமாகும்.
- உலக வங்கியின் கருத்துப்படி, நீலப் பொருளாதாரம் என்பது பெருங்கடலின் சுற்றுச்சூழல் ஆரோக்கியத்தை பாதிக்காத வகையில் பொருளாதார வளர்ச்சி, மக்களின் மேம்பட்ட வாழ்வாதாரம் மற்றும் வேலை வாய்ப்புக்காக பெருங்கடல் வளத்தை நீடித்த முறையில் பயன்படுத்துவதாகும்.

## அமெரிக்க மத்திய ரிசர்வ் வங்கியின் அடுத்த தலைவர் -ஜெரோம் பாவெல்

- எல்லோரும் எதிர்பார்த்த விதத்திலும், உயர்ந்து வரும் பங்குச் சந்தையைப் பாதிக்காத வண்ணத்திலும், தற்போதைய அமெரிக்க பெடரல் ரிசர்வ் வங்கியின் தலைவராக உள்ள ஜானட் யெல்லனின் பதவிக் காலம் முடிவடைந்த பின் அடுத்த தலைவர் பதவிக்கு ஜெரோம் பாவெல்லை அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் நியமித்துள்ளார்.
- 2013-ல் அப்போதைய அமெரிக்க அதிபர் பாரக் ஒபாமாவால் நியமிக்கப்பட்ட ஜானட் யெல்லனை அடுத்து 64 வயதாகும் பாவெல் அப்பதவியில் அமர உள்ளார்.
- அமெரிக்க மத்திய வங்கியின் முதல் பெண் தலைவர் என்ற வகையில் பதவி வகிக்கும் ஜானட் யெல்லனின் தற்போதைய பதவிக்காலம் அடுத்த பிப்ரவரியில் முடிவடைய இருக்கிறது.

## உலக பாலின இடைவெளிக் குறியீடு- 2017

- உலக பொருளாதார மன்றத்தால் (WEF-World Economic Forum) வெளியிடப்படும் உலக பாலின இடைவெளிக் குறியீட்டின் 2017-ல் ஆண்டுக்கான அறிக்கையின் படி, மொத்தம் 144 நாடுகளில் இந்தியா, குறைவான வரிசையில் 108வது இடத்தைப் பிடித்துள்ளது.
- கடந்த ஆண்டின் 87வது இடத்தை ஒப்பிடுகையில் இந்தியா இந்த வருடம் 21 இடங்கள் சறுக்கி, சீனா மற்றும் வங்கதேசம் ஆகிய அண்டைநாடுகளுக்கும் பின் தங்கிய வரிசையில் இடம் பிடித்துள்ளது.
- இதற்கான முக்கியக் காரணம் நாட்டின் பொருளாதாரத்தில் பெண்களின் குறைந்த பங்களிப்பும், அவர்களுக்கு வழங்கப்படும் குறைந்த ஊதியமும் ஆகும்.
- இரண்டு குறியீடுகளில் (Indicators) குறைவான மதிப்பை பெற்றதே இந்தியா பின்தங்கிய வரிசையில் இடம் பெற முக்கியமான காரணம் ஆகும்.

அவையாவன,

- ✓ சுகாதாரம் மற்றும் ஆயுட்காலம் – இந்தியா கடைசி நான்கு இடத்தில் 141-வது நிலையில் உள்ளது.
- ✓ பொருளாதாரத்தில் பெண்களுக்கான பங்களிப்பு மற்றும் வாய்ப்புகள் – சென்ற ஆண்டை ஒப்பிடுகையில் 136வது இடத்திலிருந்து 139வது இடத்திற்கு சரிவு.

### *உலக பாலின இடைவெளிக் குறியீடு*

1. கல்வி வாய்ப்பு
2. உடல்நலம் மற்றும் ஆயுட்காலம்
3. பொருளாதார வாய்ப்பு
4. அரசியல் மேம்பாடு

என நான்கு முக்கிய காரணிச் சுட்டிகளை அடிப்படையாகக் கொண்டு ஆண் மற்றும் பெண் பாலினத்தவருக்கிடையே சமத்துவத்தை ஏற்படுத்தும் செயல் முயற்சியாக இந்த குறியீடு அளவீடு செய்யப்படுகிறது.




## மாய தீவு உருவாக்கி

- “மாய தீவு உருவாக்கி” என சீனாவால் அழைக்கப்படும் ஆசியாவின் மிகப்பெரிய கடல் தூர்வாரும் கப்பலை தயாரித்து சீனா வெளிக்காட்டியுள்ளது .
- தையான் குன் ஹவோ என பெயரிடப்பட்டுள்ள சீனாவின் இப்பெரிய கப்பலானது தென் சீனக் கடல் பகுதிகளில் இராணுவ நிலையங்கள் அமைப்பதற்காக மணல், மண் முகடு, பவளப் பாறை போன்றவற்றை தூர்வாரி பவளப்பாறை கூட்டமைவுகளையும், சிறு தீவு முகடுகளையும் செயற்கைத் தீவுகளாக மாற்றப் பயன்படும்.
- இக்கப்பலானது, கிழக்கு சீனாவின் ஜியாங்சு மாகாணத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.

## இரு வழிகாட்டு அமைப்புகள்

- BeiDOU - 3M1 மற்றும் BeiDOU - 3M2 எனப் பெயரிடப்பட்ட இரு BeiDOU – 3 வரிசை செயற்கைக் கோள்களை லாங் மார்ச் – 3B எனும் ஒரே இராக்கெட் மூலம் தென்மேற்கு சிசுவான் மாகாணத்தின் சிசாங் செயற்கைக்கோள் ஏவுதள மையத்திலிருந்து வெற்றிகரமாக சீனா விண்ணில் ஏவியுள்ளது. ஏவப்பட்ட இந்த இரு புதிய செயற்கைக் கோள்களும் சீனாவின் BeiDOU செயற்கைக்கோள் வழிகாட்டு அமைப்பின் (Navigation System) மூன்றாவது கட்டமாகும்.
- இந்த வழிகாட்டு அமைப்பானது சீனாவின் பாதை மற்றும் மண்டலத் திட்டத்தில் [BRI – Belt and Road Initiative] இணையும் நாடுகளுக்கு வழிகாட்டு சேவையை அளிக்க உள்ளது. 2022-ல் முழுமையான உலக வழிகாட்டு அமைப்பை உருவாக்குவதற்காக சீனா மேலும் 30 செயற்கைக்கோள்களை ஏவ திட்டமிட்டுள்ளது.
- இதன் மூலம் அமெரிக்கா மற்றும் ரஷ்யாவிற்கு அடுத்து சொந்த வழிகாட்டு அமைப்பைக் கொண்ட மூன்றாவது நாடாக சீனா உருவாகும்.

## சம்பிரிதி 2017

- இந்தியா மற்றும் வங்கதேசத்திற்கு இடையேயான கூட்டு இராணுவ பயிற்சியே சம்பிரிதி ஆகும்.
- இதனுடைய 2017 ஆம் ஆண்டின் ஏழாவது பதிப்பு இந்த ஆண்டு மேகாலயாவில் தொடங்கியுள்ளது.
- கூட்டு பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள், கூட்டு கிளர்ச்சி எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் மற்றும் இரு நாடுகளுக்கு இடையேயான இணைந்து செயலாற்றும் தன்மையை மேம்படுத்துதல் போன்றவையே இக்கூட்டுப் போர் பயிற்சியின் நோக்கங்களாகும்.
- இதற்கு முந்தைய 6-வது சம்பிரிதி பயிற்சி 2016 ல் தாக்காவிலுள்ள டன்கையில் எனுமிடத்திலும், 5-வது சம்பிரிதி பயிற்சி 2015ல் இந்தியாவின் மேற்கு வங்கத்தின் பின்னாகுரி எனுமிடத்திலும் நடத்தப்பட்டது.

## இந்திய விமானப் படை (IAF) இஸ்ரேலின் இராணுவப் பயிற்சியில் முதல் முறையாக பங்கேற்கிறது

- முதன் முறையாக 45 பேர் கொண்ட இந்திய விமானப்படைக் குழுவானது இஸ்ரேலின் உவ்டா விமானப் படைத் தளத்தில் இஸ்ரேல் மற்றும் 8 பிற நாடுகளுடன் இணைந்து இரண்டு வாரகால நீலக்கொடி (Blue Flag) இராணுவப் பயிற்சியில் பங்கேற்கிறது.
- இது இஸ்ரேலிய வரலாற்றில் மிகப்பெரிய கூட்டுப்போர் பயிற்சியாக அமைய உள்ளது.
- ஆண்டிற்கு இருமுறை நடக்கும் இந்நீலக் கொடி பயிற்சியானது சர்வதேச அளவில் இஸ்ரேலின் இராணுவ ஒத்துழைப்பை வலுப்படுத்த வடிவமைக்கப்பட்டதாகும். இந்தப் பயிற்சியில் அமெரிக்கா, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, கிரீஸ் மற்றும் போலந்து போன்ற நாடுகளுடன் இந்தியா இணைந்து பங்கேற்பது இதுவே முதன் முறையாகும்.
- இந்தப் பயிற்சியானது பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகளிலும் உளவுத் தகவல்களைப் பரிமாறிக் கொள்வதிலும் இணைந்து செயலாற்றும் தன்மையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது.
- கேப்டன் மாலுக் சிங் வி.எஸ்.எம் (Maluk Singh VSM) தலைமையிலான இந்தியப் பிரிவு இஸ்ரேல் விமானப் படையின் வான்வழி மீட்பு மற்றும் வெளியேற்றுப்பிரிவுடன் பயிற்சியை மேற்கொள்ள உள்ளது.

## யுனெஸ்கோவின் நிர்வாகிகள் குழு - இந்தியா

- யுனெஸ்கோவினுடைய நிர்வாகக் குழுவின் உறுப்பினராக இந்தியா மீண்டும் தேர்வு செய்யப்பட்டுள்ளது.
- இந்த தேர்வுக்கான தேர்தல் பாரிஸில் ஏற்பாடு செய்யப்பட்ட யுனெஸ்கோவின் 39 வது கூட்டத்தில் நடைபெற்றது.
- நிர்வாகிகள் குழுவானது யுனெஸ்கோவின் உச்ச முடிவு எடுக்கும் அமைப்பாகும்
- யுனெஸ்கோ அமைப்பின் உறுப்பு நாடுகளினுடைய பிரதிநிதிகள் யுனெஸ்கோவினுடைய பொது அவை மாநாட்டில் பங்கேற்பர். இப்பொது மாநாடு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை கூட்டப்படும்.
- இம்மாநாட்டில் உறுப்பு நாடுகளும், இணை உறுப்பு நாடுகளும் அவற்றோடு உறுப்பினரல்லாத நாடுகளும், நாடுகளுக்கிடையேயான அமைப்புகள் மற்றும் அரசு சாரா தொண்டு நிறுவனங்களும் பங்கேற்கும்.

## ஆசிய – பசுபிக் பொருளாதார கூட்டுறவு

- வியட்நாமில் உள்ள தனாங் (Danang) நகரில் ஆசிய – பசுபிக் பொருளாதார கூட்டுறவு அமைப்பின் உச்சி மாநாடு (APEC 2017 – Asia – Pacific Economic Co-Operation) அண்மையில் நடைபெற்றது.
- அமெரிக்காவின் விலகலைத் தொடர்ந்து, அமெரிக்கா இன்றி பசிபிக் நாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்புக் கூட்டணி என்றழைக்கப்படும் 'டிரான்ஸ் பசுபிக் பார்ட்னர் ஷிப்' என்ற (Trans-Pacific Partnership) வர்த்தக ஒப்பந்தத்தை முன்னெடுத்து செல்ல இம்மாநாட்டில் கலந்து கொண்ட 11 ஆசிய-பசிபிக் நாடுகளின் அமைச்சர்கள் முடிவு செய்துள்ளனர்.
- APEC என்பது ஆசியா-பசிபிக் பிராந்தியம் முழுவதும் தடையற்ற வர்த்தகத்தை ஊக்குவிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட 21 பசிபிக் கரையோர நாடுகளுக்கான ஓர் மன்றமாகும்.
- இதன் தலைமையகம் - சிங்கப்பூர்.
- இந்தியா இந்த அமைப்பில் உறுப்பினர் அல்ல.
- APECல் அதிகாரப்பூர்வ பார்வையாளர்கள் உள்ளனர். அவையாவன,
  - (i) ஆசியான் நாடுகள் (ASEAN)
  - (ii) பசுபிக் தீவுகள் மன்றம் (Pacific Islands Forum)
  - (iii) பசுபிக் பொருளாதார ஒத்துழைப்பு கவுன்சில் (Pacific Economic Cooperation Council)
- ஆசியா-பசுபிக் பிராந்திய நாடுகளுக்கிடையே உட்-சார்புடைமைத் தன்மை மற்றும் பிராந்திய வர்த்தக கூட்டணிகள் உருவாதல் அதிகரிப்பதாலும், பெருகி வரும் ஜப்பானின் சக்தியை கலைப்பதற்காகவும் APEC அமைப்பு உருவாக்கப்பட்டது.
- ஓர் நாட்டின் கீழான அங்கமாக இல்லாமல் தனித்த பொருளாதாரமுடைய ஓர் பகுதியாக இருக்க வேண்டும் என்பதே APEC-ல் உறுப்பினராக வேண்டிய தகுதியாகும். இதன் அடிப்படையிலேயே தைவான் உறுப்பினராக சேர்க்கப்பட்டது.

## நெல் ஆராய்ச்சி ஆய்வகம்

- பிலிப்பைன்ஸ் நாட்டின் பனோஸ் நகரில் அமைந்துள்ள சர்வதேச நெல் ஆராய்ச்சி நிறுவனத்தில் (IRRI – International Rice Research Institute) தனது பெயர் சூட்டப்பட்ட புதிய நெல் உற்பத்தி ஆய்வகத்தை இந்திய பிரதமர் தொடங்கி வைத்தார்.
- விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்குவதற்காக அதிக மகசூல் தரவல்ல புதிய நெல் ரகங்களை உருவாக்கிட IRRI ன் பிராந்திய மையம் ஒன்றை இந்திய அரசு வாரணாசியில் அமைத்து வருகின்றது.
- IRRI ஆனது, 1960'களின் பசுமைப் புரட்சிக்கு பெரும்பங்களிப்பு வழங்கிய நெல் இரகங்களின் கண்டுபிடிப்பால் அறியப்படும் ஓர் சர்வதேச வேளாண் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனமாகும்.
- நெல் உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர்களின் ஆரோக்கியத்தை அதிகரித்தல், வறுமை மற்றும் பட்டினி ஒழிப்பு, நெல் உற்பத்தியின் நீடித்த சூழலை உறுதி செய்தல் போன்றவை இந்த அமைப்பின் நோக்கங்களாகும்..
- அமைந்துள்ள இடம் ⇒ மணிலா, பிலிப்பைன்ஸ்
- உணவுப் பாதுகாப்பில் ஆராய்ச்சியில் ஈடுபடும் உலக வேளாண் ஆராய்ச்சி மையங்களின் கூட்டிணைவான CGIAR (Consultative Group for International Agricultural Research) சர்வதேச வேளாண்

ஆராய்ச்சி மையங்களுக்கான கூட்டமைப்பில் இடம் பெற்றுள்ள 15 மையங்களில் IRRI ஆனது ஒரு மையமாகும்.

- IRRI ஆனது ஆசியாவின் மிகப்பெரிய, இலாப நோக்கமற்ற வேளாண் ஆராய்ச்சி மையமாகும்.

## ஐரோப்பிய ஒன்றியம் (EU) –PESCO (Permanent Structured Cooperation)

- ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த இருபத்தி மூன்று உறுப்பு நாடுகள் பாதுகாப்பு தொடர்பான விஷயங்களில் நெருக்கமான ஒத்துழைப்பிற்காக, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பாதுகாப்பு உடன்படிக்கையில் கையெழுத்திட்டுள்ளன.
- நிரந்தரமாக கட்டமைக்கப்பட்ட ஒத்துழைப்பு அல்லது பெஸ்கோ (PESCO- Permanent Structured Cooperation) என்று அழைக்கப்படும் இந்த உடன்படிக்கையானது, அதன் ஒப்பந்ததாரர்களை கூட்டு பாதுகாப்பு தொடர்பான திட்டங்களில் சட்டப்பூர்வமாக பிணைக்கிறது.
- இந்த பெஸ்கோ (PESCO) உடன்படிக்கையானது, நேட்டோ (NATO) வின் 5-ஆம் விதியில் உள்ளடங்கியிருக்கும் கூட்டு பாதுகாப்பு அளவின் கீழ் கையெழுத்திட்ட ஐரோப்பிய நாடுகளுக்கிடையே பாதுகாப்பு ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கான நோக்கத்தை கொண்டுள்ளது.
- இந்த உடன்படிக்கையில் பிரிட்டன், டென்மார்க், அயர்லாந்து, போர்ச்சுகல் மற்றும் மால்டாவைத் தவிர அனைத்து ஐரோப்பிய அரசுகளும் கையெழுத்திட்டுள்ளன.




## உலகின் முதல் முழுமையான மின் சரக்கு கப்பல்

- உலகின் முதல் முழுமையான மின்சார சரக்குக் கப்பலை சீனா தனது குவாங்டாங் (Guangdong) மாகாணத்தின் தலைநகரமான குவாங்ஜூவ்-வில் (Guangzhou) தொடங்கியுள்ளது.
- இரண்டாயிரம் மெட்ரிக் டன் எடை கொண்ட இந்த கப்பல் உலகில் லித்தியம் மின்கலத்தை (lithium battery) உபயோகிக்கும் முதல் கப்பலாகும்.
- இந்த கப்பல் பியர்ல் நதியின் (Pearl River) உட்புற பகுதிகளில் மின் உற்பத்திக்கான நிலக்கரியை சுமந்து சென்றிட முதன்மையாக பயன்படும்.
- இந்த கப்பல் குவாங்ஜூவ் சர்வதேச கப்பல் கட்டுமான நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டது.
- இரண்டு மணி நேர எரியூட்டலுக்குப் பின் இந்தக் கப்பல் 80 கிலோமீட்டர்கள் வரை பயணம் செய்யும்.

- இந்த கப்பல் 70.5 மீட்டர் நீளமுடையது.
- 40 புதிய மகிழுந்துகளின் (Cars) மின்கலத்தின் சக்திக்கு இணையான சக்தியாக இந்தக் கப்பலின் மின்கல சக்தி 2400 கிலோவாட் மணியாக உள்ளது.
- இதன் அதிகபட்ச வேகம் மணிக்கு 12.8 கிலோ மீட்டராகும்.
- இதிலிருந்து வீணான வாயு மாசுக்கள் ஏதும் வெளியிடப்படுவதில்லை.
- இந்த கப்பலின் முதன்மையான செலவு அதன் லித்தியம் மின்கலம் எந்தளவிற்கு மேம்படுத்தப்பட்டுள்ளது என்பதை பொறுத்ததாகும்.

## ஐ.நா.அமைதி காப்பு படையின் பாதுகாப்பு அமைச்சரவை கூட்டம்

- ஐ.நா. அமைதி காப்பு படையின் உறுப்பு நாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்களின் மாநாடு (UN Peacekeeping Defence Ministerial -UNPKDM) அண்மையில் கனடாவின், வான்கூவர் நகரில் நடைபெற்றது.
- இதனுடைய கடைசி அமைச்சர்கள் மாநாடு 2016ல் செப்டம்பரில் லண்டனில் நடைபெற்றது.
- இந்த மாநாட்டில் ஐ.நா.வின் அமைதிப்படையில் பங்களித்து வரும் 70-க்கும் மேற்பட்ட நாடுகளின் பிரதிநிதிகளும், பல்வேறு சர்வதேச அமைப்புகளும், ஐரோப்பிய யூனியன் மற்றும் ஆப்பிரிக்க யூனியனும், நேட்டோ அமைப்பும் கலந்து கொண்டன.
- இந்த மாநாட்டில் பெண்கள், அமைதி மற்றும் பாதுகாப்பு, , பாலியல் வன்கொடுமை மற்றும் பாலியல் சுரண்டலைக் கையாளுதல் (Tackling Sexual Exploitation and Abuse – SEA), அமைதிகாப்பு மற்றும் விரைவான வளர்ச்சியை அதிகரித்தல் போன்ற பல்வேறு தலைப்புகளில் உள்ள பிரச்சனைகள் பற்றி விவாதிக்கப்பட்டது.
- ஐ.நா.வின் அமைதிகாப்புப் படையில் உள்ள ஐ.நா. உறுப்பு நாடுகளுடைய பங்களிப்பினை மதிப்பாய்வு செய்வதற்காகவும், ஐ.நா. அமைதிகாப்புப் படையின் செயல்பாட்டு நடவடிக்கைகளுக்கான நடப்பு மற்றும் எதிர்கால தேவைகளை அடைய உறுப்பு நாடுகளின் பிரத்யேக உறுதிமொழியை உறுதி செய்வதற்காகவும் ஒருங்கிணைக்கப்படுவதே பாதுகாப்பு அமைச்சர்களுக்கான UNPKDM மாநாடாகும்.

## ஆர்டிக் பிரதேசத்திற்கு முதல் நெடுஞ்சாலை - கனடா

- கனடா தனது முதல் நிரந்தரமான, ஆண்டு முழுவதும் பயன்படுத்தத்தக்க ஆர்டிக் பெருங்கடலுக்கான முதல் நெடுஞ்சாலையை அதிகாரப்பூர்வமாக திறந்துள்ளது.
- இந்தப் புதிய நெடுஞ்சாலை இணைப்பின் மூலம் கனடா அதன் மூன்று கடற்கரைகளான அட்லாண்டிக், ஆர்டிக், பசுபிக் என அனைத்து கடற்கரைகளுடனும் நிலம் வழியாக இணைக்கப்படும்.
- 138 கி.மீ. (85 மைல்கள்) நீளமுடைய இந்த அனைத்து வானிலைகளிலும் பயன்படுத்தத்தக்க நெடுஞ்சாலை கனடாவின் யுகோன் பகுதியில் தொடங்கி வடகடலோர எல்லை வரை அமைந்துள்ளது.
- இந்தப் புதிய நெடுஞ்சாலையானது இதற்கு முன் வான் வழியாக அல்லது பனிக்கால சாலைகள் வழியே மட்டுமே அடையத்தக்க நிலையிலிருந்த ஆர்டிக் பெருங்கடலில் அமைந்துள்ள கனடாவின் டுக்டோயக்டுக் எனும் குக்கிராமத்தை தென்கனடியப் பகுதிகளுடன் இணைக்க வல்லது.

## மாஸ்கோ பிரகடனம்

- 120 நாடுகளைச் சேர்ந்த சுகாதாரத்துறை அமைச்சர்கள், அரசு சாரா தொண்டு நிறுவனங்கள், தனியார் துறை பிரதிநிதிகள் கலந்துகொண்ட முதல் WHO உலக அமைச்சர்கள் மாநாடு மாஸ்கோவில் நடைபெற்றது.
- இந்த மாநாட்டின் போது "மாஸ்கோ பிரகடனம்" ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- இந்தியா இந்த பிரகடனத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- HIV துணையுடைய தொற்றுகளால் உண்டாகும் கூடுதல் இறப்புகளை நீக்குதல், தொற்று அல்லா நோய்கள் மற்றும் காசநோய்க்கு எதிரான ஒருங்கிணைப்புடைய செயலில் ஒத்திசைவை உண்டாக்குதல் போன்றவற்றிற்கு இந்த பிரகடனம் உலக நாடுகளுக்கு அழைப்பு விடுக்கின்றது.
- 2035-ல் காசநோயை ஒழிப்பதற்கான பல்துறை பொறுப்புடைமையை ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் , காச நோயை அழிப்பதற்கான உலகளாவிய இலக்கு மற்றும் (MDR-TB) பல வகை மருந்து எதிர்ப்பு காசநோயை (Multi-drug resistant TB) ஓர் தேசியப் பொது சுகாதாரப் பிரச்சனையாக கையாளுதல் போன்றவற்றினை இந்த பிரகடனம் வலியுறுத்துகிறது.

## தல்வீர் பண்டாரி – சர்வதேச நீதிமன்றம்

- சர்வதேச நீதிமன்றத்தின் [International Court of Justice-ICJ] நீதிபதி பணியிடங்களுக்கான தேர்தலில் இந்தியா சார்பில் போட்டியிட்ட தல்வீர் பண்டாரி மீண்டும் இரண்டாவது முறையாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- இவர் ICJ-ன் மொத்தமுள்ள 15 நீதிபதிகளில் சுழற்சி முறையில் 5 நீதிபதி பணிஇடங்களுக்கு நடத்தப்பட்ட தேர்தலில் கடைசி மற்றும் 5-வது இடத்திற்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- சர்வதேச நீதிமன்ற சட்டத்திட்டப்படி, ஐ.நா. பொது சபையிலும் (UNGA-United Nations General Assembly), பாதுகாப்பு கவுன்சிலிலும் [United Nations Security Council – UNSC] அறுதிப் பெரும்பான்மை (Absolute Majority) வாக்குகள் பெறுபவர்களே நீதிபதியாக தேர்ந்தெடுக்கப்படுவர்.
- அதாவது பொது அவையில் 97 வாக்குகள் மற்றும் பாதுகாப்பு கவுன்சிலில் 8 வாக்குகளும் பெற வேண்டும்.
- இதற்கான தேர்தல் நியூயார்க்கில் அமைந்துள்ள ஐ.நா. தலைமையகத்தின் பொது அவையிலும், பாதுகாப்பு கவுன்சிலிலும் ஒரே நேரத்தில், தனித்தனியாக நடைபெற்றது.
- அவ்வாறு நடைபெற்ற வாக்கெடுப்பில், ஐ.நா. பொது அவையில் 193 உறுப்பினர்களின் வாக்குகளில் தல்வீர் பண்டாரி 183 வாக்குகள் பெற்று பெரும்பான்மை பெற்றார். ஆனால் பாதுகாப்பு கவுன்சிலில் பண்டாரியின் பெரும் போட்டியாளராக திகழ்ந்த கிறிஸ்டோபர் கிரீன்உட் மொத்தமுள்ள 15 வாக்குகளில் 9 வாக்குகள் பெற்று பெரும்பான்மயை வென்றார்.
- இந்நிலையில், இங்கிலாந்து தனது வேட்பாளரான கிறிஸ்டோபர் கிரீன்வுட்டை போட்டியிலிருந்து விலக்கியதை தொடர்ந்து பண்டாரி தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- இதன்மூலம் இரண்டாவது முறையாக பண்டாரி மீண்டும் தேர்வு செய்யப்பட்டார்.
- மேலும் கடந்த 71 ஆண்டுகால வரலாற்றில் இங்கிலாந்தைச் சேர்ந்த ஒருவர் கூட சர்வதேச நீதிமன்றத்தில் இடம் பெறாமல் இருப்பது இதுவே முதல்முறையாகும்..
- 9 ஆண்டுகள் பதவிக்காலம் உடைய இப்பதவியில் பண்டாரி 2027 வரை பதவி வகிப்பார்.
- இவர் 2014-ல் பத்ம பூஷன் விருது பெற்றது குறிப்பிடத்தக்கது.

### *சர்வதேச நீதிமன்றம் - ICJ*

- ICJ ஆனது ஐ.நா. வின் முதன்மை நீதி வழங்கும் அமைப்பாகும்.
- இதன் தலைமையகம் நெதர்லாந்தின் தி ஹேக் நகரில் அமைந்துள்ளது.
- இந்த நீதிமன்றமானது உறுப்பு நாடுகளினால் தாக்கல் செய்யப்பெறும் சட்ட விவகாரங்கள் சார்ந்த வழக்குகளைத் தீர்க்கும். மேலும் ஐநா பொதுஅவை மற்றும் முறையாக அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச அமைப்புகள், நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்படும் சட்ட விளக்கம் சார்ந்த கேள்விகளுக்கு ஆலோசனை கருத்துகளை வழங்கும்.
- இதில் மொத்தம் 15 நீதிபதிகள் 9 ஆண்டுகாலமுடைய பதவிக்காலத்திற்கு தேர்ந்தெடுக்கப்படுவர்.
- நிரந்தர நடுவர் நீதிமன்றத்தில் [PCA – Permanent Court of Arbitration] உள்ள நாடுகளின் குழுக்களால் போட்டியிடப் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் வேட்பாளர்களை ஐ.நா. பொதுஅவை மற்றும் பாதுகாப்பு கவுன்சில் தேர்ந்தெடுக்கும்.
- நீதிமன்றத்தின் தொடர்ந்த செயல்பாட்டை உறுதி செய்வதற்காக, 15 நீதிபதிகளில் 5 நீதிபதிகள் 3 ஆண்டுக்கு ஒருமுறை சுழற்சி முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர்.
- ஒரே நாட்டைச் சேர்ந்த இரு நீதிபதிகள் இம்மன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்படமாட்டார்கள்.
- P5 எனப்படும் பாதுகாப்பு கவுன்சிலின் நிரந்தர ஐந்து உறுப்பு நாடுகளான பிரான்ஸ், இரஷ்யா, சீனா, இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகள் எப்போதும் ஒரு உறுப்பினரைக் கொண்டிருக்கும்.
- ஆனால் இதற்கு மாற்றாக சீனா எந்த ஒரு வேட்பாளரையும் முன்னிறுத்தாத காரணத்தால் 1967 முதல் 1985 வரை எந்த ஒரு சீன நீதிபதியையும் இம்மன்றத்தில் இடம்பெறவில்லை.
- வழக்கு விசாரணைகளில் நீதிபதிகள் கூட்டு தீர்ப்பையோ அல்லது அவர்களுடைய தனிப்பட்ட கருத்தையோ வழங்கலாம்.
- வழக்கின் தீர்ப்பு மீதான முடிவுகளும், ஆலோசனை கருத்துகளும் பெரும்பான்மை அடிப்படையிலேயே எடுக்கப்படும். பெரும்பான்மை கிடைக்காமல் சமவாக்கு நிலை ஏற்பட்டால் மன்ற தலைவரின் முடிவு இறுதி தீர்ப்பாக அமையும்

## இந்தியா – மியான்மர் கூட்டு இராணுவப் பயிற்சி

- IMBAX எனும் இந்தியா மற்றும் மியான்மருக்கு இடையேயான முதல் இராணுவ கூட்டுப்போர் பயிற்சி மேகாலயா மாநிலத்தின் ஷில்லாங் அருகே உள்ள கூட்டுப் போர் திற மையத்தில் நவம்பர் 20 முதல் 25 வரை நடைபெற உள்ளது.
- இது ஐநா அமைதிகாப்புப் படைகளின் செயல்பாடுகள் மீதான இந்தியா மற்றும் மியான்மருக்கு இடையேயான முதல் இராணுவ கூட்டுப்போர் பயிற்சியாகும்.
- ஐநா அமைதி காப்புப் படையின் பல்வேறு பணிகள் மற்றும் பொறுப்புகள் சார்ந்து மியான்மர் இராணுவத்தினருக்கு பயிற்சி அளிக்க இந்த 6 நாள் கூட்டு இராணுவப் பயிற்சி நடத்தப்படுகின்றது.
- இரு நாடுகளுக்கிடையேயான உறவை மேலும் வலுப்படுத்தற்காகவும் இது நடத்தப்படுகிறது.

## இந்தியா - EBRD

- ❖ பிரதமர் தலைமையிலான மத்திய அமைச்சரவையானது மறுகட்டமைப்பு மற்றும் மேம்பாட்டிற்கான ஐரோப்பிய வங்கியில் (EBRD – European Bank for Reconstruction & Development) இந்தியா உறுப்பினராவதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- ❖ மத்திய நிதி அமைச்சகத்தின் பொருளாதார விவகாரத்துறை இந்தியா உறுப்பினர் ஆவதற்குத் தேவையான அனைத்து அவசிய நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.
- ❖ EBRD-ல் இந்தியா உறுப்பினராகுதலானது சர்வதேச அளவில் இந்தியாவின் நிலையை மேம்படுத்துவதோடு, இந்தியாவின் பொருளாதார நலன்களை மேம்படுத்தவும் உதவும்.
- ❖ இந்தியா, உலக வங்கி (World Bank-WB), ஆசிய மேம்பாட்டு வங்கி (Asian Development Bank-ADB), ஆப்பிரிக்க மேம்பாட்டு வங்கி (African Development Bank-ADB), ஆசிய உள்கட்டமைப்பு மேம்பாட்டு வங்கி (Asian Infrastructure Investment Bank -AIIB) புதிய மேம்பாட்டு வங்கி (New Development Bank -NDB) போன்றவற்றில் உறுப்பினராக உள்ளது.
- ❖ இதன் மூலம் இந்தியாவின் முதலீட்டு வாய்ப்புகளுக்கு ஊக்கம் கிடைப்பதோடு, இந்தியர்கள் ஐரோப்பிய மறுகட்டமைப்பு மற்றும் மேம்பாட்டு வங்கியில் பணிபுரியவும் வாய்ப்புகள் உண்டாகும்.

*EBRD*

- ❖ EBRD ஓர் சர்வதேச நிதியியல் நிறுவனமாகும்.
- ❖ இது 1991ல் தோற்றுவிக்கப்பட்டது.
- ❖ இதன் தலைமையகம் – இலண்டன்
- ❖ 65 நாடுகளாலும், இரு ஐரோப்பிய யூனியனின் நிறுவனங்களாலும் இவ்வங்கி நடத்தப்படுகிறது.
- ❖ இவ்வங்கியில் அமெரிக்க பெரும் பங்குதாரராக உள்ளது.
- ❖ EBRD-ல் ஐரோப்பிய நாடுகளைத் தவிர பிற கண்டத்தைச் சார்ந்த நாடுகளும் உறுப்பினராக உள்ளன.அவையாவன

  வட அமெரிக்கா — கனடா, அமெரிக்கா
  ஆப்பிரிக்கா — மொராக்கோ
  ஆசியா — ஜப்பான், சீனா, தென் கொரியா, ஆஸ்திரேலியா
- ❖ உறுப்பு நாடுகளில் செயல்படும் தனியார் துறைகளை மேம்படுத்துவதே EBRD வங்கியின் முக்கிய செயல்பாடாகும்.
- ❖ EBRD வங்கியில் உறுப்பினராவதற்கு குறைந்தபட்சம் ஆரம்பகட்ட முதலீடாக ஒரு மில்லியன் யூரோக்களை முதலீடு செய்ய வேண்டும்.
- ❖ EBRD வங்கியும் ஐரோப்பிய முதலீட்டு வங்கியும் (European Investment Bank) ஒன்றல்ல. வெவ்வேறானவை.
- ❖ இது முழுவதும் ஐரோப்பிய யூனியன் உறுப்பினர்களால் ஐரோப்பிய யூனியனின் கொள்கைகளுக்கு ஆதரவு அளிப்பதற்காக நடத்தப்படுகிறது.

## IMMSAREX - 2017

- ❖ சர்வதேச பலதரப்பு கடல் ஆராய்ச்சி மற்றும் மீட்பு பயிற்சி – 2017 (The International Multilateral Maritime Search and Rescue Exercise 2017-IMMSAREX) ஆனது வங்கதேசத்தின் காக்ஸ் பஜார் பகுதியில் நடத்தப்பட்டது.

- இந்தியப் பெருங்கடல் கடற்படை ஆய்வரங்கத்தினுடைய (IONS – Indian Ocean Naval Symposium) மேற்பார்வையின் கீழ் நடைபெறும் இந்த பயிற்சியை வங்கதேசப் பிரதமர் தொடங்கி வைத்தார்.
- இந்திய கடற்படை கப்பல்களான INS ரன்வீர், INS சஹ்யாத்ரி, INS கரியால் மற்றும் INS சுகன்யா போன்றவற்றுடன் இணைந்து P-81 கடலோர ரோந்து விமானமும் இந்தப் பயிற்சியில் ஈடுபட்டது.
- இந்தியாவின் சார்பாக இந்திய கடற்படை தளபதி சுனில் லம்பா இந்த பயிற்சியில் கலந்து கொண்டார்.

*இந்திய பெருங்கடல் கடற்படை ஆய்வரங்கு – IONS*

- இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் நிலவுகின்ற கடற்சார் பிரச்சனைகளை விவாதிப்பதற்கு திறந்த மற்றும் உள்ளடக்க மன்றத்தை உருவாக்கி இந்தியப் பெருங்கடலின் கரைகளில் அமைந்துள்ள நாடுகளின் (littoral states of the Indian Ocean Region IOR) கடற்படைகளுக்கிடையே கடற்சார் ஒத்துழைப்பை அதிகரிக்க உருவாக்கப்பட்ட தன்னார்வத் தொடக்கமே இம்மன்றமாகும்.
- இந்தியப் பெருங்கடல் கடற்படை ஆய்வரங்கானது 2008-ல் இந்திய கடற்படையால் உருவாக்கப்பட்டது.
- தற்போது 23 உறுப்பு நாடுகளையும், பார்வையாளராக 9 நாடுகளையும் கொண்ட வலுவான அமைப்பாக உள்ளது.
- IONS-ன் நடப்பு தலைவராக வங்கதேசம் உள்ளது. மேலும் வங்கதேசம் IONS சாசனத்தின் கீழ் IONS-ன் IMMSAREX எனும் இந்த முதல் செயல்பாட்டு பயிற்சியை நடத்துகின்றது.

## உலக சுகாதார நிறுவன வழிகாட்டுதல்கள்

- பாலியல் துன்புறுத்தல்களால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் இளையோர்களுக்கான சிகிச்சை தொடர்பான மருத்துவ வழிகாட்டுதல்களை உலக சுகாதார நிறுவனம் முதல் முறையாக வகுத்துள்ளது.
- குழந்தைகள் உரிமைகளுக்கான ஐ.நா.வின் உடன்படிக்கை மற்றும் பிற மனித உரிமை சாசனங்களை அடிப்படையாகக் கொண்டு, பாலியல் துன்புறுத்தலால் பாதிக்கப்பட்ட அல்லது பாதிக்கப்பட்டிருக்கக்க கூடிய குழந்தைகள் மற்றும் இளையோர்களுக்கு சிகிச்சை அளிக்கும் போது WHO-வின் இந்த மருத்துவ வழிகாட்டல்களை பின்பற்ற வேண்டும்.
- பாலியல் துன்புறுத்தலுக்குள்ளானவர்களின் பாதுகாப்பு, அவர்களுடைய விருப்பம், பாதிப்புற்ற குழந்தை மற்றும் இளையோர்களின் சுய அதிகாரம் போன்றவற்றிற்கு முக்கியத்துவம் அளிப்பதன் மூலம் பாலியல் துன்புறுத்தல்களால் பாதிப்படைந்து உயிர்பிழைத்தவர்களுக்கு தரமான சிகிச்சை அளிப்பதில் உள்ள இடைவெளியைக் குறைக்க இந்த புதிய வழிகாட்டுதல்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- சிகிச்சையின் போது அல்லது பிரச்சனைகள் கண்டறியும் பரிசோதனையின் போது அவர்கள் பாலியல் துன்புறுத்துதலுக்கு உள்ளானதனை கண்டுபிடிக்கும் மருத்துவ சேவகர்களுக்கும் அல்லது பாலியல் துன்புறுத்துதலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நேரடியாக சிசிச்சை அளிக்கும் பொது நல மருத்துவர்கள், மகப்பேறு மருத்துவர்கள், குழந்தை நல மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் போன்ற முன்நிலை மருத்துவ சேவகர்களுக்கும் அவர்கள் சிகிச்சை அளிக்கும்போது பின்பற்ற வேண்டிய மருத்துவப் பரிந்துரைகளை இந்த வழிகாட்டுதல்கள் வழங்குகின்றது.

*உலக சுகாதார நிறுவனம்*

- சர்வதேச அளவில் பொது ஆரோக்கிய நிலையை உறுதிப்படுத்தி ஒருங்கிணைக்கும் ஐ.நா.அவையின் சிறப்பு நிறுவனமே உலக சுகாதார நிறுவனமாகும்.

- ❖ இது 1946 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது.
- ❖ இதன் தலைமையகம் – ஜெனிவா.

## இயலாமை உடைய நபர்களுக்கான ஆசிய பசுபிக் பத்தாண்டின் சந்திப்பு

- ❖ இயலாமை உடைய நபர்களுக்கான ஆசிய பசுபிக் பத்தாண்டின் [Asia and Pacific Decade for Persons with Disabilities -(2013-2022)] அரசுகளுக்கிடையேயான இடைக்கால மதிப்பீட்டு சந்திப்பு சீனாவின் பெய்ஜிங்-ல் நடைபெற்றது.
- ❖ இயலாமை உடையவர்களின் சமூக உள்ளடக்குதலிலும், அவர்களுக்கு அதிகாரமளித்தலிலும் உள்ள சவால்கள் மற்றும் இடைவெளிகளை களைவதற்காக ஆசிய பசிபிக் பிராந்தியத்தின் பல்வேறு நாடுகள் இந்த சந்திப்பில் பங்கெடுத்து இதற்கான பிரகடனத்தை இறுதி செய்தன.
- ❖ இந்த மாநாட்டின் முக்கிய குறிக்கோள்கள்
  - ✓ ஆசிய-பசுபிக் பிராந்தியத்தினில் இயலாமையுடையவர்களுக்கான “சரியான விஷயங்களை உண்மைப்படுத்துத்தல்” (to make the right real) எனும் Incheon உத்திகளின் மீதான உறுப்பு நாடுகளின் செயல் முன்னேற்றங்களை ஆசிய-பசுபிக் பத்தாண்டின் இடைக்காலமான 2017 –ல் ஆய்வு செய்தல்.
  - ✓ Incheon உத்திகள் மற்றும் 2030-ன் நீடித்த வளர்ச்சி இலக்குகள் போன்றவற்றை கருத்தில் கொண்டு இயலாமை உடையவர்களை உள்ளடக்கிய சமுதாயத்தை இப்பிராந்தியத்தில் கட்டமைக்கத் தேவையான எதிர்கால செயற்கொள்கைகளை விவாதித்தல்.
- ❖ சீனாவின் இயலாமை நபர்களுக்கான கூட்டமைப்போடு (China Disabled Persons Federation-CDPF) இணைந்து ஆசிய-பசிபிக் பிராந்தியத்திற்கான ஐ.நா. அவையின் பொருளாதார மற்றும் சமுக அமைப்பு (United Nations Economic and Social Commission for Asia and the Pacific) இந்த மாநாட்டை நடத்தியது.
- ❖ Incheon உத்திகளானது, பிராந்திய அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட இயலாமை உடையவர்களை உள்ளடக்கிய வளர்ச்சி இலக்குகளின் முதல் தொகுப்பை உலகிற்கும், ஆசியா மற்றும் பசுபிக் பிராந்தியத்திற்கும் வழங்குகிறது.
- ❖ ஆசிய-பசுபிக் பிராந்தியத்தில் உள்ள 650 மில்லியன் இயலாமையுடைய மக்களுள் பெரும்பாலானோர் வறுமையில் வாழ்கின்ற நிலையில், அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும், அவர்களுடைய உரிமைகளை பூர்த்தி செய்வதற்கும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை கண்காணிக்கத் தேவையானவற்றை Incheon உத்திகள் ஆசிய பசிபிக் நாடுகளுக்கு வழங்கி அவற்றிற்கு உதவும்.
- ❖ 2022 –ல் முடிவடைய உள்ள இந்த ஆசிய பசிபிக் பத்தாண்டின் ஒவ்வொரு மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறையும் உறுப்பு நாடுகளின் Incheon உத்திகளின் அமலாக்கத்தில் உள்ள முன்னேற்றங்களைப் பற்றி ஓர் அறிக்கையை கட்டாயம் UNESCAP-ன் செயலகம் ஐ.நா அமைப்பில் சமர்ப்பிக்க வேண்டும்.

# பொருளாதாரச் செய்திகள்

## சமாதான்

- மத்திய சிறு,குறு,நடுத்தரத் தொழிற்துறை அமைச்சகமானது MSME சமாதான் எனும் தாமதிக்கப்பட்ட கட்டண செலுத்து இணையவாயிலை தொடங்கியுள்ளது.
- மத்திய அரசாங்கம் மத்திய அமைச்சரவை துறைகள், மாநில அரசுகள் மற்றும் மத்திய பொதுத் துறை நிறுவனங்கள் போன்றவற்றினுடனான தங்களின் தாமதிக்கப்பட்ட கட்டண செலுத்துதல் தொடர்புடைய விவகாரங்களை நேரடியாக பதிவு செய்ய நாடு முழுவதும் உள்ள சிறு குறு தொழில் முனைவோர்களுக்கு அதிகாரமளிக்கும் வகையில் இந்த இணைவாயில் தொடங்கப்பட்டுள்ளது.
- இந்த இணையவாயிலானது மத்திய அமைச்சரகங்கள், மாநில அரசுகள், மத்திய பொதுத்துறை நிறுவனங்கள் போன்றவற்றுக்கு சிறு, குறு தொழிற்நிறுவனங்கள் அளிக்க வேண்டிய நிலுவை கட்டணங்களைப் பற்றிய தகவல்களை அளிக்கும்.
- சிறு, குறு நடுத்தர தொழிற்துறை மேம்பாடு சட்டம்- 2006 ஆனது சிறு, குறு நிறுவனங்களுக்கான தாமதிக்கப்பட்ட கட்டணங்களோடு தொடர்புடைய கூறுகளைக் கொண்டுள்ளது.

## அஸ்ஸாமிற்கான இந்தியா – உலக வங்கி கடன் ஒப்பந்தம்


- அஸ்ஸாம் வேளாண் வர்த்தகம் மற்றும் கிராமப்புற மாற்றம் எனும் திட்டத்திற்காக இந்திய அரசானது உலக வங்கியிடம் 200 டாலர்கள் கடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- அஸ்ஸாமில் உள்ள 16 மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தின் கீழ் பெண்கள் நடத்தும் தொழிற்நிறுவனங்கள் மீதும், உழவர் உற்பத்தியாளர் கழகத்தின் முடிவெடுப்புகளில் அத்தகு பெண் தொழிற் நிறுவனங்களின் பங்களிப்பின் மீதும் முக்கிய கவனம் செலுத்தப்படும்.
- இத்திட்டமானது வேளாண் வணிக முதலீடுகளை எளிதாக்குவதற்காக அஸ்ஸாம் மாநில அரசிற்கு ஆதரவளிக்கும்.
- வேளாண் உற்பத்தியையும், சந்தை அணுகலையும் அதிகப்படுத்தும்.
- மாநிலத்தில் அடிக்கடி நிகழும் வெள்ளம் மற்றும் வறட்சிக்கு நெகிழ்வுடைய பயிர்களை சிறிய பண்ணை உரிமையாளர்கள் உற்பத்தி செய்ய வழி வகுக்கும்.
- இது அஸ்ஸாம் மாநிலத்தின் தொலைநோக்கான வேளாண்மையை அடிப்படையாக கொண்ட ஊரக மாற்றத்தை முழுமைப்படுத்தும்.

### *IBRD (International Bank for Reconstruction and Development)-* ***பன்னாட்டு புனரமைப்பு மற்றும் மேம்பாட்டு வங்கி***

- பன்னாட்டு புனரமைப்பு மற்றும் மேம்பாட்டு வங்கியானது நடுத்தர வருமானமுடைய வளரும் நாடுகளுக்கு கடனளிக்கும் ஓர் சர்வதேச நிதியியல் நிறுவனமாகும்.
- இது உலக வங்கி குழுமத்தினில் உள்ளடங்கியுள்ள ஐந்து நிறுவனங்களில் முதன்மையான முதல் நிறுவனமாகும்.
- இரண்டாம் உலகப் போரால் பாழடைந்த ஐரோப்பிய நாடுகளின் புனரமைப்புக்கு நிதி வழங்கும் நோக்கோடு 1944-ஆம் ஆண்டு IBRD உருவாக்கப்பட்டது.

## எளிதாக தொழிற் புரிவதற்கான குறியீடு 2018

- உலக வங்கியால் வெளியிடப்படும் எளிதாக தொழில்புரிவதற்கான குறியீட்டின் 2018 ஆண்டிற்கான அறிக்கையின் படி, 190 நாடுகளின் பட்டியலில் இந்தியா முதன் முறையாக 100-வது இடத்தை பிடித்துள்ளது.
- சிறு முதலீட்டாளர்கள் பாதுகாப்பு, மின்சாரம், கடன் கிடைத்தல் உள்ளிட்ட பத்து காரணங்களை அடிப்படையாகக் கொண்டு இந்தக் குறியீடு மதிப்பிடப்படுகிறது.
- இந்தியா கடந்த ஆண்டை விட இந்த ஆண்டிற்கான எளிதான தொழிற் புரிதல் குறியீட்டில் 30 இடங்கள் முன்னேறியுள்ளது.
- எளிதாக தொழிற்புரிதற்கான குறியீடானது, ஒரு வணிகத்தின் ஆண்டு சுழற்சியில் உள்ளடக்கப் பெறும் 10 காரணிகளை அடிப்படையாகக் கொண்டு 190 நாடுகளின் தொழிற் சூழலை ஆராய்ந்து உலக வங்கியால் ஆண்டுதோறும் வெளியிடப்படுகிறது.




'Year' mentioned in this graphic is the same as the release year of the report and measures corresponding June-May period. For e.g. Year 2017 is report released in 2017 and measures period of June 2016-May 2017. However, World Bank nomenclature would call this Doing Business 2018 report & likewise for previous years.

- *Source: PMO India*

- இந்த ஆண்டிற்கான எளிதாக தொழில் புரியும் குறியீட்டு அறிக்கையின் கீழ், மேம்பட்ட இடத்தைப் பிடித்த நாடுகளுள், பிரிக்ஸ் மற்றும் தெற்காசிய பிராந்தியத்தின் ஒரே நாடு இந்தியாவாகும்.

## பரந்த பெருநிறுவன கடனாளிகளுக்கு தனிப்பட்ட குறியீடு-ரிசர்வ் வங்கி கட்டாயம்

- இந்திய ரிசர்வ் வங்கி 5 கோடி மற்றும் அதற்கு மேல் கடன் பெறும் அனைத்து பெருநிறுவன கடனாளிகளும் கட்டாயமாக 20 இலக்க சட்டப்பூர்வமான நிறுவன அடையாளத்தைப் (LEI-Legal Entity Identifiers) பெற வேண்டும் என வலியுறுத்தியுள்ளது.
- வங்கித் துறையில் வாராக் கடன்கள் மிகுதியாக அதிகரித்து வரும் வேளையில், இந்த நடவடிக்கை கடன் மேலாண்மையை சீர்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டதாகும்.
- உலகம் முழுவதும் உள்ள நிதிப் பரிவர்த்தனைகளில் சம்பந்தப்பட்ட நபர்களை அடையாளம் காண்பதற்காக ஏற்படுத்தப்பட்ட 20 இலக்க தனிப்பட்ட குறியீடே இந்த அடையாள அமைப்பு ஆகும்.

- இந்திய தீர்வுகாண் நிறுவனத்திற்கு (Clearing Corporation Of India) முழுமையாகச் சொந்தமான துணை நிறுவனமான இந்திய சட்டப்பூர்வ நிறுவன அடையாள அமைப்பு நிறுவனம் (Legal Entity Identifier India Limited) இந்தியாவில் இயங்கிவரும், உலகளாவிய, சட்டத்திற்கு இணக்கமாக செயல்பட்டுவரும் சட்டப்பூர்வ நிறுவன அடையாளங்காட்டிகளை வழங்குவதற்கான உள்ளூர் செயல் நிறுவனம் (Local Operating Unit) போல் பணியாற்றுகிறது.
- சட்டப் பூர்வமான நிறுவன அடையாளங்காட்டி அமைப்பு (LEI-Legal Entity Identifiers) ஜி20 என்ற அமைப்பில் ஏற்படுத்தப்பட்டது.
- இதன் மூலம் பல்வேறு தேசிய எல்லைகளில் நிதிப் பரிவர்த்தனைகளை மேற்கொண்டு வரும் நிறுவனங்கள் முழுமையாக கண்காணிக்கப்படும்.
- இது நிதியியல் நிறுவனங்கள் தனித்துவம் கொண்ட இத்தகு நிறுவனங்களை அடையாளம் காண்பதில் தவறியதால் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- முதல் சட்டப் பூர்வ நிறுவன அடையாளங் காட்டி 2012 டிசம்பர் மாதத்தில் அளிக்கப்பட்டது.

## தங்குமிடத் திட்டத்தின் நீட்டிப்பு

- சாகர் மாலா பெருந்திட்டத்தின் கீழ் உள்ள கடலோரத் தங்குமிடத் திட்டத்தினை மத்திய கப்பல் போக்குவரத்துறை அமைச்சகமானது மேலும் மூன்று வருடங்களுக்கு நீடித்துள்ளது.
- இந்த கடலோரத் தங்குமிடத் திட்டத்தின் கீழ் பல்வேறு மேம்பாட்டு திட்டங்கள் 8 மாநிலங்களில் மேற்கொள்ளப்படும். இதன்படி கோவா, ஆந்திரப் பிரதேசம், மகாராஷ்டிரம் போன்ற மாநிலங்களில் அதிக எண்ணிக்கையிலான உள்கட்டமைப்பு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### *கடலோரத் தங்குமிடத் திட்டம் (Coastal Berth Scheme)*

- தேசிய நீர்வழிப் பாதைகளுக்கும் , பயணிகள் மற்றும் சரக்குகளின் கடல்வழி போக்குவரத்திற்கும் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை உண்டாக்க துறைமுகங்கள் அல்லது மாநில அரசாங்கங்களுக்கு நிதி ஆதரவுகளை வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.
- இத்திட்டங்களுக்கான மொத்த செலவில் 50% மத்திய அரசின் நிதி உதவியாக அளிக்கப்படும்.
- மீதச் செலவுத் தொகை சம்பந்தப்பட்ட துறைமுகங்கள், மாநில அரசாங்கங்களின் நிதி மூலங்களிலிருந்து பெறப்படும்.
- கடலோர கப்பல் போக்குவரத்தை மேம்படுத்துவதும், இந்தியாவில் உள்நாட்டு சரக்கு போக்குவரத்தில் துறைமுகங்களின் பங்கினை அதிகரிப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

### *சாகர் மாலா*

- இந்தியாவின் கடலோரங்களில் அமைந்துள்ள அனைத்து துறைமுகங்களையும் மேம்படுத்துவதே சாகர் மாலா திட்டத்தின் நோக்கமாகும்.
- இந்தியாவின் 7500 கி.மீ. நீளமுள்ள கடலோரப் பகுதிகளில், துறைமுகங்கள் மூலமான வளர்ச்சியை ஊக்குவிப்பதே இந்த திட்டத்தின் நோக்கமாகும்.
- துறைமுகங்களை நவீனப்படுத்துதல், திறம் வாய்ந்த சரக்கு வெளியேற்ற அமைப்பு, கடலோரப் பொருளாதார மேம்பாடு ஆகிய மூன்றும் இந்தப் பெரும் சாகர் மாலாத் திட்டத்தின் முக்கிய மூன்று கூறுகளாகும்.
- மத்திய கப்பல் போக்குவரத்து அமைச்சகம் இத்திட்டத்தின் முதன்மை பொறுப்புடைய அமைச்சகம் ஆகும்.

## செபி கண்காணிப்பின் கீழ் ஆரம்ப நாணய விடுப்புகள்

- ❖ மூலதனச் சந்தை ஒழுங்குப்படுத்தியான செபி (SEBI – Secruirites and enchange Board of India) ஆரம்ப நாணய விடுப்புகளை (ICO – Initial Coin offering) தற்போதுள்ள தன்னுடைய சட்ட கட்டமைப்புக்குள் கொண்டு வரத் திட்டமிட்டுள்ளது.
- ❖ தற்போது கிரிப்டோ கரன்சிகளின் பிரபலம் உயர்ந்து வரும் நிலையில், ஆரம்ப நாணய விடுப்புகளைப் பயன்படுத்தி நிதி திரட்ட முனையும் நிறுவனங்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது.
- ❖ மேலும் மத்திய வங்கியானது, இந்தப் பொருளாதாரக் கருவிகளை (instruments) பாதுகாப்பு பத்திரங்களாக (securities) நோக்குவதால், SEBI தான் ஒழுங்குப்படுத்தும் அமைப்பாக இருக்க முடியும் என்று எண்ணுகிறது.
- ❖ ஆனால் பத்திர ஒப்பந்தங்கள் ஒழுங்குமுறைச் சட்டம் 1956-ன் [ Securities Contracts (Regulation) Act, 1956] கீழ் பிட்காயின்கள் என்பது 'பத்திரங்களாகவும்' (Securities) இல்லை 'பொருட் பங்கும்' (Commodity Derivatives) இல்லை.

### *சங்கேத இணையப் பணம்*

- ❖ சங்கேத இணையப் பணம் அல்லது மெய்நிகர் பணமானது ஒரு வகையான ஒழுங்குமுறைப் படுத்தப்படாத டிஜிட்டல் பணமாகும்.
- ❖ பிட் காயின்கள் (Bit Coin) ஓர் உலகளாவிய சங்கேத இணையப் பணம் மற்றும் டிஜிட்டல் கட்டணப் பரிமாற்ற அமைப்பாகும். இவற்றைக் கட்டுப்படுத்தவும் ஒழுங்குமுறைப்படுத்தவும் எந்த மைய நிர்வாக அமைப்பும், மத்திய ஆணையமும் இல்லாததால் இவை உலகின் முதல் பரவலாக்கப்பட்ட டிஜிட்டல் பணமாகும். இவற்றினுடைய பரிவார்த்தனைகள் இணைய தொலைத் தொடர்பு பிணையங்களின் முனைய கணுக்களால் (Network Nodes) சரிபார்க்கப்பட்டு, தொடர்சங்கிலி (Block Chain) எனும் பொது விநியோகிப்பு பேரேட்டில் (Public distributed ledger) பதிவு செய்யப்படும். இவை ஓர் முக்கியமான Peer-to- Peer system என்ற அமைப்பாகும். மேலும் இவற்றின் பரிவர்த்தனை பயனாளர்களுக்கு இடையே எத்தகைய இடைத்தரகு அமைப்பும் இன்றி நேரடியாக மேற்கொள்ளப்படும்.

### *ஆரம்ப நாணயம் விடுப்புகள்*

- ❖ ஆரம்ப நாணய விடுப்புகள் (ICO-Initial Coin Offering) என்பது, ஆரம்ப பொது விடுப்புகளைப் (IPO) போன்றே டிஜிட்டல் வில்லை ஆகும். இதன் பின்பு சங்கேத இணையப் பணமாக (Crypto Currencies) மாற்றிக் கொள்ளலாம். இவை பெரும்பாலும் மெய்நிகர் நாணயங்களான பிட்காயின் மற்றும் யூத்தரம், பிளாக் செயின் போன்ற தொழில்நுட்பங்களைக் கையாளும் நிறுவனங்கள் நிதி திரட்டப் பயன்படுத்தப்படுகின்றன.
- ❖ இந்த ICO ஆனது SEBI ஆல் ஒழுங்குமுறைப்படுத்தப்படும் IPO எனப்படும் ஆரம்ப பொது விடுப்பு போல் அல்ல. ஏனெனில் ICO வை கட்டுப்படுத்த இந்தியாவில் எந்த ஒழுங்கு முறைப்படுத்தும் அமைப்பும் இல்லை.

## ISA – EBRD பிரகடனம்

- ❖ சர்வதேச அளவில் சூரிய மின்சக்தி பயன்பாட்டை ஊக்குவிப்பதற்காக சர்வதேச சூரிய ஆற்றல் கூட்டணியும் (ISA – International Solar Alliance) மறுகட்டமைப்பு மற்றும் மேம்பாட்டிற்கான ஐரோப்பிய வங்கியும் (EBRD – European Bank for Reconstruction and Development) ஓர் கூட்டு இணைவு நிதியியல் பிரகடனத்தில் கையெழுத்திட்டுள்ளன.

- ISA மற்றும் EBRD-க்கு இடையேயான இக்கூட்டிணைவானது ஆப்பிரிக்கா மற்றும் பிற நாடுகளில் மேற்கொள்ளப்படும் சூரிய ஆற்றல் திட்டங்களுக்கு நிதியியல் உதவிகளை மேற்கொள்ளும்.
- போட்டித்திறனும், சிறப்பான நிர்வகிப்பும், பசுமையும், அதிக உள்ளடக்கமும், நெகிழ்வுத்தன்மையும், அதிக ஒருங்கிணைப்பும் உடையவையாக உலக நாடுகளை மாற்றுவதை நோக்கமாகக் கொண்டு பல்வேறு தேர்வுக் காரணித் தொகுப்பின் அடிப்படையில் 3 கண்டங்களில் உள்ள 38 வளரும் பொருளாதார நாடுகளில் சூரிய ஆற்றல் திட்டங்களுக்கு EBRD முதலீடு செய்கின்றது.

## வணிக நம்பிக்கைக்கான குறியீட்டு தர வரிசை – இந்தியா ஏழாவது இடத்திற்கு சரிவு

- வணிக நம்பிக்கைக்கான குறியீட்டில் செப்டம்பர் மாதத்தோடு முடிவடைந்த காலாண்டில் இந்தியா, இதற்கு முந்தைய காலாண்டின் 2வது இடத்திலிருந்து தற்சமயம் 7வது இடத்திற்கு சரிந்துள்ளது.
- இந்த சரிவு பொருளாதாரத்தில் சுணக்கம் இருப்பதற்கான அறிகுறிகளை தெளிவாக காட்டுகிறது.
- கிராண்ட் கார்டானின் சர்வதேச வணிக அறிக்கையின் அடிப்படையின் படி இந்தோனசியா முதலிடத்திலும், பின்லாந்து, நெதர்லாந்து, பிலிப்பைன்ஸ், ஆஸ்திரியா மற்றும் நைஜீரியா ஆகிய நாடுகள் முறையே 2வது, 3வது, 4வது, 5வது மற்றும் 6வது இடங்களையும் வகிக்கின்றன.

## அந்நிய முதலீடு

- இந்தியாவில் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் எளிதாக முதலீடு செய்வதற்காக மத்திய ரிசர்வ் வங்கியானது அந்நிய செலாவணி மேலாண்மை (இந்தியாவிற்கு வெளியே வாழும் நபர்களினால் மேற்கொள்ளப்படும் பாதுகாப்பு பத்திரங்கள் வழங்கல் அல்லது பரிமாற்றம்) ஒழுங்குமுறைகளை எளிமைப்படுத்தியுள்ளது.
- 93 திருத்தங்களை ஒரே அறிவிப்பின் கீழ் கொண்டுவந்து இந்த எளிமைப்படுத்துதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- இந்த புதிய ஒற்றை அறிக்கையானது அந்நிய முதலீடு மீதான இரு ஒழுங்குறைகளைக் கொண்டது.
- அவற்றில் ஒன்றாவான - FEMA 20, FEMA 24
  - ✓ FEMA 20 என்பது இந்திய கம்பெனிகள் அல்லது கூட்டு நிறுவனங்கள், அல்லது வரையறுக்கப்பட்ட பொறுப்புடைய கூட்டு நிறுவனங்களால் (limited liability partnership) மேற்கொள்ளப்படும் முதலீடுகள்.
  - ✓ FEMA 24 என்பது கூட்டு நிறுவனங்களில் மேற்கொள்ளப்படும் முதலீடு.
- தாமதிக்கப்பட்ட கட்டண சமர்ப்பிப்பு அறிமுகம் இத்திருத்தங்களின் மற்றொரு முக்கியமான மாற்றம் ஆகும். இதன் மூலம் அறிவிக்கப்படாத முதலீடுகளால் உண்டாகும் சட்ட மீறுதல்களை கட்டணம் செலுத்தி முதலீட்டாளர்களால் ஒழுங்குமுறைப்படுத்த இயலும்.
- அந்நிய செலாவணி மேலாண்மை சட்டமானது 1999-ல் (FEMA Act – Foreign enchange Management Act 1999) இயற்றப்பட்டது. இதுவரை 93 முறை திருத்தப்பட்டுள்ளது.

## இந்தியா – கிர்கிஸ்தான் DTAA

- வருமானத்தின் மீதான வரிகளில் மேற்கொள்ளப்படும் வரி ஏய்ப்பை தடுக்கவும், இரட்டை வரி விதிப்பை தடுப்பதற்குமான இந்தியா மற்றும் கிர்கிஸ்தானுக்கு இடையே ஏற்கனவே உள்ள இரட்டை வரி விதிப்பு தவிர்ப்பு ஒப்பந்தத்தில் திருத்தங்களை மேற்கொள்ள நெறிமுறைகளுக்கு (protocol) மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- வரி ஏய்ப்பு, இரட்டை வரிவிதிப்பு தவிர்ப்பு குறித்த தகவல்களை இரு நாடுகளுக்கிடையே தேவைப்படும்போது பரிமாறிக் கொள்வதை கட்டாயமாக்கும் விதமாக DTAA-ன் விதி 26ல் பத்தி 4 மற்றும் பத்தி 6 சேர்க்கப்பட்டு திருத்தம் மேற்கொள்ளப்பட உள்ளது.

## பொருளாதார ஆலோசனைக் குழுவின் இரண்டாவது சந்திப்பு

- பிரதமருக்கான பொருளாதார ஆலோசனைக் குழுவின் (Economic Advisory Council to the PM) இரண்டாவது சந்திப்பு நடைபெற்றது. இது வேலை வாய்ப்புகளை உருவாக்கவும், உள்கட்டமைப்புகளுக்கு நிதியளிக்கவும் தெளிவான வழிமுறைகளை வழங்கியுள்ளது. அதே சமயம் சுகாதார வசதிகள், கல்வி மற்றும் திறன் மேம்பாட்டு முயற்சியில் அதிக வளங்களை முதலீடு செய்ய அறிவுறுத்தியுள்ளது.
- இந்த சந்திப்புக்கு நிதி ஆயோக்கின் உறுப்பினரான பிபேக் திப்ராய் தலைமை தாங்கினார்.
- இது 15வது நிதிக் குழுவின் கட்டமைப்புகளுக்கு வழிகாட்டும் விதமாக பரிந்துரைகளை அளித்துள்ளது. மேலும் பொருளாதார வளர்ச்சிக் குறியீடுகளையும், கடைக்கோடி இணைப்பிற்கான சமுதாய குறியீடுகளையும் ஒருங்கிணைந்து ஒரு புதிய பொருளாதார அளவீட்டை வடிவமைக்க இக்குழு முனைகிறது.

## பத்தாவது தெற்காசிய பொருளாதார மாநாடு – காத்மண்டு

- 10-வது தெற்காசிய பொருளாதார மாநாடு (SAES – South Asia Economic Summit) நேபாளத்தில் உள்ள காத்மண்டுவில் நடத்தப்பட்டது.
- 3 நாள் நடைபெறும் இம்மாநாட்டின் கருத்துரு "தெற்காசியாவில் நீடித்த மற்றும் உள்ளடக்க வளர்ச்சிக்காக பொருளாதார ஒருங்கிணைப்பை வலுப்படுத்துதல்".
- பிராந்திய ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்துழைப்பிற்கான காரணிகளை முன்னெடுக்கவும், தெற்காசிய நாடுகள் எதிர்கொள்ளும் பொருளாதார மற்றும் வளர்ச்சி சவால்கள் மற்றும் பிரச்சனைகளை ஆராயவும், விவாதிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்ட பிராந்திய மேடையே இந்த மாநாடாகும்.
- இந்த மாநாடு 2008-ல் தொடங்கப்பட்டது.

## உர்ஜித் படேல் – BIS ஆலோசனை மன்றம்

- சர்வதேச தீர்வுகளுக்கான வங்கியின் (Bank of International Settlement) நிதி நிலைத்தன்மைக்கான நிறுவனத்தின் ஆலோசனைக் குழுவிற்கு (Financial Stability Institute Advisory Board) ரிசர்வ் வங்கியின் ஆளுநர் உர்ஜித் படேல் நியமிக்கப்பட்டுள்ளார்.
- சர்வதேச தீர்வுகளுக்கான வங்கி ஒரு உலகளாவிய நிதி அமைப்பு ஆகும். இது உலகம் முழுவதும் உள்ள முதன்மையான மத்திய வங்கிகளின் உடைமையாகும். இதன் தலைமையகம் சுவிட்சர்லாந்தின் பேசல் நகரத்தில் அமைந்துள்ளது.

- இதன் பொதுமேலாளர் ஜெய்மே கேருவனா (Jaime Caruana) இந்த புதிய ஆலோசனைக் குழுவின் தலைவராவார்.
- இந்த வங்கியின் நிதி நிலைத்தன்மைக்கான நிறுவனம் உலகம் முழுவதும் நிதித் துறை அதிகாரிகளுக்கு அவர்களது நிதி அமைப்புகளை வலுப்படுத்துவதற்கு உதவும்.
- இந்த நிலைத்தன்மை நிறுவனம் சர்வதேச தீர்வுகளுக்கான வங்கி மற்றும் வங்கிகளின் மேற்பார்வைகளுக்கான பசேல் குழு ஆகியவற்றால் 1998ம் ஆண்டு உருவாக்கப்பட்டது.
- இது உலகம் முழுவதும் பல்வேறு துறைகளுக்கிடையே மேற்பார்வையிடுதலுக்கான தொடர்புகளையும் ஒத்துழைப்பையும் மேம்படுத்திட உதவும்.
- இந்த ஆலோசனைக் குழுவிற்கான உறுப்பினர்களுள் உர்ஜித் படேலோடு சேர்த்து, நியூயார்க் பெடரல் ரிசர்வ் வங்கியின் தலைவர் வில்லியம் டூட்லி, பிரேசில், தென்னாப்பிரிக்கா ஜப்பான் ஆகிய நாடுகளின் மத்திய வங்கி ஆளுநர்கள் மற்றும் உலகம் முழுவதுமுள்ள மூத்த வங்கியாளர்கள் ஆகியோர் உள்ளடங்குவர்.

## இந்தியாவின் முதல் பெரிய கடலோரப் பொருளாதார மண்டலம்

- இந்தியாவின் முதல் பெரிய கடலோரப் பொருளாதார மண்டலத்தை (CEZ – Coastal Economic Zone) மஹாராஷ்டிராவில் உள்ள ஜவகர்லால் நேரு துறைமுகத்தில் அமைக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த முதல் பெரிய வகையிலான CEZ ஆனது வட கொங்கன் பகுதியிலிருந்து மும்பை, தானே, புனே, நாசிக் மற்றும் ராஜ்கார் வரை அமைய உள்ளது.
- 2016-ல் மத்திய கேபினேட் அமைச்சரவையானது சாகர் மாலா திட்டத்தினுடைய தேசிய முன்னோக்குத் திட்டத்தின் (National Perspective Plan) கீழ் நாடு முழுவதும் 14 பெரிய CEZ மண்டலங்களை அமைக்க ஒப்புதல் வழங்கியது.

## SARTTAC வழிகாட்டு குழு சந்திப்பு - டெல்லி

- சர்வதேச பண நிதியத்தின் (International Monetary Fund-IMF) தெற்காசிய பிராந்திய பயிற்சி மற்றும் தொழிற்நுட்ப உதவி மையத்தின் ( South Asia Regional Training and Technical Assistance Centre- SARTTAC) வழிகாட்டுக் குழுவின்(Steering Committee) இடைக்கால சந்திப்பு புதுதில்லியில் நடைபெற்றது.
- இந்த குழுவானது இம்மையத்தின் 2018-நிதி ஆண்டிற்கான செயல்திட்டத்திற்கு ஒப்புதல் அளித்ததுடன், அரசு நிதி மற்றும் பொது கடன் புள்ளி விவரங்கள் போன்ற துறைகளில் இம்மையத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் புதிய பணிகளுக்கும் ஒப்புதல் அளித்துள்ளது.
- SARRTTAC அமைப்பானது 2017 பிப்ரவரியில் துவங்கப்பட்டது. இம்மையம் புது தில்லியில் அமைந்துள்ளது.
- இம்மையமானது அதன் தெற்காசிய உறுப்பு நாடுகளில் முழுவதும் ஒருங்கிணைந்த பயிற்சிகள் மற்றும் தொழிற்நுட்ப உதவிகளுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் IMF-ன் முதல் பிராந்திய திறன் மேம்பாட்டு மையமாகும்.
- இந்த மையமானது வங்க தேசம், இந்தியா, பூடான், மாலத்தீவுகள், நேபாளம், இலங்கை போன்ற நாடுகளுடன் இணைந்து செயல்படும்.
- இந்த மையத்தின் செயல்பாட்டிற்கான பட்ஜெட்டில், மூன்றில் இரு பங்கினை இந்த 6 உறுப்பு நாடுகளும், கூடுதல் நிதியை ஐரோப்பிய யூனியன், இங்கிலாந்து, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளும் வழங்கும்.

- தெற்காசியப் பிராந்தியத்தில் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காகவும், வறுமையை ஒழிப்பதற்காகவும், உறுப்பு நாடுகள் தங்களுடைய பொருளாதார கொள்கைகள் மற்றும் நிறுவனங்களை நவீனப்படுத்த இம்மையம் உதவும்.

## உலக பொருளாதார கண்ணோட்டம்


- உலக நாணய நிதியத்தால் [IMF – International Monetary Fund] 2017 ஆம் ஆண்டிற்கான உலக பொருளாதார கண்ணோட்ட அறிக்கை (World Economic Outlook Report ) வெளியிடப்பட்டுள்ளது.
- ஆண்டிற்கு இருமுறை (Biannually) வெளியிடப்படும் இந்த அறிக்கையானது 200 நாடுகளை அவற்றின் பொருள் வாங்குத்திறன் சமநிலையினை (PPP– Purchasing Power Parity) ஆதாரமாகக் கொண்டு தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (Per Capita GDP) அடிப்படையில் தரவரிசைப்படுத்துகின்றது.
- தற்போது வெளியிடப்பட்டுள்ள இந்த அறிக்கையின்படி, இந்தியா தனிநபர் உள்நாட்டு உற்பத்தியின் அடிப்படையில் ஒரு இடம் முன்னேறி 126-வது இடத்தை அடைந்துள்ளது.
- இருப்பினும் இவ்வறிக்கைப்படி, பிரிக்ஸ் நாடுகளுள் இந்தியா கடைசி இடத்தில் உள்ளது.
- IMF தரவுகளின் அடிப்படையில் கத்தார் தொடர்ந்து உலக பணக்கார நாடாக திகழ்ந்து வருகின்றது.

*PPP – Purchasing Power Parity*


- ஒரு நாட்டின் பணமானது மற்றொரு நாட்டில் மாற்றப்படத் தேவையான நாணய மாற்ற விகிதமே பொருள் வாங்குத்திறன் சமநிலை (PPP) எனப்படும்.
- இது உலகம் முழுவதும் பல்வேறு நாடுகளின் வருமான அளவை பிற நாடுகளுடன் ஒப்பிட பயன்படும்.
- நாணய மாற்று விகிதத்தை (Exchange Rate) கணக்கில் கொள்ளும் போது, ஒரே பொருளின் நுகர்வின் மீதான செலவு இரு நாடுகளிலும் ஒன்றாக இருப்பதை உறுதி செய்ய இவை உதவும்.

## உலக திறன் தரவரிசை 2017

- சுவிட்சர்லாந்தை மையமாகக் கொண்ட மேலாண்மை வளர்ச்சி நிறுவனம் உலக திறன் தரவரிசையை வெளியிட்டுள்ளது.
- 2017-ம் ஆண்டிற்கான இந்த திறன் தரவரிசை பட்டியலில் 63 நாடுகளுள் இந்தியா 51-வது இடத்தைப் பிடித்துள்ளது.
- இந்த தரவரிசை நாடுகளின் செயல்திறனை மூன்று பிரிவுகளின் மீது வகைப்படுத்துகிறது.
    1. முதலீடு மற்றும் வளர்ச்சி
    2. கவர்கின்ற தன்மை
    3. தயார்நிலை
- இந்த மூன்று பிரிவுகளும் நாடுகள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதை சில பரந்துபட்ட விஷயங்களில் வைத்து மதிப்பிடுகின்றன.
- இந்த விஷயங்களுள் கல்வி, தொழிற்பயிற்சி, பணியிடப் பயிற்சி, மொழித்திறன், வாழ்க்கைச் செலவு, வாழ்க்கைத் தரம், சம்பள விகிதம் மற்றும் வரி விகிதங்கள் ஆகியன அடங்கும்.
- ஆசியாவிற்கான சிறந்த இடத்திற்கு நடந்த கடுமையான போட்டியில் ஹாங்காங் சிங்கப்பூரை பின்னுக்குத்தள்ளி முதலிடம் பிடித்தது.




- கண்டங்களைப் பொறுத்த சிறந்த திறன்வாய்ந்த பொருளாதார நாடுகளில் மொத்தமுள்ள 15 இடத்திற்கு ஐரோப்பாவின் 11 நாடுகள் இடம்பெற்று 2017-ம் ஆண்டிற்கான தரவரிசையில் ஆதிக்கம் செலுத்துகின்றன
- இந்த வருடப்பட்டியலில் சுவிட்சர்லாந்து, டென்மார்க், பெல்ஜியம் ஆகிய நாடுகள் சிறந்த போட்டியாளர்களாக திகழ்கின்றன.




## 15வது நிதிக்குழு

- பிரதமர் தலைமையிலான மத்திய அமைச்சரவை 15வது நிதிக்குழுவை (Finance Commission) அமைக்க ஒப்புதல் வழங்கியுள்ளது.
- இந்த முறை புதிதாக அமைக்கப்பெறும் நிதிக் குழுவானது மத்திய மற்றும் மாநில அரசுகளின் வரி வருவாய் மூலங்களின் மேல் GSTஆல் ஏற்பட்ட தாக்கங்களையும் கணக்கில் கொள்ள உள்ளது.

### நிதிக்குழு

- நாட்டின் வரி வருவாய் மூலங்களை ஆராய்ந்து, அவ்வரிகளின் மூலம் வரும் வருவாயை மாநிலங்களுக்கிடையே பகிர்வதற்கு தேவையான வரைவுக் கொள்கை மற்றும் வழிமுறைகளை பரிந்துரை செய்யும் குழுவே நிதிக்குழுவாகும்.
- அரசியலமைப்பு விதி 280-ன் படி அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த இரண்டு ஆண்டுகளுக்குள் நிதிக்குழு அமைக்கப்பட வேண்டும். அவ்வாறே தொடரும் நிதிக்குழுவானது ஒவ்வொரு ஐந்தாண்டுகளுக்கும் ஒரு முறை புதிதாக அமைக்கப்படும்.
- அரசியலமைப்பு விதி 280 (1)-ன் கீழ் ஒவ்வொரு ஐந்தாண்டுகளுக்கும் ஒருமுறை நிதிக்குழுவை அமைப்பது கட்டாயமாகும்.
- நிதிக்குழுவானது ஓர் அரசியலமைப்பு மற்றும் பகுதி நிதி அமைப்பாகும் (Quasi – Judicial Body).
- நிதிக்குழு (இதர ஏற்பாடுகள்) சட்டம் 1951 ((Finance Commission – Miscellaneous Provision) Act 1951) ஆனது கூடுதலாக நிதிக்குழு உறுப்பினர்களின் தகுதி, நியமனம், தகுதி நீக்கம், பதவிக் காலம், அதிகாரம் போன்றவற்றை விளக்குகின்றன.
- ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கும் ஒரு முறை குடியரசுத் தலைவரால் நிதிக் குழு அமைக்கப்படுகின்றது.
- நிதிக்குழுவால் அளிக்கப்படும் பரிந்துரைகளானது ஆலோசனைத் தன்மை (Advisory) உடையனவே அன்றி மத்திய அரசின் மேல் பிணைப்பை (Binding) கொண்டதல்ல.
- வரிவருவாய்களை மத்திய, மாநில, உள்ளாட்சி அமைப்புகளிடையே பகிர்ந்தளிப்பதற்கு தேவையான கொள்கைகளை பரிந்துரைக்க இக்குழு 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை அமைக்கப்படுகிறது.
- 14-வது நிதிக்குழுவின் தலைவர் முன்னாள் ரிசர்வ் வங்கியின் கவர்னரான Y.V.ரெட்டி ஆவார்.
- இது 2013-ல் அமைக்கப்பட்டது. இதன் பரிந்துரைகள் 2020-ஆம் ஆண்டு முடிவுக்கு வர உள்ளன.
- 15வது நிதிக் குழுகளின் பரிந்துரைகள் 2020 முதல் 2025 வரை நடைமுறையில் இருக்கும்.
- 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பினுடைய தரவுகளின் பயன்பாட்டின் அடிப்படையில் மாநிலங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு இடையே நிதியை பகிர்ந்தளிக்க 14வது நிதிக்குழு பரிந்துரை செய்திருக்கிறது.
- இதுவரை 1971ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெப்பின் தரவுகளே 14வது நிதிக்குழு வரை பயன்படுத்தப்பட்டுள்ளது.

## தளவாடத் துறை- உள்கட்டமைப்பு அந்தஸ்து

- மத்திய நிதி அமைச்சகமானது தளவாடத் துறைக்கு உள்கட்டமைப்பு அந்தஸ்தை (Infrastructure status) வழங்கியுள்ளது.
- தளவாடத் துறையின் உள்கட்டமைப்பானது பின்வருபவற்றை உள்ளடக்கியது,
    - கிடங்கு வசதிகள் (Warehousing Facility)
    - குளிர்பதன சங்கிலி-தொடர் வசதிகள் (Cold Chain Facility).
    - உள்நாட்டு கொள்கலன் நிலையத்தை உள்ளடக்கிய பல்-மாதிரி தளவாட பூங்கா
- உள்கட்டமைப்பு அந்தஸ்திற்கான பரிந்துரை மத்திய வர்த்தகத்துறை அமைச்சகத்தால் அளிக்கப்பட்டது.
- மத்திய நிதி அமைச்சகம் இதற்கான உத்தரவை வெளியிட்டுள்ளது.

- உள்கட்டமைப்பு அந்தஸ்து வழங்கப்பட்டதால் தளவாடத் துறையில் உண்டாகும் தாக்கங்கள் பின்வருமாறு,
  - உற்பத்தி துறையை ஒப்பிடும் போது நீண்ட கால முதிர்வுடைய கடன்களை (Long term Maturity loan) பெற இயலும்.
  - கடன்கள் பெற விண்ணப்பித்தலின் போது சற்று அதிக சம பங்கு விகிதங்களை (equity ratio) பெற தகுதி பெறும்.
  - வெளிப்புற வணிக கடனுக்கு (External Commercial Borrowing) விண்ணப்பிக்கும் போது சில நன்மைகள் மற்றும் நெகிழ்வுத் தன்மைகளைப் பெறும்.
  - IDFC, IIFCL போன்ற சிறப்பு தனித்துறை கடன் வழங்கிகளிடம் மறு நிதியாக்கத்தை (Refinancing) செய்ய அனுமதிக்கப் பெறும்.
- மேலும் தளவாடப் போக்குவரத்து மற்றும் கிடங்குகளின் மூலதன செலவை குறைக்கவும், அவற்றின் செயற்தன்மையை அதிகரிக்கவும் இந்த அந்தஸ்து உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவற்றால் தளவாடங்களின் விலை குறையும்.
- 2017ஆம் ஆண்டிற்கான உலக வங்கியின் தளவாட செயல்திறன் குறியீட்டில் (Logistics performance Index) இந்தியாவின் தளவாட செயல்திறன் 54வது இடத்திலிருந்து 34வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.
- தளவாடத் துறையின் வளர்ச்சியானது நாட்டின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தேவைகளை ஊக்குவிக்கும். அதனால் வேலைவாய்ப்பு உருவாக்கமும், உற்பத்தித் துறையும் ஊக்கம் பெறும். இது நாட்டின் GDP-யை அதிகரிக்க கருவியாக அமையும்.

## புதிய வருமான வரி சட்டம்

- 1961-ன் வருமான வரிச்சட்டத்தினை மறு ஆய்வு செய்யவும், நாட்டின் நடப்பு பொருளாதார தேவைகளுக்கு இசைந்தமையும் வகையில் புதிய வருமான வரிச்சட்டத்திற்கான வரைவை (draft) உருவாக்கவும் புதிய சிறப்பு குழுவை ஒன்றை மத்திய நிதி அமைச்சகம் அமைத்துள்ளது.
- மத்திய நேரடி வரி விதிப்பு வாரிய (CBDT – Central Board of Direct Tax) உறுப்பினர் அரவிந்த் மோடி 6 பேருடைய இக் குழுவின் ஒருங்கிணைப்பாளராக (Convener) செயல்படுவார்.
- மத்திய அரசின் தலைமை பொருளாதார ஆலோசகரான அரவிந்த் சுப்ரமணியன் இக்குழுவின் நிரந்தரப் பிரதிநிதியாக (Permanent Special Invitee). நியமிக்கப்பட்டுள்ளார்.
- இந்தச் சிறப்புக் குழுவானது 6 மாத அவகாசத்திற்குள் அரசிடம் தனது வரைவு அறிக்கையை அளிக்க உள்ளது.
- பல்வேறு சர்வதேச நாடுகளில் பின்பற்றப்பட்டு வரும் வரி விதிப்பு முறைகளை ஆய்வு செய்தும், நாட்டின் பொருளாதார தேவைகள், தனிநபரின் வருமான விபரங்கள் மற்றும் பல்வேறு சர்வதேச நாடுகளின் வரிவிதிப்பு சிறப்பு நடவடிக்கைகளை கருத்தில் கொண்டும் புதிய நேரடி வரி விதிப்பு கொள்கைகளை வகுக்க இக்குழுவிற்கு பணி வழங்கப்பட்டுள்ளது.

## பெருநிறுவன விவகாரத்திற்கான இந்திய நிறுவனம் திட்டம்

- பிரதமர் தலைமையிலான மத்திய அமைச்சரவையானது பெருநிறுவன விவகாரத்திற்கான இந்திய நிறுவன திட்டம் (Scheme on Indian Institute of Corporate Affairs) அடுத்த மூன்று நிதி ஆண்டுகள் (FY 2017-18 to 2019-20) வரை தொடர அனுமதி அளித்துள்ளது.

- இதன் மூலம் பெருநிறுவன விவகாரத்திற்கான இந்திய நிறுவனம் (IICA- Indian Institute of Corporate Affairs) தேசிய முக்கியத்துவம் (Institute of National Importance) வாய்ந்த நிறுவனமாக உருவாகும்.
- IICA ஆனது மத்திய பெருநிறுவன விவாகரத்துறை அமைச்சகத்தின் (Ministry of Corporate Affairs) அதிகார வரம்பின் கீழ் செயல்படும் ஓர் நிறுவனமாகும்.
- இது 2008-ல் குருகிராமில் உள்ள மானேசரில் அமைக்கப்பட்டது.
- இது முக்கிய அமைச்சகங்களுக்கு ஆலோசனை வழங்கிட சிந்தனையாளர் குழுவாக முறையாக ஏற்படுத்தப்பட்ட முதல் இந்திய நிறுவனமாகும்.
- பெருநிறுவன சட்டங்கள், பெருநிறுவன நிர்வாகம், பெருநிறுவன சமூக பொறுப்புணர்வுகள் பொறுப்புணர்வுகளை (CSR – Corporate Social Responsibility), கணக்கீட்டு தரம், முதலீட்டாளர் கல்வி போன்ற பல்வேறு தளங்களில் பங்கு தாரர்களுக்கு இது சேவையை வழங்குகிறது.
- IICA-ல் உள்ள பெருநிறுவன சமூக பொறுப்புணர்வுகளுக்கான தேசிய அறக்கட்டளையானது (Nation Foundation for Corporate Social Responsibility) நாடு முழுவதும் பெருநிறுவன சமூக பொறுப்புணர்வுகளை நிர்வகிக்கப் பொறுப்புடையதாகும்.

## திவால் சட்டம்

- திவால் சட்டத்தில் (IBC – Insolvency and Bankruptcy Code) சில திருத்தங்களை கொண்டு வருவதற்காக அரசியலமைப்புச் சட்டம் விதி 123-ன் கீழ் அவசர சட்டத்தை இயற்றிட வேண்டி மத்திய அமைச்சரவை அளித்த முன்மொழிவுக்கு குடியரசுத் தலைவர் ஒப்புதல் வழங்கியுள்ளார்.
- இந்த அவசர சட்டத்தின் மூலம் திவால் சட்டத்தின் பிரிவுகள் 2,5, 25, 30, 35 மற்றும் 240 களில் திருத்தம் மேற்கொள்ளப்படும். மேலும் புதிதாக 29A மற்றும் 235A எனும் இரு பிரிவுகள் சேர்க்கப்படும்.
- டிசம்பரில் கூட்டப்பட உள்ள நாடாளுமன்ற குளிர்காலக் கூட்டத்தொடரில் இந்த அவசர சட்டம் சமர்ப்பிக்கப்பட உள்ளது.
- புதிதாக இணைக்கப்பட உள்ள பிரிவு 29-அன் படி இச்சட்டத்தின் கீழ் வேண்டுமென்றே கடனை திரும்பி செலுத்தாதவர்கள் (Wilful Defaulters) மற்றும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வருடம் வாராக்கடன்களை வைத்திருப்பவர் போன்றோர் திவால் தீர்மான செயல்முறையின் சொத்துகளுடைய ஏலத்தில் பங்கெடுப்பதை தடை செய்கிறது.
- இந்த சட்டமானது பெருநிறுவனங்கள் விவகார துறை அமைச்சகத்தால் (Corporate Affairs Ministry) அமல்படுத்தப்படுகின்றது.
- பெருநிறுவன விவகாரத்துறை அமைச்சகமானது திவால் சட்டத்தை அமல்படுத்துவதில் உள்ள பிரச்சனைகளை அடையாளம் கண்டு அவற்றை சரி

செய்ய தேவையான வழிகளை பரிந்துரைக்க 14 உறுப்பினர்கள் அடங்கிய குழுவை அமைத்துள்ளது.

- திவால் சட்டமானது கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் நடைமுறைக்கு வந்தது. இது சந்தைசார்ந்த, குறிப்பிட்ட காலத்திற்குள்ளான திவால் தீர்மான செயல்முறை மூலம் வங்கிகளின் கடனை வசூலிக்க வழிவகை செய்கின்றது.
- திவால் சட்ட குழுவின் தலைவரான பெருநிறுவன விவகாரத்துறை செயலர் இன்ஜேதி சீனிவாஸ், இந்த சட்டத்தின் அமலாக்கத்திற்கு முக்கிய பங்கு வகிப்பார்.

## நிதி நிலைத்தன்மை மற்றும் வளர்ச்சிமன்றக் குழு நிதி நிகழ்வுகள் மீது சீராய்வு

- நிதி நிலைத்தன்மை மற்றும் வளர்ச்சி மன்றத்தின் துணைக் குழு நாட்டின் பொருளாதார நிலைத்தன்மை மீது பாதிப்பை ஏற்படுத்தும் உலகளாவிய மற்றும் உள்நாட்டில் நிகழ்ந்த முக்கிய நிகழ்வுகளை ஆய்வு செய்தது.
- இந்தக் குழுவிற்கு ரிசர்வ் வங்கி தலைவர் உர்ஜித் பட்டேல் தலைமை தாங்கினார்.
- நிதி நிலைமைத் தன்மை மற்றும் வளர்ச்சி மன்றம் என்பது இந்திய அரசால் அமைக்கப்பட்ட ஒரு உயர்மட்டக் குழுவாகும்.
- இந்த மன்றத்தின் தலைவர் மத்திய நிதி அமைச்சர் ஆவார்.
- இதன் உறுப்பினர்களுள்
    - நிதித்துறையின் முக்கிய ஒழுங்குமுறை ஆணையங்களின் தலைவர்கள் (ரிசர்வ் வங்கி, செபி, ஐஆர்டிஏ, பிஎஃப்ஆர்டிஏ)
    - பொருளாதார விவகாரங்கள் துறையின் செயலாளர் அல்லது நிதித் துறையின் செயலாளர்
    - தலைமை பொருளாதார ஆலோசகர்.
- இந்த புதிய அமைப்பு நிதி நிலைத் தன்மையை பராமரிப்பது, நிதித்துறை வளர்ச்சி, ஒழுங்குமுறை ஆணையங்களிடையே ஒத்துழைப்பு, மற்றும் பொருளாதாரத்தின் மீதான பெரும் தாக்கங்கள் கொண்ட நிபந்தனைகளை கண்காணிப்பது ஆகிய செயல்களுக்கான நடைமுறையை பலப்படுத்தி முறைப்படுத்த திட்டம் தீட்டுகிறது.

## உதய் திட்டம்

- உதய் திட்டத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவையொட்டி நாகாலாந்து மாநிலமும் , அந்தமான் & நிகோபார், தாத்ரா நகர் ஹவேலி, டையூ & டாமன் போன்ற யூனியன் பிரதேசங்களும் தங்கள் மின் விநியோக அமைப்புகளின் செயல்பாட்டு மேம்பாட்டிற்காக (UDAY) உதய் திட்டத்தில் சேர மத்திய அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளன.

*UDAY*

- UDAY – Ujwal Discom Assurance Yojana.
- இது மத்திய மின்துறை அமைச்சகத்தின் திட்டமாகும்.
- இது நாடு முழுவதும் உள்ள அரசு மின் விநியோக நிறுவனங்களுக்கு (Discom) நிதியியல் மற்றும் செயல்பாட்டு உந்துதலை தருவதற்காக தோற்றுவிக்கப்பட்டது.

- இதன் கீழ் நான்கு நடவடிக்கைகள் மூலம் அனைத்து DISCOM களையும் 2018-2019ல் இலாபரகமானவையாக மாற்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- அந்நான்காவன,
  - ✓ DISCOM-களின் செயல்பாட்டு திறனை அதிகரித்தல்
  - ✓ மின்சாரத்திற்கான செலவை குறைத்தல்
  - ✓ DISCOM-களின் வட்டி செலவை குறைத்தல்
  - ✓ மாநில நிதிகளுடன் ஒருங்கமைப்பதன் மூலம் DISCOM-களில் நிதி ஒழுக்கத்தை செயல்படுத்தல்
- இத்திட்டத்தின் கீழ் DISCOM-களின்கடன்களுக்கு மாநில அரசு பொறுப்பேற்கும்.

## ஆடைகளுக்கான ஊக்கத் தொகை விகிதம்

- வர்த்தக மற்றும் தொழிற்துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள அயல்நாட்டு வர்த்தகத்தின் பொது இயக்குனரகம், "இந்தியாவிலிருந்து வர்த்தகப் பொருள்கள் ஏற்றுமதி திட்டம்" என்ற திட்டத்தின் கீழ் ஆடைப் பொருட்களுக்கான ஊக்கத் தொகையை அதன் ஆடைகளின் ஏற்றுமதி மதிப்பில் 2 சதவீதத்திலிருந்து 4 சதவீதம் என்ற அளவில் உயர்த்தியுள்ளது.
- இந்த திட்டத்தின் கீழ் ஊக்கத்தொகை விகிதமானது ஜவுளித் துறையின் கீழ் உள்ள ஆயத்த ஆடைகள், தயாரிக்கப்பட்ட துணிகள் என்ற இரண்டு துணைத் துறைகளுக்கும் பொருந்தும்.
- இந்த நடவடிக்கையானது தொழிலாளர்கள் நிறைந்த துறையான ஆயத்த ஆடைகள் துறையின் ஏற்றுமதிக்கும் அதன் வேலைவாய்ப்பு மேம்பாட்டிற்கும் பெரிதும் ஊக்கமளிக்கும்.
- "இந்தியாவிலிருந்து வர்த்தகப் பொருட்கள் ஏற்றுமதி திட்டம் "என்ற திட்டமானது இந்திய வெளிநாட்டு வியாபாரக் கொள்கை (2015-20) என்பதன் கீழ் ஆரம்பிக்கப்பட்டது.
- இதன் நோக்கங்களானது ஜவுளித் துறையின் உள்கட்டமைப்பில் உள்ள குறைபாடுகளை களைவதும், இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்டு தயாரிக்கப்பட்ட ஜவுளிப் பொருட்கள் மற்றும் தயாரிப்புகளை ஏற்றுமதி செய்வதில் ஏற்படும் செலவுகளை குறைப்பதும் ஆகும்.
- இந்தத் திட்டத்தின் கீழ், வர்த்தக அமைச்சகத் துறையானது உற்பத்தி செய்யப்படும் பொருட்களை பொறுத்து 2%, 3% மற்றும் 5% என்ற அளவில் வரிச் சலுகைகளை அளிக்கிறது.

## G-20 நாடுகள் கூட்டமைப்பின் புதிய இந்திய பிரதிநிதி

- பொருளாதார விவகாரங்கள் துறையின் முன்னாள் செயலாளரான ஸ்ரீசக்தி காந்த தாஸ் G-20 நாடுகள் கூட்டமைப்பின் வளர்ச்சி பிரிவின் (Development track) இந்தியப் பிரதிநிதியாக (Sherpa) டிசம்பர் 31, 2018 வரை நியமிக்கப்பட்டு உள்ளார்.
- G-20 அமைப்பில் இரு பிரிவுகள் (tracks) உள்ளன.
  - (i) வளர்ச்சிப் பிரிவு (Development Track)
  - (ii) நிதிப் பிரிவு (Finance Track)
- நிதிப் பிரிவினை G-20க்கான இந்தியாவின் இணை பிரதிநிதி என்ற வகையில் மத்திய பொருளாதார விவகாரத்துறை செயலாளரால் நிர்வகிக்கப்படும்.
- வளர்ச்சி பிரிவானது G-20 கூட்டமைப்புக்கான இந்திய பிரதிநிதியால் (Sherpa) ஒருங்கிணைக்கப்படும்.

- இந்திய பிரதிநிதிக்குத் தேவையான உதவிகளை மத்திய பொருளாதார விவகாரத்துறை அளிக்கும்.
- Sherpa என்பது G-8, G-20, NSG போன்ற சர்வதேச மாநாடுகளில் பங்கேற்கும் உறுப்பு நாடுகளின் தலைவர்களின் தனிப்பட்ட பிரதிநிதிகளாவர்.
- 2015 செப்டம்பரில் நடைபெற்ற G-20 நாடுகளின் பேச்சுவார்த்தையில் நிதி ஆயோக்கின் அரவிந்த் பனகாரியா சிறப்பு பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார்.
- இதற்கு முந்தைய கூறுகளின் படி G-20 நாடுகள் கூட்டமைப்பின் மாநாடுகளில் முன்பு செயல்பட்டு வந்த திட்டக்குழுவின் துணைத் தலைவர் சிறப்பு பிரதிநிதியாக நியமிக்கப்படுவார்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்ப செய்திகள்

## உள்நாட்டு மென்சரிவு (Glide) குண்டு - பரிசோதனை

- ஒரிஸாவிலுள்ள சந்திப்பூரில் இந்திய விமானப் படையின் போர் விமானங்கள் மூலம் புதிய தலைமுறை மென்சரிவு குண்டுகள் வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டுள்ளன.
- திறம்வாய்ந்த வான்வளிக்கள எதிர்ப்பு ஆயுதம் (SAAW-Smart Anti Airfield Weapon) என்றழைக்கப்படும் இக்குண்டானது, பாலசோர் மாவட்டத்தின் சந்திப்பூர் கடல் பகுதியில் உள்ள ஒருங்கிணைக்கப்பட்ட சோதனை எல்லையில் (Integrated Test Range) இந்திய விமானப் படையின் போர் விமானத்தால் வீசப்பட்டு பரிசோதிக்கப்பட்டுள்ளது.
- இவை 125-150 கிலோ வரை எடையுடையவை. 80-100 கி.மீ வரையிலான இலக்குகளை தாக்கும் வல்லமையுடையவை. இவை நீண்டதூர இலக்குடைய, வானிலிருந்து நிலம் நோக்கி ஏவப்படக்கூடிய (Air to Surface) துல்லியமான வழிகாட்டு (Precision, Guided) ஆயுதமாகும்.
- இந்தியாவின் ஜாகுவார், சுகோய் – 30 MK 1 உள்ளிட்ட அனைத்து முன்னணி வரிசைப் போர் விமானங்களின் மூலம் இந்த குண்டை வீச இயலும்.
- இந்த வழிகாட்டப்பட்ட குண்டானது இமாரத் ஆராய்ச்சி மையத்தால், இந்திய விமானப் படை, பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்துடன் (DRDO – Defence Research and Development Organisation) இணைந்து உருவாக்கப்பட்டுள்ளது.

## FASTag கட்டாயம்

- நெரிசலை குறைத்து போக்குவரத்தை விரைவுப் படுத்துவதற்காகவும், குறிப்பாக கட்டணச் சாவடிகளில் போக்குவரத்தை விரைவுப் படுத்துவதற்காகவும், டிசம்பர் 1க்கு பிறகு சந்தையிடப்படும் அனைத்து வாகனங்களிலும் FASTags ஐ கட்டாயமாகப் பொருத்த அனைத்து உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்களுக்கு மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் உத்தரவு பிறப்பித்துள்ளது.
- டிசம்பர் 1, 2017 அன்று அல்லது அதன் பிறகு விற்பனை செய்யப்படும் வாகனங்களில் FASTags பொருத்துதலை கட்டாயமாக்க மத்திய மோட்டார் வாகன விதிகள் 1989-ல் திருத்தங்கள் அண்மையில் கொண்டு வரப்பட்டன.
- FASTags என்பது கட்டணச் சாவடிகளில் நேரடியாக கட்டணம் செலுத்த, கட்டணத் தொகைகள் முன் செலுத்தப்பட்ட கணக்குகளோடு (Prepaid Account) இணைக்கப்பட்ட ரேடியோ அதிர்வெண்

அடையாளப்படுத்தும் தொழிற்நுட்பத்தை (RFID – Radio Frequence Identification) பயன்படுத்தும் ஓர் கட்டண வசூலிப்புச் சாதனமாகும்.

- இவை வாகனங்களின் கண்ணாடிப் பகுதிகளில் பொருத்தப்படும். இதன் மூலம் தானியங்கு முறையில் சாவடிக் கட்டணம் செலுத்தப்படுவதால் சுங்கச் சாவடி வழியே வண்டிகள் நிற்காமல் பயணிக்கலாம்.
- FASTags ஐ வாங்கவும், மீள் நிரப்பம் (Recharage) செய்யவும், பொது வாடிக்கையாளர்களுக்கு "My FASTags" எனும் வணிகச் செயலியும், "FASTags Partner" எனும் வணிகர்களுக்கான செயலியும் தொடங்கப்பட்டுள்ளன.

## எண்ணெய் கசிவை அகற்றுதல்

- ஐ.ஐ.டி கவுகாத்தியைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் குழு மீத்திறனுடன் நீர் விலக்கும் தன்மையுடைய நீரை விலக்கும் மருத்துவ பருத்தியை கண்டுபிடித்துள்ளனர்.
- இவை வெவ்வேறு அடர்த்திகளுடைய எண்ணெய் கசிவுகளை 95% வரை அகற்றக் கூடியவை.
- இந்தப் பஞ்சுகளின் உட்கிரகித்தல் திறன் மிகவும் அதிகம் – ஒரு கிராம் மீத்திறனுடைய நீர் விலக்கு பருத்தியானது 20 கிராம் இலகு அல்லது கனமுடைய எண்ணெய்களை உறிஞ்சவல்லது.
- இப்பஞ்சுகளால் உட்கிரகிக்கப்பட்ட எண்ணெய்யானது இயற்பியல் அழுத்தங்கள் மூலம் மீட்டெடுக்க இயலும்.

## மிகவும் பழமையான சுழல் பால்வளி மண்டலம் கண்டுபிடிப்பு

- கிட்டத்தட்ட 11 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு இருந்த, A1689B11 என்று அழைக்கப்படும் பிரபஞ்சத்தின் மிகப் பழமையான சுழல் பால்வளி மண்டலத்தை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.
- 13 பில்லியன் வருடங்களுக்கு முன்பு பிரபஞ்சத்தின் பிக் பேங்க் எனும் பிரபஞ்ச பெரு வெடிப்பு நிகழ்வு நிகழ்ந்த பின் 2.6 பில்லியன் வருடங்களாக இவை இருந்து வருகின்றன.
- அத்தகு சமயத்தில் பிரபஞ்சத்தின் அப்போதைய வயது தற்போதைய வயதின் ஐந்தில் ஒரு பகுதியாகும்.
- இது முற்கால அண்டத்தை பற்றிய நுண்ணறிவுகளை அளிக்கக் கூடிய சுழல் பால்வளி மண்டலம் ஆகும்.
- விஞ்ஞானிகள் ஹவாயில் உள்ள ஜெமினி வட தொலைநோக்கியின் மீது சக்திவாய்ந்த நோக்குமுறையைப் பயன்படுத்தி பால்வளி அண்டத்தின் சுழல் தன்மையை சோதித்துள்ளார்கள்.
- சுழல் பால்வளி அண்டமானது ஆரம்ப கால பிரபஞ்சத்தின் அரிதான ஒன்றாகும்.
- இவை மிகக் குளிர்ந்த மற்றும் மிக மெல்லிய வட்டுகளை கொண்டு வியக்கத்தக்க வகையில் சிறிய சீற்றத்துடன் அமைதியாக சுழலும்.

## நிர்பய் ஏவுகணை

- உள்நாட்டு தொழிற்நுட்பத்தோடு வடிவமைத்து தயாரிக்கப்பட்ட ஏவுகணையான "நிர்பய்" ஏவுகணை ஒடிஸாவின் சந்திப்பூரில் உள்ள ஒருங்கிணைக்கப்பட்ட சோதனை பகுதியில் வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டது.

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தால் (DRDO- Defence Research and Development Organisation) இந்த ஏவுகணை பரிசோதனை செய்யப்பட்டுள்ளது.
- "நிர்பய்" இந்தியாவின் குறைந்த தயாரிப்பு செலவுடைய, அனைத்து வானிலைகளிலும் ஏவத்தக்க (All Weather Missile), நீண்ட தூர இலக்குடைய (Long Range), சீர்வேக (Cruise Missile), ரேடாரில் புலப்படா திறனுடைய (Stealth Feature), துல்லியமாக தாக்கவல்ல (high accuracy) ஏவுகணையாகும்.
- இவை ஏவுகணை மற்றும் வானூர்தித் தொழிற்நுட்பங்களின் கலப்புத் தொழிற்நுட்பத்தைக் கொண்டுள்ளதால் இவற்றால் ஏவுகணைகளைப் போல நெடுவாக்கிலும், விமானங்களைப் போல கிடைமட்டமாகவும் எழும்பிட வல்லது..
- இவை ஒற்றை வான் ஏவல் பயணத்தினிலே பல இலக்குகளை அழிக்கவல்லது.
- GPS தொழிற்நுட்பமுடைய இந்த ஏவுகணை கடைசி 5 வருடங்களில் பரிசோதிக்கப்படுவது இது 5-வது முறையாகும்.
- இவை 300 KG எடையுள்ள ஆயுதங்களை சுமந்து செல்லத்தக்கது.
- இவற்றின் வேகம் 0.6 முதல் 0.7 மாக் வரை(குறையொலி வேகம் -சப் சோனிக்)
- இவை 1000 கி.மீ ஐ விட அதிகமான நீண்ட தூர இலக்கு வரம்புடையவை .
- நிர்பய் ஏவுகணையானது அமெரிக்காவின் தோமஹவ்க் ஏவுகனைகளின் (Tomahawk Missiles) இந்திய பிரதியாகும்.
- இந்த ஏவுகணை நீர்,நிலம், வான்வெளி என பலதரப்பு ஏவு மேடைகளிலிருந்தும் ஏவத்தக்கது,

***தகவல் துளிகள்***

- ஒலியின் அலகு-மாக்(Mach)

***மீயொலி வேகம்*** *(super Sonic)*

- ஒரு மாக்-ஐ விட அதிகமான அலகுடைய எவ்வேகமும் மீயொலி வேகம் எனப்படும்.

***குறையொலி வேகம்*** *(Sub Sonic)*

- ஒளியின் வேகத்தை விட குறைவான எவ்வேகமும் குறையொலி வேகம் (Sub-sonic) எனப்படும்.

***சீர்வேக ஏவுகணை*** *(Cruise Missile)*

- வான் வழிப்பயணத்தின் பெரும் பகுதியை வளிமண்டலத்தினுள்ளே கொண்டு ஒரே சீரான வேகத்தில் பயணிக்கும் ஓர் வழிகாட்டு அமைப்புடைய ஏவுகணையே சீர்வேக ஏவுகணை எனப்படும்.

***கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை*** *(Ballistic Missile)*

- வான் வழிப்பயணத்தின் பெரும்பகுதியை வளிமண்டலத்திற்கு வெளியே கொண்ட, கண்டங்களுக்கு இடையேயான பெருந்தொலைவுப் பயணப்பாதை உடைய, வழிகாட்டும் அமைப்புடைய ஏவுகணை கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை எனப்படும்.

## புரோக்சிமா செண்ட்டாரி விண்மீன்

- புரோக்சிமா செண்ட்டாரி (Proxima Centauri) விண்மீனைச் சுற்றி தூசு மண்டலங்கள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. சூரியனுக்கு மிக அருகாமையில் இருக்கும் விண்மீன் புரோக்சிமா செண்ட்டாரி ஆகும்.
- சிலி நாட்டில் உள்ள ஆல்மா (ALMA - Atacama Large Millimeter Array) நோக்குக்கூடத்தில் உள்ள வானியல் அளவுமானி மூலம் இது கண்டறியப்பட்டது.

- புரோக்சிமா செண்ட்டாரி தன்னை மையமாகக் கொண்டு ஒரு விரிவான கோள்கள் அமைப்பைக் கொண்டுள்ளது என்பதை இக்கண்டுபிடிப்புக் குறிக்கிறது.
- பூமியில் இருந்து 4 ஒளி ஆண்டுகள் தூரத்தில், தெற்கு நட்சத்திரக் கூட்டத்தில் அமைந்துள்ள புரோக்சிமா செண்ட்டாரி விண்மீன் செங்குறளி (Red Dwarf) விண்மீன் வகையைச் சார்ந்தது ஆகும்.
- புரோக்சிமா செண்ட்டாரி விண்மீனை, பூமியின் அளவில் உள்ள "புரோக்சிமா செண்ட்டாரி-பி" [Proxima Centuari b] என்ற புறக்கோள் சுற்றி வருகிறது. சூரியக் குடும்பத்துக்கு மிக அருகாமையில் உள்ள புறக்கோள் புரோக்சிமா செண்ட்டாரி-பி ஆகும்.

## 145 பில்லியன் ஆண்டுகள் பழமையான தொல்பொருள்

- 145 மில்லியன் ஆண்டுகள் பழமையான எலி போன்ற உயிரினத்தின் தொல்படிமங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவையே மனித இனத்தின் மிகவும் பழமையான பாலூட்டி மூதாதையர்கள் எனக் கருதப்படுகின்றன.
- இங்கிலாந்தின் போர்ட்ஸ்மவுத் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த தொல்பொருள் ஆய்வாளர்கள் டார்ஸட் நாட்டின் ஜீராஸிக் கடற்கரையில் இந்தப் படிமங்களைக் கண்டறிந்துள்ளனர்.
- மனிதனாக பரிணாம வளர்ச்சி அடைந்த பாலூட்டிகளின் வரிசையில் இந்த உயிரினம் மிகப் பழமையானதாகும்.
- இந்தப் பாலூட்டி வகைகள் காலப்போக்கில் மிகச் சிறிய பிக்மீ ஷ்ரூ (pigmy shrews) எலிகள் தொடங்கி மாபெரும் திமிங்கலங்கள் வரையாக பரிணாம வளர்ச்சியடைந்தன.
- இந்த இனங்களுக்கு "Durlstotherum newmani" எனப் பெயரிடப்பட்டுள்ளன.
- சார்லீ நியூமேன் என்ற தொல்பொருள் ஆய்வாளரின் பெயர் இந்த உயிரினத்துக்குப் பெயரிடப்பட்டுள்ளது.

## இந்தியப் பேரிடர் வரைபடம்

- தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையமும் (NDMA _ National Disaster Management Authority), ஸீட்ஸ் இன் இந்தியா (Seeds in India) எனும் இலாப நோக்கமற்ற நிறுவனமும் இயற்கை பேரிடர்களின் போது மீட்பு மற்றும் தணிப்பு போன்ற பேரிடர் பதிலெதிர்ப்பு நடவடிக்கைகளை மிகுந்த திறமோடு மேற்கொள்ள உதவிடும் வகையில், இந்திய பேரிடர் வரைபட கருவிகளை அந்நிறுவனங்களுக்கு வழங்க பேஸ்புக் (முகநூல்) நிறுவனம் அந்த அமைப்புகளுடன் கூட்டிணைவை ஏற்படுத்தியுள்ளது.
- இந்தியாவில் மேற்கொள்ளப்படும் பேரிடர் மேலாண்மை (Disaster Management) மற்றும் பேரிடர் பதிலெதிர்ப்பு (Disaster response) நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்துடன் இணைந்து இந்தியாவில் பேஸ்புக் நிறுவனத்தால் முதன்முறையாக நடத்தப்பட்ட பேரிடர் பதிலெதிர்ப்பு மாநாட்டில் (Disaster Response Summit) இந்த புதிய வரைபட கருவிகள் வெளியிடப்பட்டன.
- ஐக்கிய நாடுகள் சபையின் வளர்ச்சித் திட்டத்தின் படி (UNDP – United Nations Development Programme) இந்தியா இயற்கை பேரிடர்களால் மோசமாகப் பாதிக்கப்படும் உலகின் மூன்றாவது நாடாகும்.
- இயற்கைப் பேரிடர்களால் அதிகப் பாதிப்பிற்குள்ளாகும் அஸ்ஸாம் மற்றும் உத்தரகாண்டில் சோதனை அடிப்படையில் இத்திட்டம் பயன்படுத்தப்படும்.

- உலகம் முழுவதும் இந்த ஆண்டு ஜீன் மாதத்தில் பேரிடர் வரைபடங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. முகநூல் பயன்பாட்டாளர்களால் முகநூலில் பகிரப்படும் இடஞ்சார்ந்த தகவல்கள் திரட்டப்பட்டு இத்திட்டத்தினில் பயன்படுத்தப்படும். அமெரிக்கா மற்றும் சிலி போன்ற நாடுகளில் இத்திட்டம் பயன்படுத்தப்பட்டுள்ளது.
- இந்த திட்டமானது ஸீட்ஸ் இன் இந்தியா அமைப்பால் செயல்படுத்தப்படும். தங்கள் உள்ளூர் பகுதிகளின் பேரிடர் கால உண்மை நேரத் தகவல்களையும், முதல் நிலை தகவல்களையும் வழங்குவதற்காக தன்னார்வலர்களின் ஓர் பிணைய வலையமைப்பு இத்திட்டத்தின் கீழ் உண்டாக்கப்படும்.
- மேலும் பேஸ்புக் நிறுவனமானது நம் நாட்டின் சோதனை திட்டமான ஆப்டா சமச்சர் கர்யகர்தா (Aapda Samachar Karyakarta-Disaster Information Volunteers) எனும் பேரிடர் தன்னாவலர்களின் தகவல்கள் திட்டத்திற்கும் ஆதரவு அளித்து வருகின்றது.

## 15-வது ஆசிய-பசிபிக் கணினி அவசரகால மீட்புக்குழு மாநாடு

- 15-வது ஆசிய-பசிபிக் கணினி அவசரகால மீட்புக்குழு மாநாடு (Asia-Pacific Computer Emergency Response Team – APCERT) புதுதில்லியில் நடைபெற்றது.
- இது இந்தியா மற்றும் தென் ஆசியாவில் நடைபெறும் முதல் APCERT மாநாடாகும். இந்த மாநாட்டின் கருத்துரு “டிஜிட்டல் பொருளாதாரத்தில் நம்பிக்கையை கட்டமைத்தல்”.
- மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழ் செயல்படும் இந்திய கணினி மீட்புக்குழு (Indian Computer Emergency Response Team – CERT-In) இந்த மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளது.
- 22 ஆசிய-பசுபிக் டிஜிட்டல் பொருளாதார நாடுகளைச் சேர்ந்த கணினி அவசரகால மீட்புக்குழுக்களோடு அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளும், தொழில் மற்றும் கல்வித் துறை வல்லுனர்களும் இதில் பங்கேற்றனர்.
- ஆசிய-பசுபிக் பிராந்தியத்தின் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கான கணினி இணையப் பாதுகாப்பு சார்ந்த நிகழ்ச்சிநிரலை (Agenda) வடிவமைப்பதற்கு ஏற்படுத்தப்பட்ட வழிகாட்டு குழுவிற்கு (Steering Commitee) ஆஸ்திரேலியா,சீனா,ஜப்பான்,கொரியா,மலேசியா, மற்றும் தைவான் போன்ற நாடுகளோடு இந்தியாவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- உலகளாவிய ஒத்துழைப்பின் மூலம் ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் பாதுகாப்பான, சுத்தமான, நம்பத்தகு இணைய வெளியை (Cyber Space) உருவாக்க உதவுவதே இந்த மாநாட்டின் நோக்கமாகும்.
- கைபேசி மற்றும் சமூக ஊடகங்களில் இணைய பாதுகாப்பை கையாளுவதற்கான சிறந்த பயிற்சிகள், டிஜிட்டல் முறையில் பரிணமிக்கும் பொருளாதார நாடுகளில் நம்பிக்கையை வளர்ப்பதற்கான தொழிற்நுட்பம் மற்றும் கருவிகள், கணினி அவசரகால மீட்புக்குழுக்களின் உத்திகளைச் சார்ந்த நிகழ்கால தலைப்புகள் போன்றவற்றின் மீது இம்மாநாடு நடத்தப்பட்டது.

## துருவ செயற்கைக்கோள் அமைப்பு

- அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமானது கூட்டு துருவ செயற்கைக்கோள் அமைப்பு-1 (JPSS – Joint Polar Satellite System – 1) என்றழைக்கப்படும் அடுத்த தலைமுறைக்கான செயற்கைக்கோளை விண்ணில் ஏவியுள்ளது.
- இந்த செயற்கைக்கோள் United launch Alliance எனும் கூட்டு நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட டெல்டா – II (Delta – II) எனும் இராக்கெட் மூலம் கலிபோர்னியாவில் உள்ள வன்டென்பெர்க் விமானப்படைத் தளத்திருந்து ஏவப்பட்டு சுற்றுப் பாதையில் நிறுத்தப்பட்டது.

- JPSS – 1 ஆனது தனது கடைசி சுற்று வட்ட பாதையை அடைந்த உடன் NOAA-20 என மறு பெயரிடப்படும்.
- JPSS-1 செயற்கைக்கோள் பெறப்படும் தரவுகளானது எல்-நினோ மற்றும் லா-நினோ போன்ற வானிலையில் பெரும் தாக்கங்களை ஏற்படுத்தவல்ல பருவ நிலை போக்குகளினை உறுதிப்படுத்தலை மேம்படுத்த இயலும்.
- JPSS-1 ஆனது அமெரிக்காவின் மிகவும் மேம்பட்ட அதி நவீன துருவ-சுற்றுவட்ட செயற்கை கோள்களின் முதலாவது செயற்கைக்கோள் ஆகும்.
- அடுத்த தலைமுறைக்கான தொழிற்நுட்பங்களோடு மேம்படுத்தப்பட்டுள்ள இந்த செயற்கைக் கோள் சுற்றுச்சூழலை கண்காணிக்கவும், அமெரிக்காவின் வானிலை முன்கணிப்பின் துல்லியத்தை அதிகரிக்கும் வண்ணம் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இந்த செயற்கைக்கோள் பூமியிலிருந்து 512 மைல் உயரத்தில் பூமியின் ஒரு துருவத்திலிருந்து இன்னொரு துருவத்திற்கு பயணித்து ஒரு நாளில் பூமியை 14 முறை சுற்றி வர உள்ளது.

## சம்பா மசுரி

- உயிரணு மற்றும் மூலக்கூறு உயிரியல் மையத்துடன் இணைந்து [CCMB – Centre for Cellular and Molecular Biology] இந்திய தேசிய அரிசி ஆராய்ச்சி நிறுவனமானது [IIRR – Indian Institute of Rice Research] மேம்பட்ட சம்பா மசுரி [Improved Samba Masuri – ISM] எனும் நெல் ரகத்தை உருவாக்கியுள்ளது.
- இந்நெல் ரகமானது பாக்டீரியாக்களால் உண்டாகும் கருகல் நோய்க்கு (Bacteria Blight) எதிர்ப்புத்தன்மை கொண்டவை.
- மேலும் இந்நெல் ரகமானது குறைந்த கிளைசீமிக் குறியீட்டை [Glycemic Index] கொண்டவையாதலால், நீரிழிவு நோயாளிகளும் உண்ண ஏற்றத்தக்கது.
- ISM ரகமானது 50.99 எனும் மிகக்குறைந்த GI அளவை கொண்டுள்ளது.
- பொதுவாக 53 முதல் 69 அளவு வரை GI மதிப்புடைய சோதனை செய்யப்பட்ட பல்வேறு நெல் ரகங்களை காட்டிலும் ISM மிக குறைந்த அளவிலான GI ஐ கொண்டுள்ளது.
- குறைந்த GI அளவுடைய உணவுப் பொருட்களின் உட்கொள்ளலானது மெதுவான குளுக்கோஸ் வெளியீட்டினை இரத்த ஓட்டத்தில் ஏற்படுத்துவதால் நீரிழிவு நோயால் உண்டாகும் பாதகங்கள் தவிர்க்கப்படும்.
- உழவர்களின் வருமானத்தைப் பெருக்கிடவும், மேம்பட்ட சந்தை வாய்ப்பை பெறும் வகையிலும் இந்நெல் ரகமானது விரும்பத்தக்க அம்சங்களான நேர்த்தியான தானிய வகையாகவும், அதிக உற்பத்தியை தரவல்லனவாகவும் உள்ளது.

*Glycemic Index*

- எத்தகு அளவில் இரத்தத்தில் உள்ள குளுக்கோஸின் அளவை பாதிக்கின்றன என்பதன் அடிப்படையில் உணவுப் பொருட்களிலுள்ள கார்போஹைட்ரேட்டுகளை ஒப்பீட்டு முறையில் தரவரிசைப்படுத்துவதே Glycemic Index ஆகும்.
- 55 அல்லது அதற்கு குறைவான GI அளவுடன் கூடிய கார்போஹைட்ரேட்களின் உட்கொள்ளலானது மெதுவாக செரிமானமடைந்து,உட்கிரகிக்கப்பட்டு மற்றும் வளர்சிதை மாற்றமடைந்து குறைவாகவும், மெதுவாகவும் இரத்தத்தில் குளுக்கோஸ் அளவை அதிகரிக்கும். அதனால் இன்சுலின் அளவும் மெதுவாகவே அதிகரிக்கும்.

## செவ்வாய் 2020 திட்டம் – மீயொலி வான்குடை மிதவை

- அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா மீயொலி தரையிரங்கு வான்குடை மிதவையை (Supergmic landing Parachute) வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது இதன் மூலம் இது 2020-ல் விண்ணில் செலுத்தப்பட உள்ள செவ்வாய் தரையியக்க ஊர்தி திட்டத்தில் (Mars Rover Mission) பயன்படுத்தப்பட உள்ளது.
- இந்த திட்டமானது 2020-ல் விண்ணில் செலுத்தப்பட்ட பின் செவ்வாய் கிரகத்தின் வளிமண்டலத்தில் விநாடிக்கு 5.4 கி.மீ வேகத்தில் தரையிரங்க உள்ள விண்கலத்தின் வேகத்தை மட்டுப்படுத்த தற்போது பரிசோதிக்கப்பட்டுள்ள இந்த சிறப்பு பாராசூட்டையே பெரிதும் சார்ந்துள்ளது.
- இந்த சோதனையானது நாசாவின் அதி நவீன மீயொலி வேக பாராசூட் ஆராய்ச்சி, சோதனை திட்டத்தின் (ASPIRE – Advanced Supersonic Parachute Inflation Research Experiment) கீழ் உள்ள செவ்வாய் 2020 பாராசூட் சோதனை தொடரின் முதல் சோதனையாகும்.
- செவ்வாய் 2020 தரையியக்க ஊர்தி திட்டமானது நாசாவின் செவ்வாய் ஆய்வு திட்டத்தின் ஒரு பகுதியாகும். இது சிவப்பு நிறமுடைய செவ்வாய் கிரகத்தில் ரோபோட்டுகளைக் கொண்டு ஆய்வு செய்ய மேற்கொள்ளப்பட்ட நீண்ட கால முயல்வாகும்.
- இந்த திட்டத்தின் கீழ் விண்கலமானது 2020ஆம் ஆண்டின் ஜுன் அல்லது ஜுலை மாதத்தில் ஏவப்படும்.
- ஏனெனில் அக்காலத்தின் போது தான் செவ்வாயில் விண்கலம் தரையிரங்க ஏதுவான வகையில் பூமியும், செவ்வாயும் ஒன்றுக்கொன்று நல்ல நிலையில் சுற்றுவட்டப் பாதையில் அமைந்திருக்கும்.

## UMANG செயலி

- குடிமக்கள் அனைவரும் ஒற்றை தளத்தில் அனைத்து அரசு சேவைகளையும் அணுகிட வழிசெய்யும் வகையில் UMANG [UMANG – Unified Mobile Application for New-Age Governance] எனும் கைபேசி செயலியை மத்திய அரசு தொடங்கியுள்ளது.
- UMANG செயலியானது மத்திய அரசின் முக்கிய சேவைகளான ஆதார், டிஜிட்டல் லாக்கர் (Digi locker), விரைவு மதிப்பீட்டு அமைப்பு [RPA – Rapid Assessment System] மற்றும் பாரத் கட்டண செலுத்து அமைப்பு [BBPS – Bharat Bill Payment System] போன்றவையோடு ஒன்றிணைவைக் கொண்டது.
- இந்த செயலியின் மூலம் குடிமக்களால் தொழிலாளர்கள் வைப்புநிதி நிறுவனத்தின் சேவைகளை அணுகிட இயலும். மேலும் நிரந்தர கணக்கு எண்ணிற்கு விண்ணப்பிக்க இயலும். மேலும் பிரதான் மந்திரி கௌசல் விகாஸ் யோஜனா திட்டத்தின் கீழ் பதிவு செய்ய இயலும்.
- இந்த செயலியை மத்திய மின்னனு மற்றும் தகவல் தொழிற்நுட்ப அமைச்சகமானது (Meity) தேசிய மின்-ஆளுகை பிரிவுடன் (National e-Governance Division) உடன் இணைந்து உருவாக்கியுள்ளது.
- UMANG செயலியானது தமிழ் உட்பட 13 மொழிகளில் வெளியிடப்பட்டுள்ளது.

## SBI - YONO

- YONO எனப்படும் நாட்டின் முதல் ஒருங்கிணைந்த வாழ்க்கைமுறை மற்றும் வங்கியியல் டிஜிட்டல் சேவை என்ற இணைய வாயிலை SBI வங்கி தொடங்க உள்ளது.
- YONO இந்தியாவின் முதல் ஒருங்கிணைந்த வங்கியியல் டிஜிட்டல் இணையதளமாகும்.இதன் மூலம் பயணம், தங்குமிடம், வாடகை ஊர்திகள், பொழுது போக்குகள், முன் பதிவுகள் போன்ற 14 வகைப்பாட்டு சேவைகள் உள்ளடங்கிய வாழ்க்கைமுறை தேவை வசதிகளை வாடிக்கையாளர்கள் பெற இயலும்.
- மேலும் முதன் முறையாக இந்த இணைய வாயில் மூலம் ஆன்லைன் நுகர்வு மேற்கொள்ளவும், காப்பீட்டு பாலிசி சேவைகளைப் பற்றி அறியவும் இயலும்.
- தனிப்பயனாக்கப்பட்ட சலுகைகள் மற்றும் தள்ளுபடிகளை வழங்குவதற்காக SBI வங்கியானது 60 மின்-வர்த்தக நிறுவனங்களுடன் கூட்டிணைவை ஏற்படுத்தியுள்ளது.

## சீனாவின் தொலையுணர் செயற்கைக் கோள்கள்

- மின்காந்த ஆய்வுகள் பற்றியும் மற்ற பரிணாமங்கள் பற்றியும் ஆய்வு நடத்திட வடிவமைக்கப்பட்ட தொலையுணர் செயற்கைக் கோள்களை சீனா வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது.
- சீனாவின் தென்மேற்கு மாகாணமான சிச்சுவானில் உள்ள ஜிசாங் செயற்கைக் கோள் மையத்திலிருந்து எண்ணிக்கை அளவில் குறிப்பிடப்படாத செயற்கைக் கோள்கள் லாங் மார்ச்-2 என்ற ராக்கெட் மூலம் விண்ணில் செலுத்தப்பட்டன.
- செயற்கைக் கோள்கள் கொண்டு செல்லப்பட்ட லாங் மார்ச்-6 ராக்கெட் என்பது சீனாவின் விண்வெளி அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட திரவ எரிபொருள் கொள்கலன் கொண்ட ஒரு புதிய தலைமுறை ராக்கெட் ஆகும்.
- இந்த செலுத்துகை லாங் மார்ச் ராக்கெட் குடும்பத்தின் 256-வது திட்டமாகும்.

## உலகின் முதல் செயற்கை நுண்ணறிவு அரசியல் பிரமுகர்

- நியூசிலாந்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர் சாம் (SAM) எனும் உலகின் முதல் செயற்கை நுண்ணறிவுடைய அரசியல் பிரமுகரை (politician robot) கண்டுபிடித்துள்ளார்.
- நிக் கெர்ரிஸ்டன் என்ற நியூசிலாந்தைச் சேர்ந்த தொழில்முனைவோரால் இந்த ரோபோ கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நியூசிலாந்தின் கொள்கைகள் கல்வி, வீட்டு வசதி, குடியேற்றம் போன்றவை சார்ந்த பல்வேறு கேள்விகளுக்கு இது பதிலளிக்கவல்லது.
- முகநூலின் தூதுவன் (மெசஞ்சர்) மூலம் இந்த செயற்கை நுண்ணறிவுடைய ரோபோட்டிடம் உரையாடலாம்.


## ஆதித்யா திட்டம்

- சூரியனைப் பற்றிய ஆய்விற்கான இந்தியாவின் ஆதித்யா மிஷனின் முதல் விண்கலனை (Aditya-L1) 2019 ஆம் ஆண்டு விண்ணில் இஸ்ரோ திட்டமிட்டு வருகின்றது.
- சூரியனைப் பற்றிய ஆய்விற்கான இந்தியாவின் முதல் திட்டமே ஆதித்யா மிஷன்.
- இது 2019ஆம் ஆண்டு ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து ஏழு ஆய்வுக்கருவிகளோடு (Pay loads) PSLV – XL இராக்கெட் மூலம் அனுப்பப்பட உள்ளது.

- சூரியனுடைய வெளி அடுக்கினை (Carona) ஆய்வு செய்வதையும், அருகாமை புற ஊதா கதிர்களை (Near UV) ஆய்வு செய்வதையும் இத்திட்டம் நோக்கங்களாகக் கொண்டது.
- ஆதித்யா திட்டத்தின் முதல் விண்கலமானது சூரியன்-புவி அமைப்பின் முதல் லெக்ராஞ்சியன் (lag rangion – 1) புள்ளியின் சுற்றுப் பாதையில் (Halo orbit) நிலை நிறுத்தப்படும்.
- இந்த முதல் லெக்ராஞ்சியன் புள்ளியின் சுற்று வட்டப் பாதையில் நிலைநிறுத்தப் பெறுவதன் மூலம் சூரியனை தொடர்ந்து கண்காணிக்க முடியும்.

*லெக்ராஞ்சியன் புள்ளி இடங்கள் (Lagrangian Points)*

- புவி மற்றும் சூரியன் அல்லது புவி மற்றும் சந்திரன் எனும் இரு பெரும் வான்பொருட்களின் கூட்டு ஈர்ப்பு விசை மூன்றாவது சிறிய வான் பொருளினால் உணரப்படும் மைய விலக்கு விசையினை சமப்படுத்தும் விண்வெளியிலுள்ள ஓர் இடமே லெக்ராஞ்சியன் புள்ளியாகும்.
- இருபெரும் வான்பொருள்களின் ஈர்ப்பு விசையின் கூட்டிணைவானது ஓர் சமநிலைப் புள்ளியை உண்டாக்கும். (Point of equilibrium).
- சூரியனைச் சுற்றி 5 லெக்ராஞ்சியன் புள்ளிகள் உள்ளன.
- முதல் புள்ளியான லெக்ராஞ்சியன்-1 (L1) பூமிக்கும் சூரியனுக்குமிடையே அமைந்துள்ளது. இதனால் வான் பொருள்களின் மறைப்பினால் உண்டாகும் கிரகணங்கள் போன்ற நிகழ்வுகளின் தடங்கல்கள் இன்றி சூரியனை எந்நேரமும் இப்புள்ளியிலிருந்து கண்காணிக்க இயலும்.
- இந்த சமநிலைப் புள்ளியில் விண்கலத்தை நிலை நிறுத்தி ஆய்வுகளை மேற்கொள்ளலாம்.




- L2 புள்ளியானது சூரியனுக்கு பின்புறமாக பூமி மற்றும் நிலவின் அருகில் உள்ளது. இந்த புள்ளியில் நிலைநிறுத்தப்படுவதன் மூலம் விண்கலன்கள் ஆழ்ந்த வெளியைப் பற்றி தெளிவான பார்வையை பெற இயலும். மேலும் இப்புள்ளி சூரியனின் கதிரியக்க புலத்திலிருந்து பாதுகாப்பு உடையவை.

- 2018-ல் செலுத்தப்பட உள்ள நாசாவின் ஜேம்ஸ் வெப் (James Webb) விண்வெளி தொலைநோக்கி இந்தப் புள்ளியில் நிலை நிறுத்தப்பட உள்ளது.
- மூன்றாவது லெக்ராஞ்சியன் புள்ளியானது (L3) புவியின் சுற்றுவட்டப்பாதைக்கு எதிராக, சூரியனின் பின்புறத்தில் அமைந்துள்ளது. இதுவரை இந்த இடத்தின் பயன்பாடு குறித்து அறியப்படவில்லை.
- நான்காவது மற்றும் ஐந்தாவது லெக்ராஞ்சியன் புள்ளிகள் நிலையானவை. சூரியனை மையமாகக் கொண்ட புவியின் சுற்று வட்டப் பாதையில் பூமிக்கு முன்னும், பின்னுமாக 60O டிகிரி கோணத்தில் இந்தப் புள்ளிகள் அமைந்துள்ளன.
- இவை நிலையான தன்மையுடைய புள்ளிகள் என்பதால் தூசுகளும், விண்கற்களும் இவ்விரு புள்ளிகளில் குவிந்துள்ளன.
- L4 மற்றும் L5 ஐ சுற்றிய விண்கற்கள் டிரோஜன்கள் (Trojans) எனப்படும்.
- பூமிக்கு அறிமுகமான ஒரே டிரோஜன் விண்கல்லான, 2010 TK7 விண்கல்லானது இப்பகுதியில் தான் கண்டுபிடிக்கப்பட்டது.
- இதற்கு முன் 1995ல் அமெரிக்காவின் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசாவும் ஐரோப்பிய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான ESA-வும் கூட்டிணைந்து சூரியனை ஆய்வு செய்ய SOHO எனும் விண்கலத்தை அனுப்பியது. இருப்பினும் இவ்விண்கலன் தன் செயல்பாட்டை தொடங்கிய உடனே உடைந்து சிதறியது குறிப்பிடத்தக்கது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## இந்தியாவின் முதல் கலைமான் (பிளாக்பக்) பாதுகாப்பு சரணாலயம்

- உத்திரப்பிரதேச மாநிலத்தின் அலகாபாத் பகுதியில் உள்ள யமுனை நதிக்குட்பட்ட மேஜா வனப் பிரிவில் கலைமான் (பிளாக்பக்) இன மான்களுக்கான பாதுகாப்பு சரணாலயத்தை அமைக்க உத்திரப்பிரதேச மாநில அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.
- சுமார் 350 கலைமான்கள் இப்பகுதியில் வாழ்வதாக கணக்கிடப்பட்டுள்ளது.
- ஆனால் நாட்டின் ஒரு சில சரணாலயங்கள் மற்றும் தேசிய வனவிலங்கு பூங்காக்களில் மட்டுமே இம்மான்கள் வசிக்கின்றன.

  அவற்றுள் சில,

  - ✓ குஜராத்திலுள்ள வேலவதார் வன விலங்கு சரணாலயம்.
  - ✓ கர்நாடகாவிலுள்ள ராணிபென்னுர் சரணாலயம்.
- 1972-ஆம் ஆண்டின் வன உயிர் பாதுகாப்பு சட்டத்தின் பிரிவு 36 A (1) மற்றும் (2)-ன் கீழ் உத்திரப்பிரதேச அரசு அமைக்கவிருக்கும் இந்த பாதுகாப்பு சரணாலயமானது கலைமான்களுக்கென பிரத்யேகமாக ஏற்படுத்தப்படும் நாட்டின் முதல் கலைமான் பாதுகாப்பு சரணாலயமாகும்.

### *கலைமான்கள்*

- இந்திய கலைமான்கள் ஓர் மறிமான்களாகும். தற்போது இவை மறிமான்கள் பேரினத்தைத் சேர்ந்த ஒரே உயிர்வாழும் மான் இனமாகும்.
- சிறுத்தைகளுக்கு அடுத்து உலகின் வேகமான விலங்கினமாக கலைமான்கள் கருதப்படுகிறது.

- இவை ஒன்றிலிருந்து நான்கு சுழற் திருகுகளை கொண்ட வளையக் கொம்புகளை உடையவை.
- பொதுவாகப் பெண் கலைமான்களுக்குக் கொம்புகள் இருப்பதில்லை.
- இந்திய வன விலங்குப் பாதுகாப்புச் சட்டம் 1972-ன் அட்டவணை ஒன்றின் (Schedule 7) கீழ் இந்தக் கலைமான்கள் சேர்க்கப்பட்டுள்ளதால், இவற்றின் மீதான வேட்டையாடுதல் தடை செய்யப்பட்டுள்ளது.
- இவை பன்னாட்டு இயற்கை பாதுகாப்புச் சங்கத்தின் (IUCN-International Union For Conservation of Nature) சிவப்புத் தரவு புத்தகத்தின் (Red Data Book) குறைந்த கவனமுடைய (Least Concerned) வகைப்பாட்டில் வகைப்படுத்தப்பட்டுள்ளது.
- ராஜஸ்தானில் உள்ள பிஷ்னாய் (Bishnoi) சமூகத்தினர், கலைமான்கள் மற்றும் சின்காரா இன மான்களை பாதுகாக்கும் தங்களுடைய நடவடிக்கைகளுக்காக உலகப் பெயர் பெற்றவர்கள்.

## மேற்குத்தொடர்ச்சி மலைகள்-பிரம்பு பனைகள்

- ஆராய்ச்சியாளர்கள் அகஸ்தியர் உயிர்க்கோள இருப்பு, அமைதிப்பள்ளத்தாக்கு-முக்குருத்தி தேசியப் பூங்கா மற்றும் கூர்க்-வயநாடு வனப்பகுதிகளின் அருகே உள்ள பாதுகாக்கப்படாத பகுதிகள் பிரம்புப் பனை (Rattan) இனங்களின் பெரும் எண்ணிக்கை உடைய பகுதிகளாக (Hotspot) இருப்பதை கண்டுபிடித்துள்ளனர்.
- ராட்டன் (Rattan) என்பது கலாமொய்டியே துணைக்குடும்பத்தைச் சேர்ந்த உலகின் பழமையான சுமார் 600 நெடுபடர் பனை இனங்களின் பொதுப் பெயராகும்.
- கச்சாப் பிரம்பு பனையானது மரப்பயன்பாட்டு உபகரணங்களாக செய்யப்பட்டு பல்வேறு மரச்சாமான்கள் தயாரிப்பில் பயன்படுத்தப்படுகிறது.
- அதிகப்படியான அறுவடை, இருப்பிட அழிவு போன்ற பல்வேறு அச்சுறுத்தல்களை இவை சந்தித்து வரும் வேளையில் தற்போது இவற்றிற்கான பாதுகாப்பு குறித்த கவனம் மிக முக்கிய தேவையுடைய ஒன்றாகும்.
- கள ஆய்வுகள் மற்றும் ஆவணங்களில் இருந்து பெறப்பட்ட இடவமைப்புத் தகவல்கள் மூலம் புனேவின் இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர்களும், பெங்களூருவின் சூழலியல் மற்றும் சுற்றுப்புறத்திற்கான அசோகா அறக்கட்டளையின் ஆராய்ச்சியாளர்களும் மேற்குத் தொடர்ச்சி மலை முழுவதும் குறிப்பிட்ட பிரதேசத்திற்குட்பட்ட (endemic) 21 பிரம்பு இனங்களின் பரவலை வரைபடமிட்டுள்ளனர்.
- தமிழ்நாடு மற்றும் கேரளாவில் அமைந்துள்ள மேற்குத்தொடர்ச்சி மலைகளில் இந்தப் பனைப் பிரம்புகள் அதிகமான எண்ணிக்கையில் காணப்படுகின்றன.

## ஒராங்குட்டானின் புது வகை இனம் கண்டுபிடிப்பு

- போங்கோ டபானுலியேன்சிஸ் எனப் பெயருள்ள ஒராங்குட்டானின் புதிய வகை மனிதக்குரங்கு இனம் வட சுமத்ரா தீவின் டபானுலி மாவட்டத்தில் உள்ள பாடாங்டோரு வனப்பகுதியில் கண்டறியப்பட்டுள்ளது.
- கடைசி 90 வருடங்களில் விஞ்ஞானிகளால் விளக்கமளிக்கப்பட்ட முதல் பெரும் மனிதக்குரங்கு இன வகை இதுவே ஆகும்.
- இவை உலகின் மிகவும் அச்சுறுத்தலுக்குள்ளான (Most Endangered) பெரும் மனிதக்குரங்கினமாகும்.
- உலகில் தற்போது இவ்வகை ஒராங்குட்டான்களின் எண்ணிக்கை வெறும் 800 மட்டுமே ஆகும்.

- இவற்றின் மண்டைஓட்டு அமைவு, பற்கள் மற்றும் ஜீன்கள் ஒராங்குட்டானின் பிற இருவகை இனங்களை விட வித்தியாசமானவை.
- டபானுலி ஒராங்குட்டான்கள் முதன் முதலில் 1930-ல் தனித்த இனத்தொகையுடைய மனிதக்குரங்கினமாக கண்டறியப்பட்டன.
- அதுவரை விஞ்ஞானிகளால், ஒராங்குட்டனின் இந்த ஒரு வகைக் குரங்கானது போர்னியன், சுமத்ரன் எனும் பிற இருவகை ஒராங்குட்டானின் இன வகையிலிருந்து வேறுபட்டவை என உறுதிப்படுத்த இயலவில்லை.

## புதிய எறும்பினம்

- கேரளாவின் மேற்குத் தொடர்ச்சி மலைத் தொடரில் அமைந்துள்ள பெரியார் புலிகள் காப்பகத்தில் புதிய எறும்பின வகை ஒன்றை ஆராய்ச்சிகள் கண்டுபிடித்துள்ளனர்..
- இந்தியாவின் "எறும்பு மனிதன்" என்று அழைக்கப்படும் புகழ்பெற்ற எறும்பியலாளரான (myrmecologist) முஸ்தக் அலியை கவுரவிக்கும் வகையில் அவருடைய பெயர்கொண்டு இந்த புதிய எறும்பினத்திற்கு "தைரன்னோமைர்மெஸ் அலி" (Tyrannomyrmen Alli அல்லது T.alli) எனப் பெயரிடப்பட்டுள்ளது.
- கண்டுபிடிக்கப்பட்டுள்ள இப்புதிய எறும்பினமானது தென்னிந்தியா மற்றும் இலங்கையில் இருந்து தென்கிழக்கு ஆசியா வரை நீண்டுள்ள இந்தோ-மலாய் உயிர் மண்டலத்தில் (Indo-Malayan bio-region) பரவியுள்ள எறும்பு பேரினத்தின் மிர்மிசின் (myrmicine) எனும் அரிய வகை துணைக்குடும்பத்தைச் சேர்ந்தவை ஆகும்.
- தற்போது இவை அரிய தைரன்னேமைர்மெஸ் பேரினத்தைச் சேர்ந்த நான்காவது இனமாகும். இந்தியாவில் உள்ள இரண்டாவது தைரன்னோமைர்மெஸ் பேரினத்தை சேர்ந்த இனமாகும்.
- எறும்புகளைப் பற்றிய படிப்பு மிர்மிகாலாஜி (myrmecology) எனப்படும்.

## புதிய காட்டு இன வாழை

- மியூசா பரம்ஜிடியானா எனும் தாவரவியல் பெயருடைய புதிய காட்டு இன வாழையை அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளில் தாவரவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- வட அந்தமானின் கிருஷ்ணபுரி வனத்தில் இக்காட்டு வாழை இனம் கண்டறியப்பட்டுள்ளது.
- உண்ணத்தக்க, இனிப்புடன் புளிப்பு சுவையுடைய, புடைத்த வடிவமுடைய பல விதைகளைக் கொண்ட, படகு போன்ற வடிவமுடைய வாழைப் பழங்களை காய்க்கும் இக்காட்டு இன வாழையானது 9 மீட்டர் வரை வளரக் கூடியது.
- சர்வதேச பன்னாட்டு இயற்கை பாதுகாப்பு சங்கத்தின் (IUCN-International Union For Conservation Of nature) சிவப்பு பட்டியலின் (Red List) கீழ் இக்காட்டு இன வாழையானது மிகவும் அழியும் தருவாயில் உள்ள தாவர இனமாக (Critically Endangered) பட்டியலிடப்பட்டுள்ளது.
- இது வரை அந்தமான் மற்றும் நிக்கோபர் தீவுகளின் இரு இடங்களில் மட்டுமே இவை கண்டறியப்பட்டுள்ளன.
- இந்தியாவின் இந்திய தாவரவியல் கணக்காய்வு நிறுவனத்தின் (Botanical Survey Of India) தற்போதைய இயக்குநரான பரம்ஜித் சிங்-ஐ கவுரவிக்கும் விதத்தில் இப்புது காட்டு இன வாழைக்கு "மியூஸா பரம்ஜிடியானா " என பெயரிடப்பட்டுள்ளது.

## 19வது சர்வதேச இயற்கை மாநாடு (Organic World Congress)

- கடந்த 40 வருடங்களில் முதன்முறையாக, சர்வதேச இயற்கை மாநாடு இந்தியாவில் நடத்தப்பட உள்ளது. இது உத்திரப் பிரதேச மாநிலத்தில் உள்ள நொய்டாவில் நடத்தப்படவிருக்கிறது.
- சர்வதேச இயற்கை மாநாடானது இயற்கை விவசாய அமைப்புக்களின் சர்வதேசக் கூட்டமைப்பால் (IFOAM- International Federation of Organic Farming Movements) மூன்று வருடத்திற்கு ஒரு முறை பல்வேறு நாடுகளில் நடத்தப்படுகிறது.
- சர்வதேச இயற்கை மாநாட்டின் முந்தைய பதிவு 2014ல் துருக்கியில் உள்ள இஷ்தான்புல் நகரில் நடைபெற்றது.

## ஆலிவ் ரெட்லிகள் (சிற்றாமைகள்)

- ஒரிஸா மாநிலத்திலுள்ள கேந்திரப்பாரா மாவட்டத்தின் காஹிர்மாதா கடற்கரையானது உலகின் மிகப்பெரிய ஆலிவ் ரெட்லி (Olive Redley) ஆமை இனங்களின் இனப்பெருக்க மையமாகும்(rookery).
- தற்போது இந்த அரிய வகை ஆலிவ் ரெட்லி (சிற்றாமை) ஆமைகள் முட்டையிடுவதற்கு வலையமைப்பதற்காக (Nesting) காஹிர்மாதா கடற்கரைக்கு பல்லாயிரக் கணக்கில் படையெடுத்துள்ளன.
- ஆலிவ் ரெட்லி ஆமைகள் கடல் ஆமைகளிலேயே மிகச் சிறிய ஆமைகளாகும். இவை ஓர் அனைத்துண்ணிகளாகும்(omnivorous).
- தென் அட்லாண்டிக், இந்திய பெருங்கடல் போன்ற வெப்ப மண்டல கடல்களில் மட்டுமே இவை வாழக் கூடியவை.
- இந்த ஆமைகள் அரிபடாஸ் (Aribadas) எனப்படும் ஒரே நேரத்திய ஒத்திசைவான, வெகுஜன எண்ணிக்கையில் முட்டையிடுதலுக்காக வலையமைக்கும் செயலுக்கு பெயர் பெற்றவை.
- இவை ஆண்டிற்கு இரண்டு அல்லது மூன்று முறை முட்டையிட வலையமைக்கும்.
- இவற்றின் முட்டையிடும் பருவம் ஜீன் முதல் டிசம்பர் வரை என உலகம் முழுவதும் வேறுபடும். இவற்றின் உச்ச முட்டையிடும் பருவம் செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்கள் ஆகும்.
- இந்த ஆமைகள் பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்பு சங்கத்தின் (IUCN – International Union for Conservation of Nature) சிவப்பு பட்டியலின் (Red List) காப்பு நிலையில் (Conservation Status) 'அழிவாய்ப்பு இனம்' (Vulnerable) என பட்டியலிடப்பட்டுள்ளன.
- மேலும் இவை வன விலங்குகள் மற்றும் தாவரங்களின் அருகி வரும் இனங்கள் மீதான சர்வதேச வர்த்தக உடன்படிக்கையின் (Convention on International Trade in Endangered Species of Wild Fauna and Flora) பிற்சேர்க்கை 1-ல் (Appendix – I) சேர்க்கப்பட்டுள்ளன.
- ஒடிஸாவின் காஹிர்மாதா சரணாலயத்தின் ஒரு பகுதியான நாசி II தீவு (Nasi II Islands) ஆலிவ் ரெட்லி ஆமைகள் முட்டையிட வலையிடும் உலகின் மிகப் பெரிய பகுதிகளில் ஒன்றாகும்.
- CITES உடன்படிக்கை வாஷிங்டன் உடன்படிக்கை என்றும் அழைக்கப்படும்.

## காற்று மாசுபாடு ஆய்வு-2017

- அண்மையில் வெளியிடப்பட்ட "இந்திய மாநிலங்களின் சுகாதாரம் மற்றும் மாநிலங்கள் அளவிலான நோய்சுமை" அறிக்கையின் படி, நாடு முழுவதும், காற்று மாசுபாடுகளால் உண்டாகும் நோய்களினால் விளையும் மரணங்கள் மற்றும் குறைபாடுகள் 17 சதவீதம் அதிகரித்துள்ளது.

- இந்த ஆய்வறிக்கை “லான்செட் ” மருத்துவ இதழில் வெளியிடப்பட்டுள்ளது.
- இந்த அறிக்கையானது 2016-ல் உண்டான உயர் காற்று மாசுபாட்டு அளவால், பெருமளவில் இறப்புகளும், ஆரோக்கியமின்மைகளும் ஹரியானா, டெல்லி, பஞ்சாப், பீகார், ராஜஸ்தான், மேற்கு வங்கம், உத்திரப்பிரதேசம் போன்ற மாநிலங்களில் ஏற்பட்டிருப்பதை முன்னிலைப்படுத்திக் காட்டுகின்றது.
- ஆந்திரப் பிரதேசம், ஜார்கண்ட், மஹாராஷ்டிரா, ஒடிஸா போன்ற மாநிலங்களில் குறைந்த அளவிலான காற்று மாசுபாட்டின் பதிவை இந்த அறிக்கை சுட்டுகின்றது.
- இந்த அறிக்கையின்படி, 1990 முதல் 2016 வரையிலான காலகட்டத்தில் பிறப்பின் போதான ஆயுள் எதிர்பார்ப்பு அல்லது சராசரி வாழ்நாள் ஆயுட்காலம் (life expectancy at birth) ஆண்கள் மற்றும் பெண்கள் இருபாலருக்கும் கணிசமான அளவு அதிகரித்துள்ளது.
- 1970-ல் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு முறையே 59.7 ஆண்டுகள் மற்றும் 58.3 ஆண்டுகள் என இருந்த சராசரி வாழ்நாள் ஆயுட்காலம் 2016-ல் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு முறையே 70.3 ஆண்டுகள் மற்றும் 66.9 ஆண்டுகள் என உயர்ந்துள்ளது.
- இந்த ஆய்வறிக்கையின் படி, நாட்டின் மிக ஆரோக்கியமான மாநிலமாக கேரளா உள்ளது. இங்கு சராசரி ஆயுட்காலம் ஆண்களுக்கு 73.8 ஆண்டுகளாகவும், பெண்களுக்கு 78.7 ஆண்டுகளாகவும் உள்ளது.
- இது தேசிய சராசரி வாழ்நாள் ஆயுட்காலத்தை விட 8 ஆண்டுகள் அதிகமாகும்.
- இந்தியாவின் தேசிய சராசரி வாழ்நாள் ஆயுட்காலம் 70 .3 ஆண்டுகள் ஆகும்.
- இந்தியாவின் மாநிலங்கள் அளவிலான நோய் சுமை முன்னெடுப்பானது பின்வரும் அமைப்புகளினுடைய கூட்டிணைவுகளின் தொடக்கமாகும்.
  - ✓ இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கவுன்சில் (Indian Medical Research Council-ICMR
  - ✓ இந்திய பொது சுகாதார அறக்கட்டளை (PHFI – Public Health Foundation of India)
  - ✓ மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தோடு கூட்டிணைவுடைய சுகாதார அளவீடு மற்றும் மதிப்பீட்டு நிறுவனம் (Institute for Health Metrics and Evaluation – IHME)
  - ✓ இந்திய அரசோடு இணைந்து 100 இந்திய நிறுவனங்களை சேர்ந்த பங்கெடுப்பாளர்கள் மற்றும் நிபுணர்கள் குழு.

## புதிய ஒட்டுண்ணி கண்டுபிடிப்பு - நாகலாந்து

- தாவரவியல் ஆராய்ச்சியாளர்கள் குளோரோபில் அற்ற, பூக்கும் தன்மையுடைய புதிய ஒட்டுண்ணித் தாவர இனத்தை நாகாலாந்தில் கண்டுபிடித்துள்ளனர்.
- இவை ஹாஸ்டோரியம் (haustorium) எனும் உறிஞ்சு உறுப்புகளின் மூலம் ஓம்புயிரிகளிலிருந்து (Host) ஊட்டச்சத்துகளை உறிஞ்சி உயிர் வாழத்தக்க தன்மையுடையவை.
- ஹாஸ்டோரியம் என்பது ஒட்டுண்ணிகளின் சிறப்பு உறுப்பு அமைப்பாகும். இவற்றின் மூலம் ஒட்டுண்ணிகள் தங்களை ஓம்புயிரிகளின் திசுக்களுடன் இணைத்துக் கொண்டு ஊட்டச்சத்துகளை உறிஞ்சிவிடும்.
- நாகா மக்களின் “கொன்யாக்” (Konyak) பழங்குடியினரை கவுரவிக்கும் வகையில் புதிதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ள இந்த ஒட்டுண்ணிக்கு கிளேடோவியா கொன்யாகியானோரம் (Gleadovia Konyakianorum) எனப் பெயரிடப்பட்டுள்ளது.
- இது ஓர் முழு ஒட்டுண்ணியாகும் (ஹாலோ பாரசைட் – Haloparasite).

- இவை தங்களுக்குத் தேவையான முழு ஊட்டச்சத்துகளையும் ஓம்புயிரிகளிலிருந்தே பெறும்.
- இந்த ஒட்டுண்ணியானது நாகாலாந்தில் 1,500 முதல் 1,600 மீட்டர் கடல் மட்ட உயரத்தில் அமைந்துள்ள பகுதி – மித வெப்ப மண்டல காடுகளில் (semi-evergreen forest) கண்டறியப்பட்டுள்ளது.
- கிளேடோவியா கொன்யாகியானோரம் தாவரமானது உலகம் முழுவதும் கிளேடோவியா பேரினத்தில் கண்டறியப்பட்டுள்ள நான்காவது இனமாகும்.
- இவை ஓர் வேர் ஒட்டுண்ணியாகும். இவை 10 செ.மீ. உயரம் வரை வளரக் கூடியது.
- இவை குழாய் வடிவிலான (tubular) வெள்ளை நிறப் பூக்களை பூக்கவல்லது.

## M-STRIPES

- M-STRIPES [Monitoring System for Tigers Intensive Protection and Ecological Status] என்பது இந்திய வனவிலங்குகள் நிறுவனத்தினால் [WII – Wildlife Institute of India] உருவாக்கப்பட்ட ஓர் செயலி ஆகும்.
- இந்த செயலி முதல் முறையாக அனைத்திந்திய புலிகள் கணக்கெடுப்பில் (All India Tiger Estimation) பயன்படுத்தப்பட உள்ளது.
- இந்த செயலி ஏற்கெனவே சில தேசியப் பூங்காக்களில் பயன்பாட்டில் உள்ள போதிலும், தற்போது மேற்கொள்ளப்படவுள்ள நான்காவது அனைத்திந்திய புலிகள் கணக்கெடுப்பில் மட்டுமே இவற்றின் பயன்பாடு கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
- புலிகள் கணக்கெடுப்பின் போது மனிதர்களால் ஏற்படும் பிழைகளை தவிர்த்து சரியான கணக்கெடுப்பை மேற்கொள்ள இந்த செயலி உதவும்.

## பான்-ஐநா பருவநிலை மாற்றத்திற்கான மாநாடு

- பருவநிலை மாறுபாடு மீதான ஐ.நா. கட்டமைப்பு உடன்படிக்கையின் (UNFCCC – United Nations Framework Convention on Climate Change) உறுப்பு நாடுகளின் பருவநிலை மாறுபாட்டுக்கான 23 வது மாநாடு [COP 23 – Conference of Parties 23] அண்மையில் ஜெர்மனியில் உள்ள பான் (Bonn) நகரில் நடைபெற்றது.
- பிஜி (Fiji) நாடு இந்த மாநாட்டிற்குத் தலைமை தாங்கியது.
- இந்த மாநாட்டின் முடிவில் உறுப்பு நாடுகள் "தலாநோவா பேச்சுவார்த்தை" (Talanoa dialogue) – க்கான திட்ட வரைவை ஏற்படுத்தியுள்ளன.
- தலாநோவா பேச்சுவார்த்தையானது பருவநிலை மாற்றத்தை தடுப்பதற்கான உறுப்பு நாடுகளின் தணிப்பு நடவடிக்கைகளை மதிப்பிடும் ஓராண்டு கால செயல்முறையாகும்.
- மேலும் இம்மாநாட்டில் 2015-ல் மேற்கொள்ளப்பட்ட "பாரிஸ் பருவநிலை மாற்றத்திற்கான ஒப்பந்தத்தை" அமல்படுத்துவதற்குத் தேவையான விதிகள் வகுக்கப்பட்டதோடு, வளர்ந்த பணக்கார நாடுகள் அவை ஏற்றுக்கொண்ட 2020-க்கு முன்னதான பருவநிலை மாற்றத் தணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிட ஏற்ற கடமைகளை நிறைவேற்றுவதற்கான உறுதிகளும் இயற்றப்பட்டன.
- தலாநோவா என்பது பிறரின் மீது குறையைச் சாடாமல் நாடுகளுக்கிடையேயான வேற்றுமைகளை அனைவரும் பங்கேற்கும், உள்ளடங்கிய, வெளிப்படையான பேச்சுவார்த்தையின் மூலம் தீர்வு காண பிஜி மற்றும் பசுபிக் தீவுகளில் பயன்படுத்தப்படும் பாரம்பரிய தீர்வை அணுகுமுறையாகும்.

## வன்கார ஈக்கள்

- ❖ அமெரிக்காவின் யேசோமைட் தேசியப் பூங்காவின் கிழக்கில் அமைந்துள்ள கடின வாழ்வு சூழலுடைய (in hospitable) கலிபோர்னியா ஏரியில் செழித்தோங்கும் ஓர் சிறிய ஈக்களே வன் கார / களர் ஈக்கள் (Alkali Flies) ஆகும்.
- ❖ இந்த ஏரி பெருங்கடலைப் போன்று மூன்று மடங்கு உவர்ப்பையும், உயர் அளவிலான PH-ம், அதிக அளவிலான சோடியம் கார்பனேட்டையும், போராக்ஸைட்டையும் கொண்டதால் பெரும்பாலும் எண்ணெயைப் போலான நீரை உடையது.
- ❖ அதனால் இந்த வன்கார ஈக்களால் ஈரமடையாமல் நீரில் மூழ்கி வர இயலும்.
- ❖ இந்த கார ஈக்கள் கடுமையான உவர்ப்பும், காரத்தன்மையும் உள்ள நீரை மொய்க்கவல்லது. இருப்பினும் நீரை விட்டு வெளிவரும் போது ஈரமடையாமலே இருக்கும்.
- ❖ 6 மி.மீட்டர் (ஒரு இன்ச்சில் கால் பங்கு) நீளமுடைய இந்த வன்கார வண்டுகள் சிறப்பு மெழுகுடன் கூடிய பெரும் எண்ணிக்கையிலான நேர்த்தியான மயிரிழைகளைக் கொண்டவை.
- ❖ இவை ஈக்களின் உடலை இறுக அணைத்து குமிழ் வடிவத்தில் மூடுவதால் நீரில் மூழ்கும் போது ஈரமாகாமல் தடுக்கின்றன.

## இடம் பெயர் பறவைகள் – சில்கா ஏரி

- ❖ பல்லாயிரக்கணக்கான மைல்களை கடந்து லட்சக்கணக்கான இடம் பெயர் பறவைகள் சில்கா ஏரியை நோக்கி வரத்தொடங்கி உள்ளன.
- ❖ சில்கா ஏரியின் கரையில் அமைந்துள்ள சில்கா மற்றும் மங்களஜோடி கிராமங்களில் உள்ள நலபானா பறவைகள் சரணாலயத்தின் ஈர நிலங்களில் முக்கிய பறவைகளின்கூட்டம் காணப்படுகின்றன.
- ❖ ஊசிவால் வாத்துகள், இடம் பெயரும் வாத்துகள், உள்ளான் பறவைகள், கருவால் வாத்துகள் போன்ற பல பறவைகள் இங்கு இடம் பெயர்ந்து வந்துள்ளன.

*சில்கா ஏரி*

- ❖ சில்கா ஏரி ஆசியாவின் மிகப்பெரிய உவர் நீர் காயல் (lagoon) ஆகும்.
- ❖ இது உலகின் இரண்டாவது மிகப்பெரிய காயலாகும்.
- ❖ அமெரிக்காவின் நியூ கேலடோனியாவில் உள்ள புதிய கேலடோனியன் பவளப்பாறை திட்டுகள் (Barrier Reef) உலகின் முதல் மிகப் பெரிய காயலாகும்.
- ❖ சில்கா ஏரியானது ஒரிஸா மாநிலத்தில், வங்கக்கடலில், தயா (daya) நதியின் முகத்துவாரத்தில் அமைந்துள்ளது.
- ❖ இது இந்திய துணைக்கண்டத்தில் அமைந்திருக்கிற இடம்பெயரும் பறவைகளுக்கான மிகப்பெரிய குளிர்கால தங்குமிடப் பகுதியாகும்.
- ❖ 1981-ல் சில்கா ஏரியானது சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த ஈரநிலங்களுக்கான ராம்சார் உடன்படிக்கையில் (wetland of international importance under the Ramsar Convention) சேர்க்கப்பட்ட முதல் இந்திய ஈரநிலமாகும் (Wetlands).
- ❖ IUCN-னின் சிவப்பு தரப்பட்டியலில் பட்டியலிடப்பட்டு உள்ள மிகவும் அரிய, அழியத்தகு பறவை மற்றும் விலங்கு இனங்கள் இந்த காயலில் (lagoon) வசிக்கின்றன. இது இந்தியாவில் உள்ள உயிர்பல்வகைத் தன்மையுடைய முக்கிய பகுதி (Hotspot) களில் ஒன்றாகும்.

## புதிய பல்லி இனம் கண்டுபிடிப்பு

- ஆந்திரா - ஒரிசா எல்லையில் அமைந்துள்ள கிழக்குத் தொடர்ச்சி மலைத் தொடரின் மகேந்திரகிரி மலைப்பகுதியில் புதிய பல்லி (Gecko) இனம் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது. இவை ஹெமிடாக்ட்டைலஸ் (Hemidactylus) பேரினத்தைச் சார்ந்தவை.
- வடக்கு ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள வடமஹேந்திரகிரி மலைப்பகுதியின் சில இடங்களிலும், கடலோர மலைப் பகுதிகளிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
- இது இம்மலைத் தொடரில் கண்டறியப்பட்ட இரண்டாவது குறிப்பிட்ட நிலம் சார் வகை பல்லியாகும் (endemic) மற்றும் முதுகெலும்புடைய (vertebrate) மூன்றாவது பல்லி இனமாகும்.
- இதற்கு முன் முதல் நிலம் சார் தோற்றமுடைய "House Lizard" எனும் பெயருடைய பல்லி சத்திஸ்கர் மாநிலத்திலுள்ள கங்கர் காட்டி தேசியப் பூங்காவில் கண்டுபிடிக்கப்பட்டது.
- இவை இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்ட ஹெமிடாக்ட்டைலஸ் பேரினத்தின் 32 வது இனமாகும்.
- புதிதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ள இப்பல்லி இனத்திற்கு ஹெமிடாக்டைலஸ் சுஷில் டுட்டாய் அல்லது டுட்டாவின் மஹேந்திரகிரி பல்லி என ஒரிசாவின் புகழ்பெற்ற ஊர்வன மற்றும் நீர்நில வாழ் விலங்கின ஆராய்ச்சியாளரான (Herpetologist) சுஷில் குமார் டுட்டாவை கவுரவிக்கும் வகையில் அவர் பெயர்கொண்டு இப்பல்லிக்கு பெயரிடப்பட்டுள்ளது.
- Herpetology என்பது ஊர்வன உயிரிகள் மற்றும் நிலநீர் வாழ் உயிரிகளைப் பற்றி படிக்கும் விலங்கியலின் ஓர் பிரிவாகும்.

## நீலக்குறிஞ்சி காப்பகம்

- கேரள மாநிலத்தின் இடுக்கி மாவட்டத்தில் மூணாரில் உள்ள நீலக்குறிஞ்சி காப்பகத்தின் எல்லையை மறுவரையறை செய்ய மத்திய அரசு முடிவெடுத்துள்ளது.
- நீலக்குறிஞ்சி காப்பகமானது 3200 ஹெக்டேர் பரப்புடையது.
- நீலக்குறிஞ்சி மலர்கள் பன்னிரு வருடங்களுக்கு ஒரு முறை பூக்கும். இவற்றின் பூக்குங் காலங்மானது குறிஞ்சி இனங்களைப் பொறுத்து மாறுபடும்.
- புதர் (Shrubs) வகைத் தாவரங்களான இவை தென்னிந்தியாவின் மேற்குத் தொடர்ச்சி மலைகளின் சோலைவனக் (Shola Forest) காடுகளிலும், கிழக்குத் தொடர்ச்சி மலைகளின் சேர்வராயன் மலைகளிலும் காணப்படுகின்றன.
- 2018 ஆம் ஆண்டு ஜீலையில் நீலக் குறிஞ்சிகளின் மலரல் எதிர்பார்க்கப்படுகின்றது.
- ஸ்ட்ரோபைலாந்தஸ் (Strobilanthes) பேரினத்தை சேர்ந்த இவற்றில் 250 சிற்றினங்கள் உள்ளன.

# மாநிலச் செய்திகள்

## டிஜிட்டல் விவசாயத்தில் செயற்கை நுண்ணறிவு

- டிஜிட்டல் விவசாயத்தில் செயற்கை நுண்ணறிவு நுட்பத்தை பயன்படுத்தவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் மைக்ரோசாஃப்ட் நிறுவனத்துடன் கர்நாடகா அரசு கையெழுத்திட்டது.

- மேகக் கணிமை, செயற்கை நுண்ணறிவு நுட்பம் (AI) மற்றும் மேம்பட்ட பகுப்பாய்வு போன்ற தொழிற் நுட்பம் சார்ந்த தீர்வை சேவைகளை அளித்து விவசாயிகளை மேம்படுத்துவதற்காக மாபெரும் தொழில்நுட்ப நிறுவனமான மைக்ரோசாஃப்ட் நிறுவனத்துடன் கர்நாடக அரசு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- மைக்ரோசாஃப்ட் நிறுவனம் மித வெப்ப மண்டல பகுதியின் வறள் நிலப் பயிர்களுக்கான சர்வதேச ஆராய்ச்சி நிறுவனத்துடன் (International Crops Research Institute for the Semi-Arid Tropics-ICRISAT)) இணைந்து பூச்செத்தனா திட்டத்தின் (Bhoochetana) கீழ் வரம்புடைய சோதனைத் திட்டமாக கோடைப் பயிர் பருவத்திற்கான (Kharif Season) பயிர்விதைப்பு ஆலோசனை சேவையை தொடங்கியுள்ளது.

### *பூச்செத்தனா திட்டம் ( Project Bhoochetana)*


- இது தேர்ந்தெடுக்கப்பட்ட மானாவாரிப் பயிர்களின் (rainfed rops) சராசரி உற்பத்தித் திறனை 20% சதவீதமாக அதிகரிப்பதற்கான பணி நோக்கம் கொண்ட புதிய மாதிரி திட்டமாகும்.

## நோபல் பரிசு நிகழ்ச்சித் தொடர் – கோவா

- 2018-ஆம் ஆண்டின் இந்திய நோபல் பரிசுத் தொடரை கோவாவில் நடத்த கோவா மாநில அரசானது மத்திய உயிர்த் தொழிற்நுட்பத்துறை, மத்திய அறிவியல் மற்றும் தொழிற்நுட்ப அமைச்சகம், மற்றும் சுவீடனின் நோபல் ஊடகம் ஆகியவற்றுடன் ஓர் முத்தரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளது.
- இந்த பெரும் நிகழ்வானது சுவீடனின் நோபல் அருங்காட்சியகத்திலிருந்து கொண்டு வரப்படும் பொருட்களால் நடத்தப்படும் ஒரு மாதக் கண்காட்சியோடு இணைந்து நடத்தப்படும்.
- சுவீடன் நோபல் மீடியா, மத்திய அறிவியல் மற்றும் தொழிற்நுட்ப அமைச்சகம், அறிவியல் மற்றும் தொழிற்நுட்பத் துறை அமைச்சகத்தோடு இணைந்து மத்திய உயிர் – தொழிற்நுட்பத் துறையால் இத்தொடர் நடத்தப்படுகிறது.
- மக்களை தொழிற்நுட்ப கல்வி அல்லாமல், அச்சு அசலான அறிவியல் (Pure Science) பாடக் கல்வியை நோக்கி அழைத்து வருவதற்காக இத்தொடர் நடத்தப்படுகிறது.
- இதற்கு முன் இந்நோபல் பரிசுத் தொடர் குஜராத்தில் நடத்தப்பட்டுள்ளது.

## டிஜிட்டல் மாற்றத்திற்கான மிக சாதகமான சூழ்நிலை - பெங்களூரு

- பொருளாதார நுண்ணறிவுப் பிரிவு (Economist Intelligence Unit) என்ற அமைப்பின் அறிக்கையின் படி, உலக பொருளாதார மையங்களான சான்பிரான்சிஸ்கோ, லண்டன், சிங்கப்பூர் மற்றும் பெய்ஜிங் போன்ற நகரங்களை பின்னுக்குத் தள்ளி உலக நகரங்களின் வரிசையில் பெங்களூரு முதலிடத்தைப் பிடித்துள்ளது.




| | Overall environment | Innovation and entrepreneurship | Financial environment | People and skills | Development of new technology | ICT infrastructure |
|---|---|---|---|---|---|---|
| Bengaluru | 8.25 | 8.2 | 7.9 | 7.9 | 7.75 | 7.65 |
| San Francisco | 7.71 | 7.32 | 7.48 | 7.57 | 7.59 | 7.1 |
| London | 7.24 | 7.53 | 7.3 | 7.53 | 7.24 | 7.47 |
| New Delhi | 7.59 | 7.43 | 7.55 | 7.55 | 7.43 | 7.15 |
| Singapore | 6.89 | 6.74 | 6.85 | 6.81 | 7.04 | 6.89 |

*Ratings were given on the scale of ten*



- இந்த ஆய்வு, டிஜிட்டல் மாற்றத்திற்கு மிக சாதகமான சூழ்நிலையைக் கொண்ட நகரங்களை பட்டியலிடுவதற்கு மேற்கொள்ளப்பட்டதாகும்.
- ஒட்டு மொத்த சூழ்நிலை, புதுமை மற்றும் தொழில் முனைவோர் திறன், நிதிநிலையின் சூழ்நிலை, மக்கள் மற்றும் அவர்களின் திறன், புதிய தொழில் நுட்பத்திற்கான வளர்ச்சி மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறையின் கட்டமைப்பு ஆகிய காரணிகள் இந்த தரவரிசைக்கு பயன்படுத்தப்பட்டன.
- உலகப் புகழ்பெற்ற சிலிகான் பள்ளத்தாக்கை கொண்ட சான்பிரான்சிஸ்கோ இரண்டாவது இடத்திலும், மும்பை மற்றும் பெங்களூரு முறையே 3வது மற்றும் 4வது இடங்களிலும் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

## தெலுங்கானாவின் 2-வது அதிகாரப்பூர்வ மொழி - உருது

- தெலுங்கானா முதலமைச்சர் திரு.சந்திரசேகர ராவ் தெலுங்கானாவின் இரண்டாவது அதிகாரப்பூர்வ மொழியாக உருது மொழியை அறிவித்துள்ளார்.

- இந்த அறிவிப்பினை தொடர்ந்து மாநிலத்தின் அரசு அலுவலகங்களிலும் உருது பேசும் அலுவலர்கள் இருப்பர்.

## கல்லீரல் அழற்சிக்கு உட்கொள்ளும் மருந்துகள் – ஹரியானா

- ஹெபடைடிஸ்-சி (Hepatitis-C) வகை கல்லீரல் அழற்சி நோய்க்கு அனைத்து பிரிவுகளைச் சேர்ந்த ஹெபடைடிஸ்-சி நோயாளிகளுக்கு வாய்வழி உட்கொள்ளத்தக்க மருந்துகளைக் (Oral Medicine) கொண்டு சிகிச்சை அளிக்கவல்ல நாட்டின் முதல் மாநிலமாக ஹரியானா உருவாகியுள்ளது..
- இதற்காக முதல் முறையாக ஹரியானா மாநிலம் அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் வாய்மொழியாக உட்கொள்ளும் ஹெபடைடிஸ்-சி நோய்க்கான மருந்துகளை அறிமுகம் செய்துள்ளது.
- மாவட்ட அளவில் அனைத்து பிரிவுகளையும் சேர்ந்த நிரந்தர குடியிருப்பு வாசிகளுக்கு இம்மருந்து இலவசமாக வழங்கப்படும்.
- கல்லீரல் அழற்சி என்பது கல்லீரலில் உள்ள செல்கள் வீக்கத்துடன் காணப்படும் நிலை ஆகும். நோய் தொற்றின் வகையைப் பொறுத்து உடலில் உண்டாகும் சிக்கல்கள் வேறுபடும்.
- ஹெபடைடிஸ் வகை வைரஸ்களால் இந்நோய் ஏற்படுகிறது.
- ஒவ்வொரு கல்லீரல் அலற்சி வகை நோயும் வெவ்வேறு ஹெபடைடிஸ் வைரஸ் தாக்குதலால் ஏற்படுகிறது. கல்லீரல் அழற்சி / ஹெபடைடிஸ் ஐந்து வகைப்படும். அவை,
    - (i) ஹெபடைடிஸ் – ஏ
    - (ii) ஹெபடைடிஸ் - பி
    - (iii) ஹெபடைடிஸ் - சி
    - (iv) ஹெபடைடிஸ் – டி
    - (v) ஹெபடைடிஸ் – ஈ

## காகத்திய கால கோயில் - அகழ்வராய்ச்சி

- புதையுண்ட நிலையில் இருக்கும் ஸ்ரீ காசி விஷ்வேஸ்வர கோவிலின் ஒரு பகுதியை தொல்பொருள் ஆராய்ச்சி மற்றும் அருங்காட்சியகத் துறை அகழ்வாராய்ச்சி செய்து கண்டறிந்துள்ளது.
- இந்த அகழ்வாராய்ச்சியின் போது,
    - ✓ கோயிலின் அடித்தளம் (Adisthana)
    - ✓ கோசமட்டம் மற்றும் சந்திரமட்டம் (மேற்கூரையின் கடைசிப்பகுதி)
    - ✓ கர்ப்பக்கிரக சுற்றுப்பாதை (Pradakshina Pada)

போன்றவை கண்டுபிடிக்கப்பட்டன.

- 800 வருட பழமையான ஸ்ரீ காசி விஸ்வேஷ்வரா கோயிலானது காகத்திய அரச காலத்தை சேர்ந்தது. தெலுங்கானா மாநிலத்தின் மேடக் மாவட்டத்தில் இக்கோவில் அமைந்துள்ளது.
- காகத்திய வம்ச ஆட்சியின் தலைநகரம் – வாரங்கல்.
- ருத்ரமா தேவி காகத்தியா வம்சத்தின் முக்கிய ஆட்சியாளர் ஆவார். அவர் காலம் 1262 – 1289 CE.

- இப்பகுதியை கிழக்கு சாளுக்கியர்களிடமிருந்து காகத்தியர்கள் கைப்பற்றினர். காகத்தியர்களிடமிருந்து பாமினி சுல்தான் வம்சம் கைப்பற்றியது. பின்காலத்தில் விஜயநகரப் பேரரசிற்கும், கடைசியாக டெல்லி சுல்தானியத்திற்கும் இப்பகுதி வசமானது.

## ரசகுல்லா – புவிசார் குறியீடு

- மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகமானது பாரம்பரிய இனிப்பு வகையான ரசகுல்லாவிற்கு அங்கீகாரம் அளிக்கும் வகையில் அதற்கான புவிசார் குறியீட்டை (geographical indication-GI) மேற்கு வங்கத்திற்கு வழங்கியுள்ளது.
- இதற்குமுன், புவிசார் குறியீட்டைப் பெறுவதற்கு ரசகுல்லா எங்கு தோன்றியது என்பது தொடர்பாக மேற்கு வங்கம் மற்றும் ஒரிஸா மாநிலங்களுக்கிடையே இடையே போட்டி நிலவி வந்தது.
- புவிசார் குறியீடு சட்டத்தின் கீழ், ரசகுல்லாவிற்கான காப்புரிமை மேற்கு வங்கத்திற்கு அளிக்கப்பட்டுள்ளதால் இப்பிரச்சனை முடிவுக்கு வந்துள்ளது.
- ரசகுல்லாவை கண்டுபிடித்தவர் நோபின் சந்திரதாஸ் ஆவார். இவர் பெங்காலின் ஓர் குறிப்பிடத்தக்க இனிப்பக விற்பன்னர் மற்றும் தொழில்முனைவோர் ஆவார்.
- இதற்கு முன் இதே வருடத்தில் மேற்கு வங்கத்தின் தனிச்சிறப்பு வாய்ந்த பொருட்களான இரு அரிசி வகைகளுக்கு புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது.
- அவையாவன,
  - ✓ துலாய்பஞ்சி (Tulaipanji)
  - ✓ கோவிந்தபோக் (Govindabhog)

## ஜார்கண்ட் மாநிலதினம் -நவம்பர் 15

- பழங்குடியினத் தலைவரான பிர்சா முண்டாவினுடைய பிறந்த நாள் நிகழ்வின் போது ஜார்கண்ட் மாநிலத்தின் 17-வது மாநிலதினம் கொண்டாடப்பட்டது.
- தெற்கு பீகார் பகுதியில் வாழ்ந்துவந்த பழங்குடியின மக்களின் தொடர் போராட்டத்தை அடுத்து தெற்கு பீகாரினைப் பிரித்து 2000-ஆம் ஆண்டு ஜார்கண்ட் தனிமாநிலமாக தோற்றுவிக்கப்பட்டது.
- சோட்டா நாக்பூர் பகுதியில், பிரிட்டிஷாரின் நில கையகப்படுத்துதலுக்கு எதிராக போராடிய பழங்குடியினத் தலைவரே பிர்சா முண்டா ஆவார்.
- கிறிஸ்துவ மிஷினரிகள் மூலம் அப்பகுதி மக்களை ஆங்கிலேயர் கிறிஸ்துவ மதத்திற்கு மத மாற்றம் செய்வதனை சவால்விடும் வகையில் "பிர்சைத்" (Birsait) எனும் நம்பிக்கையை (faith) இவர் ஏற்படுத்தினார்.
- இவர் பிரபலமாக" தார்தி அப்பா" (Dharti Abba) அல்லது "புவியின் தந்தை" (Earth Father) என்றழைக்கப்படுவார். இதற்கு தங்களுடைய இழந்த வன உரிமைகளைப் பெறுவதற்காக போராடும் பிற பழங்குடியின ஆதிவாசி மக்களையும் ஊக்குவிக்கும் ஓர் நவீன கால நாட்டுப்புற நாயகன் என்பது இதன் பொருள்.
- ஆங்கிலேயருடைய" நில குடியானவர்கள் முறை"க்கு (land settlement system) எதிராக பழங்குடியின மக்களை ஒன்று திரட்ட "உல்குலான்" (Ulgulan) அல்லது மாபெரும் கலகம் (The Great Tumult) எனும் இயக்கத்தை நடத்தினார்.

## ஏக் பாரத் – ஷ்ரேஸ்தா பாரத்


- ❖ ஏக் பாரத் ஸ்ரேஷ்தா பாரத் (ஒரே பாரதம்-சிறந்த பாரதம்) திட்டத்தின் கீழ் தங்களிடையேயான கலாச்சார உறவை வலுப்படுத்துவதற்காக மத்தியப் பிரதேச அரசானது நாகாலாந்து மற்றும் மணிப்பூர் மாநிலங்களுடன் கூட்டிணைவை ஏற்படுத்தியுள்ளது.
- ❖ இதன் மூலம் மத்தியப் பிரதேசமானது மணிப்பூரில் நடைபெற இருக்கும் சங்கை (Sangai) மஹோத்சவ் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள உள்ளது. அதேபோல் தங்களுடைய கலாச்சார வழக்கங்களை காண்பிப்பதற்காக மணிப்பூர் மற்றும் நாகலாந்தை சேர்ந்த அணிகள் மத்திய பிரதேசத்தின் லோக் ரங் மற்றும் பால் ரங் கலாச்சார நிகழ்ச்சியில் பங்கேற்க உள்ளன.
- ❖ ஏக் பாரத் ஷ்ரேஸ்தா பாரத் திட்டமானது சர்தார் வல்லபாய் படேல் பிறந்த நாள் தினத்தின் போது ஏக்தா திவாஸ் நிகழ்ச்சியில் பிரதமரால் துவங்கப்பட்டது.
- ❖ நாட்டின் வெவ்வேறு மாநிலங்களில் வசிக்கும் மக்களிடையேயான பரஸ்பர தொடர்பை ஊக்கப்படுத்துதல், மற்றும் நாட்டின் பல்வேறு பிரிவினரிடையேயான கலாச்சார உறவை வலுப்படுத்துதலே இந்த ஒரே பாரதம்-சிறந்த பாரதத் திட்டத்திற்கான நோக்கமாகும்.

## நமாமி பராக் திருவிழா

- ❖ முதல் முறையாக நடத்தப் பெறும் நமாமி பராக் திருவிழாவை அஸ்ஸாமில் உள்ள சில்சார் எனும் இடத்தில் அஸ்ஸாமின் முதலமைச்சர் சர்பானந்த சோனோவால் தொடங்கி வைத்தார்.
- ❖ 3 நாட்கள் நடைபெறும் இத்ந நதித் திருவிழா பராக் நதி பள்ளத்தாக்கிலுள்ள ஹைலகண்டி, கரிம்கஞ்ச், சில்சார் எனும் மூன்று பகுதிகளில் நடைபெற உள்ளது.
- ❖ பராக் நதிக்கு மரியாதை செலுத்துவதற்காகவும், பராக் நதியின் ஆற்றல் வளம் மற்றும் முக்கியத்துவத்தை காட்சிப்படுத்தவும், வணிகம் மற்றும் வர்த்தகத்தின் முனையமாக உருவாகிட பராக் நதிக்கு உள்ள சாத்தியங்களை காட்சிப்படுத்தவும் இந்த திருவிழா நடத்தப்படுகிறது.
- ❖ பராக் நதியானது தென் அஸ்ஸாமின் மிக முக்கிய நதிகளுள் ஒன்று. இது சுர்மா – மேக்னா நதி அமைப்பின் ஒரு பகுதியாகும்.
- ❖ பராக் நதி மணிப்பூரில் தோன்றி, மிசோரம், அஸ்ஸாம் வழியே பாய்ந்து வங்கதேசத்தின் உள் நுழையும் இடத்தில் சுர்மா மற்றும் குஷியாரா என இரு நதிகளாகப் பிரிகின்றது.

## மாவோயிஸ்ட் பகுதியான தான்டேவாடாவிற்கு முதல் விரைவு இரயில்

- ❖ விசாகப்பட்டினம் – ஜக்தல்பூர் ஆகியவற்றுக்கிடையேயான சிறப்பு இரயிலை சத்தீஸ்கர் மாநிலத்தின் தான்டேவாடா மாவட்டத்திலுள்ள கிரன்டுல் வரை இந்திய ரயில்வே நீட்டித்துள்ளது.
- ❖ இந்த விசாகப்பட்டினம் – ஜக்தல்பூர் சிறப்பு இரயில் வண்டி சத்தீஸ்கரில் மாவோயிஸ்ட் பகுதியான தான்டேவாடா மாவட்டத்திற்கு முதன்முறையாக ஆரவாரத்துடன் செல்லவிருக்கிறது.




- இடதுசாரி பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ள பகுதியான கிரன்டுலுக்கு சிறப்பு விரைவு வசதியிலான இரயில் சேவை ஏற்படுத்தப்படுவது இதுவே முதன் முறையாகும்.

## மணிப்பூர் சங்காய் திருவிழா

- 2017 ஆம் ஆண்டிற்கான மணிப்பூர் சங்காய் திருவிழாவை இந்தியாவின் குடியரசுத் தலைவர் துவங்கி வைத்தார். சங்காய் என்பது மணிப்பூர் மாநிலத்தில் காணப்படும் தாமின் மான் (brow-antlered) வகை ஆகும். இவை மணிப்பூரின் மாநில விலங்காகும்.
- 2010 ஆம் ஆண்டு துவங்கி ஒவ்வொரு வருடமும் நவம்பர் மாதம் பத்து நாள் இந்த திருவிழா நடைபெறும்.
- மணிப்பூர் மாநிலத்தின் செழுமை மற்றும் பன்முகத்தன்மையினை எடுத்துரைக்கும் விதமாக இந்தத் திருவிழா அமையும்.
- இவ்வருடத் திருவிழாவானது இம்பால் நகரம் மற்றும் பிஷ்னுபூர் மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் நடைபெறும். முதல் முறையாக கெய்புல் லம்ஜாவோ தேசியப் பூங்காவிலும் இத்திருவிழா நடைபெறவுள்ளது. கெய்புல் லம்ஜாவோ (Keibul Lamjao) என்பது மணிப்பூர் மாநிலத்தில் அமைந்துள்ள மிதக்கும் தேசியப் பூங்காவாகும் (Floating National Park)
- தனித்தன்மை வாய்ந்த இப்பூங்காவில் பல தாமின் மான்கள் வசிக்கின்றன.
- சங்காய் திருவிழாவின் ஒரு பகுதியாக இம்பால் நகரத்தில் முதலாவது வடகிழக்கு இந்தியா மேம்பாட்டு உச்சி மாநாடு நடைபெறவுள்ளது. முதலீட்டாளர்களுடன் பல ஒப்பந்தங்களை உறுதி செய்ய அம்மாநில அரசு திட்டமிட்டுள்ளது. நவம்பர் 21 மற்றும் 22 ஆகிய தேதிகளில் இம்மாநாடு நடைபெறவுள்ளது.
- மணிப்பூர் மாநில அரசு, மத்திய வணிகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம் மற்றும் இந்தியா பவுண்டேசன் ஆகியவை இணைந்து இம்மாநாட்டை நடத்துகின்றன.
- ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகள் உட்பட சுமார் 175 பிரதிநிதிகள் இம்மாநாட்டில் கலந்துக் கொள்வார்கள்.

## முதல் வடகிழக்கு மேம்பாட்டு மாநாடு

- நாட்டின் முதல் வடகிழக்கு பிராந்திய மேம்பாட்டிற்கான உச்சி மாநாட்டை (NEDS – North East Development Summit – 2017) மணிப்பூர் தலைநகர் இம்பாலில் இந்தியக் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தொடங்கி வைத்தார்.
- டெல்லியைச் சேர்ந்த சிந்தனையாளர் குழுவான இந்தியா பவுண்டேஷன் அமைப்புடன் இணைந்து மணிப்பூர் அரசும், மத்திய அரசும் இணைந்து இம்மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளது.
- வட கிழக்கு மாநிலங்களின் பொருளாதார ஆற்றல் வளத்தை வெளிக்காட்டவும், ரியல் எஸ்டேட், உணவு பதனிடல், மூங்கில் தொழிற்துறை, மற்றும் பிற வர்த்தக வியாபாரங்களில் முதலீட்டை கவர்வதற்கும் இம்மாநாடு நடத்தப்பட்டுள்ளது.
- முதலீட்டாளர்கள் மற்றும் வர்த்தக பிரதிநிதிகளின் வடகிழக்கு மாநிலங்கள் மீதான எண்ணத்தை மாற்றுவதற்காகவும், அவர்களிடத்தில் நம்பிக்கையை கட்டமைப்பதற்காகவும் இந்த மாநாடு நடத்தப்பட்டுள்ளது.

## INSPIRE - 2017

- ஆற்றல் செயல்திறனில் ஆராய்ச்சி மற்றும் படைப்பாக்கத்திற்கான சர்வதேச கருத்தரங்கின் (International Symposium to Promote Innovation & Research in Energy Efficiency-INSPIRE 2017) முதலாவது பதிப்பு ஜெய்ப்பூரில் தொடங்கியுள்ளது.
- செயல்திறனுடைய ஆற்றல் பொருளாதார நாடுகளின் கூட்டணி (Alliance for an Energy Efficient Economy -AEEE)) மற்றும் உலக வங்கியோடு இணைந்து ஆற்றல் செயல்திறன் சேவைகள் நிறுவனமானது (Energy Efficiency Services Limited-EESL) இந்த ஐந்து நாள் கருத்தரங்கினை நடத்துகின்றது.
- ஆற்றல் செயல்திறன் கொள்கைகள், சந்தை மாற்ற உத்திகள், வளரும் ஆற்றல் தொழில்நுட்பங்கள், ஆற்றல் விநியோகம், வர்த்தக மாதிரி வழியிலான மாற்றம் போன்ற பல்வேறு தலைப்புகளில் ஆற்றல் செயல்திறன் துறைசார்ந்த பல்வேறு பங்குதாரர்கள் விவாதிப்பதற்கும், அத்துறையின் சிறந்த நடவடிக்கைகளை வெளிக்காட்டுவதற்கும் ஓர் மேடையாக இக்கருத்தரங்கம் நடத்தப்படுகின்றது.

## இந்தியாவின் 48-வது சர்வதேச திரைப்பட திருவிழா

- கோவாவின் பனாஜியில் இந்தியாவின் 48-வது சர்வதேச திரைப்பட திருவிழா நடத்தப்பட்டது.
- மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத்துறை அமைச்சகம், திரைப்பட திருவிழா இயக்குநரகம் மற்றும் கோவா அரசு ஆகியவற்றின் கூட்டிணைவு மூலம் இந்த திருவிழா நடத்தப்பட்டது.
- இத்திருவிழாவில் இந்த ஆண்டின் மதிப்புமிக்க இந்திய திரையுலக ஆளுமை விருது (Indian Film Personality of the Year Award) அமிதாப் பச்சனுக்கு வழங்கப்பட்டது.
- வாழ்நாள் சாதனையாளர் விருது கனடா நாட்டின் இயக்குநரான அடோம் எகோயனுக்கு வழங்கப்பட்டது.
- சிறப்பு நடுவர் பரிசு "டேக் ஆஃப்" என்ற மலையாளத் திரைப்படத்திற்கு வழங்கப்பட்டது.
- ராபின் கம்புல்லோவால் இயக்கப்பட்ட "120 பீட்ஸ் பர் மினிட்" (120 Beats Per Minute) என்ற பிரெஞ்ச் படத்திற்கு சிறந்த திரைப்படத்திற்கான விருது வழங்கப்பட்டது.
- அர்ஜென்டீனிய நடிகர் நஹியூயல் பெரேஸ் பிஸ்காவர்டுக்கு சிறந்த நடிகருக்கான விருது வழங்கப்பட்டது.

- சிறந்த நடிகைக்கான விருது இந்திய நடிகை பார்வதிக்கு வழங்கப்பட்டது.

## மணிப்பூரில் சவுபாக்யா திட்டம்

- மத்திய எரிசக்தி அமைச்சகம் பிரதமரின் சவுபாக்யா மின் திட்டத்தை மணிப்பூர் மாநிலத்தில் அறிமுகம் செய்துள்ளது.
- சுமார் 1.75 இலட்சம் வீட்டுமனைகள் இத்திட்டத்தின் கீழ் பயன்பெறவுள்ளன. இதில் கிராமப்புறத்தில் 1.62 இலட்சம் வீடுகளும், நகர்ப்புறங்களில் 13 ஆயிரம் வீடுகளும் அடங்கும்.
- இத்திட்டத்தின் கீழ் மணிப்பூர் மாநிலத்தின் மின்சாரக் கட்டமைப்புகளை (REC- Rural Electrification Corporation Limited) வலுப்படுத்தவும் மேம்படுத்தவும் இந்திய அரசாங்கம் நிதியுதவி அளிக்கும்.
- மத்திய எரிசக்தி அமைச்சகத்தின் கீழ் இயங்கும் ஊரக மின்வசதியாக்க நிறுவனம் ஒரு மத்திய பொதுத்துறை நிறுவனம் ஆகும்.
- இத்திட்டத்தின் முகமை பணிகளை இந்நிறுவனம் மேற்கொள்ளும்.
- ஏழ்மையான நிலையில் உள்ள மக்களுக்கு இலவச மின் இணைப்பு வழங்கப்படும். இவ்வாறு இலவச மின் இணைப்பை பெறுவதற்கான பயனாளிகள் யார் யாரென்பது 2011-ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட சமூக பொருளாதார சாதிவாரி மக்கள் தொகைக் கணக்கெடுப்பை அடிப்படையாகக் கொண்டு முடிவு செய்யப்படும்.

# பிரபலமானவர்கள் , விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## பாகிஸ்தானிற்கான இந்தியாவின் உயர் ஆணையர்

- சீனாவிற்கான இந்திய தூதராக கௌதம் பம்பாவாலே நியமிக்கப்பட்டதை தொடர்ந்து அவர் பணியாற்றிய பாகிஸ்தானிற்கான இந்தியாவின் உயர் ஆணையர் பதவிக்கு அஜய் பிசாரியா நியமிக்கப்பட்டுள்ளார்.
- 1987ஆம் ஆண்டு இந்திய அயலுறவு அதிகாரி பணிப் பிரிவைச் சேர்ந்த இவர் போலந்து நாட்டிற்கான இந்தியத் தூதராக பணியாற்றி வருகிறார்.

## ஸ்ரீரங்க ஆலயத்திற்கு யுனெஸ்கோ விருது

- அரசு மற்றும் தனியார் கூட்டு ஒத்துழைப்பு (PPP) முறையின் கீழ் மாபெரும் புனரமைப்பு மற்றும் புத்துயிராக்க முயற்சியை மேற்கொண்டதற்காக ஸ்ரீரங்கத்திலுள்ள ஸ்ரீரங்கநாதசுவாமி ஆலயத்திற்கு 2017ஆம் ஆண்டிற்கான கலாச்சார பாரம்பரிய பாதுகாப்பிற்கான யுனெஸ்கோ ஆசிய – பசுபிக் விருது வழங்கப்பட்டுள்ளது.
- ஐ.நா. அவையின் ஓர் அமைப்பால் இத்தகு புகழ் பெற்ற விருது பெறும் தமிழகத்தின் முதல் ஆலயம் ஸ்ரீரங்கநாதசுவாமி ஆலயமாகும்.
- புராதனங்கள் பாதுகாப்பு சார்ந்த 9 சர்வதேச வல்லுநர்கள் அடங்கிய நடுவர் குழுவால் ஆசிய – பசுபிக் மண்டலத்தில் உள்ள 10 நாடுகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு பாரம்பரிய பாதுகாப்பு திட்டங்களின் மீதான பரிசீலனைக்குப் பிறகு அளிக்கப்படும் 4 விருதுகளுள் ஒன்று இந்த ஆலயத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.


- கலாச்சார பராம்பரிய பாதுகாப்பிற்கான யுனெஸ்கோவின் விருதுகள் 4 வகைப்பாட்டின் கீழ் வழங்கப்படுகின்றன.
- இவற்றில் தமிழகத்தின் இந்த ஆலயத்துடன் புகழ்பெற்ற மும்பை கிறிஸ்துவ திருச்சபை, ராயல் பாம்பே ஒபேரா இல்லம் போன்ற இந்தியாவின் பிற வரலாற்று புரதானச் சின்னங்கள் யுனெஸ்கோவின் 4 வகையான விருதுகளில் ஒன்றான நடுவர் குழு மதிப்பீட்டு விருதை (Award of Merit) பெற்றுள்ளன.

### *கலாச்சார பாரம்பரிய பாதுகாப்பிற்கான யுனெஸ்கோ ஆசிய – பசுபிக் விருதுகள்*

- அரசு மற்றும் தனியார் கூட்டு ஒத்துழைப்பு முறையின் மூலம் அல்லது தனியார் துறையின் மூலம் ஆசிய-பசுபிக் பிராந்தியங்களில் உள்ள பாரம்பரிய சொத்துக்கள் மற்றும் கட்டிடங்களை வெற்றிகரமாக பாதுகாப்பதில் மேற்கொள்ளப்படும் சாதனைகளை அங்கீகரிக்கும் விதமாக இந்த விருது வழங்கப்படுகிறது.
- இதற்கான விருது வழங்கும் யுனெஸ்கோ அலுவலகம் தாய்லாந்து நாட்டின் பாங்காக் நகரில் அமைந்துள்ளது.

## எதிகோப்பக்கா பொம்மைகளுக்கு புவிசார் குறியீடு

- ஆந்திரப் பிரதேசத்தின் விசாகப்பட்டினம் மாவட்டத்தில் வராஹா நதிக்கரையோரத்தில் அமைந்துள்ள எதிகோப்பக்கா கிராமத்தின் கைவினை கலைஞர்களால் இந்த பராம்பரிய பொம்மைகள் தயாரிக்கப்படுகின்றன.
- ஆந்திராவிலிருந்து GI குறியீடு பெற்றுள்ள கொண்டபள்ளி பொம்மைகள், போப்பிலி வீணை, திருப்பதி லட்டு, ஸ்ரீகாளஹஸ்தி கலம்காரி, உப்படா ஜம்தானி சேலைகள், நிழற்பொம்மைகள் பட்டியலில் தற்போது இப்பொம்மைகள் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளன.
- மென்மைத் தன்மையுடைய அன்குடி கர்ரா மரத்தின் கட்டைகளிலிருந்து உருவாக்கப்படும் இந்த பொம்மைகள் செய்யும் கலையானது 400 வருட பழமையானது. இவை turned wood Lacquer கலை எனவும் அழைக்கப்படும்.
- 2017-18-ல் புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ள வேறு பொருட்களாவன
    1. பொச்சம்பள்ளி ஜகாட் சேலைகள்-தெலுங்கானா
    2. கோபிந்தோபாக் அரிசி - மேற்கு வங்கம்
    3. துர்கி கற்சிற்பங்கள்
    4. சக்சேஷாங் சால்வை-நாகாலாந்து
    5. காஷ்மீர் பாஷ்மினா கம்பளம்
    6. நாக்பூர் ஆரஞ்சு- நாக்பூர்
    7. காங்க்ரா ஓவியங்கள்- இமாச்சலப் பிரதேசம்
    8. பங்கனப்பள்ளி மாம்பழம் – ஆந்திரப் பிரதேசம்
    9. திருப்பதி லட்டு –ஆந்திரா
    10. டார்ஜிலிங் தேயிலை-மேற்கு வங்கம்
    11. துலபாஞ்சி அரிசி - மேற்கு வங்கம்




### *புவிசார் குறியீடு (Geographical Indication )*

- ❖ புவியின் ஒரு குறிப்பிட்ட இடத்தையோ அல்லது தோற்றத்தையோ குறிப்பிடும் பொருட்களுக்கு அங்கீகரிப்பு தரும்வகையில் அவற்றின் மீது பயன்படுத்தப்படும் ஓர் பெயர் அல்லது சின்னமே புவிசார் குறியீடு எனப்படும்.
- ❖ சிறப்பு தரங்களும், சொந்த இடத்தின் நன்மதிப்பையும் உடைய வேளாண் பொருட்கள், இயற்கை மற்றும் தயாரிப்புப் பொருட்களுக்கு இக்குறியீடு இந்திய காப்புரிமை அலுவலகத்தால் வழங்கப்படுகிறது.
- ❖ புவிசார் குறியீட்டு அடையாளம் 10 ஆண்டுகளுக்கு செல்லத்தக்கது. அதற்கு பிறகு பதிவுப் புதுப்பிப்பு தேவை.
- ❖ தொழிற்துறை சொத்துக்கள் பாதுகாப்பிற்கான பாரிஸ் ஒப்பந்தத்தின் (Paris Convention For Protection of Industrial Property) கீழ் அறிவுசார் சொத்துரிமையின் ஒரு பகுதியாக GI உட்சேர்க்கப்பட்டுள்ளது.
- ❖ சர்வதேச அளவில், உலக வர்த்தக நிறுவனத்தின் (WTO-World Trade Organisation) அறிவுசார் சொத்துரிமைகளின் வணிகம் தொடர்பான அம்சங்கள் குறித்த ஒப்பந்தத்தால் (TRIPS-Agreement On Trade-Related Aspects of Intellectual Property Rights) GI நிர்வகிக்கப்படுகிறது.
- ❖ இந்தியாவில் GI 1999-ஆண்டின் பல வகை பொருட்களுக்கான புவிசார் குறியீடுகள் மற்றும் பாதுகாப்பு சட்டத்தின் (Geographical Indications of Goods (Registration and Protection Act,1999-GI Act) கீழ் வழங்கப்படுகிறது.

## ஞான பீட விருது 2017

- இந்திய இலக்கியத்திற்கு செழுமையான பங்களிப்பு அளித்தமைக்காக புகழ்பெற்ற இந்தி எழுத்தாளர் சோப்தி, (92) 2017-ம் ஆண்டிற்கான 53-வது ஞான பீட விருதிற்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- ஒட்டு மொத்தமாக இந்த பெருமைமிகு விருதைப் பெறும் எட்டாவது பெண்மணி இவர் ஆவார்.
- எழுத்துலகில் புதிய நடைகளைப் புகுத்தியமைக்காகவும், தமது படைப்புகளில் தைரியமான கதாபாத்திரங்களை உருவாக்கியமைக்காகவும் அறியப்படும் கிருஷ்ணா சோப்தி, 1925-ம் ஆண்டு பாகிஸ்தானின் பஞ்சாப் மாநிலத்தில் உள்ள குஜராத் என்ற நகரில் பிறந்தார்.
- இவரது மொழிநடை இந்தி, உருது மற்றும் பஞ்சாபி ஆகிய மொழிக் கலவைகளினால் வெகுவாக தாக்கம் பெற்றுள்ளது.
- இந்தி அகாடமி விருதுகள், சிரோமன் விருதுகள், மைதிலி சரண் குப்த் விருது, சாகித்ய அகாடமி விருது மற்றும் பத்மபூஷன் போன்ற பல்வேறு சிறப்பு வாய்ந்த விருதுகளையும் இவர் பெற்றுள்ளார்.

### *ஞான பீட விருது*

- ஞானபீட விருது இந்தியாவின் உயரிய இலக்கிய விருது ஆகும்.
- அறிவின் இருக்கையில் என்ற பொருளில் சமஸ்கிருத மொழியில் இருந்து ஞான மற்றும் பீடம் என்ற வார்த்தைகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.
- டைம்ஸ் ஆஃப் இந்தியா என்ற பத்திரிக்கைக் குழுமத்தை சொந்தமாகக் கொண்டிருக்கும் சாஹூ சாந்தி பிரசாத் ஜெயின் குடும்பத்தாரால் அமைக்கப்பட்ட பாரதீய ஞான பீட அறக்கட்டளை மூலம் 1961-ம் ஆண்டிலிருந்து இந்த விருது வழங்கப்படுகிறது.
- இந்த விருது 11 லட்ச ரூபாய் பரிசுத் தொகை, பாராட்டுப் பத்திரம் மற்றும் வெண்கலத்தாலான சரஸ்வதி சிலை ஆகியவற்றைக் கொண்டிருக்கும்.

## ப்ரீக்ஸ் காண்கார் விருது

- பிரெஞ்சு எழுத்தாளர் எரிக் விலார்டு எழுதிய "ஆர்டர்-டு-ஜோர்" ("L"'Odre du jour")என்ற பிரஞ்சு புத்தகத்திற்கு "ப்ரீக்ஸ் காண்கோர்" (Prix Goncourt) இலக்கிய விருது வழங்கப்பட்டுள்ளது.
- "ஆர்டர்-டு-ஜோர்" என்ற பிரஞ்சு வார்த்தை "பொருள் நிரல்" (Agenda) எனப் பொருள்படும். அடால்ப் ஹிட்லரின் எழுச்சிக்கு அன்றைய ஜெர்மனியின் தொழில்துறையும், நிதித்துறையும் எவ்வாறு ஆதரவளித்தன என்பதை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட இந்த புத்தகத்தினை இவ்வாண்டிற்கான விருதுக்கு 10 பேர் கொண்ட காண்கார் அகாடமியின் நடுவர் குழு தேர்வு செய்துள்ளது.
- "ப்ரீ காண்கார்" விருதுக்கு தேர்வு பெறாத புத்தகங்களுக்கான ஆறுதல் பரிசாக கருதப்படும் "ப்ரீ ரெனடாட்"(Prix renaudot) விருதினை ஆலிவர் கெஸ் எழுதிய "The disappearance of josef Mengele" என்ற புத்தகம் பெற்றுள்ளது. இது யூத இனப்படுகொலைக்கு பின்னர் இரகசியமாக மறைந்து வாழ்ந்த ஜோசப் மெங்கல் எனும் நாஜி போர் குற்றவாளியைக் குறித்த புத்தகமாகும்.
- காண்கார் அகாடமி பிரபல பிரஞ்சு எழுத்தாளரான எட்மன்ட்-டி-காண்கோர் என்பவரால் 19ஆம் நூற்றாண்டில் துவங்கப்பட்டது. இது பிரஞ்சு இலக்கியத்தில் புதிய திறமைகளை ஊக்குவிப்பதற்காக உருவாக்கப்பட்டது.
- ப்ரீ காண்கார் விருது 1903 ஆம் ஆண்டு துவங்கி எட்மண்டு சகோதரர்களுக்கு மரியாதை செலுத்தும் விதமாக வழங்கப்பட்டு வருகிறது. பிரஞ்சு இலக்கிய உலகில் இது மிக உயரிய விருதாகக் கருதப்படுகிறது.

- எட்மண்டு சகோதரர்கள்:
  1. எட்மண்டு டி காண்கார்
  2. ஜீல்ஸ் டி காண்கார்

## யூத நோபல் பரிசு

- ஆஸ்கர் விருது பெற்ற நடிகையான நடாலி போர்ட்மேனுக்கு 2018-ஆம் ஆண்டிற்கான ஜேனிஸிஸ் பரிசு (Genesis Prize) வழங்கப்பட்டுள்ளது.
- பாலின சமத்துவம், வறுமை ஒழிப்பு, சிறுகடனுதவி, விலங்குகளின் உரிமைகளைப் பாதுகாத்தல் போன்ற பல்வேறு சமூக காரணிகளில் அவர் கொண்ட அர்ப்பணிப்பு மற்றும் இஸ்ரேலிய மற்றும் யூதக் கலாச்சார வேர்களில் அவர்கொண்ட ஆழமான பிணைப்பு போன்றவற்றினை அங்கீகரிக்கும் விதத்தில் இப்பரிசு அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.
- இப்பரிசை பெறும் 5வது நபர் மற்றும் முதல் பெண்மணி நடாலி போர்ட்மேன் ஆவார்.
- ஜேனிஸிஸ் பரிசு யூத நோபல் பரிசு எனவும் அழைக்கப்படும்.
- 2014 ஆம் ஆண்டு ஜேனிஸிஸ் தோற்றுவிக்கப்பட்டது.
- இஸ்ரேலிய பிரதம அலுவலகம், ஜேனிசிஸ் விருது அறக்கட்டளை, யூத நிறுவனத்தின் தலைவர் அலுவலகம் ஆகியவற்றிற்கிடையேயான கூட்டிணைவு மூலம் இப்பரிசு வழங்கப்படுகிறது.

## அன்னை தெரசா விருது 2017

- உலகம் முழுவதும் தனிச்சிறப்பு வாய்ந்த செயல்கள் மேற்கொண்டதனை அங்கீகரிக்கும் வகையில், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஆணையத்திற்கு (United Nations High Commissioner for Refugees -UNHCR) 2017-ஆம் ஆண்டின் சமூக நீதிக்கான அன்னை தெரசா நினைவுப் பரிசு வழங்கப்பட்டுள்ளது.
- 2016 செப்டம்பரில் புனிதராக அறிவிக்கப்பட்ட அன்னை தெரசாவின் நினைவாக ஹார்மோனி பவுண்டேஷன் எனும் அமைப்பால் 2005-ஆம் ஆண்டு சமூக நீதிக்கான அன்னை தெரசா நினைவுப் பரிசு தோற்றுவிக்கப்பட்டது.
- ஹார்மோனி பவுண்டேஷனின் 2017ஆம் ஆண்டிற்கான கருத்துரு “எல்லைகளைத் தாண்டிய பரிவு”(Compassion Beyond Borders).
- UNCHR-ன் செயல் முயற்சிகள் இந்த கருத்துருக்களுக்கு பொருந்துவதாக உள்ளது.
- UNHCR அமைப்பானது ஐ.நா.அகதிகள் நிறுவனம் எனவும் அழைக்கப்படும்.
- உலகம் முழுவதும் நாடில்லாமல் தவிக்கும் மக்களுக்கும் (Stateless Peoples), உள்நாட்டு சண்டைகளால் நாட்டினுள்ளே இடம் பெயர்ந்த எண்ணிலடங்கா மக்களுக்கும் மனிதாபிமான உதவிகள் புரியும் ஐ.நா.வின் கீழுள்ள ஓர் அமைப்பே UNHCR ஆகும்.
- இதன் தலைமையகம் – ஜெனிவா, சுவிட்சர்லாந்து
- இது ஐக்கிய நாடுகள் மேம்பாட்டு குழுவின் (United Nations Development Group) உறுப்பினராகும்.

## மிஸ் இன்டர்நேஷனல் - 2017

- ஜப்பானின் டோக்கியோ டோம் சிட்டி அரங்கில் நடைபெற்ற மிஸ் இன்டர்நேஷனல் – 2017

போட்டியில் இந்தோனேசியாவின் கெவின் லில்லியானா 2017-ஆம் ஆண்டிற்கான மிஸ் இண்டர்நேஷனல் அழகியாக முடி சூட்டப்பட்டுள்ளார்.

- இவர் 2016ஆம் ஆண்டில் மிஸ் இண்டர்நேஷனல் அழகியான பிலிப்பைன்ஸ் நாட்டின் கைலி வெர்சோசாவினால் கிரீடம் சூடப்பட்டார். இவர் மிஸ் இண்டர்நேஷனல் பட்டம் பெறும் முதல் இந்தோனேசியராவார்.
- மிஸ் இண்டர்நேஷனல் என்பது டோக்கியோவில் நடத்தப்பெறும் சர்வதேச அழகிகளுக்கான அலங்கார அணிவகுப்பாகும் (pageant). இது சர்வதேச கலாச்சார சங்கத்தால் (International Culture Association) நடத்தப்படுகிறது.
- இந்த அலங்கார அணிவகுப்பானது முதன் முதலில் 1960-ல் நடத்தப்பட்டது. உலக அமைதி, நட்புணர்வு, நல்லெண்ணம் போன்றவற்றை ஊக்குவிப்பதே இந்த மிஸ் இண்டர்நேஷனல் சர்வதேச அழகிகளுக்கான அலங்கார அணிவகுப்பின் முக்கிய நோக்கங்களாகும்.

## இந்திரா காந்தி அமைதிப் பரிசு-மன்மோகன் சிங்

- 2017-ஆம் ஆண்டிற்கான இந்திரா காந்தி அமைதி, ஆயுதக் குறைப்பு மற்றும் வளர்ச்சிக்கான விருது (Indira Gandhi Prize for Peace, Disarmament and Development) இந்திய முன்னாள் பிரதமரான மன்மோகன் சிங் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- 2004 முதல் 2014 வரை பத்தாண்டுகள் நாட்டைச் சிறப்பான முறையில் தலைமைத் தாங்கி வழிநடத்தியதற்காகவும், பல்வேறு சாதனைகள் புரிந்தமைக்காகவும், பாதுகாப்பு, சமூக-பொருளாதார வளர்ச்சி போன்ற பலவற்றிற்கு அவர் அளித்த மாபெரும் பங்களிப்பிற்காகவும் இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

### *இந்திரா காந்தி அமைதிப் பரிசு*

- மறைந்த முன்னாள் பிரதமர் திருமதி.இந்திரா காந்தியின் பெயரிலான இந்த சர்வதேச அமைதி விருது 1986-ல் இந்திரா காந்தி நினைவு அறக்கட்டளையால் நிறுவப்பட்டது.
- உலக அமைதி மற்றும் வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்கில் செயல்படும் தனிநபர்கள் மற்றும் அமைப்புகளின் புத்தாக்க முயற்சிகளை அங்கீகரிக்கும் வகையில் இந்த விருது வழங்கப்படுகிறது.
- மேலும் இவ்விருது புதிய சர்வதேச பொருளாதார ஒழுங்கமைவினை உருவாக்குபவர்கள் மற்றும் புதிய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனித குலத்தின் பெரும் நன்மைக்காக பயன்படுதலை உறுதிசெய்தல் மற்றும் சுதந்திரத்தின் வாய்ப்பு எல்லைகளை விரிவுபடுத்துதல் போன்ற துறைகளில் பங்களிப்பினை வழங்குபவர்களுக்கும் இந்த விருது வழங்கப்படுகிறது.
- ஆண்டுதோறும் இந்திரா காந்தியின் பிறந்த நாளான நவம்பர் 19-ஆம் தேதி இவ்விருது வழங்கப்படுகின்றது.
- இதற்கு முன் கடைசியாக இந்த விருது 2015-ல் ஐ.நா-வின் அகதிகளுக்கான உயர் ஆணையத்திற்கும் (UNHCR – United Nations High Commissioner for Refugees), 2014-ல் இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்திற்கும் (இஸ்ரோ) வழங்கப்பட்டது.

## மிஸ் வோல்டு 2017

- இந்தியாவின் ஹரியானா மாநிலத்தைச் சேர்ந்த மனுஷி சில்லர் 2017-ஆம் ஆண்டிற்கான உலக அழகியாக (Miss World 2017) வாகை சூட்டப்பட்டுள்ளார்.

- சீனாவின் சன்யா நகரில் நடைபெற்ற மாபெரும் இறுதி போட்டியில் வெற்றி பெற்ற இவருக்கு 2016-ஆம் ஆண்டின் உலக அழகியான போர்ட்டோ ரிகாவின் ஸ்டெபானி டெல் வல்லே தனது கிரிடத்தை சூட்டினார்.
- மனுஷி சில்லர் உலக அழகிப் பட்டத்தை பெறும் ஆறாவது இந்தியப் பெண்ணாவார்.
- 2000 ஆம் ஆண்டு பிரியங்கா சோப்ரா உலக அழகி பட்டத்தை பெற்றதை அடுத்து அடுத்த 16 ஆண்டுகள் கழித்து இந்தியர் ஒருவர் பெறும் முதல் உலக அழகி பட்டம் இதுவாகும்.
- பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 108 பெண்கள் கலந்து கொண்ட இந்த அழகிப்போட்டி அணி வகுப்பில் மிஸ் இந்தியாவான மனுஷி சில்லர் முதலிடத்தையும், மிஸ் இங்கிலாந்தான ஸ்டெப்ஹானி ஹில் இரண்டாவது இடத்தையும், மிஸ் மெக்ஸிகோவான ஆண்டிரியா மெஜா மூன்றாவது இடத்தையும் பிடித்தனர்.
- இதற்குமுன் உலக அழகிப் பட்டம் வென்ற ஐந்து இந்திய அழகிகள்
    - ரீட்டா ப்ரியா- 1966
    - ஐஸ்வர்யா ராய்- 1994
    - டயானா ஹெய்டன் -1997
    - யுக்தா முகி-1999
    - பிரியங்கா சோப்ரா-2000

## ருக்மாபாய்க்கு கூகுள் செலுத்திய மரியாதை

- ருக்மாபாய் ராவத் என்பவர் காலனியக காலத்திய இந்தியாவில் பணியாற்றிய முதல் பெண் மருத்துவர் ஆவார்.




- இவர் 11 வயதில் இருக்கும்பொழுது, 19 வயதான தாதாஜி பிகாஜி என்பவருடன் திருமணம் செய்து வைக்கப்பட்டார். இருவரும் இணைந்து வாழவில்லை. இதற்கிடையில் ருக்மாபாய் தன் கல்வியை நிறைவு செய்ய முடிவெடுத்தார்.
- ருக்மாபாய் தனக்கு நடைபெற்ற திருமணம் முறையானது அல்ல என்று எதிர்ப்பு தெரிவித்தார். தன் மாற்றாந் தந்தையுடன் வாழ்ந்து வந்த ருக்மாபாய், மேற்படிப்பைத் தொடர முடிவு செய்தார். திருமணத்தைப் பற்றி சிந்திக்கக் கூடிய வயதும், நிலையும் இல்லாத பொழுது தன் சம்மதம் இன்றி திருமணம் நடத்தி வைக்கப்பட்டதாக வாதிட்டார்.
- இந்நிலையில் ருக்மாபாய் தன்னுடன் சேர்ந்து வாழ வேண்டும் என்று அவர் கணவர் தாதாஜி நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார். வழக்கை விசாரித்த நீதிமன்றம் தாதாஜிக்கு சாதகமான தீர்ப்பொன்றை வழங்கியது. அதன்படி ருக்மாபாய் கணவருடன் சேர்ந்து வாழ வேண்டும், தவறினால் ஆறு மாதங்கள் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று உத்தரவிட்டது.

சற்றும் அயராத ருக்மாபாய், தான் சிறைக்குச் செல்லும் தண்டனையை ஏற்றுக் கொள்வதாக துணிச்சலான முடிவெடுத்தார்.

❖ இந்தத் தீர்ப்பு விக்டோரியா மகாராணியால் நிராகரிக்கப்பட்டது. இது பழமைவாத இந்தியர்களின் கடுமையான எதிர்ப்புக்கு மத்தியிலும், 1891 ஆம் ஆண்டின் திருமண வயது இசைவு சட்டம் இயற்ற வழிவகை செய்தது.

## கடற்படையின் முதல் பெண் விமானி

❖ இந்திய கடற்படையின் முதல் பெண் விமானியாக பரேய்லியைச் சேர்ந்த சுபாங்கி ஸ்வரூப் நியமிக்கப்பட்டுள்ளார்.

❖ இவர் தேசிய கடற்படை ஆயுதங்கள் கண்காணிப்பு பிரிவில் பணியமர்த்தப்பட்டுள்ளார்.

## 36-வது சர்வதேச புவியியல் மாநாடு

❖ 36-வது சர்வதேச புவியியல் மாநாடு (IGC-International Geological Congress) வரும் 2020 ஆண்டு இந்தியாவில் உள்ள புதுதில்லியில் நடத்தப்பட உள்ளது.

❖ 60 ஆண்டுகள் கழித்து இம்மாநாடு இந்தியாவில் நடத்தப்பட உள்ளது.

❖ மத்திய கனிமவள அமைச்சகம் மற்றும் மத்திய புவி அறிவியல் அமைச்சகத்தின் கூட்டு நிதியளிப்பின் மூலம் இந்திய தேசிய அறிவியல் கழகம் (Indian National Science Academy) மற்றும் வங்கதேசம், நேபாளம், பாகிஸ்தான், இலங்கை போன்ற அண்டை நாடுகளின் அறிவியல் கழகங்களின் ஆதரவுடன் இம்மாநாடு நடத்தப்படுகின்றது.

### *சர்வதேச புவியியல் மாநாடு*

❖ சர்வதேச புவியியல் மாநாடு ஆனது உலகம் முழுவதும் உள்ள புவியியலாளர்கள் கூடும் மதிப்புமிக்க கூட்டரங்கமாகும்.

❖ புவி அறிவியல் ஒலிம்பிக் என்றழைக்கப்படும் இம்மாநாடானது நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஏல முயற்சியில் வென்ற நாடுகளில் சர்வதேச புவி அறிவியல் சங்கத்தின் மேற்பார்வையின் கீழ் நடத்தப்படுகின்றது.

❖ 35-வது சர்வதேச புவி அறிவியல் மாநாடு 2016ல் தென்ஆப்பிரிக்காவின் கேப் டவுனில் நடைபெற்றது.

### *சர்வதேச புவி அறிவியல் **சங்கம்**-IUGS*

❖ புவியியல் துறையில் சர்வதேச ஒத்துழைப்பை ஏற்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட ஓர் சர்வதேச அரசு சாரா நிறுவனமே சர்வதேச புவி அறிவியல் சங்கமாகும் (International Union of Geological Sciences).

❖ இது 1961-ல் பாரிஸில் அமைக்கப்பட்டது.

❖ இதன் செயலகம் சீனாவின் பெய்ஜிங்கில் உள்ளது.

❖ 121 நாடுகளைச் சேர்ந்த தேசிய புவியியல் கழகங்களின் புவியியலாளர்கள் இந்த கழகத்தின் உறுப்பினர்களாக பிரதிநிதிப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

❖ சர்வதேச புவி அறிவியல் திட்டத்திற்காக இந்த கழகமானது யுனெஸ்கோ அமைப்புடன் கூட்டிணைவை ஏற்படுத்தியுள்ளது.

.

## 3வது ICCR இந்தியவியலாளர் விருது

- 3-வது இந்திய கலாச்சார உறவுகளுக்கான குழுவின் (Indian Council for Cultural Relations) புகழ்பெற்ற இந்தியவியலாளர் விருதை (Distinguished Indologist Award) ஜப்பானைச் சேர்ந்த ஹிரோஷி மருயிக்கு இந்தியக் குடியரசுத் தலைவர் வழங்கினார்.
- இந்தியவியல் (Indology) துறைக்கு சிறந்த பங்காற்றியமைக்காக இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.
- இவர் இந்திய மற்றும் புத்த ஆய்வுகளுக்கான ஜப்பானிய சங்கத்தின் தலைவராவார்.
- இவர் ஜப்பானில் இந்தியவியலின் வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பு வழங்கியுள்ளார்.
- இந்தியவியல் என்பது இந்திய நாட்டின் வரலாறு, கலாச்சாரம், மொழி, இலக்கியம் போன்றவற்றில் ஆய்வுகளை மேற்கொள்ளும் துறையாகும்.
- இது ஆசிய கலாச்சார ஆய்வின் (Asian studies) துணை பிரிவாகும்.
- ICCR மேன்மையான இந்தியவியலாளர் விருதானது 2015-ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் ICCR (Indian Council for Cultural Relations) அமைப்பால் வழங்கப்படும் விருதாகும்.
- இவ்விருதோடு 20000 அமெரிக்க டாலர்கள் பரிசுத் தொகை வழங்கப்படும்.
- 2015-ஆம் ஆண்டு முதல் ICCR இந்தியவியலாளர் விருது ஜெர்மனியின் ஹெயன்ரிச் ப்ரெய்ஹெர் வான் ஸ்டியெடென்காரன் என்பவருக்கும், 2016ல் சீனாவில் யூ லாங் யூ என்பவருக்கும் வழங்கப்பட்டது.

## டாட்டா இலக்கிய வாழ்நாள் சாதனையாளர் விருது - 2017

- மும்பையில் நடைபெற்ற 18-வது டாட்டா இலக்கியத் திருவிழாவில் நாடகத் துறைக்கு மிகச் சிறந்த வகையில் பங்காற்றியமைக்காக நடிகர் மற்றும் கதை ஆசிரியரான கிரிஷ் கர்னாடிற்கு 2017-ஆம் ஆண்டிற்கான டாட்டா இலக்கிய வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டு உள்ளது.
- இவர் ஞானபீட விருது, பத்ம பூஷன் விருது, மற்றும் பத்ம ஸ்ரீ விருது போன்ற பல விருதுகளைப் பெற்றுள்ளார்.
- இவர் திரையில் அறிமுகமான "சம்ஸ்காரா" எனும் திரைப்படமானது குடியரசுத் தலைவரின் கோல்டன் லோட்டஸ் விருதை வென்ற முதல் கன்னட திரைப்படமாகும்.
- நாடகங்கள் எழுதுவதில் இவர் பெரும் புகழ் பெற்றவர்.
- வங்க எழுத்தாளரான நபநீத தேவ் சென்-னுக்கு Big little Book Award வழங்கப்பட்டுள்ளது.
- புனைக் கதைகளுக்கான ஆண்டின் சிறந்த புத்தக விருது "Son of Thunder Cloud" எனும் நாவலுக்காக நாகாலாந்து எழுத்தாளரான ஈஸ்டெரின் கைர்-க்கு வழங்கப்பட்டுள்ளது.
- Non-Fiction பிரிவில் பங்கஜ் மிஷ்ராவின் "Age of Anger – A History of the present" என்ற புத்தகத்திற்கு ஆண்டின் சிறந்த புத்தக விருது வழங்கப்பட்டுள்ளது.

## பிரபஞ்ச அழகி

- அமெரிக்காவின் லாஸ் வேகாஸ் நகரில் நடைபெற்ற பிரபஞ்ச அழகிப் போட்டியில்

தென்னாப்பிரிக்காவைச் சேர்ந்த டெமி லெ நெல் பீட்டர்ஸ் 2017 ஆம் ஆண்டிற்கான பிரபஞ்ச அழகியாக (Miss. Universe) மகுடம் சூட்டப்பட்டுள்ளார்.

- ❖ இவர் 39 ஆண்டுகளுக்குப் பிறகு பிரபஞ்ச அழகிப் பட்டத்தை பெறும் இரண்டாவது தென் ஆப்பிரிக்க நாட்டவராவார்.
- ❖ 1978-ல் முதல் முறையாக மார்கரேட் கார்டினர் எனும் தென் ஆப்பிரிக்க அழகி பிரபஞ்ச அழகியாக மகுடம் சூட்டப்பட்டார்..
- ❖ கொலம்பியாவின் லாரா கொன்ஜாலெஜ் இரண்டாவது இடத்தையும், மிஸ் ஜமைக்காவான டவினா பென்னெட் மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளனர்.
- ❖ பிரபஞ்ச அழகிப் போட்டியானது மிஸ் யூனிவர்ஸ் கழகத்தால் ஆண்டுதோறும் நடத்தப்படும் சர்வதேச அழகிகள் அணி வகுப்பாகும்.
- ❖ பிரபஞ்ச அழகி, உலக அழகி, புவி அழகி, மிஸ் சர்வதேச அழகி ஆகிய நான்கும் நான்கு பெரும் சர்வதேச அழகிகளின் அணிவகுப்பு (Big four international Beauty Pageants) என்றழைக்கப்படும்.

## தேசிய மிகை இலாபத் தடுப்பு அதிகாரி

- ❖ தேசிய மிகை இலாபத் தடுப்பு அதிகாரியாக (NAA-National Anti-profiteering Authority ) பத்ரி நரேன் சர்மாவை நியமனங்களுக்கான அமைச்சரவைக் குழு (ACC-Appoinment Committee of Cabinet) நியமித்துள்ளது. சரக்கு மற்றும் சேவை வரியினை நடைமுறைப்படுத்துவதில் ஒழுங்குமுறைகளை உறுதி செய்ய இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.
- ❖ இந்தப் பதவியானது இந்திய அரசு செயலாளருக்கு இணையான படிநிலையும், ஊதியமும் கொண்டுள்ளது.
- ❖ 1985-ஆம் ஆண்டின் இராஜஸ்தான் பணிப்பிரிவைச் சேர்ந்த இந்திய ஆட்சிப்பணி அதிகாரியான பத்ரி நரேன் சர்மா, தற்சமயம் வருவாய் துறையின் கூடுதல் செயலாளராக பொறுப்பு வகிக்கிறார்.
- ❖ சரக்கு மற்றும் சேவை வரியின் அறிமுகத்திற்குப்பின் அதன் பலன்களும், விலைக் குறைப்புகளும் சரியாக நுகர்வோருக்கு சென்றடைகிறதா என்பதை உறுதி செய்ய ஐந்து பேர் கொண்ட அதிகாரிகள் குழுவினை அமைப்பதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியிருந்தது.
- ❖ சரக்கு மற்றும் சேவை வரியின் மிகை இலாபத் தடுப்பு முறையின் கீழ்,
    - ➢ உள்ளூர் அளவிலான புகார்கள் மாநில குழுவிற்கும்
    - ➢ தேசிய அளவிலான புகார்கள் நிலைக் குழுவிற்கும்

  தெரிவிக்கப்பட்டு விசாரணை செய்யப்படும்.
- ❖ சரக்கு மற்றும் சேவை வரியினால் ஏற்படும் வரிக்குறைப்பு மற்றும் பிற பலன்களை நுகர்வோருக்கு அளிக்காமல் தடுக்கும் எந்தவொரு வியாபார நிறுவனத்தின் பதிவையும் உரிமத்தையும் ரத்து செய்யும் அதிகாரம் இக்குழுவிற்கு உண்டு.

# விளையாட்டுச் செய்திகள்

## காமன்வெல்த் துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப் போட்டி

- பிரிஸ்பனில் நடைபெற்ற காமன்வெல்த் துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய வீராங்கனை ஹீனா சிந்து 10 மீட்டர் ஏர் பிஸ்டல் பிரிவில் தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.
- இது இவர் தொடர்ந்து இரண்டாவது முறையாகப் பெறும் சர்வதேச தங்கப் பதக்கமாகும். இதற்கு முன் சமீபத்தில் தில்லியில் நடைபெற்ற ISSF துப்பாக்கி சுடுதல் உலகக் கோப்பை போட்டியின் 10 மீட்டர் ஏர் பிஸ்டல் அணி பிரிவில், ஜிது ராயுடன் சேர்ந்து அவர் தங்கம் வென்றிருந்தார்.
- இக்காமன்வெல்த் போட்டியில் 10 மீட்டர் ஏர் பிஸ்டல் பிரிவில் தீபக் குமார் வெண்கலம் வென்றிருக்கிறார்.

## காமன்வெல்த் தூப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப்

- ஒலிம்பிக் வெண்கலப் பதக்கம் வென்ற வீரரான ககன்நரங், பிரிஸ்பேனில் நடைபெற்ற ஆண்கள் 50மீ ரைபிள் புரோன் பிரிவில் வெள்ளிப் பதக்கத்தை வென்றார்.
- ஸ்வப்னில் சுரேஷ் குசாலே 50மீ ஆண்கள் ரைபிள் புரோன் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்றார்.
- மகளிருக்கான 25மீ பிஸ்டல் பிரிவில் இந்தியாவின் அனுராஜ் சிங் வெண்கலம் வென்றார்.

## பெல்ஜியம் ஓபன் 2017

- பெல்ஜியத்தின் டி ஹான் நகரில் நடைபெற்ற 2017-ஆம் ஆண்டின் சேலன்ஞ் பெல்ஜியம் ஓபன் டேபுள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அசன்தா ஷரத் கமல் மற்றும் ஜி.சத்யன் தனித்தனியே வெண்கலப் பதக்கம் வென்றுள்ளனர்.

## காமன்வெல்த் துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப்-2017

- பிரிஸ்பேனில் நடைபெற்று வரும் 2017 ஆம் ஆண்டின் காமன்வெல்த் துப்பாக்கிச் சுடுதல் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் அஞ்சும் மவுட்கில் பெண்களுக்கான Rifle Prone துப்பாக்கிச் சுடுதல் பிரிவில் வெண்கலம் வென்றுள்ளார்.

## பெண்களுக்கான ஆசிய ஹாக்கி கோப்பை சாம்பியன்-இந்தியா

- ஜப்பானில் ககாமிகஹராவில் நடைபெற்ற மகளிருக்கான ஆசிய ஹாக்கி கோப்பை போட்டியின் இறுதி ஆட்டத்தில் சீனாவை வீழ்த்தி இந்திய ஹாக்கி மகளிர் அணி சாம்பியன் பட்டம் பெற்றுள்ளது.
- இவ்வெற்றியின் மூலம் 15 ஆண்டுகளுக்குப் பின் இந்திய மகளிர் ஹாக்கி அணி மகளிர் உலகக் கோப்பை ஹாக்கிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது.
- இது இந்திய மகளிர் ஹாக்கி அணி வெல்லும் இரண்டாவது ஆசிய ஹாக்கி கோப்பையாகும். இதற்கு முன் 2004ல் புதுதில்லியில் ஜப்பானை வீழ்த்தி முதல் முறையாக ஆசிய ஹாக்கி கோப்பையை இந்திய மகளிர் ஹாக்கி அணி வென்றுள்ளது.

## காமன்வெல்த் துப்பாக்கிச் சுடுதல் சாம்பியன்ஷிப் 2017

- ஆஸ்திரேலியாவின் பிரிஸ்பேனில் நடைபெற்று வந்த காமன்வெல்த் போட்டி நிறைவுபெற்றது. ஆண்களுக்கான 50 மீட்டர் ரைபிள் 3 நிலைகள் பிரிவில் சத்பேன்திரா சிங்வான், சஞ்சீவ் ராஜ்புட் முறையே பெற்ற தங்கம் மற்றும் வெள்ளி பதக்கங்கள் சேர்ந்து மொத்தம் 20 பதக்கங்களோடு இந்தியா தன் பதக்க வேட்டையை நிறைவு செய்தது.
- இந்தச் சாம்பியன் ஷிப் போட்டியில் மொத்தம் ஆறு தங்கங்கள், ஏழு வெள்ளிகள், ஏழு வெண்கலப் பதக்கங்கள் வென்றுள்ளது.

## ஆசிய மகளிர் குத்துச் சண்டை – சாம்பியன் ஷிப் – 2017

- ஐந்து முறை உலகச் சாம்பியனும் ஒலிம்பிக் வெண்கலப் பதக்க வீராங்கனையுமான மேரி கோம், வியட்நாமின் ஹோசிமின் நகரத்தில் நடைபெற்ற ஆசிய மகளிர் குத்துச் சண்டை சாம்பியன்ஷிப் போட்டியின் 48 கிலோ எடைப்பிரிவில் தனது ஐந்தாவது தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.
- உலகச் குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்ற வீராங்கனையான சோனியா, சீனாவின் யின் ஜுன்ஹீவாவிடம் தோல்வி அடைந்து 57 கிலோ எடைப்பிரிவில் இரண்டாவது முறையாக வெள்ளிப் பதக்கததை வென்றார்.
- ஆசிய கண்டத்திற்கான இந்த குத்துச்சண்டை விளையாட்டுப் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளி மற்றும் ஐந்து வெண்கலப் பதக்கங்களுடன் போட்டியை நிறைவு செய்தது.
- மேரி கோம் 2014 ஆம் ஆண்டின் ஆசிய குத்துச் சண்டை போட்டிக்கு பிறகு இது அவர் பெரும் முதல் சர்வதேச தங்கப்பதக்கமாகும்.
- குத்துச் சண்டை விளையாட்டிற்கு மேரி கோமின் சிறந்த பங்களிப்பிற்காக இவருக்கு பத்ம பூஷண் (2013), பத்ம ஸ்ரீ (2010) மற்றும் குத்துச் சண்டைக்கான அர்ஜீனா விருது (2003) போன்ற விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

## 82-வது சீனியர் தேசிய பாட்மின்டன் சாம்பியன்ஷிப் 2017

- முன்னாள் உலகத் தரவரிசையின் நம்பர் 1 வீராங்கனையான சாய்னா நெஹ்வால் ஒலிம்பிக் வெள்ளிப் பதக்க வீராங்கனையான பி.வி.சிந்துவை நாக்பூரில் நடைபெற்ற 82-வது சீனியர் பாட்மின்டன் சாம்பியன்ஷிப் போட்டியில் வீழ்த்தி மகளிர் ஒற்றையர் பிரிவின் சாம்பியன் பட்டத்தை மூன்றாவது முறையாக கைப்பற்றினார்.
- சாய்னா இதுவரை மூன்று தேசியப் போட்டிகளில் விளையாடியுள்ளார். அதில் மூன்று முறையும் பட்டத்தைக் கைப்பற்றியுள்ளார்.
- 82வது தேசிய பாட்மிண்டன் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் எச்.எஸ்.பிரணாய் சர்வதேச பாட்மின்டன் தரவரிசையில் இரண்டாம் நிலை வீரராக இருக்கும் கிடாம்பி ஸ்ரீகாந்தை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார்.

## உலக பில்லியர்ட்ஸ் சாம்பியன்ஷிப் – 2017

- கத்தாரின் தலைநகரான தோஹாவில் நடைபெற்ற IBSF உலக பில்லியர்ட்ஸ் சாம்பியன் ஷிப் போட்டியில் இந்தியாவைச் சேர்ந்த பங்கஜ் அத்வானி இங்கிலாந்தின் மைக் ரஸ்ஸேல்லை தோற்கடித்து தனது 17வது உலக பட்டத்தைப் பெற்றார்.
- ஸ்நூக்கர் மற்றும் பில்லியர்ட்ஸ் என்ற இரு போட்டி பிரிவின் அனைத்து வடிவங்களிலும் உலக சாம்பியன் பட்டத்தை வென்ற உலகின் ஒரே ஒரு வீரர் பங்கஜ் அத்வானி ஆவார்.
- பங்கஜ் அத்வானி கிராண்ட் டபுள் (Grand Double) பட்டத்தை மூன்று முறை பெற்ற (2005, 2008, 2014) உலகின் முதல் கோல் மேசைப் பந்தாட்ட வீரராவார் (Cueist).

## 2018 ஃபிபா உலகக் கோப்பை கால்பந்து போட்டி - இத்தாலி

- சுவீடனுக்கு எதிரான உலகக் கோப்பை தகுதிச் சுற்று பிளே ஆஃப் ஆட்டம் கோல்களின்றி டிரா (0-0) ஆனதால், 2018-ல் இரஷ்யாவில் நடைபெறவிருக்கும் உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் பங்கேற்கும் தகுதி வாய்ப்பை இத்தாலி இழந்துள்ளது.

- 1958-ஆம் ஆண்டு ஸ்வீடன் உலகக் கோப்பையின் போது இதே போன்ற நிலைமையை இத்தாலி சந்தித்தது. அதைத் தொடர்ந்து 60 வருடங்களுக்கு பிறகு முதல் முறையாக இத்தாலி அணி (கிலி அஜ்சூர்ரி) உலகக் கோப்பைக்குத் தகுதிபெறும் வாய்ப்பை இழந்துள்ளது.




- 2006-ஆம் ஆண்டுக்குப் பிறகு முதல் முறையாக சுவீடன் அணி உலகக் கோப்பைக்குத் தகுதி பெற்றுள்ளது.

- 4 முறை உலகக் கால்பந்து கோப்பை சாம்பியனான இத்தாலி, இதனோடு சேர்ந்து மொத்தம் 3 தருணங்களில் முறையே 1930, 1958, 2018 ஆகிய வருடங்களுக்கான உலகக் கோப்பைக்குத் தகுதி பெறும் வாய்ப்பை இழந்துள்ளது.

- இத்தாலி நாட்டின் தேசிய கால்பந்து அணி கிலி அஜ்சூர்ரி (Gli Azzurri) என்றழைக்கப்படுகிறது. இத்தாலியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இத்தாலிய தேசிய அணிகள் மற்றும் தடகள வீரர்கள்

பயன்படுத்தும் பாரம்பரிய வண்ணத்தால் இப்பெயர் வைக்கப்பட்டுள்ளது.

## LPGA சாம்பியன்ஷிப்- தகுதி பெற்ற முதல் இந்தியர்

- மகளிர் தொழில்முறை குழிப்பந்தாட்ட (Golf) சங்கத்தின் (Ladies Professional Golf Association-LPGA) சிஎம்இ (CME) குழு சாம்பியன்ஷிப் சுற்றுப்பயண இறுதி ஆட்டத்தில் அதிதி அசோக் தகுதி பெற்றதன் மூலம் இந்த கௌரவமான போட்டியில் பங்கேற்க இருக்கும் நாட்டின் முதல் வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.
- மகளிர் குழிப்பந்தாட்டத்தில் (Golf) கடினமான ஒன்றான இந்த சாம்பியன்ஷிப் சுற்றுப்பயணத்தில் தகுதி பெறும் 8 வீரர்களில் இந்த 19 வயது அனுபவம் மிகு வீராங்கனையும் ஒருவராவார்.

## உலகக் கோப்பை கால்பந்து- பெரு அணி தகுதி

- உலகக் கோப்பை தகுதி சுற்றுப் போட்டியின் 2-வது கட்ட பிளே ஆஃப் ஆட்டத்தில் பெரு அணி 2-0 என்ற கோல் கணக்கில் நியூஸிலாந்து அணியை வீழ்த்தியது.
- இதன் மூலம் 36 வருடங்களுக்கு பிறகு உலகக் கோப்பை தொடரில் விளையாடுவதற்கு பெரு அணி தகுதி பெற்றது.
- கடைசியாக அந்த அணி 1982-ல் உலகக் கோப்பை தொடரில் விளையாடியிருந்தது.

## 61வது தேசிய கைத்துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப்

- டெல்லியில் உள்ள டாக்டர்.கர்னி சிங் துப்பாக்கி சுடுதல் பகுதியில் நடைபெற்ற 61-வது தேசிய கைத்துப்பாக்கி சாம்பியன்ஷிப் போட்டியின் பெண்களுக்கான டிராப் (trap) சுடுதல் பிரிவின் இறுதிப்போட்டியில் ஒலிம்பிக் வீராங்கனையான ஷாகுன் சௌத்ரி தங்கம் வென்றுள்ளார்.

## தேசிய குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் – 2017

- இந்தூரில் உள்ள அம்ஹே பிரஷல் உள் விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற தேசிய குத்துச் சண்டை சாம்பியன்ஷிப் போட்டியின் 74 கிலோ ப்ஃரீ ஸ்டைல் பிரிவில் இரு முறை ஒலிம்பிக் பதக்க வீரரான சுஷில் குமார் தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.

## ATP சாம்பியன்

- இலண்டனில் நடைபெற்ற நிட்டோ ATP டென்னிஸ் போட்டியின் இறுதிப் போட்டியில் பெல்ஜிய வீரர் டேவிட் கோபின்னை வீழ்த்தி பல்கேரியாவின் கிரிகோர் டிமிட்ரோவ் சாம்பியன் பட்டம் வென்றார்.
- 1998-ஆம் ஆண்டிற்கு பிறகு ATP சாம்பியன் ஷிப் பட்டம் பெறும் முதல் அறிமுக வீரர் இவரே ஆவார்.

- இவ்விருவருக்குமிடையேயான இந்த இறுதிப் போட்டியானது, ATP போட்டிகளின் வரலாற்றிலேயே பட்டம் வெல்வதற்கான இறுதிப் போட்டியில் அறிமுக வீரராக தகுதி பெற்று களமிறங்கிய இரு வீரர்கள் எதிர்முனையில் போட்டியிட்ட முதல் போட்டியாகும்.
- இதற்கு முன் 1998-ல் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த அலெக்ஸ் கொரிட்ஜா அறிமுக வீரராக தனது முதல் வருடத்திலேயே ATP பட்டம் வென்றிருந்தார்.

## 61-வது தேசிய கைத்துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப்

- புது டெல்லியில் உள்ள டாக்டர். கர்னி சிங் கைத்துப்பாக்கி சுடுதல் பகுதியில் நடைபெற்ற 61-வது தேசிய கைத்துப்பாக்கி சாம்பியன்ஷிப் போட்டியின் இரட்டை டிராப் (double trap) சுடுதல் பிரிவில் காமன்வெல்த் சாம்பியன்ஷிப் போட்டியில் வெள்ளி வென்ற வீராங்கனையான ஸ்ரேயாஷி சிங் தங்கம் வென்றுள்ளார்.

## U-19 ஆசியக் கோப்பை கிரிக்கெட் – ஆப்கானிஸ்தான்

- கோலாலம்பூரில் நடைபெற்ற 19 வயதுக்குட்பட்டோருக்கான ஆசியக் கோப்பை கிரிக்கெட் சாம்பியன்ஷிப்பின் இறுதி போட்டியில் பாகிஸ்தானை வீழ்த்தி ஆப்கானிஸ்தான் தனது முதல் கோப்பையை வென்றுள்ளது.
- இந்த இறுதிப் போட்டியில் ஆப்கானின் இக்ரம் அலி கில் ஆட்டநாயகன் விருது பெற்றார்.
- மொத்தம் 20 விக்கெட்டுகளை வீழ்த்திய ஆப்கானிஸ்தான் பந்து வீச்சாளரான முஜிப் ஜத்ரன் தொடர்நாயகனாக தேர்வு செய்யப்பட்டார்.

## ஆசிய மாரத்தான் சாம்பியன்ஷிப்

- கேரள மாநிலத்தின் வயநாடு மாவட்டத்தைச் சேர்ந்த கோபி தோனகல் ஆசிய மாரத்தான் சாம்பியன் ஷிப் பட்டம் வென்ற முதல் இந்தியர் என்ற சாதனையைப் படைத்துள்ளார்.
- சீனாவின் டொன்டுவானில் நடைபெற்ற புகழ்பெற்ற 16-வது ஆசிய மாரத்தான் சாம்பியன்ஷிப் போட்டியில் இவர் சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்.
- உஸ்பெகிஸ்தானின் ஆண்ட்ரே பெட்ரோவ் வெள்ளிப் பதக்கத்தையும், மங்கோலியாவின் பியாம்பலேவ் டிசெவீன்ரெவ்தன் வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர்.
- இது ஆசிய தடகள கூட்டமைப்பால் ஆசியாவினுடைய தடகள வீரர்களுக்காக இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படும் சர்வதேச மாரத்தான் ஓட்டப் போட்டி ஆகும்.

## U-23 குத்துச்சண்டை சாம்பியன்ஷிப்

- போலந்தில் நடைபெற்ற 23 வயதுக்குட்பட்டோருக்கான சீனியர் குத்துக் சண்டை சாம்பியன் ஷிப் இறுதிப் போட்டியில் இந்திய குத்துச்சண்டை வீராங்கனை ரிது போகாட் 48 கிலோ எடைப்பிரிவில் வெள்ளி வென்றுள்ளார்.
- இப்போட்டியில் துருக்கியின் குத்துச்சண்டை வீராங்கனை டெமிர்ஹான் தங்கம் வென்றார்.
- இதற்கு முன் ரிது போகாட் 48 கிலோ எடைப்பிரிவில் சிங்கப்பூரில் நடந்த காமன்வெல்த் குத்துச் சண்டைப் போட்டியில் தங்கம் வென்றுள்ளார்.

- ஆசிய குத்துச் சண்டை சாம்பியன் ஷிப் போட்டியில் வெண்கலம் வென்றுள்ளார்.
- இந்தூரில் நடைபெற்ற தேசிய குத்துச் சண்டை போட்டியில் தேசிய சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்.
- U-23 சீனியர் குத்துச் சண்டை சாம்பியன் போட்டியானது ஐக்கிய உலக குத்துச் சண்டை அமைப்பால் (United World Wrestling) நடத்தப்படும் ஒரு குத்துச்சண்டை போட்டி பிரிவாகும்.

## ஆசியக் கபடி சாம்பியன்ஷிப்

- ஈரானின் கோர்கனில் நடைபெற்ற 2017-ஆம் ஆண்டின் ஆசிய கபடி சாம்பியன் ஷிப் போட்டியில் பாகிஸ்தானை வீழ்த்தி இந்திய ஆண்கள் கபடி அணி தங்கம் வென்றுள்ளது.
- ஈரானின் கோர்கனில் நடைபெற்ற 2017-ஆம் ஆண்டிற்கான இதே ஆசிய கபடி சாம்பியன் ஷிப் போட்டியில் தென் கொரியாவை வீழ்த்தி இந்திய மகளிர் கபடி அணி தங்கம் வென்றுள்ளது.

## AIBA குத்துச் சண்டை சாம்பியன் ஷிப்

- கவுகாத்தியில் நடைபெற்ற AIBA [சர்வதேச குத்துச்சண்டை சங்கம் (அமெச்சூர்)] இளையோர் மகளிர் உலக குத்துச் சண்டைசாம்பியன்ஷிப் போட்டியில் 5 இந்திய மகளிர் குத்துச் சண்டை வீராங்கனைகள் தங்கம் வென்றுள்ளனர்.
- ஹரியானாவைச் சேர்ந்த நித்து, ஜோதி, சாக்ஷி, ஷசி சோப்ரா மற்றும் அஸ்ஸாமின் அன்குசிதா போரோ ஆகியோர் தத்தமது எடைப் பிரிவில் தங்கம் வென்றுள்ளனர்.
- அனுபாமா மற்றும் நேஹாயாதவ் ஆகிய இருவரும் வெண்கலப் பதக்கம் வென்றுள்ளனர்.
- இதுவே தற்போதுவரை நடைபெற்ற AIBA உலக இளையோர் மகளிர் குத்துச் சண்டை சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் சிறந்த செயல்பாடாகும்.

## டேவிஸ் கோப்பை

- பிரான்ஸ் நாட்டில் பியேர்ரே மவ்ராய் அரங்கில் நடந்தப்பட்ட டென்னிஸ் விளையாட்டின் உலகக் கோப்பை என்றழைக்கப்படும் டேவிஸ் கோப்பை போட்டியில் 16 வருடங்கள் கழித்து முதன் முறையாக பிரான்ஸ் அணி பெல்ஜியத்தை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றுள்ளது.
- மேலும் பிரான்ஸ் அணி பத்தாவது முறையாக ஒட்டு மொத்த சாம்பியன் பட்டத்தையும் பெற்றுள்ளது.
- அதிகமுறை டேவிஸ் கோப்பையை வென்ற நாடுகளுள் 32 முறை சாம்பியன் பட்டம் பெற்று அமெரிக்கா முதலிடத்திலும், 28 முறை சாம்பியன் பட்டம் பெற்று ஆஸ்திரேலியா இரண்டாவது இடத்திலும், பிரிட்டனுடன் சேர்ந்து பிரான்ஸ் மூன்றாவது இடத்திலும் உள்ளது.

## உலக மேசைகோல் பந்தாட்ட சாம்பியன் ஷிப்

- கத்தார் நாட்டின் தோஹாவில் அல் அரபி ஸ்போர்ட்ஸ் கிளப்பில் நடைபெற்ற IBSF (International Billiards & Snooker Federation) உலக மேசைகோல் பந்தாட்ட சாம்பியன் ஷிப் போட்டியில் இந்தியாவில் பங்கஜ் அத்வானி ஈரானின் அமிர் ஷர்கோஸை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றார்.
- இது அவர் பெறும் 18-வது உலகப் பட்டமாகும்.

## இந்திய குத்துச் சண்டை சம்மேளனம்

- இந்திய ஒலிம்பிக் சங்கமானது (Indian Olympic Association – IOA) இந்திய குத்துச்சண்டை சம்மேளனத்தை (BFI – Boning federation of India) இந்தியாவின் தேசிய குத்துச்சண்டை அமைப்பு என அங்கீகாரம் அளித்துள்ளது.
- இந்தியாவில் குத்துச் சண்டைக்கான தேசிய அமைப்பாக இருந்த இந்திய அமெச்சூர் குத்துச் சண்டை சம்மேளனத்தை இந்திய விளையாட்டு அமைச்சகம் தடை செய்தததை அடுத்து BFI தற்போது தேசிய அமைப்பாக செயல்பட அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.
- சர்வதேச குத்துச்சண்டை சங்கத்தின் (AIBA – International Boning Association) அங்கீகாரத்தை BFI பெற்றதை அடுத்து மத்திய இளைஞர் மற்றும் விளையாட்டு துறை அமைச்சகம் மற்றும் IOA தங்களது அங்கீகாரத்தை BFI க்கு வழங்கியுள்ளன.

## உலக பளுதூக்குதல் சாம்பியன்ஷிப்

- அமெரிக்காவின் அனஹெய்மில் நடைபெற்ற உலக சீனியர் பளுதூக்குதல் சாம்பியன் ஷிப் போட்டியின் பெண்கள் பிரிவில் தங்கம் வென்றதன் மூலம் 22 ஆண்டுகளுக்குப் பிறகு உலக பளுதூக்குதல் சாம்பியன் ஷிப் போட்டியில் தங்கம் வென்ற முதல் இந்தியர் என்ற சாதனையை சாய்போம் மீராபாய் சானு படைத்துள்ளார்.
- உலக பளுதூக்குதல் சாம்பியன் ஷிப் போட்டியில் கர்ணம் மல்லேஸ்வரிக்கு அடுத்து தங்கம் வென்ற இரண்டாவது இந்தியார் இவராவார்.
- பெண்களுக்கான 48 கிலோ எடைப்பிரிவில் பங்கு பெற்ற இவர் 194 கிலோ பளுவை தூக்கி புதிய உலக சாதனையையும் படைத்துள்ளார்.
- 1994 மற்றும் 1995 ஆகிய காலங்களில் இந்தியாவின் கர்ணம் மல்லேஸ்வரி இந்தப்போட்டியில் தங்கம் வென்றிருந்தார்.

## பாரா – பாட்மின்டன் உலக சாம்பியன் ஷிப்

- தென் கொரியாவின் உல்சான் நகரில் நடைபெற்ற உலக பாட்மின்டன் சம்மேளனத்தின் (Badminton World Federation) பாரா – பாட்மின்டன் உலக சாம்பியன் ஷிப் போட்டியில் இரு தங்கம் உட்பட மொத்தம் 10 பதக்கங்களை இந்தியா வென்றுள்ளது.
- பெண்களுக்கான ஒற்றையர் Standing Lower (SL-3) பிரிவின் இறுதிப்போட்டியில் தாய்லாந்து வீராங்கனையை வீழ்த்தி இந்திய வீராங்கனை பருல் பர்மார் தங்கம் வென்றுள்ளார்.
- இரட்டையர் பிரிவில் இந்திய வீராங்கனை பருல் பர்மார் ஜப்பானின் அகிகோ சுகினோவுடன் சேர்ந்து சீன இரட்டையர் அணியை வீழ்த்தி தங்கம் வென்றுள்ளார்.
- ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இந்திய வீரர்கள் தருண் தில்லான் மற்றும் மனோஜ் சங்கர் முறையே SL4 மற்றும் SL3 பிரிவில் வெள்ளி வென்றுள்ளனர்.

# முக்கிய தினங்கள்

## தேசிய ஒற்றுமை தினம் – அக்டோபர் 31

- இந்தியாவின் இரும்பு மனிதர் என்றழைக்கப்படும் சர்தார் வல்லபாய் பட்டேலின் பிறந்த நாளை குறிக்கும் விதமாக ஆண்டுதோறும் அக்டோபர் 31ஆம் தேதி தேசிய ஒற்றுமை தினமாகக் (ராஷ்ட்ரிய ஏக்தா திவாஸ்-National Unity Day) கொண்டாடப்படுகிறது.
- சர்தார் வல்லபாய் பட்டேல் சுதந்திர இந்தியாவின் முதல் துணை பிரதமர் மற்றும் உள்துறை அமைச்சராவார்.
- அவருடைய பிறந்த நாளையொட்டி "ஒற்றுமைக்கான ஓட்டம்" (Run for Unity) என்ற தலைப்பில் டெல்லி தயான் சந்த் விளையாட்டு அரங்கில் 1.5 கி.மீ தொடர் ஓட்டம் நடத்தப்பட்டது.
- இந்தியாவின் மிக உயரிய விருதான "பாரத ரத்னா விருது" அவர் இறந்த பின்பு 1991ல் வழங்கப்பட்டது.
- 1947-49க்கு இடைப்பட்ட காலத்தில் 550 சுதந்திர மன்னர் மாநிலங்களை (சுதேச அரசுகள்) ஒருங்கிணைத்து இந்தியாவை வலுவான நாடாக உருவாக்கினார்.

## உலக சைவ உணவாளர் (Vegetraian) தினம் – நவம்பர் 1

- உலக சைவ உணவாளர் தினம் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதம் 1ம் தேதி கொண்டாடப் படுகிறது. இது விலங்குகளின் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை எழுப்புவதோடு ஒரு சைவ வாழ்க்கை முறையை பரவலாக அனைவரும் ஏற்றுக் கொள்ள வாதிக்கிறது.
- இந்த நாள், பிரிட்டிஷ் விலங்குகள் உரிமைகள் ஆர்வலர் லூயிஸ் வாலிஸால் 1994-ம் ஆண்டில் துவங்கப்பட்டது. இது பிரிட்டனில் சைவ உணவர்கள் சமூகம் (Vegan Society) தோற்றுவிக்கப்பட்ட 50வது ஆண்டு நினைவாகக் கொண்டாடப்படுகிறது.
- சைவம் ஓர் உணவு முறையாகவும் (விலங்குகளை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் பொருட்களை தவிர்ப்பது) வாழ்க்கைத் தத்துவ முறையாகவும் (விலங்குகளை விலை பொருளாக நினைப்பதை நிராகரிப்பது) கடைபிடிக்கப்படுகிறது. இவற்றின் இரண்டில் எதாவது ஒன்றைக் கடைபிடிப்பவர்கள் சைவ உணவாளர் என அழைக்கப்படுகிறார்கள்.

## நவம்பர் 2 - தண்டனை விலக்களிப்புத் தடை நாள்

- 2013-ஆம் ஆண்டு நடைபெற்ற 68-வது ஐக்கிய நாடுகள் சபையின் பொது அவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் ஆண்டுதோறும் நவம்பர் இரண்டாம் தேதி பத்திரிக்கையாளர்களுக்கு எதிராக குற்றம் புரிந்தவர்களுக்கான தண்டனை விலக்களிப்பை தடை செய்யும் நாளாக (IDEI – International Day to End Impunity for Crimes against Journalist) அறிவிக்கப்பட்டுள்ளது.
- பத்திரிக்கையாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்கு தண்டனை விலக்களிக்கும் நடப்பு கலாச்சாரத்திற்கு எதிராக உறுதியான நடவடிக்கைகளை உறுப்பு நாடுகள் எடுக்கும் வகையில் இத்தீர்மானம் உந்துதல் தரும்.
- 2013, நவம்பர் 2-ஆம் தேதி மாலித் தீவில் இரு பிரெஞ்ச் பத்திரிக்கையாளர்கள் படுகொலை செய்யப்பட்டதன் நினைவாக இத்தினம் தேர்வு செய்யப்பட்டு அனுசரிக்கப்படுகிறது.

## உலக சுனாமி விழிப்புணர்வு தினம் – நவம்பர் 5

- சுனாமி ஆழிப்பேரலைகளைப் பற்றி உலகம் முழுவதும் உள்ள மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஆண்டு தோறும் நவம்பர் 5-ஆம் தேதி உலக சுனாமி விழிப்புணர்வு தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.
- 2017ஆம் ஆண்டிற்கான உலக சுனாமி விழிப்புணர்வு தினத்தின் கருத்துரு – 'பாதிக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கையை குறைத்தல்'.
- ஜப்பானில் 1854-ல் நடைபெற்ற இனாமுரா-நோ-ஹி (இனாமுரா எரிப்பு) சம்பவத்தின் வருடாந்திர நினைவு நாளோடு ஒத்துப்போகும் வகையில் நவம்பர் 5-ஆம் தேதி உலக சுனாமி விழிப்புணர்வு தினமாக ஐ.நா.பொது அவையால் அறிவிக்கப்பட்டது.

## சுற்றுச்சூழல் சுரண்டப்படுவதை தடுப்பதற்கான சர்வதேச தினம் – நவம்பர் – 6

- உலகம் முழுவதும் ஆண்டுதோறும் நவம்பர் 6-ம் தேதி போர் மற்றும் ஆயுத மோதல்களின் போது சுற்றுச்சூழல் சுரண்டப்படுவதை தடுப்பதற்கான சர்வதேச தினமாக கடைப்பிடிக்கப்படுகிறது.
- ஐக்கிய நாடுகள் சபையின் பொது அவையால் நவம்பர்,5 2001-ல் இத்தினம் தோற்றுவிக்கப்பட்டது.
- போர் மற்றும் ஆயுத மோதல்களினால் சுற்றுச்சூழல் மீது உண்டாகும் சேத விளைவுகளைப் பற்றி மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இத்தினம் கொண்டாடப்படுகிறது.

## உலக பயன்பாட்டு தினம் – நவம்பர் 9

- உலக பயன்பாட்டு தினம் (World Usability Day) ஆண்டுதோறும் நவம்பர் இரண்டாவது வியாழக்கிழமை அன்று அனுசரிக்கப்படுகிறது.
- இது 2005-ல் பயன்பாட்டு நிபுணர்கள் சங்கத்தால் (Usability Professionals Association) ஆரம்பிக்கப்பட்டது. தற்போது இந்தப் அமைப்பு அனுபவமான பயனாளிகள் நிபுணர்கள் சங்கம் (User Experience Professionals Association) என்றழைக்கப்படுகின்றது.
- இது ஆண்டுதோறும் பயன்பாட்டின் மதிப்புகள், பயன்பாட்டின் நுட்பம், பயனாளிகளை மையப்படுத்திய வடிவமைப்பு, உலகளாவிய பயன்பாடு மற்றும் சிறப்பாக நடைபெற வேண்டிய விஷயங்களுக்கான ஒவ்வொரு பயனாளியின் பொறுப்பு ஆகியவற்றை ஊக்குவிப்பதற்காக நடத்தப்படுகின்றது.

## உலக குணநலன் தினம் – நவம்பர் 9

- ஒவ்வொரு வருடமும் நவம்பர் 9-ம் தேதி உலக குணநலன் தினம் (World Quality Day ) அனுசரிக்கப்படுகிறது.
- 2017-ம் ஆண்டிற்கான கருத்துரு – தினசரி தலைமைத்துவம்.
- எவ்வாறு குணநலன் ஒரு நாடு மற்றும் ஒரு நிறுவனத்தின் வளர்ச்சி மற்றும் வலிமைக்கு உத்தரவாதமளிக்கின்றது என்பது பற்றிய முக்கிய பங்களிப்பின் விழிப்புணர்வை உலகம் முழுவதும் பரப்ப 1990-ல் ஐக்கிய நாடுகள் சபையால் உலக குணநலன் தினம் அறிமுகப்படுத்தப்பட்டது.

## சட்ட சேவைகள் தினம் – நவம்பர் 9

- இந்தியாவில் ஒவ்வொரு வருடமும் நவம்பர் 9-ம் தேதி சட்ட சேவைகள் தினம் அனுசரிக்கப்படுகிறது.
- 1995-ஆம் ஆண்டில் நவம்பர் 9 ஆம் தேதி அன்று தான் ,சட்ட சேவைகள் ஆணையச் சட்டம் (Legal Services Authorities Act) அமல்படுத்தப்பட்டது.
- சமூகத்தில் ஏழைகள் மற்றும் பின்தங்கிய, பலவீனமான பிரிவினருக்கு உதவி செய்து ஆதரவு தெரிவிக்க இந்திய உச்சநீதிமன்றத்தால் 1995ம் ஆண்டு முதன்முதலாக இத்தினம் ஆரம்பிக்கப்பட்டது.

## நோய் எதிர்ப்புத் திறனூட்டல் (Immunization Day) – நவம்பர் 10

- ஒவ்வாரு ஆண்டும் நவம்பர் 10 ஆம் தேதி ஆனது உலக நோய் எதிர்ப்புத் திறனூட்டல் தினமாக உலக சுகாதார நிறுவனத்தால் கொண்டாடப்படுகிறது.
- தடுப்பூசிகளால் தடுக்கப்படக்கூடிய நோய்களுக்கு எதிராக சரியான காலத்திய தடுப்பூசியிடலை மேற்கொள்வதன் முக்கியத்துவத்தைப் பற்றி உலக மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இத்தினம் கடைபிடிக்கப்படுகிறது.
- பயன்படுத்தப்படும் தடுப்பூசிகளின் அளவு, தடுப்பூசித் திட்டத்தின் கீழ் பயன்பெறும் பயனாளர்களின் எண்ணிக்கை மற்றும் உள்ளடக்கப்படும் புவியியல் பகுதிகளின் பரவல் மற்றும் தடுப்பூசி திட்டத்தின் கீழ் ஈடுபடுத்தப்படும் மனித வளம் போன்றவற்றின் அடிப்படையில் உலகின் மிகப்பெரிய உலகளாவிய பொது தடுப்பூசித் திறனூட்டல் திட்டத்தை (Universal Immunization Programs -UIP) இந்தியா மேற்கொண்டுள்ளது.
- இந்திரா தனுஷ் திட்டத்தின் கீழ் தடுப்பூசிகளால் தடுக்கப்படக் கூடிய நோய்களுக்கு எதிராக இலவசமான தடுப்பூசியிடலை (vaccination) இந்திய அரசானது அளித்து வருகிறது.
- இந்திரா தனுஷ் திட்டத்தின் கீழ் தொண்டை அழற்சி (Diptheria), கக்குவான் இருமல் (Petrussis), தசை இழுப்பு வாதம் (Tetanus), தட்டம்மை (measles), குழந்தைப்பருவ காசநோயின் மோசமான நிலை (Severe form of childhood Tuberculosis), கல்லீரல் அலற்சி-பி (Hepatitis B), மூளைக்காய்ச்சல் (megningitis), செயல்படுத்தப்படாத போலியோ வைரஸ் (Inactivated Polio Virus – IPV) போன்றவற்றிற்கான தடுப்பூசி தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலங்களிலும், ஜப்பானிய மூளைக்காய்ச்சலுக்கான (Japanese Encephalitis) தடுப்பூசி ஜப்பானிய மூளைக்காய்ச்சல் பரவியுள்ள மாவட்டங்களிலும், நிமோனியா தடுப்புத்திறனூட்டல் நாடு முழுவதும் மேற்கொள்ளப்படும்.
- தட்டம்மை – ரூபெல்லா தடுப்பூசி, நியுமோகாக்கல் இணைவு தடுப்பூசி (Pneumococial conjugate Vaccine – PCV) போன்றவை இத்திட்டத்தின் கீழ் குறிப்பிட்ட கால இடைவெளிப் படியில் அறிமுகப்படுத்தப்பட உள்ளன.

## தேசிய கல்வி தினம் - நவம்பர் 11

- சுதந்திர இந்தியாவின் முதல் கல்வி அமைச்சரான மௌலானா அபுல் கலாம் ஆசாத்தின் பிறந்த நாளை நினைவு கூறும் வகையில் ஆண்டுதோறும் நவம்பர் 11 ஆம் தேதி தேசிய கல்வி தினமாகக் கொண்டாடப்படுகிறது.
- நாட்டிலுள்ள கல்வி நிறுவனங்களை வலுப்படுத்துவதும், சிறந்த மேம்பாட்டிற்கு நாட்டின் கல்வித் தரத்தை உயர்த்துவதுமே தேசிய கல்வி தின கொண்டாட்டத்தின் நோக்கங்களாகும்.

## உலக நிமோனியா தினம் – நவம்பர் 12

- நிமோனியா நோயைப் பற்றிய விழிப்புணர்வை உண்டாக்குவதற்காக ஆண்டுதோறும் உலகம் முழுவதும் நவம்பர் 12ஆம் தேதி உலக நிமோனியா தினமாக கடைப்பிடிக்கப்படுகிறது.
- ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளை கொல்லும் முதன்மை உயிர்க்கொல்லி நோயான நிமோனியா பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் நிமோனியாவிற்கு எதிரான தடுப்பு, சிகிச்சை மற்றும் எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும் இத்தினம் கடைபிடிக்கப்படுகிறது.
- நிமோனியா ஓர் நுரையீரலைத் தாக்கும் கடுமையான சுவாச நோய் தொற்றாகும். தொற்று பாதிப்புகளால் நுரையீரலில் உள்ள காற்றுப் பைகள் வீக்கமடைவதால் நிமோனியா ஏற்படுகின்றது.
- வைரஸ், பாக்டீரியா, பூஞ்சைகள் உட்பட பல்வேறு நோய்க்காரணிகளினால் நிமோனியா உண்டாகின்றது.

## உலக கருணை தினம் – நவம்பர் 13

- உலகம் முழுவதும் ஆண்டுதோறும் நவம்பர் 13 ஆம் தேதி உலக கருணைகள் தினம் கொண்டாடப்படுகிறது.
- கருணை சார்பாக செயல்புரியும் பல்வேறு நாடுகளிலுள்ள அரசுசாரா தொண்டு நிறுவனங்களின் கூட்டிணைவான உலக கருணை இயக்கம் எனும் அமைப்பால் 1998 ஆம் ஆண்டு இத்தினம் தோற்றுவிக்கப்பட்டது.
- 2009-ல் முதல் முறையாக சிங்கப்பூரில் இத்தினம் கடைப்பிடிக்கப்பட்டது.
- அனைத்து வடிவங்களிலுமான கருணையை ஊக்குவிப்பதே இந்த தினக் கொண்டாடத்தின் நோக்கமாகும்.

## உலக சர்க்கரை நோய் தினம்- நவம்பர் 14

- நீரிழிவு நோயைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த உலகம் முழுவதும் ஆண்டுதோறும் நவம்பர் 14-ஆம் தேதி உலக சர்க்கரை நோய் தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.
- 2017-ஆம் ஆண்டிற்கான உலக சர்க்கரை நோய் விழிப்புணர்வு தினத்தின் கருத்துரு "மகளிரும் நீரிழிவு நோயும் – ஆரோக்கியமான எதிர்காலத்திற்கான நமது உரிமை".
- உலகளவில் பெருகிவரும் சர்க்கரை நோயின் தாக்கத்தை மனதில் கொண்டு உலக சுகாதார நிறுவனம் (World Health Organization – WHO மற்றும் சர்வதேச சர்க்கரை நோய் அமைப்பினால் (IDF – International Diabetes Foundation) 1991-ல் உலக சர்க்கரை தினம் தோற்றுவிக்கப்பட்டது.
- ஐக்கிய நாடுகள் சபையால் 2007-ஆம் ஆண்டு உலக சர்க்கரை நோய் தினம் அங்கீகரிக்கப்பட்டது.

## தேசிய பத்திரிக்கை தினம் – நவம்பர் 16

- நாடு முழுவதும் ஆண்டுதோறும் நவம்பர் 16-ஆம் தேதி தேசிய பத்திரிக்கை தினம் கொண்டாடப்படுகிறது.

- இந்தியாவின் சுதந்திரமான மற்றும் பொறுப்புடைய பத்திரிக்கைத் துறையை அடையாளப்படுத்தும் விதமாக இத்தினம் கொண்டாடப்படுகிறது.
- இந்தியாவில் அச்சு ஊடகங்களை நெறிமுறைப்படுத்தும் அமைப்பான பிரஸ் கவுன்சில் ஆஃப் இந்தியா (Press Council of India) செயல்படத் தொடங்கிய நாளான நவம்பர் 16-ல் இத்தினம் கொண்டாடப்படுகிறது.
- பிரஸ் கவுன்சில் ஆஃப் இந்தியா முதலில் 1966-ஆம் ஆண்டு ஜீலை மாதம் 4-ஆம் தேதி நிறுவப்பட்டது.
- பிரஸ் கவுன்சில் ஆஃப் இந்தியாவானது இந்திய பிரஸ் கவுன்சில் சட்டம் 1978-ன் (press council Act 1978) கீழ் உருவாக்கப்பட்ட ஓர் தன்னதிகாரமுடைய, சட்ட மற்றும் பகுதி – நீதி அமைப்பாகும்.
- இருப்பினும், முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதியான J.R. முதோல்கரை தலைவராகக் கொண்டு 1996, நவம்பர் 16-ஆம் தேதிதான் இந்த அமைப்பு செயல்படத் துவங்கியது.
- இது, இந்தியாவிலுள்ள அச்சு ஊடகங்கள் உயர்தர நிலைகளைப் பேணுகின்றனவா என உறுதி செய்யவும், அவை புற செல்வாக்கு மற்றும் அச்சுறுத்தல்களுக்கு ஆட்படாமல் செயல்படுகின்றனவா என கண்காணிக்கவும் ஏற்படுத்தப்பட்ட அமைப்பாகும்.

## உலக தத்துவ தினம்- World Philosophy Day

- உலகம் முழுவதும் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதத்தின் மூன்றாவது வியாழக்கிழமை உலக தத்துவ தினம் கொண்டாடப்படுகிறது.
- 2002-ல் யுனெஸ்கோ அமைப்பால் இத்தினம் தோற்றுவிக்கப்பட்டது.
- மக்கள் தங்கள் எண்ணங்களை பகிர்வதற்கும், புதிய கருத்துகளை வெளிப்படையாக ஆராய்ந்து விவாதிப்பதற்கும், சமூகத்தினுடைய சவால் மீது விவாதத்தை மேற்கொள்ள மக்களை ஊக்குவிப்பதற்கும் இந்தத் தினம் ஏற்படுத்தப்பட்டது.
- ஒவ்வொரு கலாச்சாரங்கள், தனிமனிதர்கள் மற்றும் மனித எண்ணங்களின் மேம்பாட்டிற்குப் பங்களிப்பிணை வழங்கும் தத்துவங்களின் நீடித்த மதிப்பை முன்னெடுத்து காட்டுவதற்காக இத்தினம் கொண்டாடப்படுகிறது.

## சர்வதேச சகிப்புத் தன்மை தினம் – நவம்பர் 16

- உலகம் முழுவதும் ஆண்டுதோறும் நவம்பர் 16-ஆம் தேதி ஐக்கிய நாடுகளின் சர்வதேச சகிப்புத் தன்மை தினம் கொண்டாடப்படுகிறது.
- மக்களிடையே சகிப்புத்தன்மை இன்மையால் உண்டாகும் எதிர்மறை விளைவுகளை பற்றிய புரிதலை ஏற்படுத்தவும், சமூகத்தில் சகிப்புத்தன்மை வேண்டியதன் அவசியத்தைப் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தவும் இத்தினம் தோற்றுவிக்கப்பட்டது.
- 1945-ல் உருவாக்கப்பட்ட யுனெஸ்கோவினுடைய 50-வது ஆண்டு நிறைவை குறிக்கும் வண்ணம், 1995ம் ஆண்டு ஐ.நா. பொது அவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு 1996-ஆம் ஆண்டிலிருந்து சர்வதேச உலக சகிப்புத் தன்மை தினம் நவம்பர் 16-இல் கொண்டாடப்படுகிறது.
- 1995-ல் சகிப்புத் தன்மைக்கான ஐ.நா.வின் ஆண்டு (United Nations Year for Tolerance) மற்றும் மகாத்மா காந்தியின் 125-வது பிறந்த நாள் ஆண்டை குறிக்கும் விதமாக யுனெஸ்கோ அமைப்பானது அமைதி மற்றும் சகிப்புத் தன்மையின் மேம்பாட்டிற்கான விருதை தோற்றுவித்தது.

- இரு ஆண்டுகளுக்கு ஒரு முறை நவம்பர் 16-ல் சர்வதேச சகிப்புத்தன்மை தினத்தன்று அமைதி மற்றும் சகிப்புத்தன்மை மேம்பாட்டிற்கான யுனெஸ்கோ - மதன்ஜீத் சிங் பரிசு வழங்கப்படுகிறது.
- அமைதி மற்றும் சகிப்புத் தன்மைக்காக சிறந்த முறையில், குறிப்பாக மெச்சத்தகு வண்ணம் பங்களிப்பு வழங்கிய அமைப்புகள், நபர்கள், நிறுவனங்களுக்கு இவ்விருது வழங்கப்படுகிறது.

## சர்வதேச மாணவர்கள் தினம் – நவம்பர் 17

- சர்வதேச மாணவர்கள் தினம் ஆண்டுதோறும் நவம்பர் 17-ஆம் தேதி மாணவர்களின் எழுச்சியை சர்வதேச அளவில் நினைவூட்டுவதற்காக கொண்டாடப்படுகின்றது.
- 1939-ஆம் ஆண்டு நவம்பர் 17-ஆம் தேதி செக்கோஸ்லோவாக்கியாவின் தலைநகர் பிராக்கில் (Prague) உள்ள சார்லஸ் பல்கலைக்கழகத்தில் நாஜிக்களால் ஜான் ஒப்லேடல் என்பவர் கொல்லப்பட்டதற்கும், செக்கோஸ்லோவாக்கியா ஆக்கிரமிக்கப்பட்டதற்கும் எதிராக பெரும் மாணவர் போராட்டம் நடைபெற்றது.
- அம்மாணவர்கள் போராட்டத்தை நசுக்கிய நாஜிப் படையினர் ஒன்பது மாணவர் தலைவர்களை தூக்கிலிட்டனர். 1200க்கும் மேற்பட்டவர்கள் சித்ரவதை முகாமிற்கு அனுப்பப்பட்டனர். பின் செக்கோஸ்லோவாக்கியாவின் அனைத்து பல்கலைக்கழகங்களும் மூடப்பட்டன. இந்த நாளை குறிக்கும் விதத்தில் சர்வதேச மாணவர்கள் தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.
- இந்த தினம் முதன் முதலில் 1941-ல் இலண்டனில் உள்ள சர்வதேச மாணவர்கள் கவுன்சிலால் கடைப்பிடிக்கப்பட்டது.

## தேசிய வலிப்பு நோய் (Epilepsy) தினம் – நவம்பர் 17

- மக்களிடையே வலிப்பு நோயைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஆண்டுதோறும் நவம்பர் 17ஆம் தேதி தேசிய வலிப்பு நோய் தினம் கடைப்பிடிக்கப்படுகின்றது.
- உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கைப்படி, உலகம் முழுவதும் வலிப்பு நோயால் பாதிக்கப்பட்ட சுமார் 50 மில்லியன் மக்கள் உள்ளனர். அவர்களுள் 80 சதவீதத்தினர் வளரும் நாடுகளைச் சேர்ந்தவர்கள்.
- அடிக்கடி இழுப்புகள் (seizures) உண்டாகக் கூடிய ஓர் நாள்பட்ட மூளைக் குறைபாடே வலிப்பு நோயாகும். மூளைச் செல்களான நியூரான்களில் உண்டாகும் திடீரான, அதிகப்படியான மின்சார வெளிப்பாட்டால் இந்த வலிப்புகள் உண்டாகின்றன.
- இந்தியாவில் வலிப்பு நோயுடைய சுமார் 10 மில்லியன் மக்கள் உள்ளனர்.

## உலக மீனவர் தினம் – நவம்பர் 21

- 1997-ல் உலக மீனவர் மன்றம் (World Fisheries Forum) தோற்றுவிக்கப்பட்டதை நினைவு கூறும் வகையில் உலகம் முழுவதும் ஆண்டுதோறும் நவம்பர்-21 ஆம் தேதி உலக மீனவர் தினம் கொண்டாடப்படுகிறது.
- உலகம் முழுவதும் நீடித்த மீன்பிடிப்பு மற்றும் கொள்கைகள் கட்டாயம் வேண்டும் என்பதை எடுத்துரைக்கும் விதமாக இத்தினம் கொண்டாடப்படுகின்றது.
- இந்தியாவில் இத்தினம் தொடர்ச்சியாக நான்காவது ஆண்டாக கால்நடைவளர்ப்பு, பால் மற்றும் மீன்வளத்துறை சார்பாக கொண்டாடப்படுகின்றது.

- ❖ இத்தினம் தொடங்கப்பட்டு இருபது ஆண்டுகளாகியும் இதுவரை ஐநா அவையின் அங்கீகாரத்தை பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### *துரித தகவல்கள்*

- ❖ உலக மீனவர்கள் தினத்தை முன்னிட்டு கேரளாவில் உள்ள கொச்சியில் 11- வது இந்திய மீன்பிடிப்பு மற்றும் நீர்வாழ் உயிரிகள் வளர்ப்பு மன்றம் தொடங்கப்பட்டது.
- ❖ இந்த மன்றத்தின் கருத்துரு "நீர்வாழ் உயிரிகள் மற்றும் மீன்பிடித்துறையில் புத்தாக்கங்களை வளர்த்தல்"
- ❖ இந்தியா உலகின் மூன்றாவது பெரிய மீன் உற்பத்தி செய்யும் நாடாகும்.
- ❖ இந்தியா உலகின் இரண்டாவது பெரிய நீர்வாழ்உயிரினங்கள் உற்பத்தி செய்யும் நாடாகும்.
- ❖ இந்திய கடற்கரையின் நீளம் = 7516 கி.மீ.
- ❖ தமிழ்நாட்டின் கடற்கரையின் நீளம் = 1076 கி.மீ.

## உலக கழிவறை தினம் – நவம்பர் 19

- ❖ உலக அளவில் துப்புரவின்மையால் உண்டாகும் பிரச்சனைகளைப் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்துவதற்காக ஆண்டுதோறும் நவம்பர் 19-ஆம் தேதி ஐ.நா.வின் சர்வதேச உலக கழிவறை தினம் கடைப்பிடிக்கப்படுகின்றது.
- ❖ 2030-ல் அடைய இலக்கிடப்பட்டுள்ள நீடித்த மேம்பாட்டு இலக்குகளில் (SDG-Sustainable Development Goal) ஒன்றான SDG 6 ஆனது உலகிலுள்ள அனைவருக்குமான துப்புரவு மற்றும் சுகாதாரம், சுத்திரிக்கப்படாத கழிவுநீரின் விகிதத்தை பாதியாக குறைத்தல், மறுசுழற்சியை அதிகரித்தல் மற்றும் பாதுகாப்பான மறு பயன்பாடு என்ற இலக்கை கொண்டுள்ளது.
- ❖ உலக கழிவறை தினமானது ஐ.நா.வின் தண்ணீர் அமைப்புடன் (UN Water) பல்வேறு நாடுகள் மற்றும் அமைப்புகளின் கூட்டிணைவால் ஒருங்கிணைக்கப்படுகின்றது.
- ❖ 2017ஆம் ஆண்டிற்கான உலக கழிவறை தினத்தின் கருத்துரு "கழிவு நீர்" (Waste Water).

### *இந்தியாவும் சுகாதாரமும்*

- ❖ யுனிசெஃப் சர்வேயின் படி இந்தியாவில்தான் அதிகமான மக்கள் கழிப்பறை வசதியின்றி இருப்பதாகவும், இதற்கு அடுத்த இடத்தில் சீனா இருப்பதாகவும் கூறப்படுகிறது.
- ❖ இந்தியாவில் தற்போது வரை கழிப்பிட வசதி இல்லாததால் சுமார் 60 கோடி பேர் திறந்தவெளியைப் பயன்படுத்துவதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.
- ❖ யுனிசெஃப் அறிக்கையின்படி, உலக அளவில் ஒருநாளைக்கு போதிய கழிப்பிட வசதி இல்லாமல் நோய்வாய்ப்பட்டு 1000 குழந்தைகள் இறந்து போவதாக அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது. ஆறில் ஒரு பெண்குழந்தை பள்ளிகளில் கழிப்பிட வசதி இல்லாததால் படிப்பைத் தொடரமுடியாமல் பாதியிலேயே நிறுத்திவிடும் அவலம் இருப்பதாகப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

### *உலக கழிவறை கழகம்*

- ❖ உலக கழிவறை கழகம் ஆனது உலகம் முழுவதும் கழிப்பறை பிரச்சனைக்குத் தீர்வு காண வழி வகுக்க 2001-ம் ஆண்டு நவம்பர் மாதம் 19-ம் தேதி தோற்றுவிக்கப்பட்ட ஓர் சர்வதேச அமைப்பு ஆகும்.
- ❖ இதன் தலைமை அலுவலகம் சிங்கப்பூரில் உள்ளது.

- ஜாக் சிம் என்பவரின் முயற்சியால் உருவாக்கப்பட்ட இந்த அமைப்பின் மூலம் உலகின் பல்வேறு நாடுகளின் கழிப்பறை குறித்த விழிப்புணர்வும், நவீன கழிப்பறைகள் கட்டுவதற்கான திட்டங்களும் வகுக்கப்படுகிறது.
- இந்த ஆண்டு உலக கழிவறை தினத்தின் அடுத்த நாளன்று இந்த அமைப்பின் உலக கழிவறை மாநாடு ஆஸ்திரேலியாவின் மெல்பர்னில் நடைபெற உள்ளது.

## உலக நுண்ணுயிர் எதிர்ப்பு விழிப்புணர்வு வாரம் (நவம்பர் 13-19)

- உலகம் முழுவதும் நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகளுக்கு உண்டாகும் தடுப்புநிலைகளைப் (Antibiotic Resistence) பற்றியும், சிறந்த மருத்துவ பழக்கங்களைப் பற்றியும் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஆண்டுதோறும் நவம்பர் 13 முதல் 19 வரை உலக நுண்ணுயிர் எதிர்ப்பு விழிப்புணர்வு வாரம் கொண்டாடப்படுகின்றது.
- 2017 ஆம் ஆண்டிற்கான உலக நுண்ணுயிர் எதிர்ப்பு விழிப்புணர்வு வாரத்திற்கு உலக சுகாதார நிறுவனத்தின் கருத்துரு ⇒ "நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகளை எடுத்துக் கொள்ளும் முன் தகுதி பெற்ற ஆரோக்கிய பராமரிப்பு தொழிற் வல்லுநர்களின் ஆலோசனைப் பெறுதல்".
- முறையற்ற ஆண்டிபயாடிக் பயன்பாடானது எதிர் நுண்ணுயிர் மருந்துகளுக்கு எதிர்ப்புத்தன்மையை உண்டாக்கும். அதனால் மருந்துகளின் பாக்டீரியா போன்ற நுண்ணுயிரிகளுக்கு எதிரான திறனான செயல் தடைபடும்.

## பெண்களுக்கு எதிரான வன்முறைகள் ஒழிப்பிற்கான சர்வதேச தினம் - நவம்பர் 25

- ஆண்டுதோறும் உலகம் முழுவதும் நவம்பர் 25 ஆம் தேதி பெண்களுக்கு எதிரான வன்முறைகள் ஒழிப்பிற்கான சர்வதேச தினம் கடைப்பிடிக்கப்படுகின்றது.
- பெண் குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும், அந்த வன்முறைகளை முடிவுக்கு கொண்டுவருவதற்காகவும், பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தடுப்பது சாத்தியமே என்பதை வெளிப்படுத்துவதற்காகவும, இந்த தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- 2017-ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு" அனைத்து பெண்களுக்கும் பாதுகாப்பு: பெண் குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறையை முடிவுக்கு கொண்டுவருதல்".
- 1960-ஆம் ஆண்டு கரிபியன் தீவுக் கூட்டங்களில் உள்ள டொமினிகன் குடியரசில் ரபேல் ட்ருஜில்லோவின் கொடுங்கோல் ஆட்சியின் போது படுகொலை செய்யப்பட்ட அரசியல் ஆர்வலர்களான மூன்று மீராபால் சகோதரிகளின் நினைவாக இத்தினம் கடைபிடிக்கப்படுகின்றது.

## தேசிய பால் வள தினம் – நவம்பர் 26

- நாடு முழுவதும் ஆண்டுதோறும் நவம்பர் 26-ஆம் தேதி இந்திய வெண்மைப் புரட்சியின் தந்தையான டாக்டர்.வர்கிஸ் குரியனின் பிறந்த நாளை குறிப்பிடும் விதமாக தேசிய பால் வள தினம் கொண்டாடப்படுகின்றது.
- ஐ.நா. அவையின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் (Food and Agriculture) மேற்பார்வையின் கீழ் ஜீன்1-ல் கொண்டாடப்படும் உலக பால் வள தின அனுசரிப்பு போல இந்தியாவிலும் பால்வள தினம் கொண்டாடுவதற்கான யோசனை இந்திய பால் வள சங்கத்தால் உருவாக்கப்பட்டது.

- தேசிய பால்வள மேம்பாட்டு கழகம் (National Dairy Development Board), இந்திய பால்வள கூட்டுறவு சங்கங்கள் (Indian Dairy Association) மற்றும் பல்வேறு மாநிலங்களின் பால் உற்பத்தி கூட்டமைப்புகளால் 2014ஆம் ஆண்டு இந்தியாவின் முதல் தேசிய பால்வள தினம் கடைபிடிக்கப்பட்டது.
- உலக அளவில் இந்தியா பால் உற்பத்தியில் முதலிடம் வகிக்கின்றது.
- உலகின் மொத்த பால் உற்பத்தி அளவில் 18.5% இந்தியாவில் உற்பத்தி செய்யப்படுகின்றது.

## இந்திய அரசியலமைப்பு தினம் – நவம்பர் 26

- நாடு முழுவதும் ஆண்டுதோறும் நவம்பர் 26-ஆம் தேதி நமது அரசியலமைப்புச் சட்டத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த அரசியலமைப்பு தினம் (Sam Vidhan Divas) கொண்டாடப்படுகின்றது.
- 1949-ஆம் ஆண்டு நவம்பர் 26-ஆம் தேதி இந்திய அரசியலமைப்பு ஏற்றுக் கொள்ளப் பட்டதை பறைசாற்றும் வகையில் அத்தினம் தேசிய அரசியலமைப்பு தினமாக கடைபிடிக்கப்படுகிறது.
- இருப்பினும் இந்திய அரசியலமைப்புச் சட்டம் 1950, ஜனவரி 26 அன்று (இந்திய குடியரசு தினம்) அமலுக்கு வந்தது.
- தேசிய அரசியலமைப்பு தினமானது 2015-ல் நிறுவப்பட்டது.
- நவம்பர் 26-ஆம் தேதி ஆனது தேசிய சட்ட தினமாகவும் கொண்டாடப்படுகிறது.

## பாலஸ்தீனிய மக்களோடு ஒற்றுமைக்கான சர்வதேச நாள் – நவம்பர் 29

- ஐ.நா.அவையின் பாலஸ்தீனிய மக்களோடு ஒற்றுமைக்கான சர்வதேச தினம் ஆண்டுதோறும் உலகம் முமுவதும் நவம்பர் 29-ஆம் தேதி கொண்டாடப்படுகின்றது.
- 1947-ஆம் ஆண்டு நவம்பர் 29-ஆம் தேதி பிரிட்டனின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட பாலஸ்தீனத்தை (British Mandate of Palestine) இரு தனி நாடுகளாக பிரிக்க இயற்றப்பட்ட 181 (II) தீர்மானம் ஐ.நாவில் ஏற்றுக் கொள்ளப்பட்டதை குறிக்கும் விதமாக இத்தினம் கொண்டாடப்படுகின்றது.
- 181 (II) தீர்மானமானது, பிரிட்டனின் ஆட்சியின் கீழ் இருந்த பாலஸ்தீனத்தை இரண்டாகப் பிரித்து யூத இஸ்ரேல் நாட்டையும், தனி பாலஸ்தீனிய அரபு நாட்டையும், ஜெருசேலம் நகரத்தை சர்வதேச கட்டுப்பாட்டுக்குட்பட்ட நகரமாகவும் உருவாக்க இயற்றப்பட்ட தீர்மானமாகும்.
- முதல் உலகப் போருக்கு ஒட்டோமான் சாம்ராஜ்ஜியத்தின் தென் சிரியாவிலிருந்து பிரித்து உருவாக்கப்பட்டு, பிரிட்டிஷாரால் 1920 முதல் 1948 வரை நிர்வகிக்கப்பட்ட தற்போதைய இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனிய பகுதிகள் அடங்கிய பகுதியே பிரிட்டனின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட பாலஸ்தீனம் என்றழைக்கப்பட்டது.
- மேலும் இந்த ஆண்டு இத்தினம் 1967-ல் நடைபெற்ற அரபு – இஸ்ரேலிய போரின் 50-வது ஆண்டை குறிக்கும் விதமாகவும் கடைப்பிடிக்கப்படுகின்றது.

# இதரச் செய்திகள்

## பாதிப்படையக் கூடும் பாலினத்தவர் குறியீடு

- பிளான் இந்தியா எனும் குழந்தைகள் மேம்பாட்டிற்கான அரசு சாரா தொண்டு நிறுவனம் வெளியிட்டுள்ள பாதிப்படையக் கூடும் பாலினத்தவர் குறியீட்டின் படி (Gender Vulnerability Index) கோவா முதலிடத்திலும், பீகார் கடைசி இடத்திலும் இடம் பிடித்துள்ளன.
- வன்முறைகளுக்கு எதிரான பாதுகாப்பு கல்வி, சுகாதாரம், வறுமை போன்ற பெண் குழந்தைகளின் நிலையோடு தொடர்புடைய 4 முக்கிய அம்சங்களின் மதிப்பீட்டின் அடிப்படையில் நாட்டின் அனைத்து மாநிலங்களையும் தர வரிசைப்படுத்த இந்தக் குறியீடு கணக்கிடப்படுகிறது.
- வேறுபட்ட சூழ்நிலைகளில் குழந்தைகளை பாதிக்கும் குறிப்பாக பெண் குழந்தைகளை பாதிக்கும் பல்வேறுபட்ட பிரச்சினைகளின் பரிமாணங்களை விரிவான முறையில் புரிந்து கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட இத்தொண்டு நிறுவனத்தின் அனைத்து குழந்தைகளுக்கான பிரச்சார திட்டத்தின் ஆராய்ச்சிப் படி இக்குறியீடு வெளியிடப்பட்டுள்ளது.
- முதலிடம் பிடித்த கோவாவை அடுத்து கேரளா, மிசோரம், சிக்கிம் போன்ற மாநிலங்கள் உள்ளன. 30வதாக கடைசி இடத்தில் பீகாரும், 29 இடத்தில் புதுதில்லியும், 28 இடத்தில் உத்திரப்பிரதேசமும் உள்ளன.
- வட இந்திய மாநிலங்களில் இமாச்சலப் பிரதேசம் மட்டுமே 6 வது இடத்தைப் பெற்று உயர்ந்த தர வரிசையைப் பெற்றுள்ளது.

## தமிழறிஞர் மா.நன்னன் மறைவு

- தமிழகத்தின் தலைசிறந்த தமிழறிஞர்களில் ஒருவரான மா.நன்னன் காலமானார். இவர் ஓர் பெரியாரியவாதி ஆவார். “தமிழ் கற்போம்” என்ற தலைப்பில் தூர்தர்ஷன் தொலைக்காட்சியில் இவர் நடத்திய தமிழ் வகுப்புகள் மிகப் பிரபலமானவை ஆகும்.
- சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ் பேராசிரியராக பணியாற்றிய இவர் எழுபதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார்.
- பெரியார் விருது , திரு.வி.க விருது மற்றும் அண்ணாவிருது முதலிய பெருமைமிகு விருதுகளைப் பெற்றுள்ளார்.
- வயது வந்தோர் கல்வி வாரியத் துணைத் தலைவராகவும், தமிழ் வளர்ச்சித் துறையின் இயக்குநராகவும் பொறுப்பு வகித்துள்ளார்.
- ‘வெள்ளையனே வெளியேறு’ போன்ற சுதந்திர சுதந்திர போராட்டங்களில் பங்குகொண்ட மா.நன்னன், தமிழகத்தில் இந்தி எதிர்ப்பு போராட்டத்திலும் கலந்துக்கொண்டார்.

## NASSCOM கூட்டமைப்பின் அடுத்த தலைவர் - தேப்ஜானி கோஷ்

- மென்பொருள் மற்றும் சேவைகள் வழங்கும் நிறுவனங்களின் தேசிய கூட்டமைப்பினுடைய (NASSCOM _ National Association of Software and Service Companies) தற்போதைய தலைவராக உள்ள R.சந்திரசேகரின் பதவிக்காலம் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் முடிவடைய உள்ள நிலையில் நாஸ்காம்-ன் அடுத்த தலைவராக தேப்ஜானி கோஷ் நியமிக்கப்பட்டுள்ளது.
- தேப்ஜானி கோஷ் நாஸ்காம் அமைப்பின் முதல் பெண் தலைவராவார்.

- இந்த அமைப்பு இந்திய கூட்டுறவு பதிவுச் சட்டம் 1860-ன் கீழ் (Indian Societies Act, 1860) பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன் தலைமையகம் புதுதில்லியில் உள்ளது.
- நாஸ்காம் 1988ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது.
- நாஸ்காம் இந்திய தகவல் தொழிற்நுட்பம் (IT) மற்றும் வணிகச் செயலாக்க அயலாக்க (Business Process Outsourcing - BPO) நிறுவனங்களின் இலாப நோக்கற்ற வர்த்தக சங்கமாகும்.

## இந்தியாவின் முதல் பெண் வழக்கறிஞர்

- பிரிட்டனின் முதல் இந்திய மாணவி மற்றும் இந்தியாவின் முதல் பெண் வழக்கறிஞரான கோர்னெலியா சோரப்ஜியின் 151-வது பிறந்த ஆண்டை கொண்டாடும் விதமாக பிரபல இணைய தேடல் பொறியான கூகுள் சிறப்பு டூடுளை (Doodle) ஏற்படுத்தியுள்ளது.
- 1866-ல் மஹாராஷ்டிராவின் நாசிக் பகுதியில் பிறந்த இவர் 1892-ல் பாம்பே பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற முதல் பெண்மணி ஆவார். மேலும் இவர் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் பயின்ற முதல் இந்தியராவார்.
- சோரப்ஜி அலகாபாத் உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் பார் கவுன்சிலில் சேர்ந்த முதல் பெண்மணியாவார். "பார்தாஹ்னஷின்"களுடைய (purdahnashins) உரிமைகளுக்காக அயராது போராடினார்.
- சமூக வழக்கங்கள் காரணமாக, குடும்பத்தை தவிர்த்த பிற ஆண்களுடன் பேச தடை விதிக்கப்பட்ட முகத்திரை அணிந்த பெண்களே பார்தாஹ்னஷின்கள் (Purdahnashins) எனப்படுவர்
- இந்த டூடுளை ஜஸ்ஜியோத் சிங் ஹன்ஸ் என்பவர் வடிவமைத்துள்ளார்.

## தூய்மைமிகு புராதன இடங்கள்

- தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் செயல்படும் மத்திய குடிநீர் மற்றும் சுகாதார அமைச்சகத்தின் தொடக்கமான தூய்மைமிகு புராதன இடங்களைப் [Swach Iconic Places – SIP] பற்றிய இரு நாள் தேசிய கலந்தாய்வு டெல்லியில் அண்மையில் நடைபெற்றது.
- தூய்மைமிகு புராதன இடங்கள் திட்டமானது, நாட்டிலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட புராதன, ஆன்மீக, கலாச்சார இடங்களில் துப்புரவு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஓர் சிறப்பு தொடக்கமாகும்.
- இத்தொடக்கமானது மத்திய நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகம், மத்திய கலாச்சார துறை அமைச்சகம், மத்திய சுற்றுலாத்துறை அமைச்சகம் மற்றும் சம்மந்தப்பட்ட மாநிலங்களின் கூட்டு ஒத்துழைப்போடு மத்திய குடிநீர் மற்றும் சுகாதார அமைச்சகத்தினால் ஒருங்கிணைக்கப்படுகிறது.
- தற்போது இத்திட்டத்தினுடைய இரண்டாவது கட்டத்தின் கீழ் 10 புதிய புராதன இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.
    - கங்கோத்ரி
    - சார்மினார்
    - யமுனோத்ரி

- மஹாகலீஸ்வரர் கோவில்
- பாஜ்னாத் தாம்
- கயாதீர்த்தம்
- சோம்நாத் ஆலயம்
- காலடி நகரம்
- கோமதீஸ்வரர் ஆலயம்
- அஸிஸியின் செயின்ட் பிரான்சிஸ் திருச்சபை.

## சுனாமி முன்னெச்சரிக்கை ஒத்திகை பயிற்சி

- மத்திய உள்துறை அமைச்சகமானது தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் (National Disaster Management Authority) மற்றும் பெருங்கடல் தகவல் சேவைக்கான ஆராய்ச்சி மையம் (INCOIS- Indian National Centre For Ocean Information Services) போன்றவற்றின் மூலமாக சுனாமி முன்னெச்சரிக்கையின் தயார்நிலைக்கான ஒத்திகை பயிற்சிகளை பல்வேறு மாநிலங்களில் மேற்கொண்டது.
- நாட்டின் கிழக்கு கடற்கரையோரப் பகுதிகள் முழுவதும் சுனாமி முன்னெச்சரிக்கை ஒத்திகைப் பயிற்சிகளை மேற்கொள்வது இதுவே முதன் முறையாகும்.
- கிழக்கு கடற்கரை முழுவதும் அதாவது மேற்கு வங்கம், ஒடிஸா, ஆந்திரப்பிரதேசம், தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி ஆகியவற்றின் 31 கடலோர மாவட்டங்களில் ஒரே நேரத்தில் இந்த ஒத்திகைப் பயிற்சி மேற்கொள்ளப்பட்டு உள்ளது.
- நவம்பர் 5-ஆம் தேதி கடைப்பிடிக்கப்பட்ட 2-வது உலக சுனாமி விழிப்புணர்வு தினத்தன்று மேற்கொள்வதற்காக திட்டமிடப்பட்ட பல்வேறு செயல்பாடுகளின் ஒரு பகுதியாக இந்த ஒத்திகை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

-------------

# SHANKAR IAS ACADEMY

THE BEST IAS ACADEMY IN SOUTH INDIA SINCE 2004

REFLECTION OF 37/75 QUESTIONS IN TNPSC GROUP II A (2017) GENERAL STUDIES PAPER (EXCLUDING MENTAL ABILITY) FROM OUR TEST SERIES

REFLECTION OF 50/100 QUESTIONS IN TNPSC GROUP II A (2017) GENERAL TAMIL PAPER FROM OUR TEST SERIES

## MUCH AWAITED TNPSC GROUP I PRELIM TEST SERIES

## Coming SOON....

**Both Class room and online programmes available**

**Total Tests - 36**
13 - Foundation Tests
23 - Core Tests
Recorded Discussion Videos

**Test Centers:**
Anna Nagar, Adyar, Madurai, Salem